திருவெளிப்பாடு

விளக்கவுரை

ஆக்கியோன் :

செ. மரியதாசு

அருள் வாக்கு மன்றம்

புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரி,
த. பெ. எண். 36,
திருச்சிராப்பள்ளி-1.

அச்சிட்டோர்.
ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சி—8.

அச்சிடலாம்,

\+ **Rt. Rev. Thomas Fernando,**
Bishop of Tiruchirapalli.

உட்புகுமுன்

வேதாகமத்தை ஆய்ந்து அறிதல் முத்துக் குளித்தலுக்கு ஒப்பாகும். கடலில் நீந்துபவன் முத்துக் குளிப்பவனல்லன். கடலுக்கு அடியிற் செல்லவேண்டும். அது போன்று வேதாகமத்தைப் படித்து அறிய வேண்டுமாயின் அதனுள் நுழைதல் வேண்டும். அதாவது நூல் எழுந்த காலம், சூழ்நிலை, ஆசிரியரின் மொழி, நடை, இலக்கிய வகை, இலக்கண, இலக்கிய மரபு ஆகியவற்றினூடேசென்று நூல் கூறும் கருத்துக்களை அறிதல் வேண்டும்.

திருவெளிப்பாட்டிலே நுழைந்தேன். நுழையுமுன் அச்சம்தான். நூலில் காணப்படும் உருவகங்கள், அடையாளங்களைக் கண்டு அஞ்சினேன். ஆனால் இவற்றின் உட்பொருட்களை அறிந்தபின்போ, இறைவனின் திருவெளிப்பாடுகளை அறிந்தேன். அவை எக்காலத்துக்கும் உரியவை. எனது வாழ்வுக்கும் பொருந்தியவை. எல்லோருடைய வாழ்வுக்கும் அவை பொருந்தும். ஆகவே யான் பெற்ற இன்பத்தை நீங்களும் பெறுங்கள்.

இப்பணியிலே எனக்குப் பெரிதும் உதவிய என் பேராசிரியரான அருட்திரு லெகிரான் அடிகளார்க்கும், புனித சின்னப்பர் குருத்துவக்கல்லூரி மறைநூல் பேராசிரியர் அருட்திரு சேசுராசா சே. ச. அடிகளார்க்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

செ. மரியதாசு.

திருவெளிப்பாடு

முன்னுரை

I திருவெளிப்பாடு என்றால் என்ன ?

திருவெளிப்பாடு என்றாலே சிங்கம், குதிரை, முத்திரைகள், பறவை நாகம், எக்காளங்கள், கலசங்கள் முதலிய அடையாளப் பொருட்கள்தாம் நம் நினைவுக்கு வரும். திருவெளிப்பாடு என்னும் சொல் 'மறைவானதை வெளியாக்குதல்' என்னும் பொருளைக் கொண்டிருந்தாலும், அடையாளங்களும் உருவக மொழிகளும் எல்லாச் செய்திகளையும் மறைத்துவிடுகின்றன எனவும் நினைப்பதுண்டு. ஆதலின் திருவெளிப்பாடுநூல் பொதுவில் நாம் யாவரும் விரும்பிப் படிக்கும் நூல்களில் ஒன்றாயிராமல் தனிப்பட்டோர் சிலர் மட்டும் படித்துப் புரிந்துகொள்ளும் நூல் என்றும் கருதுகின்றோம். இந்நூல் கூறும் செய்தி வேதாகமத்தின் பிற நூல்களின் செய்தியினைப் போன்று யாவருக்கும் உரியதாகாமல் நின்றுவிடுகின்றது. இது நூலின் குறையா? அன்று, தூய ஆவியால் ஏவப்பட்ட இந்நூல் கூறும் செய்தியும் நம் எல்லாருக்கும் உரித்தானது. நூலின் தனிப்பட்ட இலக்கிய வகையினைப் புரிந்துகொண்டோமாயின், இக்காலச் சூழ்நிலையில் வாழும் நமக்கும் இஃது அரிய செய்தியினை விடுக்கும்.

திருவெளிப்பாட்டு இலக்கிய வகையின் தோற்றம்.

அடையாளங்களிலும் உருவக மொழிகளிலும் சமயச் செய்திகளைப் பொதிந்து கூறுதல் பழங்கால எகிப்தியரும் பபிலோனியரும் கையாண்ட இலக்கிய வகையாகும். இவ்விலக்கிய வகை மீட்பின் வரலாற்றில் கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியது. இக்காலத்தில் யூதர்கள் நான்காம் அந்தியோக்கு மன்னனின் ஆட்சிக்கு (கி. மு. 175-163) உட்பட்டு வாதைகள் பல அனுபவித்தனர். மன்னன்

கிரேக்கப் பண்பாட்டையும் மதவழிபாட்டையும் புகுத்த முயன்றுன். தங்களுக்கெனத் தனி மதத்தையும் பண்பாட்டையும் பெற்றிருந்த யூதமக்கள் அதனை எதிர்த்தனர். மன்னனின் ஆணைக்கு அடிபணிய மறுத்தனர். இதன் விளைவாக எண்ணிலாத் துன்பங்களை ஏற்றனர். இவை பற்றி மக்கபேயர் இரு நூல்களிலும் சம விரிவாகக் காணலாம். கடவுள் அளித்த வாக்குறுதிகள் எங்கே? அவர்கள் புதிய எருசலேமைக் காண்பது எப்போது? பபிலோனிய அடிமைத்தனத்தைவிட இவ்வடிமைத்தனம் புது வகையாகவும், கடுமையானதுமாய் இருக்கின்றதே என்றெல்லாம் நினைத்து நினைத்துக் கலங்கினர். அங்குமிங்குமாக யூதர்களிடையே மனத்தளர்வும் மனமாற்றமும்கூடக் காணப்பட்டன. அக்காலத்தில் எழுந்த தானியேல் ஆகமம் கடவுளின் பிரமாணிக்கத்தை வலியுறுத்தி மக்கள் துன்பக் காலத்தில் கொண்டிருக்க வேண்டிய மன உறுதியையும் நம்பிக்கையையும் எடுத்துக்கூறி, இறுதியாக 'ஆண்டவரின் நாள்' வரத்தான் போகின்றது; அப்போது அந்நிய ஆட்சி அழியும், மக்கள் நல்வாழ்வைப் பெறுவர் என்றும் செய்தியைக் கூறிற்று. நூல் கூறும் செய்தியினை யூதர்கள் மட்டும் புரிந்துகொள்ளுமாறு ஆசிரியர் திருவெளிப்பாட்டு இலக்கிய வகையில் வரைந்தார். ஆகவே உருவகப் பொருட்களும், மொழிகளும் அந்நூலில் மலிந்துகிடக்கின்றன.

இவ்விலக்கிய வகை கி. மு. இரண்டாம் நூற்றுண்டிலிருந்து கி. பி. இரண்டாம் நூற்றுண்டுவரை யூதர்களிடையேயும் கிறிஸ்தவர்களிடையேயும் மலர்ந்திருந்தது. எனினும், இறைவாக்கினர் காலத்திலேயே இதன் தோற்றத்திற்குச் சான்றுகள் காணலாம். எடுத்துக்காட்டாக சாலமோன் மாமன்னன் காலத்தில் ஆகியாசு இறைவாக்கினர் செய்த அடையாளச் செயலைக் கூறலாம். எரோபோவாம் மாமன்னனுக்கு எதிராக நடத்திய புரட்சியை இவ்வடையாளச் செயல் குறிக்கும். ஆகியாசு ஒருநாள் எரோபோவாமைச் சந்தித்து, தான் போர்த்தியிருந்த புதிய போர்வையைப் பன்னிரண்டு துண்டுகளாகக் கிழித்து, பத்து துண்டுகளை

அவருக்குக் கொடுத்தார். இவ்வடையாளச் செயலின் பொருள் யாதெனில், சாலமோனின் பேரரசு பன்னிரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் பத்துப் பகுதிகளுக்கு எரோபொவாம் மன்னராவார் என்பதே (1 அர. 11:30-32). இதைப்போன்றே அடையாளச் செயல்களில் கூறும் செய்திகளை இசை. 20:2-4 ; எரே. 13:1-11 ; 19:1-15 எசே. 5:1-5 முதலிய பகுதிகளில் காணலாம்.

இவ்விலக்கிய வகைக்கு உட்பட்ட நூல்கள் பல உளவெனினும், பழைய ஏற்பாட்டில் தானியேல் ஆகமமும் புதிய ஏற்பாட்டில் புனித அருளப்பர் எழுதிய திருவெளிப்பாடுமே வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளன. பாருக்கின் திருவெளிப்பாடு (கி. பி. 50-90), ஏனோக்கு ஆகமம் (கி. மு. 200-264), இசையாசின் விண்ணேற்றம் (கி. பி. 1-100), ஜூபிலிகள் நூல் (கி. மு. 40-10), மோயீசனின் விண்ணேற்பு (கி. பி. 14-30), பன்னிரு பிதாப் பிதாக்களின் ஏற்பாடுகள் (கி. மு. 130-கி. பி. 10), சாலமானின் திருப் பண்கள் (கி. மு. 70-40), எஸ்ராவின் திருவெளிப்பாடு, சிபில்லின் திருவாக்குகள் (கி.மு. 150 கி.பி. 350) ஆகியவை வேதாகமத் தொகுப்பில் இடம்பெறவில்லை. ஆனால் இவற்றில் உள்ள அடையாளச் செயல்கள், அடையாளப் பொருட்கள், உருவக மொழிகள்யாவும் அருளப்பரின் திருவெளிப்பாட்டை நன்கு புரிந்து கொள்வதற்குப் பயன்படுகின்றன.

நம் ஆண்டவர் இயேசுவும் இவ்விலக்கிய வகையைக் கையாண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. திருவெளிப்பாட்டு முறையில்தான் அவர் எருசலேமின் அழிவை விவரித்துள்ளார் (காண். மத். 24 ; மாற்கு 13).

இறைவாக்குரைத்தலோடுகொண்ட தொடர்பு :

திருவெளிப்பாட்டு நூல்கள் எல்லாம் இறைவாக்குரைத்தலோடு தொடர்பு கொண்டவை. இஸ்ராயேல் வரலாற்றில் எசேக்கியேல் இறைவாக்கினரோடு (கி. மு. 6-ஆம் நூற்றாண்டு) இறைவாக்குரைத்தல் பணி நின்றுவிடினும், திருவெளிப்பாட்டு நூல்கள் இறைவாக்கினின்

போதனைகளின் முக்கிய கருத்தை மக்களுக்குக் கூறி அப்பணியை நீடிக்கச் செய்கின்றன. பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர் எதிர்நோக்கிய இறுதிக்காலம் ஏறக்குறைய எல்லாத் திருவெளிப்பாட்டு நூல்களிலும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது கிறிஸ்தவ மறையில் நிறைவெய்துமெனக் காட்டுவது அருளப்பரின் திருவெளிப்பாடு நூலாகும். ஆதலின் இறைவாக்கினர் தம் பணிக்கு இறைவனால் அழைக்கப்பட்டு, தம் வாக்குகளை அவரிடமிருந்தே பெறுவதுபோன்று, திருவெளிப்பாட்டு ஆசிரியர்களும் இறைவன் அருளிய காட்சிகளிலிருந்து செய்திகளை அறிவிக்கின்றனர். இவ்விரு வகுப்பினரும் தாமாக எதையும் வெளிப்படுத்துவதாகக் கூறியதேயில்லை. இவை காரணமாக, திருவெளிப்பாட்டு நூல்களை இறைவாக்கு நூல்கள் எனவும் கூறுவது மரபு.

இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள்:

இவை இரண்டிற்கும் சில முக்கிய வேறுபாடுகள் உள. இறைவாக்கினர் யாவரும் எதிர்காலத்தைப்பற்றி உரைத்தபோதெல்லாம் அதை நிகழ்காலத்தோடு தொடர்புபடுத்தியே கூறினர். எதிர்காலம் நிகழ்காலத்திலிருந்து பிறப்பதாகும். எடுத்துக்காட்டாக எசேக்கியேல் இறைவாக்கினர் கண்ட ஒரு காட்சியில் (எசே. 37:1-14) எலும்புகள் புத்துயிர் பெற்று எழுந்தன. அதாவது, பாபிலோன் நாட்டில் துன்புறும் இஸ்ராயேல் மக்களும் துன்பத்திலிருந்து இன்பம் பெறுவர். நிகழ்காலத் துன்பம் எதிர்கால இன்பத்தின் ஊற்றும் தொடக்கமுமாயிற்று. மாறாக, திருவெளிப்பாட்டு நூல்களில் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் இவ்வித தொடர்பில்லை. நிகழ்காலத் துன்பத்திலிருந்து எவ்வித இன்பமும் வராது. ஆதலின் புதிய உலகு வரப்போகிறது; அஃது இறுதிக்கால இன்ப உலகு என்று இவை எடுத்துரைக்கும். அதே சமயத்தில் இந்த இறுதிக்கால இன்பம் விரைவில் வந்துவிடும் என்னும் நம்பிக்கையால் ஆறுதல் அளிப்பவை இந்நூல்கள்.

இவ்வேறுபாட்டின் காரணமாகத்தான், இறைவாக்கினர் நிகழ்காலக் குறைகளைக் களைய முற்பட்டனர். தபசு,

ஒறுத்தல்கள் வழியாக மக்களைத் தூய்மைப்படுத்தினர். ஆனால் திருவெளிப்பாட்டு நூல்களில் இவ்வுலகம் தீயது; எனவே இஃது அழிய, புதிய உலகு பிறக்கும் என்னும் நம்பிக்கை காணக்கிடக்கின்றது. ஆதலின் துன்பத்தை அனுபவித்தாக வேண்டும் என்னும் மனப்பான்மையை இவை வளர்த்தன.

திருவெளிப்பாடுகளும் அருளப்பரின் திருவெளிப்பாடும் :

அருளப்பரின் திருவெளிப்பாட்டுக்கும் மற்ற திருவெளிப்பாட்டு நூல்களுக்கும் இலக்கிய மரபைப் பொறுத்தவரையில் சிறிது வேறுபாடு உண்டு. நிகழ்காலத் துன்பச் சூழ்நிலையும் அதன் அழிவும், பின்வரும் இன்ப உலகும் முன்பே நடந்துவிட்டதென வருணிப்பது திருவெளிப்பாட்டு நூல்களின் தனிச்சிறப்பாகும். ஆசிரியர்களும் தங்கள் இயற்பெயர்களைக் குறிப்பிடாமல், தங்கள் நூல்கள் உயரிய மதிப்பைப் பெறும் பொருட்டு. அக்காலத்தில் சிறப்பு வாய்ந்தவர்களின் பெயர்களில் எழுதினர். இம்முறையில் பார்க்குங்கால் தானியேல் ஆகமம் எழுந்த காலம் கி. மு. இரண்டாம் நூற்றாண்டு. ஆனால் அது காட்டுவது பாபிலோன் மன்னன் நபுக்கொதொநொசொர் (Nebuchadnezzar) காலம் (கி. மு. 5-ஆம் நூற்றாண்டு) இந்நூலின் வீரமகனும் இக்காலத்தைச் சேர்ந்தவராவர். இவ்வித கால மாற்றத்தினாலோ, பெயர் மாற்றத்தினாலோ வாசகர்கள் ஏமாந்தனரா? அல்ல. அவர்கள் இத்தகைய நூல்களின் பண்பை அறிந்தவர்கள். நிகழ்காலத் துன்பமும் அதை அடுத்துவரும் இன்ப உலகும் கடவுள் முன் கூட்டியே வகுத்த திட்டப்படி நிகழ்கின்றன என்று மக்கள் புரிந்துகொள்ள ஏதுவாயிருந்தது. மக்களுக்கு எதிர்கால நல்வாழ்வில் உறுதியான நம்பிக்கையும், நிகழ்காலத் துன்பத்தைத் தாங்கும் மனஉறுதியும் ஏற்பட வழியுமுண்டாயிற்று.

அருளப்பர் எழுதிய திருவெளிப்பாட்டில் இந்த மரபைக் காணோம். அவர் தம் இயற்பெயரை நூலில் நான்கு முறை குறிப்பிடுகின்றார். அவர் வாழ்ந்த காலமும், நூல் காட்டும் காலமும் ஒன்றே. இதனால் புதிய ஏற்பாட்டுத் திருவெளிப்பாட்டு நூல்களிலிருந்து சிறிது வேறுபட்டு நிற்கின்றது.

கொள்கை அளவில் இந்நூல் இரண்டு முக்கிய கருத்துக்களில் வேறுபட்டுளது. (1) பொதுவாக திருவெளிப்பாட்டு நூல்கள் இறுதிக்கால இன்பவாழ்வில் உறுதிகொண்டவையாதலால், நிகழ்காலக் குறைகளைச் சீர்தூக்கிப் பார்த்து அவற்றைச் சீர்செய்யும் வழிவகைகளைக் கூறத்தவறிவிட்டன. புதிய உலகு வரும்வரை மக்கள் என்ன செய்ய வேண்டும் என்னும் வினவிற்கு இந்நூல்கள் எவ்வித விடையும் தருவதில்லை. அருளப்பரின் திருவெளிப்பாடு இந்தத் தவற்றை இழைப்பதில்லை. அது கிறிஸ்தவ சபைகளுக்கு விடுத்த ஏழு திருமுகங்களிலும் கிறிஸ்தவ மக்கள் தங்கள் வாழ்வின் குறைகளைக் களையவும், கிறிஸ்தவ வாழ்வில் முன்னேறவும் ஊக்குவிக்கின்றது. (2) கடவுளின் வன்மையில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட திருவெளிப்பாட்டு நூல்கள் இறுதிக்காலத்தில் கடவுள் தீயசக்திகளை அழித்து மாற்றுரை அடக்கி ஒடுக்குவார் என்னும் கருத்தை வலியுறுத்துகின்றன. கடவுளின் மன்னிப்பும் இரக்கமும் இவற்றில் விளங்கவில்லை ஆனல் அருளப்பரின் திருவெளிப்பாடு இரக்கமும், சாந்தமும் உள்ள செம்மறியை(இயேசுவை)க் காட்டி, அதுவே இறுதிக் காலத்தில் வெற்றிகொள்ளும் என்றும் கூறுகிறது.

இந்நூல் வேதாகமத்தின் இறுதிநூல் என்னும் முறையில் ஒரு தனிச்சிறப்பையும் பெற்றுள்ளது. பழைய ஏற்பாட்டில் கடவுள் முன்னேற்பாடு செய்த கடவுளாட்சி, நற்செய்தி நூல்களில் தொடங்கப்பெறுகின்றது ; அப்போஸ்தலர் பணியில் பறைசாற்றி அறிவிக்கப்பெறுகின்றது ; புதிய ஏற்பாட்டுத் திருமுகங்களில் அது தகுந்த விளக்கங்கள் பெறுகின்றது. அருளப்பரின் திருவெளிப்பாட்டில்தான் அது உச்சநிலையில் வெற்றி வாகையுடன் ஒளிர்ந்து மிளிர்வதைக் காண்கின்ரும்.

II. அருளப்பரின் திருவெளிப்பாடு எழுந்த சூழ்நிலை :

மறை எதிர்ப்பு :

எல்லாத் திருவெளிப்பாட்டு நூல்களும் துன்பச் சூழ்நிலையில் தோன்றியனவாகும். அருளப்பர் எழுதிய திருவெளிப்பாடு இதற்கு விதிவிலக்கன்று. உரோமை மன்னர்கள்

கிறிஸ்தவர்களைப் பலவகையானும் துன்புறுத்தினர். இத் துன்பம் நீரோ மன்னன் காலத்தே தொடங்கிவிட்டது. கி. பி. 64-இல் தொடங்கிய மறையெதிர்ப்பை அடுத்தடுத்து ஆட்சி பீடத்தில் ஏறிய மன்னர்கள் தொடர்ந்து நடத்தினர். இது கி. பி. 311 வரை நீடித்தது. இக்காலங்களில் கிறிஸ் தவர்கள்மேல் பலவகையான குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டன. கிறிஸ்தவ மறையை அழிக்க முனைந்த இம்மன்னர் கள் தங்களைக் கடவுளரின் பிறவிகளாக ஆக்கிக்கொண்டு மக்களிடமிருந்து தமக்கெனத் தனிவழிப்பாட்டை எதிர் பார்த்தனர். இந்த மன்னர் வழிபாடு கிரேக்க மன்னரிட மிருந்து வாரிசாக வந்ததாகும். அவர்களும் இவ்வழிபாட் டினைப் புதிதாக ஏற்படுத்தவில்லை. கீழைநாடுகளில் ஏற் கனவே நிலவிய மரபே இது. தாங்கள் வென்று கைப்பற்றிய நாடுகளிலெல்லாம் தங்களைக் கடவுளரின் பிறப்புக்களெனப் பறைசாற்றி அந்நாடுகளில் ஆட்சியை உறுதியாய் நிலைநாட் டினர். அவர்களுக்குப்பின் வந்த உரோமை மன்னர்களும் இவ்வழிபாட்டை நீடிக்கச் செய்யத் தயங்கவில்லை. உரோ மைப் பேரரசின் அமைதிக்கு இஃது ஒரு நல்ல சாதனமாக இருந்தது. நீரோவின் காலத்தில் அவனுக்கென கோவில்கள், பீடங்கள், வழிபாட்டு முறைகள் தோன்றின. உரோமை நகரமே ஒரு தேவதையாகக் கருதப்பெற்றது. உரோமைத் தேவதைக்கும் சிலைகள், வழிபாடுகள் உருவாகின. இவை யெல்லாம் உரோமை நகரிலன்று, கீழை நாடுகளில்தான் நிகழ்ந்தன. அந்நாடுகளில் ஆட்சி செய்த உரோமைய ஆளுநர்கள் மன்னனின் எண்ணத்தையும், விருப்பத்தையும் ஆணையாக்கிச் செயல்படுத்தினர். தொமீசியன் மன்னன் மட்டும் இவ்வழிபாட்டினை வன்முறையோடு புகுத்தினான். தன் தெய்வீகத் தன்மைக்கு அத்தாட்சியாகத் தான் விடுத்த கட்டளை மடல்களின் முதல் வாக்கியம் "ஆண்டவரும் நம் கடவுளும்" என்று தன்னைச் சுட்டும் சொற்றொடரோடு தொடங்கப் பணித்தான்.

கிறிஸ்தவர்கள் இப்புதிய வழிபாட்டை எதிர்த்தனர். இறைமகன் இயேசுவுக்கன்றி வழிபாடு எவருக்குமில்லை என

மறுத்துரைத்தனர். இதன் விளைவாய் அவர்களுக்குத் துன்பமும் துயரமும் வந்தன.

ஞான உணர்வுக் கொள்கை (Gnoticism):

மன்னர் வழிபாடும் அதனால் வந்த துன்ப துயரமும் ஒருபுறமிருக்க, பேதகம் ஒன்று புதிதாய் தலைதூக்கத் தொடங்கியது. இது கிரேக்கரிடமிருந்து வந்தது. இதனை ஞான உணர்வுக் கொள்கை எனக்கூறினர். இக்கொள்கைப் படி கடவுளுக்கும் மனிதனுக்கும் இணைக்கமுடியாத இடைவெளி உள்ளது. இதனைக் கடவுளாலும் நிரப்ப முடியாது. ஆனால் மனிதனுக்குக் கடவுளைப்பற்றி அறிய வாய்ப்பு உண்டு. அவனுக்கும் கடவுளுக்கும் இடையே ஆயிரமாயிரம் இடைநிலையினர் உள்ளனர். அவர்கள் வான தூதர்களாகவும் இருக்கலாம். அவர்களில் உயர்வு தாழ்வு உண்டு. அவர்கள்தாம் கடவுளைப் பற்றிய அறிவைக் சொணர்பவர்கள். இந்த இடைநிலையினர் யாவரினும் உயர்ந்தவர்தான் கிறிஸ்து. அவர் கடவுளுமல்லர், மனிதனுமல்லர். அவர் அளிக்கும் அறிவு சென்மப் பாவத்தால் உடலில் அடைபட்டுக் கிடக்கும் இறையியல்பின் துளியாகிய ஆன்மாவுக்குக் கிட்டுமெனில், அஃது உடல் என்னும் சிறைக் கூட்டிலிருந்து விடுபட்டு இறைவனை நோக்கிச் சென்றுவிடும். இவ்வித அறிவைப்பெற அறிஞர்களுக்கே வாய்ப்புண்டு. ஆழ்ந்தறிவில்லாப் பொதுமக்களுக்கு இவ்வாய்ப்பில்லை.

இப்பேதகம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில்தான் முதிர்ந்த நிலையை அடைந்ததெனினும், அது தொடக்க நிலையிலும் அச்சம் தரக்கூடியதன்றோ? கிறிஸ்தவ மறையின் அடிப்படைக் கொள்கைக்கு மாறாகவல்லவா அது எழும்பியது? கடவுள் மனிதனை அவனது தாழ்நிலையிலிருந்து உயர்த்த அதே தாழ்நிலைக்கு வந்தார். கிறிஸ்து கடவுளிடமிருந்து 'அறிவை' மட்டும் கொணரும் ஓர் இடைநிலையாளர் அல்லர். அவர் கடவுளையும் மனிதனையும் இணைக்கும் இணைப்பாளர். அவரே இவ்விருவரின் இணைப்புமாவார். அவர் கடவுளும் மனிதனுமானதால், மனிதர் அவரில் கடவுளோடு உறவாட முடிந்தது; கடவுளை அடையவும்

முடிந்தது. கிறிஸ்து மனிதனின் ஆன்மாவுக்காக மட்டுமன்றி முழு மனிதனுக்காகவும் இறந்து உயிர்த்தார். இந்த அடிப் படைத் தத்துவங்களுக்கு எதிராகக் கிளம்பிய இப்பேதகம் அக்காலக் கிறிஸ்தவரிடையே மிக்க ஊறு விளைவித்ததென் பதில் ஐயமில்லை.

ஆசிய நாட்டுக் கிறிஸ்தவர்களின் உண்மை விசுவாசத் திற்கு எவ்வித ஊறும் ஏற்படாமல் காக்க வேண்டும்; உரோமை மன்னரின் மறையெதிர்ப்பைத் தாங்க அவர் களுக்கு மன உறுதியும் அளிக்க வேண்டும். இவ்விரு நோக் கங்களுக்காகவும் அருளப்பர் இத்திருவெளிப்பாட்டு நூலை எழுதினர்.

III. ஆசிரியரும் நூல் எழுந்த காலமும்

1. ஆசிரியர் :

இந்நூலை எழுதியவர் தமது பெயரை 'அருளப்பர்' என்று முதல் அதிகாரத்தில் மூன்று முறையும் (1 : 1, 4, 9) இறுதி அதிகாரத்தில் ஒரு முறையும் (22 : 8) குறிப்பிடு கிருர். இந்த அருளப்பர் யார்? அப்போஸ்தலரா? வேறொரு வரா?

(i) புறச்சான்று : மறைத் தந்தையர் :

அப்போஸ்தலரான அருளப்பர்தான் இந்நூலை எழுதிய வர் என்பதற்கு ஆதிகால மறைத் தந்தையர் சிலர் சான்று கூறுகின்றனர். கி. பி. இரண்டாம் நூற்றூண்டின் முற்பகுதி யைச் சேர்ந்த புனித யுஸ்தீன் (Justin—கி. பி. 140), இரண் டாம் பகுதியைச் சேர்ந்த புனித இரேனெயுஸ் (Irenaeus-180 இவரை எபேசு நகர்ப் பாரம்பரியத்தின் வாரிசு என்பர்), அலெக்சாந்திரியாவின் புனித கிளமெந்து (Clement-215) உரோமை நகர் கிப்போலித்துஸ் (Hippolytus-235), ஆப் பிரிக்காவின் தெர்த்தாலியன் (Tertullian-200) ஆகியோர் இதனை அப்போஸ்தலரான அருளப்பரின் நூல் என்று எவ்வித ஐயப்பாடுமின்றி ஏற்றுக்கொள்கின்றனர்.

மூன்றும் நூற்றூண்டில் இதைக் குறித்து ஐயப்பாடுகள் எழலாயின. அலெக்சாந்திரியாவின் ஆயரான தியொனிசி

யுஸ்தான் (Dionysius-265) இந்நூலை அப்போஸ்தலர் எழுத வில்லை என முதன் முதலில் மறுத்துரைத்தவர். புனித அருளப்பரின் நற்செய்தி, திருமுகங்களோடு இதனை ஒப்பிட்டுப் பார்த்து இவற்றின் இலக்கிய மரபையும் இறையியலையும் ஆராய்ந்தபின் இம்முடிவுக்குத் தாம் வந்ததாகக் கூறுகிறார். இவரைச் சார்ந்து நான்காம் நூற்றாண்டில் செசாரியாவில் வாழ்ந்த எவுசேபியுஸ் (Eusebius-340) என்பவரும், கீழை நாட்டுப் பரம்பரையினரான எருசலேம் நகர் சிரில் (Cpyril-386) புனித கிறிஸோஸ்தோம் அருளப்பர் (John Chrysostom-458) ஆகியோரும் இந்நூலை அப்போஸ்தலரான அருளப்பர் எழுதினார் என்பதை ஏற்க மறுத்து விட்டனர்.

(ii) அகச்சான்றுகள் :

அ. மொழி நடை ;

திருவெளிப்பாட்டு நூலின் கிரேக்க மொழி நடை அப்போஸ்தலரான அருளப்பரின் மொழி நடையன்று. அவருடைய நற்செய்திலும் திருமுகங்களிலும் காணும் மொழி நடையை இந்நூலில் காண முடியாது. திருவெளிப்பாட்டின் மொழிநடை தரம் குறைந்தது. நூலில் இலக்கணப் பிழைகள் மிகுந்துள்ளன. புது வகையான வேற்றுமை வரிசைகளும், வினைத்திரிபுகளும், சொற்களும், சொற்றொடர்களும் நிறைந்துள்ளன. நூலைப் படிக்கும்போது கிரேக்க மொழியைச் சரிவரக் கற்காத ஒருவர் எழுதியதாக ஓர் உணர்வு ஏற்படுகிறது. புனித அருளப்பர் எழுதிய நற்செய்தியும் திருமுகங்களும் மொழி நடையில் இதனினும் சிறந்தவை. இந்நூல்களிலும் பொதுமக்கள் பேசிய கிரேக்க மொழியையே காணலாமெனினும், அது பொதுவில் இலக்கண வரம்புக்கு உட்பட்டது. படிப்பதற்குச் சுவையூட்டுகின்றது. திருவெளிப்பாட்டு நூல்நடை இத்தன்மைத்தன்று. இம்மொழிநடை வேறுபாட்டின் காரணமாகத் திருவெளிப்பாட்டு நூலைப் புனித அருளப்பர் எழுதினார் என்று ஏற்பது கடினமென் அறிஞர் சிலர் கூறுகின்றனர்.

வேறு சிலர் இவ்வாறான தரங்குறைந்த மொழிநடைக்கு ஆசிரியரின் காட்சி நிலையைக் காரணமாகக் காட்டுகின்றனர்.

காட்சிகளின்போது தன்னுணர்வு குறைதல் இயல்பு. அப்போது காண்பவை, கேட்பவை யாவற்றையும் நல்ல மொழியில் குறிப்பிடுதல் இயலாது. அவருடைய சீடர்கள் இம்மொழி நடையைச் சீர்செய்திருக்கலாம். ஆனால் அந்தக்கால துன்பச் சூழ்நிலை அவ்வாறு செய்ய நேரம் தரவில்லை. எல்லாவற்றையும் அவசரத்தில் எழுதி அனுப்ப வேண்டிய சூழ்நிலை. ஆதலின் அப்போஸ்தலரின் பிற நூல்களிலுள்ள மொழிநடை ஈண்டு அமையவில்லை என்பர் இன்னோர்.

ஆ. இறையியல் :

மொழி நடையைவிட இறையியல் கொள்கைகளைக் குறித்துதான் வாதங்கள் மிகுந்துள்ளன. அருளப்பருக்கு விருப்பமான இறையியல் கருத்தோட்டங்கள் பல, எடுத்துக்காட்டாக, வாழ்வும் சாவும், ஒளியும் இருளும், உண்மையும் பொய்யும், தந்தையும் மகனும், விசுவாசமும் அன்பும், கிறிஸ்துவின் உடலும் இரத்தமும், கிறிஸ்துவின் ஆவி கிறிஸ்தவர் உள்ளங்களில் குடியிருத்தல், கிறிஸ்தவனின் சுவிகாரத் தன்மை, இவை யாவும் அவர் எழுதிய நற்செய்தியிலும் திருமுகங்களிலும் பரவிக் கிடக்கின்றன. இவற்றில் ஒன்றையேனும் இந்நூலில் காணோம்,

ஆனால், இரு நூல்களும் கிறிஸ்துவைச் 'செம்மறி' என்று கூறுகின்றன (அரு 1 : 29—36—திருவெளிப்பாட்டில் 28 முறை). 'கடவுளின் வார்த்தை' என்பது அவரது பெயர் (அரு 1 : 14; தி. வெ. 19 : 13). இறை மக்களைக் குறிக்கும் 'மணமகள்' என்னும் சொல்லை நற்செய்தியில் 3 : 29-ஆம் வாக்கியத்திலும், திருவெளிப்பாட்டில் 2 : 2, 9; 22 : 17 வாக்கியங்களிலும் காணலாம். 'வாழ்வு'க்கு அடையாளமாக, தண்ணீர், 'உயிருள்ள தண்ணீர்' என்னும் சொற்றொடர் அரு 4 : 10; 7 : 38 முதலிய வாக்கியங்களிலும், 'வாழ்வளிக்கும் நீர்' என்னும் சொற்றொடர் தி. வெ. 7 : 17; 21 : 6; 22 ; 1, 17 ஆகிய வாக்கியங்களிலும் கையாளப்பட்டுள்ளது. அடுத்து, திருவெளிப்பாடு காட்டும் புதிய எருசலேமில் ஆலயம் இல்லாமை (21 : 22) அரு.

4 ; 21, 23இல் இயேசு கூறும் கருத்தை நிறைவு செய்யும் போலும்.

உருவக மொழிகளும் அடையாளங்களும் திருவெளிப் பாட்டில் உள்ள அளவிற்கு நான்காம் நற்செய்தியில் இல்லை. எனினும், நற்செய்தியிலும் பலவிடங்களில் உருவகங்களைக் காண்கிறோம். பிற மூன்று நற்செய்தியாளரினும் அருளப்பர் தான் தமது நற்செய்திக்கு உருவக அமைப்புக் கொடுத்திருக் கிறார். இவ்விரு நூல்களிலிருந்து ஆசிரியரின் குணவியல்பு களை ஆராயுமிடத்து இவை இரண்டுமே ஆசிரியரை 'இடியின் மகன்' (மாற் 3:17) என்று காட்டுகின்றன. புனித அருளப்பர் ஒரு தீவிரவாதி. எவ்விதத் தீமையையும் உடனே அழிக்க விரும்புபவர் (லூக் 9:54). திருவெளிப்பாட்டில் தீமையை அழிக்கவரும் மின்னல்கள், இடிமுழக்கங்கள் இவை யாவும் புனித அருளப்பரின் இக்குணவியல்பையே காட்டி நிற்கின்றன.

இந்நூலில் அப்போஸ்தலர் ஒருவரின் அதிகாரத்தொனி கேட்பதை நாம் மறைக்கமுடியாது. இஃது எழுந்த காலத் தில் அப்போஸ்தலரான அருளப்பரின்றி அப்போஸ்தலர் வேறொருவரும் வாழவில்லை. பத்மு (Patmos) தீவில் நாடு கடத்தப்பட்டு வாழ்ந்து கொண்டிருந்த அவர் மறையெதிர்ப் பால் துன்புற்றுத் தவித்த கிறிஸ்தவ சபையினரோடு துன் பத்தில் பங்கு பெற்றவரல்லவா? அந்தச் சூழ்நிலையில் அவரின்றி வேறொருவர் இந்நூலை எழுதினார் என்பதனை ஏற்கக் கடினமாயுமுள்ளது. இவையாவும் வேறொரு சாரா ரின் வாதம்.

(iii) முடிவுரை :

எனவே திருவெளிப்பாட்டை அப்போஸ்தலரான அரு ளப்பர்தான் எழுதினாரா, அல்லது வேறொருவர் எழுதினாரா என்பது முடிவு காணாத பிரச்சனையாகும். இந்நிலையில் அறி ஞர்கள் சிலர் தற்காலக் கருத்து ஒன்றே நடுநிலைக் கோட் பாடெனத் தருகின்றனர். இதன்படி புனித அருளப்பர் முதல் நூற்றாண்டின் இறுதிவரை ஆசிய நாட்டுப் பகுதிகளில்

செல்வாக்கு மிக்கவராய் இருந்தார். இது பாரம்பரை கூறுவது. அவரே நான்காம் நற்செய்தி, அருளப்பர்த் திருமுகங்கள், புதிய ஏற்பாட்டுத் திருவெளிப்பாடு ஆகியவற்றின் ஊற்றும் மூலமுமாவார். அவர் எபேசு நகரில் ஒருமறைப்பள்ளி நடத்தியிருக்கக்கூடும். அதில் பயின்ற மாணவர் ஆசிரியர் அளித்த குறிப்புக்களின் அடிப்படை ஆதாரத்தில் இப்பொழுதுள்ள நூல்களை எழுதினுர்போலும். இவர்கள் கிரேக்கர். அருளப்பரின் எபிரேய மொழி வழக்கைச் சரிவரப் புரிந்துகொள்ளாதவர்கள். அவருடைய கருத்துக்களை நூல்வடிவில் தந்தபோது தத்தம் திறமைக்கேற்ப எழுதினர். ஆதலின் மொழி நடையில் வேறுபாடு; இறையியல் கருத்துக்களைக் கூறுவதில் திண்மை, மென்மை ; ஒன்றில் உள்ள கருத்தோட்டங்கள் மற்ருென்றில் இல்லாமை இவையெல்லாம் ஏற்பட்டன. இத்தற்காலக் கருத்து புனித அருளப்பரை இந்நூலின் ஆசிரியரெனக் காட்டுகிறது. இதற்கும் பிற அருளப்பர் நூல்களுக்குமுள்ள வேறுபாட்டிற்குத் தகுந்த காரணத்தையும் கூறுகிறது. தொடர்ந்து நடந்துவரும் ஆராய்ச்சிகள் வேறு சிறந்த முடிவு தரும்வரை இதனை ஏற்பதே சிறந்ததாகும்.

2. காலம் :

திருவெளிப்பாடு உரோமை மன்னர்களின் மறையெதிர்ப்புக் காலத்தில் எழுந்தது என மேலே கூறினேம். மறையெதிர்ப்பு கி. பி. 64 முதல் 311 வரை நீடித்தது. இந்நூல் இரண்டாம் நூற்ருண்டுக்குப்பின் எழுப்பட்டது என்பார் யாருமிலர். ஆதலின், முதல் நூற்ருண்டில் என்ருல் எந்த மன்னன் காலத்தில் இத்திருவெளிப்பாடு தோன்றியது ?

இதுகுறித்தும் அறிஞர்களிடையே கருத்து ஒற்றுமை இல்லை. நூலின் புதிரான அமைப்பு முறையே இதற்குக் காரணம். நூலை மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம். (1) முதல் மூன்று அதிகாரங்கள்; (2) 4-ஆம் அதிகாரம் முதல் 22:5 வரை (3) 22:6 முதல் நூலின் இறுதிவரை. முதற்பகுதி முன்னுரையாகும்; கடைப்பகுதி முடிவுரையாகும். இடைப்பகுதி பலவகைக் காட்சிகளை வருணிக்கிறது.

இங்கேதான் பிரச்சனை எழும்புகிறது. இதில் வரும் காட்சிகள் ஒவ்வொன்றும் தனித்தனிக் கருத்தைத் தருவனவல்ல; ஒரே கருத்தைப் பலவகை உருவகங்களில், அடையாளங்களில் திரும்பத் திரும்ப விளக்குவனபோல் தோன்றும். கருத் தோட்டம் மேலோங்கிச் செல்லாமல் அவ்வப்போது தடை பட்டு, முடிவுபெற்று, மீண்டும் அடுத்தடுத்துத் தொடங்கு கிறது. சில காட்சிகளின் வரிசை முறையினை மாற்றியமைத் தாலும் நலம் பயக்கும் போலும்! சில பகுதிகளை விட்டு விட்டாலும், நூலின் அமைப்புமுறை சீர்படும்போலும்! ஆதலின் காட்சிகள் ஒவ்வொன்றுக்குமிடையே உள்ள தொடர்பை நன்கு அறிய முடியவில்லை. எல்லாக்காட்சி களும் ஒரே காலத்தில் எழுந்தவையெனவும் கொள்வதற் கில்லை. சில வெவ்வேறான காலத்தையும் காட்டக்கூடும். எனவே அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவு கின்றன.

க. **நீரோவின் காலம் என்பார் சிலர்:** *(54—68)*

முதன்முதல் மறையெதிர்ப்புத் தொடங்கியது நீரோ மன்னனின் காலத்தில்தான். துன்பக்காலத்தில் எழுந்த இந்நூல் ஏறத்தாழ கி. பி. 64இல் தோன்றியிருக்கவேண்டும். ஆனால் இன்றுள்ள முழு வடிவத்திலன்று. மேற்கூறிய இடைப்பகுதி மட்டும் முதலில் எழுதப்பட்டது. பிற்றைக் காலத்தில் முன்னுரை, முடிவுரை கொண்டு நூல் முழுமை பெற்றது. 11:1–2-இல் கூறப்பெறும் ஆலயம் எருசலேம் நகர் அழிவுக்குமுன் இருந்த ஆலயம் என்பது இவர்களின் கருத்து. எருசலேம் நகரும் ஆலயமும் கி. பி. 70-இல் அழி வுற்றது வரலாற்று உண்மை. ஆதலின் இந்நூல் நீரோ மன்னன் காலத்தில் எழுதப்பட்டது என்பதற்கு இவ்வாக் கியங்களும் ஆதாரமாகின்றன.

ஆழ்ந்து ஆய்ந்து பார்க்குமிடத்து இக்கருத்து ஏற்புடைத் தன்று. 11:1–2 குறிப்பிடும் ஆலயம் உண்மை ஆலயமா, உருவக ஆலயமா என்று அறுதியிட்டுக் கூற இயலாது.

திருவெளிப்பாடு புனித மத்தேயு, லூக்கா நற்செய்தி களிலிருந்து பல வாக்கியங்களைக் கையாண்டுள்ளது. இந்

நற்செய்திகள் கி. பி. 70-திலிருந்து 80 வரையுள்ள காலத்தில் எழுதப்பட்டன என்று அறிஞர்கள் கூறுகின்றனர். ஆகவே திருவெளிப்பாட்டு நூலை கி. பி. 70-க்கு முன் வைப்பது பொருந்தாது.

நீரோ மன்னன் வழிபாட்டைப் பரப்புவதில் அவ்வளவு அக்கரை செலுத்தியதாகத் தெரியவில்லை. அவனுடைய ஆளுநர்தாம் அதில் மிகுந்த அக்கரை காட்டினர். இது குறித்து வன்முறை நிகழ்ந்தாகவும் தெரியவில்லை. நீரோவின் காலத்தில் உரோமையில் கிறிஸ்தவர்கள் துன்புற்றது மன்னர் வழிபாட்டை எதிர்த்ததற்காகவன்று; நகரில் ஏற்பட்ட பெரும் தீவிபத்திற்கு அவர்கள்தாம் காரணம் என்ற குற்றச் சாட்டிற்காக என்று வரலாறு கூறுகிறது. அந்த மறையெதிர்ப்பும் உரோமையிலும் அதைச் சார்ந்த சுற்றுப்புரங்களில் மட்டுமே நிகழ்ந்தது; ஆசியப் பகுதிகளுக்கு அஃது எட்டவில்லை எனக் கருதவும் இடமுண்டு.

உ **வெஸ்பாசியன் (Vespasian) காலம் என்பர் சிலர்:** (69-79)

திருவெளிப்பாட்டில் 17:9—12-இல் உள்ள மன்னர்களைப் பற்றிய குறிப்புக்கள் வெஸ்பாசியன் காலத்தைக் காட்டும். மாமன்னன் அகுஸ்துஸ்முதல் மன்னர் வரிசையைத் தொடங்கி, குறுகிய காலம் வாழ்ந்து வரலாற்றுச் சிறப்புப் பெறாத கல்பா, ஒத்தோ, வித்தெல்லுஸ் ஆகிய மூவரையும் நீக்கிவிட்டால், ஆறாவது மன்னன் வெஸ்பாசியன் ஆவான். நூலின்படி ஐவர் ஒழிந்துவிட்டனர். வெஸ்பாசியன்தான் வாழ்பவன். அவனே நூல் எழுந்த காலத்தில் வாழ்ந்தவன் என்றாகிறது. இவ்வகைக் கணக்கீடு பழங்கால முறைக்கு ஒத்தது. முற்கால வரலாற்று ஆசிரியரான யோசேபுஸ் (Josephus) என்பவரும் உரோமை மன்னர் பட்டியலில் இம் மூவரையும் சேர்க்கவில்லை. சிறப்புப் பெறாதவர்களைத் தலைமுறை அட்டவணையில் சேர்க்காது விட்டுவிடுவது யூதர்களின் மரபுமாகும். புனித மத்தேயுவும் இயேசுவின் தலைமுறை அட்டவணையில் முக்கியமானவர்களைத் தானே சேர்த்துள்ளார்.

ஆனல் வெஸ்பாசியனும் நீரோவைப் போன்று மன்னர் வழிபாட்டைப் பரப்புவதில் அக்கரை காட்டவில்லை என்பது எதிர்சான்ருக உள்ளது. இவனது காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு வந்துள்ள துன்பமும் பெரிதல்லவே. கிறிஸ்தவர்கள் ஓரளவுக்கு நிம்மதியாகவும் வாழ்க்கை நடத்தினர். நூல் வருணிக்கும் துன்பமோ பெரிது. ஆதலின் வெஸ்பாசியன் காலத்தில், இந்நூல் எழவில்லையென்ருல், இதில் உள்ள மன்னர் வரிசையின் கணக்கீடு தவருே? அல்ல. தி. வெ. 17 : 9–12 காட்டும் மன்னன் வெஸ்பாசியன்தான். புனித அருளப்பர் இவ்விடத்தில் காலத்தை முன்தள்ளிவைத்து எழுதுகிருர். தொமீசியன் மன்னன் காலத்தில் நிகழ்ந்தவற்றை வெஸ்பாசியன் காலத்தில் நிகழ்ந்ததாக எழுதிவிடுகின்ருர். இவ்வாறு நிகழ்கால நிகழ்ச்சிகளை முந்திய காலத்தில்வைத்து எழுதுவது திருவெளிப்பாட்டு இலக்கிய வகையன்ருே? அருளப்பர் பொதுவில் இவ்விலக்கிய வகையைக் கையாளவில்லையெனினும், இவ்விடத்தில் மட்டும் இதனைக் கையாண்டுள்ளார் என்பர் இக்குழுவினர்.

௯. தொமீசியன் (Domitian) காலம் என்பார் பலர் (18 – 96):

இக்கோட்பாட்டுக்குப் பழங்கால மறைத் தந்தையரின் ஆதாரம் உண்டு. புனித இரேனியுஸ் (180) இந்நூல் தொமீசியன் காலத்தில் எழுந்ததெனத் திட்டவட்டமாகக் கூறியிருக்கின்ருர் (Adv. Haer. 5 : 30, 3 ; 2 : 22, 5 ; 3 : 3, 4). இவர் கூறுவதையே செசாரியாவின் எவுசேபியுஸ், (340), புனித எரோணிமுஸ் (Hieronymus) (420), பெத்தாவின் விக்தோரினுஸ் (Victorinus) (304) ஆகியோரும் ஏற்றுக் கொள்கின்றனர். இவர்களது ஆதாரம் வலிமை மிக்கது. உரோமை வரலாற்றில் மன்னர் வழிபாட்டைப் பரப்புவதில் முனைந்து நின்றவன் தொமீசியன். எந்தவித எதிர்ப்பையும் அழித்தொழித்து இவ்வழிபாட்டைத் தனது அரசு முழுவதும் பரப்பினவன் இவன். கிறிஸ்தவர்கள் இதனை ஏற்க மறுத்ததால், அவர்களை வாழவிடக்கூடாது என்றும் பறைசாற்றி, அவர்களைத் துன்புறுத்தினன். இதற்காகவே தன் ஒன்றுவிட்ட சகோதரன் ஃபிளாவியுசையும் (Flavius) அவன்

மனைவி தொமித்தில்லாவையும் (Domitilla) போந்த்சியா தீவுக்கு நாடு கடத்தினான். அப்போஸ்தலரான அருளப்பரையும் பத்மு தீவுக்கு நாடு கடத்தினான்.

இக்கொடிய மறையெதிர்புக்கு அஞ்சிச் சிலர் கிறிஸ்தவ நெறிதவறி மன்னர் வழிபாட்டில் ஈடுபட்டனர். அத்தகையோரை வருணிக்கும் பகுதிகள் திருவெளிப்பாட்டில் உள. அவையாவன: "விலங்குக்கு ஒப்பானவன் யார்? இதனோடு போரிடக்கூடியவன் யார்? என்று தாகத்தைத் தொழுதார்கள்" *(13 : 4)*; "விலங்கையும் அதன் சிலையையும் தொழுது, நெற்றியிலோ கையிலோ அடையாளம் பெற்றிருப்பவன்" *(14 : 9)*; "மண்ணுலகில் கொடிய விலங்கின் அடையாளத்தைக் கொண்டிருந்தவர்கள், அதன் சிலையைத் தொழுதவர்கள்" *(16 : 2)*. இப்பகுதிகளெல்லாம் தொமீசியனது மன்னர் வழிபாட்டு மோகத்துக்குச் சான்றுபகர்கின்றன.

திருவெளிப்பாடு உரோமை நகரை, வேசிகளின் தாய், பரிசுத்தர்களின் இரத்தத்தைக் குடித்து வெறிகொண்டவள் *(17 : 5, 6)*, மண்ணுலகில் கொல்லப்பட்ட அனைவரின் இரத்தமும் கொண்டவள் *(18 : 24)*, தனது விபசாரத்தால் மண்ணகத்தைச் சீரழித்த பேர்போன வேசி *(19 : 2)* என்றெல்லாம் வருணிக்கும் பகுதிகளோடு தொமீசியனின் கொடுங்கோலாட்சியை ஒப்பிட்டுப் பார்க்குங்கால், இந்நூல் இவன் காலத்தில்தான் எழுந்தது என்று துணிந்து கூற இடமுண்டு.

முடிவுரை :

இம்மூன்றும் கோட்பாட்டுக்குப் பலவகை ஆதாரங்கள் இருப்பினும், திருவெளிப்பாடு நூல் உருவாவதற்கு மூல ஆதார ஏடுகளோ, தனித் தனியான சிறு திருவெளிப்பாடுகளோ உதவின என்பது ஏற்கற்பாடில. அவை வெவ்வேறு காலங்களில் தோன்றி பிற்றைக் காலத்தில் ஒரே நூல் வடிவில் சேர்க்கப் பட்டிருக்கலாம். ஒருக்கால் நீரோ மன்னன் காலத்தில் முதல் ஆதார எடு (அல்லது முதல் சிறு திரு

வெளிப்பாடு நூல்) தோன்றியிருக்கலாம். அடுத்தடுத்து இத்தகைய ஏடுகள் சேர, தோமீசியன் காலத்தில் எல்லாம் சேர்ந்து ஒரு முழு நூலாயின அல்லது இம்மன்னன் காலத்தில் எழுதப்பெற்ற இரண்டாம் சிறு திருவெளிப்பாடு (இது முதல் சிறு திருவெளிப்பாடு நூலுக்கு ஏறத்தாழ இணையானது என்பர்) முதல் நூலுடன் சேர்ந்து ஒன்றானது எனலாம். ஆதலின் நூல் தோமீசியன் காலத்தில்தான் (கி. பி. 95) முழுமை பெற்றது என்பதை வல்லுநரில் மிகச் சிலரைத் தவிர யாவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

IV. திருவெளிப்பாடு கூறும் செய்தியும் போதனையும் :

துன்பகாலத்தில் இந்நூல் என்ன செய்தியைக் கொணர்ந்தது? ஆசிரியரின் நோக்கத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல் பலர் பலவிதமான செய்திகளை இந்நூலில் தேடினர். திருச்சபையின் நெடுங்கால வரலாற்று நிகழ்ச்சிகளை விளக்கும் நூலெனக் கருதி இஃதில் அந்நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப செய்திகளைக் காண முற்பட்டனர் சிலர். நூலில் உள்ள காட்சிகள் சில திருச்சபையின் முக்கிய வரலாற்றுக் காலங்களைக் காட்டும் என்பது இவர்களின் கருத்து. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ரெனன் (Ranan) என்பவர் இந்நூலை அது காட்டும் அரசியல் சூழ்நிலைகளுக்கு மட்டும் கட்டுப்படுத்திவிட்டார். இவருடைய கருத்துப்படி வேறு எக்காலத்தவருக்கும் எச்செய்தியையும் இந்நூலில் காணமுடியாது. நூலில் வரும் இறுதிகாலத்தைப்பற்றிய உரைகள் எல்லாம் எதிர்காலத்தைக் குறிக்கா. அக்காலக் கிறிஸ்துவர்கள் உலக முடிவு அண்மையில் வந்துவிடுமென நம்பியிருந்ததால், அதற்கு மாற்றுக் செய்தியாக அருளப்பர் இறுதிகால வருணனைகள் பலவற்றை நூலில் சேர்த்தார். இக்கருத்தினையும் சிலர் தழுவினர். வேறுசிலர் இதனை ஒரு ஞான நூலாக வைத்து விளக்கம் கூறினர். துன்புறும் ஆன்மா இந்நூலிலிருந்து சிறந்த ஆறுதல் பெறமுடியும். எந்த வரலாற்று நிகழ்ச்சியும் இதில் காணாது விட்டுவிட்டனர். திருவெளிப்பாட்டு நூலைச் சரிவர புரிந்து கொள்ளாததால் இம்மூவகையினரும் தவறு இழைத்தனர்.

நம்பிக்கையின் நற்செய்தி :

ஒரு குறித்த காலத்தில் ஆசியாவிலிருந்த ஏழு கிறிஸ்தவ சபைகளுக்கும் விடுத்த இம்மடல் திருச்சபைக்கே விடுத்த பொதுமடலாக அமைந்துள்ளது. இது கூறும் செய்தி கால வரம்பையும் நாட்டு எல்லையையும் கடந்து நமக்கு வருகின்றது. அன்றைய சூழ்நிலையில் கூறிய செய்தி இன்றும் நமக்குப் பொருந்தும்.

துன்பம் கிறிஸ்தவர்களை எப்பொழுதும் தொடரும். அவர்கள் அடுத்தடுத்துத் துன்பம் அனுபவிப்பதில் வியப்பில்லை. ஆனால் இஃது என்றுமே நீடிப்பதில்லை. இதற்கு முடிவு உண்டு. துன்பத்தைக் கொணருபவை தீய சக்திகள். கிறிஸ்தவத்திற்கும் அதன் மாற்றான், தீமைக்கும் நடக்கும் இடையறாத போரில், கிறிஸ்தவம் வெற்றிகொள்வது திண்ணம். ஆனால் தீமை அவ்வப்போது தலைதூக்கும். அப்போதெல்லாம் கிறிஸ்தவர்களிடையே சோர்வும் ஏற்படும். அவர்கள் மிகுந்த உறுதியோடு போராட வேண்டும். மனத்தளர்வு கொள்ளாது அவர்களது நம்பிக்கை பெருக வேண்டும். கிறிஸ்து சாவை வென்று மாற்றானை வென்றவர். அவருடைய சாவும் உயிர்ப்பும் மனிதரின் முழு வெற்றியின் தொடக்கம். இன்னும் நிறைவை எய்யவில்லை. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவோடு சேர்ந்து நின்றால் இந்த இறுதி வெற்றி அவர்கட்கும் கிடைப்பது திண்ணம். இஃது அவரது இரண்டாம் வருகையோடு கிட்டும். அதுவும் அண்மையில் வந்துவிடும். அதுபோழ்து துன்பமும் அதைக் கொணர்ந்த மாற்றானும் அழிவர். இறையரசு நித்தியத்திற்கும் நிலை கொள்ளும். அதுவரை கிறிஸ்தவர்கள் "ஆண்டவராகிய இயேசுவே, வாரும்" என்று ஆவலோடு குரல் எழுப்ப வேண்டும். அவரும், "ஆம், விரைவாகவே வருகிறேன்" என்று கூறுவார். எனவே, திருவெளிப்பாடு ஒரு நம்பிக்கையின் நற்செய்தி.

இறையியல் போதனைகள் :

(அ) கடவுள் :

அவர் ஆண்டவராகிய கடவுள் *(1:8)*; அவரே உலகைப் படைத்தவர் *(4:11)*; படைப்புக்களைப் பராமரிப்பவரும்

அவரே. அவர் உலக வரலாற்றை இயக்குகின்ருர். அவரே உலகுக்குத் தீர்ப்பளிப்பவர் (20;11–15). உலகம் அவரில் தொடங்கி அவரில் நிறைவெய்தும், அவரே **அகரமும் னகர மும்**; இருந்தவர், இருக்கிறவர். இனி இருப்பவர் (1;8); அவரே இயேசுவின் தந்தை (1:6;2:27;3:5;14:1). மூவொரு –கடவுள் உண்மை பற்றி நூலில் தெளிவாக ஒன்றும் காணேம். ஒருக்கால் நூலின் தொடக்கத்தில் வரும் வாழ்த் துச் செய்தியாகிய, "இருக்கிறவர், இருந்தவர், இனி இருப்பவர், என்னும் **இறைவனிடமிருந்தும்** அவரது அரியணைமுன் நிற்கும் ஏழு **ஆவிகளிடமிருந்தும் இயேசுக் கிறிஸ்துவிடமிருந்தும்......**" என்னும் சொற்ருெடர் (1:4) இதனை உணர்த்தும்போலும்.

கிறிஸ்து :

'இயேசு' என்றும் 'கிறிஸ்து' என்றும் நூல் கூறுகிறது. இவர் யூத குலத்தின் சிங்கமும் தாவீதின் வேருமானவர் (5;5). தானியேல் காட்சியில் கண்ட மனுமகன் இவரே (தானி 7:13; தி.வெ. 1:7–13; 14:14). இவர் கடவுளின் வார்த்தை (19:23); பரிசுத்தர், உண்மையானவர் (3:7). இவர் கடவுளுமாவார் (6:10). ஆகவே **அகரமும், னகரமு** மாயிருக்கிருர் (22:3). இந்நூல் "யாவே" (Yahweh)க் குரிய குணங்களை இவருக்கும் உரித்தாக்குகின்றது. இயேசு மனித உள்ளங்களையும் இதயங்களையும் ஊடுருவிக் காண் பவர் (2:29); ஆண்டவருக்கெல்லாம் ஆண்டவர், அரசர்க் கெல்லாம் அரசர் (17:14). இவர் ஏழு கண்களை உடைய வர் (5:6). அதாவது, எல்லாம் அறிபவர்.

அவர் அணிந்துள்ள நீண்ட வெண்ணிற ஆடை (1:13) அவரை ஒரு குருவெனக் காட்டுகிறது. அவரது குருத்துவத் தைப் பற்றி நூலில் ஒன்றும் விரிவாகக் காணேம். இந்நூல் கிறிஸ்துவைச் செம்மறி என 28 முறை கூறுகிறது. அது பலியிடப்பட்ட செம்மறி (5:6). அப் பலியினுல் உலகை வெற்றிகொண்டது. "பலியான செம்மறி வல்லமையும் செல்வமும் ஞானமும் பலமும் மாட்சியும், மகிமையும் போற்றியும் பெறத் தகுதியுள்ளவர்" (5:12). ஆகவே

கிறிஸ்து வெற்றி வீரராய் அரியணையில் வீற்றிருப்பவர் (5:13). இதிலிருந்து கிறிஸ்து ஒரு மீட்பர் என்னும் உண்மையும் பிறக்கின்றது (7:17).

தூய ஆவி :

இந்நூலில் **தூய ஆவியைப்** பற்றி விரிவாக ஒன்றுமே காண இயலாது. இருப்பினும் புனித ஆவியைப் பற்றிய பகுதிகள் ஒரு சில உள்ளன. 1:4-இல் வரும் "அரியணை முன் நிற்கும் ஏழு ஆவிகள்" என்னும் சொற்கள் புனித ஆவியின் நிறைவைக் குறிக்கின்றன. இந்நூல் 4:5-இல் இவரைக் குறிக்கக் கையாண்டுள்ள சொற்கள், 'எரிகின்ற ஏழு தீப்பந்தங்கள், 5:6-இல் செம்மறியின் ஏழு கண்கள் புனித ஆவிக்கு அடையாளமாய் வருகின்றன. இந்தப் புனித ஆவிதான் திருச்சபைக்கு அறிவுரை வழங்கி அதனை நடத்துபவர் (2:7). இவரே புதிய எருசலேமில் வாழ்வின் நீர் என்னும் அடையாளத்தில் வருபவர் (21:6).

திருச்சபை :

இந்நூல் திருச்சபையை மையமாகக் கொண்டு எழுதப் பட்டதென்றால், மிகையாகாது. திருச்சபையைப் பழைய ஏற்பாட்டு இறைமக்களின் தொடர்ச்சியாகக் காட்டுகிறது இந்நூல். திருச்சபை செம்மறியின் இரத்தத்தால் உருவான அரச குருத்துவத் திருக்கூட்டம் (1:6; 5:10). பழைய உடன்படிக்கையில் இஸ்ராயேல் கடவுளின் மணமகளானது போல், திருச்சபை செம்மறியின் மணமகளாகிறது (14:4–5: 19:7; 21:2, 9). இவ்வுருவகம் கிறிஸ்துவுக்கும் திருச் சபைக்கும் உள்ள நெருங்கிய ஒன்றிப்பைக் காட்டுகிறது. கடவுளை வாழ்த்தி அவருக்கு ஊழியம் புரிவதே திருச்சபை யின் தலையாய கடமையாகும். ஆதலின் திருவழிபாட்டுப் பண்கள் திருவெளிப்பாட்டில் பரவிக் கிடக்கின்றன. இவை ஆதிகால திருச்சபையின் நற்கருணை வழிபாட்டில் இடம் பெற்றவை. திருச்சபை மண்ணகத் திருவழிபாட்டின் வழி யாக விண்ணகத் திருவழிபாட்டிலும் பங்குகொள்கிறது (4:8–11; 5:8–14; 15:2–4; 19:1–8).

திருவெளிப்பாடும் பழைய ஏற்பாடும் :

திருவெளிப்பாட்டுக்கும் பழைய ஏற்பாட்டு இறைவாக்குரைத்தலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென முன்பே குறிப்பிட்டோம். பழைய ஏற்பாட்டின் பிற நூல்களோடும் இந்நூல் தொடர்பு கொண்டுள்ளது. பழைய ஏற்பாட்டைப் புதிய ஏற்பாட்டு ஒளியில் பார்த்துப் பிறக்கும் நூல் என்றே இதனைக் கூறிவிடலாம். இதில் பழைய ஏற்பாட்டிலிருந்து எந்த ஒரு மேற்கோளையும் முழுமையாகக் காணமுடியாது. ஆனால் பழைய ஏற்பாட்டு நூல்களின் கூற்றுக்கள் பல இந்நூலில் பரவிக் கிடக்கின்றன. அவை நூலின் அரைப் பகுதிக்கு மேலான இடத்தையும் நிரப்புகின்றன. குறிப்பாக அறிஞர்களின் கணக்குப்படி நூலில் (கிரேக்க நூல்) உள்ள 404 வாக்கியங்களில் 278 வாக்கியங்கள் பழைய ஏற்பாட்டு நூல்களின் வாக்கியங்களையோ வாக்கியப் பகுதிகளையோ உணர்த்தும். இன்னும் இந்நூலின் சில முக்கிய உருவகங்களும் அடையாளங்களும் பிற திருவெளிப்பாடுகளின் பரம்பரையிலிருந்து வந்தவை என்பதற்கு மாறாக, பழைய ஏற்பாட்டு நூல்களிலிருந்து (சிறப்பாகப் பிற்றைக் கால இறைவாக்கினர் நூல்கள்) வந்தவை எனக் கூறலே பொருத்தமாகும். திருவெளிப்பாட்டு ஆசிரியர் ஏன் பழைய ஏற்பாட்டிலிருந்து இத்தனை மறைமுக மேற்கோள்களையும், உருவகங்களையும் கையாள வேண்டும்? இவ்வாறு செய்தலால் ஆசிரியர் பழைய ஏற்பாட்டுக் கருத்துக்களையும் கருத்தோட்டங்களையும் புதிய ஒளியில் காண முற்படுகின்றார் என்பது தெளிவு. பழைய ஏற்பாட்டின் சில முக்கிய நிகழ்ச்சிகளை நூலில் மறைவாகக் குறிப்பிட்டுள்ளதும் அவரது இந்நோக்கத்தை உணர்த்துகின்றது.

ஈண்டு ஒருசில எடுத்துக்காட்டுக்களைக் காணலாம் :

1. இறைவாக்கினர் மரபுப்படி மௌனம் ஆண்டவரின் வருகையையும் அவரது பிரசன்னத்தையும் குறிக்கும் அடையாளம் (சக். 2:13). “ஆண்டவர் யாவேயின் திருமுன் அமைதிகொள்; யாவேயின் நாள் அண்மையில் உள்ளது”

என்ற சோபோனியாசின் கூற்று (1:7) இதற்குச் சிறந்த சான்றாக உளது. திருவெளிப்பாடும் செம்மறியின் முன் நிலவிய அமைதியைக் குறிப்பிடுகிறது. "ஏழாவது முத்திரையை உடைத்தபோது விண்ணகத்தில் அரைமணியளவு மௌனம் நிலவியது" (8:1).

2. யாவே கட்டளைகள் விடுக்கும்போதெல்லாம் அவரைக் கர்ச்சிக்கும் சிங்கத்திற்கு ஒப்பிடுகின்றன ஆமோ. 1:2; யோவேல் 4:16; எரே. 25:30 ஆகிய பகுதிகள். இஃது ஓர் அச்சம் விளைவிக்கும் அடையாளம். அது மக்களிடம் கீழ்ப்படிதலை விளைவிக்கும். யாவே பேசிவிட்டால் இறைவாக்கினர் தம் பணியைச் செய்யாதிருக்க முடியாது என்றும் குறிப்பிடுகின்றார் ஆமோஸ் இறைவாக்கினர் (3:7–8). கடவுளின் கட்டளைக்கு யாவரும் அடிபணிய வேண்டும். மீறி நடப்பவர் யாருமிலர். இவற்றோடு தி. வெ. 10:3-இல் வானதூதன் கர்ச்சிக்கும் சிங்கம்போல் முழங்குவதை ஒப்பிடுக. விண்ணினின்று வந்த குரல், 'எழுதாதே' என்றபோது காட்சியாளர் எழுதவில்லை; அவர் பணித்ததைச் செய்தார்.

3. தி.வெ. 15: 2–3-இன் 'கண்ணாடிக் கடலு'ம் வெற்றி கொண்டவர்கள் அதன் அருகே நின்று, மோயீசனின் பாடலைப் பாடினதும் பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை பெற்று, திருயாத்திரை செய்ததை நினைவுபடுத்துகின்றன (யாத். 14 : 15). அருளப்பர் இங்கே மீட்கப்பட்ட மக்களின் புதிய திருயாத்திரையைக் காண்கின்றார்போலும்! இதற்காகத்தான் கடலையும் மோயீசன் பாடலையும் இங்கே குறிப்பிடுகின்றார். இவை இரண்டும் பிற்றைக் காலத்தில் இஸ்ராயேல் மக்களுக்கு யாவே கொணர்ந்த மீட்பை நினைவுபடுத்தும் அடையாளங்களாக இருந்தன.

4. தி. வெ. 12-ஆம் அதிகாரத்தில் வரும் பெண்ணும் அவளைத் துன்புறுத்தத் தொடரும் பறவை நாகமும் ஏவாளையும் அவளைக் கெடுத்த பாம்பையும் நினைவுபடுத்தும். ஆசிரியர் நம்மை வேதாகமத்தின் முதல் நூலுக்கே அழைத்துச்

செல்கிருர். மனிதகுல வரலாற்றின் தொடக்கத்தோடு தொடர்புபடுத்துவது தெளிவாகின்றது. பேய் மனிதரின் பகைவன். இருவருக்கும் இடையருப் பகை உண்டு இறுதியில் பேய்தான் தோற்கடிக்கப்படுவதாக இந்நூல் காட்டுகிறது (12 : 7–8). இங்கே ஆதி ஆகமம் 3 : 15 நிறைவேறுவதைக் காண்கிருேம்.

இவ்வாறு திருவெளிப்பாட்டு ஆசிரியர் பழைய ஏற்பாட்டிலிருந்து வெறும் அடையாளங்களை மட்டும் கையாளவில்லை; அல்லது வெறும் நிகழ்ச்சிகளை மட்டும் நினைவுபடுத்தவில்லை. அவற்றில் பொதிந்துள்ள கருத்தோட்டங்களை நிறைவாக்கிக் காட்டுகிருர். அக்கருத்தோட்டங்கள் யாவும் இந்நூலில் வளர்ந்து முதிர்ந்த நிலையைப்பெற்றுள்ளன.

ஆயிரமாண்டு கால ஆட்சி *(20 : 1–5)*:

இஃது ஒரு பேதகக் கொள்கை. இது யூதரின் சமயக் கொள்கைகளிலிருந்து உருவானதாகும். ஆதிகாலத்தில் சிலர் இக்கொள்கை திருவெளிப்பாட்டில் காணக்கிடப்பதாகக் கூறி இந்நூலின் தூய்மைக்குக் களங்கம் ஏற்படுத்தினர். அதன் காரணமாக இந்நூலை வேதாகமத் தொகுப்பில் சேர்ப்பதற்கும் மறுத்துவிட்டனர். அவர்களின் ஐயப்பாட்டிற்கு இலக்கான வாக்கியங்கள் நூலின் 20-ஆம் அதிகாரத்தில் வருகின்றன. "வானதூதர்........சாத்தான் என்று அழைக்கப்படும் அப்பாம்பைப் பிடித்து **ஆயிரம ஆண்டளவு** கட்டி வைத்தார்....**ஆயிரம் ஆண்டுகள்** முடியும்வரை அது நாடுகளை வஞ்சிக்காமல் தடுத்தார்.....இயேசுவுக்குச் சான்று பகர்ந்தவர்கள்......மீண்டும் உயிர்பெற்றுக் கிறிஸ்துவோடு **ஆயிரம் ஆண்டு** ஆட்சி புரிந்தார்கள். **அவ்வாயிரம் ஆண்டுகள்** முடியும்வரை எஞ்சியோர் உயிர்பெற்று வரவில்லை (1–5). இவ்வாக்கியங்களைச் சரிவர புரிந்துகொள்ளாமல் இவற்றில் இப்பேதகக் கொள்கையைச் சிலர் கண்டனர். கிறிஸ்துவுக்காக மறைத்தியாகிகளாய் மரணம் அடைந்தவர் இவ்வுலகில் உயிர்பெற்றெழுவர்; கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அண்மையில் நிகழவிருப்பதாகக் கருதி, அவரோடு இம்மண்ணகத்தில் ஆயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்வர் என்று

நம்பி எதிர்பார்த்திருந்தனர். அதையே பிறருக்கும் போதித்தனர். அவர்களது கொள்கைப்படி பொதுத்தீர்வை வேறு; பொது உயிர்ப்பும் வேறு. பொதுத்தீர்வை இறுதிக் காலத்தில் வரும். இந்த உயிர்ப்போ குறுகிய காலத்திற்குள் வந்துவிடும். 20 : 1–5இல் வருணிக்கப்படும் காட்சிப் பகுதிகளில் சொல்லுக்குச்சொல் பொருளைக் காண முற்பட்டதால்தான் இத் தவறு ஏற்பட்டது.

காட்சிகளெல்லாம் அடையாளங்களிலும், உருவக எண்களிலும் வருணிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலின் அவற்றின் உட்பொருளையல்லவா தேடவேண்டும்? இப்பகுதிக்குச் சரியான விளக்கம் வேறு உண்டு. கிறிஸ்துவின் புதுவாழ்வைக் காண்பவர்தாம் புத்துயிர் பெற்றெழுபவர் (காண். அரு. 5:24–29). இதையே முதல் உயிர்ப்பு என்று நூல் கூறுகிறது. கிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆட்சி என்பது பரிசுத்த ஆவியின் வருகைமுதல் உலக முடிவுவரையுள்ள திருச்சபையின் வாழ்வைக் குறிக்கும். புனித அகுஸ்தினுர் முதன்முதல் இவ்விளக்கத்தைக் கூறினுர். இன்றும் அறிஞர் பலர் இவ்விளக்கத்தையே பின்பற்றுகின்றனர்.

வேறு சிலர் அக்கால வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு இயைந்த வண்ணம் விளக்கம் தருகின்றனர். இங்குக் குறிக்கப்படும் உயிர்ப்பு, திருச்சபை மறையெதிர்ப்பெல்லாம் முடிந்து புத்துயிருடன் வாழ்வதைக் குறிக்கும். கி. பி. 312-லிருந்து, திருச்சபைக்கும் புதுவாழ்வு கிடைத்தது வரலாற்று உண்மையாகும். பழைய ஏற்பாட்டு இறைவாக்கினரும் பொதுவில் துன்பத்துக்குப்பின் இன்பம் வருமென உரைத்தனர். அதுவும் நிகழ்ந்தது. அம் முறையில் அருளப்பரும் ஈண்டு உரைக்கிருர். ஆயிரமாண்டு கால ஆட்சி என்பது, மறையெதிர்ப்புக்கள் மாறி உலக முடிவுவரையுள்ள திருச்சபையின் வாழ்வைக் குறிக்கும்.

20, 21-ஆம் அதிகாரங்கள், இறுதிக்கால நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. உலக முடிவுக்கு முன் மக்கள் யாவரும் மாபெரும் சோதனைக்கு உள்ளாவர் (20:7–11). பொதுத் தீர்வையின்போது மக்கள் உயிர்பெற்றெழுந்து

தத்தம் செயல்களுக்கேற்பத் தீர்ப்பைப் பெறுவர் *(20:11–15)*. இதன் பின்னரே இறுதிக் கால இன்பம் வரும். புதிய வானமும் வையமும் தோன்றும். அங்கே பிணியும் சாவும் இருக்காது; புலம்பலும் கண்ணீரும் நிலவாது. அது புதிய விண்ணகம், எருசலேம். கடவுள் மக்களோடு குடிகொள்ளும் இடம் *(21:1–8)*.

V. சில முக்கிய உருவகங்களும் அவற்றின் பொருளும்

கண்கள்	= அறிவு *(1:14; 2:18; 4:6;5:6)*
கைகள்	= அதிகாரம், மேலாண்மை
சிறகுகள்	= விரைந்து செல்லும் தன்மை *(4:8; 12:14)*
கால்கள்	= உறுதி *(10:1–2)*
கொம்புகள்	= அதிகாரம் *(5:6; 12:13)*
நீண்ட அங்கி	= குருத்துவம் *(1:13)*
முடி (மகுடம்)	= அரச பதவி *(4:11; 2:10. 3:11; 6:2; 12;1; 14:14)*
வெண்ணுடை	= வெற்றி. மகிமை *(6:11; 7:9, 13; 22:14; 4:4)*
ஊதா	= உயர் இன்ப வாழ்க்கை, அரச பதவி *(17:4; 18: 12, 16)*
கருப்பு	= சாவு *(6:5, 12)*
வெண்முடி (தலை மயிர்)	= தொல் பழமை, மாண்பமைதி *(1:14)*.

எண்கள் :

4	= நிலம், நீர், பாதாளம், வானம்; உலகின் நான்கு மூலைகள் *(16 முறை)*
12	= இறுதிக்கால இறைமக்கள் *(23 முறை)*; இஸ்ராயேல் மக்கள்; முழுமை.
7	= முழு நிறைவு *(54 முறை)*
777	= சீர்மை, நிறைவு
$3\frac{1}{2}$	= $\frac{7}{2}$ = சீர்குலைவு, மறையெதிர்ப்பின் காலம்
6	= 7—1 = நிறைவில்லாதது (குறைவுள்ளது)
666	= சீர்குலைந்த உருவம் *(13: 18 = விலங்கு)*; நீரோ.
1000	= ஒரு பெரிய தொகை.

இன்னும் பல உருவங்கள் உள. அவற்றிற்கான விளக்கங்களை ஆங்காங்கே நூலின் விளக்கவுரையில் காண்க.

VI. நூலின் அமைப்பு முறை :

இந்நூலை ஆராய்ந்த பலரும் பல அமைப்பு முறைகளைக காட்டுகின்றனர். அவற்றில் முக்கிய மூன்றினை மட்டும் ஈண்டு விளக்குவோம்.

1. தொகுத்துக் கூறல் முறை : (Theory of recapitulation)

இந்த அமைப்பு முறையை முதன் முதலில் எடுத்துரைத் தவர் மூன்ரும் நூற்ருண்டின் இறுதிப் பகுதியைச் சேர்ந்த பெத்தோ நகர் விக்தோரினுஸ் (Victorinus) ஆவர். ஆதலின் இது பழங் காலச் சிறப்பு வாய்ந்தது. இப்பொழுது வல்லுநர் அல்லோ (Allo) இவ்வமைப்பு முறையை எடுத்துரைப்பதில் முன்னணியில் நிற்கிருர். இவரை ஆதரிப்பவர் பலர் உளர். இவர் கருத்துப்படி நூலின் காட்சித் தொகுப்புகள் எல்லாம் ஏனோதானோவென்று சேர்க்கப்பட்டவையல்ல. இவை எல்லாம் ஒரே செய்தியைத் திரும்பத் திரும்பக் கூறும்படி அமைக்கப்பட்டவை. அச்செய்தி கிறிஸ்துவின் வெற்றியாகும். ஒவ்வொன்றும் முந்தியதைவிட அச்செய்தியை மிகுதியாக விளக்கியோ, வலியுறுத்தியோ, தெளிவுபடுத்தியோ வெவ்வேறு அடையாளங்களில், உருவக மொழிகளில் அறிவிக்கின்றன. இம்முறையில்தான் திருவெளிப்பாட்டின் 4 முதல் 21 அதிகாரங்கள் அமைக்கப்பெற்றன. அவை ஏழு தொகுப்புக்களாக உள்ளன என்பர். அவையாவன :

1. செம்மறி (அதி. 4–5)
2. ஏழு முத்திரைகள் (6–7)
3. ஏழு எக்காளங்கள் (8–11)
4. பறவை நாகம் (12–14)
5. கோபக் கலசங்கள் (15–16)
6. பாபிலோன் (17 : 1–19 : 10)
7. தீமையின் வீழ்ச்சி (19 : 11–22 : 25)

முதல் மூன்று அதிகாரங்களில் முன்னுரை, முதற் காட்சி, கிறிஸ்தவ சபைகளுக்குத் திருமுகங்கள் ஆகியவை அடங்கியுள்ளன. முடிவுரையாக 22-ஆம் அதிகாரம் அமைந்துள்ளது.

2. இரட்டைத் திருவெளிப்பாட்டு முறை:

வல்லுநர் புவாமார் (Boismard) இக்கொள்கையைப் பின்பற்றுகிறார். இதனை ஏற்பவர் வேறு பலரும் உள்ளனர். இவர்களது கருத்துப்படி நூலின் செய்திகள் ஒவ்வொன்றும் இரண்டிரண்டு காட்சிகளிலோ, நிகழ்ச்சிகளிலோ அறிவிக்கப் படுகின்றன. ஒவ்வொரு இரட்டை காட்சியின் (நிகழ்ச்சியின்) இரு காட்சிகளும் ஒன்றுக்கொன்று இணையானவை. ஆனால் அவற்றிடையே சிறிது வேறுபாடும் உண்டு. ஒவ்வொரு இரட்டையும் தனித்தனி செய்தியை அறிவிக்கின்றது.

இன்னோர் காட்டும் இரட்டைப் பகுதிகள் கீழ்வருமாறு:

7:1–8	*= 14:1–5*	—ஒரு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்
7:9–17	*= 15:2–5*	—வானகம் சென்றவர்
8–9	*= 16*	—கொடிய நோய்கள்
13:1–8	*= 17:3–8*	—ஏழுதலைகளும் பத்து கொம்புகளும் உடைய விலங்கு
17:9–10	*= 17:12-14, 16–17*	ஏழுதலைகள், பத்து கொம்புகள் ஆகிய வற்றின் உருவகம்
14:8	*= 18:2–3*	—பாபிலோனின் வீழ்ச்சியை அறிவித்தல்
18:9–19	*= 18:22–23*	—வீழ்ந்த நகரைக் குறித்துப் புலம்பல்
19:1–5;18;20	*= 16:5-7*	நகரின் வீழ்ச்சியைக் கண்டு மகிழ்ச்சி
19:11-20	*= 20:7–10*	—புறவினத்தாரோடு இறுதிக் காலப் போராட்டம்
20:12	*= 20:13*	—இறுதித் தீர்ப்பு
21:1–8	*= 21:9–22:5*	—புதிய எருசலேம்.

இந்த இரட்டைகளை மேலாய்வு செய்து இவற்றின் காட்சிகள் ஒவ்வொன்றையும் சேர்த்துத் தொகுத்து இரு சிறு நூல்களாகத் தருகின்றார் புவாமார். இவற்றில் ஒன்று நீரோவின் காலத்தில் தோன்றியிருக்கலாம். மற்றொன்று வெஸ்பாசியன் காலத்திலோ, தொமீசியன் காலத்தின் முதற்

பகுதியிலோ உருவாகியிருக்கலாம். இவை இரண்டும் முதல் நூற்றாண்டின் இறுதியில் சேர்க்கப்பெற்று, நூலின் முதல் மூன்று அதிகாரங்கள் தொமீசியன் காலத்தில் எழுதப் பட்டன. நூலில் ஒரே மொழிநடை இருப்பதால், யாரே னும் ஒருவர் தான் இதனை ஒருங்கிணைத்திருக்க வேண்டும்.

3. இறைவாக்கு நூல் அமைப்பு முறை

வல்லுநர் அந்தரெ ஃபொய்யே முதலியோர் இந்நூலுக்கும் பழைய ஏற்பாட்டு இறைவாக்கினர் நூல்களுக்கும் உள்ள ஒப்புமைகளின் அடிப்படையில் இவ்வூகக் கோட்பாட்டைப் பின்பற்றுகின்றனர். பொதுவில் பழைய ஏற்பாட்டு இறை வாக்கினர் நூல்கள் யாவும் முதலில் இஸ்ராயேல் மக்களுக்கு எதிரான இறைவாக்குகளையும், பின்னர் அவர்களைத் துன் புறுத்திய புறவினத்தாருக்கு எதிரான இறைவாக்குகளையும் கொண்டவை. திருவெளிப்பாடும் இறைவாக்குரைக்கின்ற தல்லவா ? ஆதலின் இஃது அதே அமைப்பு முறையைக் கொண்டுள்ளது. நான்கு முதல் பதினோராம் அதிகாரங்கள் ஈறாக, இஸ்ராயேல் மக்கள் இயேசுவை ஏற்காது கொலை செய்தமைக்கு அவர்கள்மேல் கடவுளின் கோபத்தைக் காட்டும் பகுதியாகும். கி. பி. 70-இல் ஏற்பட்ட எருசலேம் ஆலயத்தின் அழிவையும் குறிக்கும். 12-ஆம் அதிகாரம் முதல் வருபவை உரோமையின் வீழ்ச்சியையும் அழிவையும் குறிப்பிட்டு நிற்கும். உரோமையர் ஆட்சிதானே கிறிஸ்த வர்களைத் துன்புறுத்தியது ?

முதற்பகுதி கூறும் செய்திகள் பின்வருமாறு :

அதி. 4 — இறையரசின் வாகைப் பீடம்
,, 5 — இறையரசின் செம்மறி
,, 6 — செம்மறி முத்திரைகளை உடைத்துத்தரும் தண்டனைகள்
,, 7 — செம்மறியின் வெற்றிவரை தண்டனைகள் தேக்கப்படுதல்
,, 8-9— கன்னெஞ்ச யூதர்மேல் விழுந்த தண்டனைகள்
,, 10 — யூதரின் அழிவு உறுதியானது
,, 11 — யூதரின் அழிவு ; கிறிஸ்தவர்கள் தண்டனை பெறுதிருத்தல் ; இறுதிக்காலம் புலர்தல்.

இவ்வமைப்பு முறையில் முதல் பதினொரு அதிகாரங்களும் நூலின் வரலாற்றுப் பகுதியாகின்றன சரியான திருவெளிப்பாட்டுப் பகுதி 12-ஆம் அதிகாரத்தில் தொடங்குகிறது. இரண்டாம் பகுதியைப் பற்றி வல்லுநரிடையே கருத்து வேற்றுமை இல்லை எனலாம். அஃது உரோமையின் வீழ்ச்சியை அறிவிக்கும். இந்நூல் தனது இலக்கிய மரபுக்கு ஏற்ப துன்பத்தில் ஆறுதல் அளிக்கின்றது. நூல் எழுந்த காலத்திற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னரே யூதகுலமும் பேராலயமும் அழிந்தன. யூதரைப் போல் உரோமையரும் அழிவர் என்பது துன்புறும் கிறிஸ்தவர்களுக்கு இந்நூல்தரும் ஆறுதலாகும்.

முடிவுரை :

இம்மூன்று அமைப்பு முறைகளிலும் நிறைவுகளும் உள்ளன; குறைவுகளும் உள்ளன. வல்லுநர் ஒவ்வொருவரும் தனித்தனிக் கோணத்திலிருந்து ஆராய்ந்து தங்கள் ஊகக் கோட்பாடுகளைத் தருகின்றனர். தாங்கள் காட்டும் அமைப்பு முறையே மற்றவையினும் சிறந்ததென ஒவ்வொருவரும் கூறுவதில் வியப்பில்லை. ஆனால், எந்த ஒருவரின் அமைப்பு முறையையும் எல்லாரும் ஏற்பதில்லை, ஏற்க வேண்டிய தேவையுமில்லை.

இவற்றால் விளங்குவது யாதெனில், நூலின் கருத்துக்களின் கோவை போதிய அளவில் நன்கு அமையவில்லை. இஃது எல்லாத் திருவெளிப்பாட்டு நூல்களுக்கும் பொதுவானது என்பர். அறிஞர்கள் யாவரும் ஏற்கக்கூடிய ஓர் அமைப்பு முறை வரும்வரை நூலின் காட்சிகள், நிகழ்ச்சிகள் வரிசையைப் பின்பற்றி விளக்கம் தருவோம்.

நூல் அமைப்பு

முன்னுரை *(1 : 1–3)*

I. ஆசிய சபைகளுக்குத் திருமுகங்கள் (1 : 4-3 : 22)

(i) **முகவரியும் வாழ்த்தும்** *(1 : 4–8)*

(ii) **முதற் காட்சி** *(1 : 9–20)*

(iii) **திருமுகங்கள் ஏழு**

அ. எபேசு சபைக்கு (To Ephesus) *(2 : 1–7)*

ஆ. சிமிர்ணு சபைக்கு (To Smirna) *(2 : 8–11)*

இ. பெர்கமு சபைக்கு (To Pergamum) *2 : 12–17)*

ஈ. தியத்தைரா சபைக்கு (To Thyatira) *(2 :18-29)*

உ. சர்தை சபைக்கு (To Sardis) *(3 : 1–6)*

ஊ. பிலதெல்பியா சபைக்கு (To Philadelphia) *(3 : 7–13)*

எ. லவோதிக்கேயா சபைக்கு (To Laodicea) *(3 : 14–22)*

II. காட்சிகள் (4 : 1—22 : 5)

(i) **இறுதி நாளை முன்னறிவிக்கும் காட்சிகள்** *(4 : 1–16 :21)*

அ. **கடவுளின் அரியணை** *(4 : 1–11)*

ஆ. **ஏழு முத்திரைகள் அடங்கிய நூலும் செம்மறியும்** *(5 : 1–14)*

இ. **ஏழு முத்திரைகளை உடைத்தல்** *(6 :1–8 : 1)*

(1) முதல் நான்கு முத்திரைகள் *(6 : 1–8)*

(2) ஐந்தாம் ஆறும் முத்திரைகள் *(6 : 9–17)*

(3) புதிய இஸ்ராயேல் *(7 : 1–17)*

(4) ஏழாவது முத்திரை *(8 : 1)*

ஈ. **ஏழு எக்காளங்கள்** *(8 : 2–11 : 19)*

(1) முன்னறிவிப்பு *(8 : 2–6)*

(2) முதல் நான்கு எக்காளங்கள் *(8 : 7–13)*

(3) ஐந்தாம் எக்காளம் *(9 : 1–12)*

(4) ஆறும் எக்காளம் *(9 : 13–21)*

(5) இறுதித் தண்டனை வருகிறது *(10 : 1-11 : 14)*

(க) விண்ணின்று வந்த வானதூதர் வைத்திருந்த ஏட்டுச் சுருள் *(10 : 1–11).*

(உ) கோவிலை அளத்தலும், இரு சாட்சிகளும் *(11 : 1–14)*

(6) ஏழாவது எக்காளம் *(11 : 15–19)*

உ. **செம்மறியும் பறவை நாகமும்** *(12 : 1–14 : 20)*

(1) பெண்ணும பறவை நாகமும் *(12 : 1–17)*

(2) கடலினின்று வெளிவந்த கொடிய விலங்கு *(13 : 1–10)*

(3) மண்ணினின்று வெளிவந்த விலங்கு *(13 : 11–18)*

(4) செம்மறியின் தோழர் *(14 : 1–5)*

(5) வானதூதர் தீர்ப்பின் நேரத்தை அறிவித்தல் *(14 : 6-13)*

(6) நாடுகள் ஒன்றுதிரட்டப்படுதல் *(14 : 14–20)*

ஊ. **ஏழு கோபக் கலசங்கள்** *(15 : 1–16 : 21)*

(1) மீட்படைந்தோர் பாடிய கீதம் *(15 : 1–4)*

(2) வாதைகள் ஏழு *(15 : 5–16 : 21)*

(ii) **பாபிலோனின் (உரோமை) அழிவு** *(17 : 1–19 : 10)*

அ. **செந்நிற விலங்கின்மீது அமர்ந்திருந்த வேசி** *(17 : 1–6)*

ஆ. **வானதூதரின் விளக்கம்** *(17 : 7–18)*

இ. **பாபிலோனின் வீழ்ச்சி** *(18 : 1–24)*

(1) வீழ்ச்சி *(18 : 1–8)*

(2) பாபிலோனின்மீது புலம்பல் *(18 : 9–24)*

(3) விண்ணகத்தில் வெற்றி முழக்கம் *(19 : 1-10)*

(iii) **கடவுளின் பகைவர்மேல் வெற்றி** *(19 : 11–20 : 15)*

அ. **இறுதிநாளுக்குமுன் நிகழும் முதற்போர்** *(19 : 11–21)*

ஆ. **ஆயிரம் ஆண்டுகால ஆட்சி** *(20 : 1–6)*

இ. **இறுதிநாளில் நிகழும் இரண்டாம் போர்** *(20:7-10)*

ஈ. **இறுதித் தீர்ப்பு** *(20 : 11–15)*

(iv) **புதிய எருசலேம்** *(21 : 1–22 : 5)*

III. முடிவுரை (22 : 6-21).

———

திருவெளிப்பாடு

விளக்கவுரை

அறிமுகம் *1:1–3*

"திருவெளிப்பாடு" இயேசு கிறிஸ்துவின் தூதுரையாகும். அதை வெளிப்படுத்துபவர் இயேசு கிறிஸ்துவே. அவரே அதன் வெளிப்பாடுமாவார். தம் நூலின் அறிமுகத்தில் அருளப்பர் கூறும் இக்கருத்துக்கள் நூலின் முடிவுரையிலும் வருகின்றன (*22:6–21*). நூலில் கூறப்படும் மற்றெல்லாம் இதற்கு விளக்கம் போல் அமைந்துள்ளது.

இது இயேசு கிறிஸ்து அருளிய திருவெளிப்பாடு: விரை **1**
வில் நிகழவேண்டியவற்றைத் தம் அடியார்களுக்கு வெளிப்
படுத்துமாறு கடவுள் அதை அவருக்கு அருளினார்.
கிறிஸ்துவோ தம் தூதரை அனுப்பித் தம் அடியானாகிய 2
அருளப்பனுக்கு அவற்றைத் தெரிவித்தார். அருளப்பன் தான்
கண்டதனைத்தையும் அறிவித்து, கடவுளின் வார்த்தைக்கும்,
இயேசு கிறிஸ்து அளித்த சாட்சியத்துக்கும் சான்று கூறினான்.
இவ்விறைவாக்குகளை வாசிப்பவனும், அவற்றிற்குச் செவி 3
சாய்த்து இந்நூலில் எழுதியுள்ளதின்படி நடப்பவர்களும்
பேறுபெற்றவர்களே: இதோ! குறித்த காலம் அண்மை
யிலேயே உள்ளது.

திருவெளிப்பாடு என்றாலே மறைந்துள்ளதை வெளிப்படுத்துதல் என்றாகும். வானகத் தந்தையில் மறைந்துள்ளவற்றை இயேசு கிறிஸ்து மக்களுக்கு வெளிப்படுத்துகின்றார். இவ்வாறு கடவுளின் மறை பொருளை இயேசுகிறிஸ்து வெளிப்படுத்துகிறார் என்பது புனித அருளப்பர் எழுதிய நற்செய்தியில் நாம் அடிக்கடி காணும் ஒரு போதனையாகும் [அரு. *3:35 ; 5:20, 26; 7:16: 9:28; 12:49; 16:15; 17:2*]. இந்நூலில் வரலாற்றின் மறைபொருள், நிகழ்காலத்தின் முடிவு, கடவுள் அளிக்கவிருக்கும் விண்ணக இன்பத்தின் தொடக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றார். துன்புறும் கிறிஸ்தவர்

களுக்கு நிகழ்கால முடிவும் விண்ணக இன்பத்தின் தொடக்கமும் கட்டாயம் வரவிருத்தலின், அவற்றை இந்நூல் உறுதியாக எடுத்துரைக்கிறது. திருவெளிப்பாட்டைப் பெறும் கிறிஸ்தவர்கள், பழைய ஏற்பாட்டு முதுபெரும் தந்தையர், ஆபிரகாம், மோயீசன், இறைவாக்கினர் ஆகியோர் வரிசையில் 'அடியார்கள்' என்று அழைக்கப் பெறுகின்றனர். அவர்களைப் போன்று இவர்களும் கடவுளை நம்பி, அவரது வழியில் நடப்பவர்கள். கிறிஸ்து கடவுளின் மறைபொருளைத் தம் தூதர் வழியாக அருளப்பருக்கு அறிவிக்க, அருளப்பர் கிறிஸ்தவர்களுக்கு வெளிப்படுத்துகின்றூர். திருவெளிப்பாட்டு நூல்களில் தூதர் இடை நிலையினராக வருதல் மரபாகும். இந்நூலில் கிறிஸ்துவே தூதராகவும் *(1:19)*, தூதரே கிறிஸ்துவாகவும் *(10:1)* வருதலைக் காணலாம். புனித அருளப்பர் காட்சி நிலையில் இச்செய்திகளைப் பெற்றிடினும், அவற்றிற்குச் சான்று பகர்ந்தவர். இயேசுக் கிறிஸ்து தம் சொல்லாலும், அருங்குறிகளாலும், வாழ்வாலும், இறப்பு—உயிர்ப்பாலும் கடவுளின் திருவெளிப்பாட்டுக்குச் சான்று பகர்ந்தாரல்லவா *(3:14)*, அதுபோன்று புனித அருளப்பர் கிறிஸ்துவுக்குச் சாட்சியாகின்றூர்.

திருவெளிப்பாட்டுநூல் கூறும் மறைபொருட்களைக் கேட்டு அவற்றை ஏற்பவர்களும் கிறிஸ்துவுக்குச் சான்று பகர வேண்டியவர்கள். துன்புறும் கிறிஸ்தவர்கள் தாங்கள் அனுபவிக்கும் துன்பத்திஞல் சான்று பகர்கின்றனர். அவர்கள் பேறு பெற்றவர்கள். ''கடவுளுடைய வார்த்தையைக் கேட்டுக் கடைபிடிப்பவர்கள் பேறு பெற்றவர்கள்'' *(லூக். 11:28)* என்னும் கிறிஸ்துவின் மொழி இங்கே எதிரொலிக்கின்றது. திருவெளிப்பாடு இன்னும் வேறு ஆறு பேறுகளைக் குறிப்பிடுகின்றது. அவற்றை *14:13; 16:15; 19:9; 20:6; 22:7; 22:14* ஆகிய பகுதிகளில் காண்க. விண்ணக இன்பம் அண்மையில் உள்ளதால் அவர்கள் அதில் நுழையும் பேற்றைப் பெறுவர். இந்நூல் துன்புறும் கிறிஸ்தவர்களுக்காக எழுதப்பட்டதால், அண்மையிலுள்ள நித்திய இன்பம், துன்பத்தை ஏற்று அனுபவிக்க அவர்களுக்கு வலுவும் திடமும் தருகின்றது.

I. ஆசிய திருச்சபைகளுக்குக் கடிதங்கள் (1:4-3:22)

(i) முகவரியும் வாழ்த்தும் *(1:4-8)*

ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் அருளப்பன் எழுது 4
வது: 'இருக்கிறவர், இருந்தவர், இனி வருபவர்' எனும்
இறைவனிடமிருந்தும், அவரது அரியணைமுன் நிற்கும் ஏழு
ஆவிகளிடமிருந்தும், இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் உங்க
ளுக்கு அருளும் சமாதானமும் உண்டாகுக. இவரே நம் 5
பிக்கைக்குரிய சாட்சி, இறந்தோரிலிருந்து எழுந்தவருள்
தலைப்பேறானவர், மண்ணுலக அரசர்களுக்குத் தலைமை
யானவர். இவர் நமக்கு அன்புசெய்து தமது இரத்தத்தினால்
தம்முடைய பாவங்களினின்று நம்மை விடுவித்தார். மேலும் 6
தம் தந்தையும் கடவுளுமானவருக்கு ஊழியம் செய்ய நம்மை
அரசகுல குருக்களாக்கினார். இவருக்கே மகிமையும் வல்ல
மையும் என்றென்றும் உரியனவாகுக. ஆமென். இதோ 7
அவர் மேகங்கள்சூழ வருகிறார். அனைவரும் அவரைக்காண்பர்:
அவரை ஊடுருவக் குத்தினவர்களும் காண்பார்கள். அவ
ருக்குச் செய்ததை நினைத்து மண்ணுலகின் குலத்தார் அனை
வரும் புலம்பி அழுவர். ஆம், இது உண்மை. ஆமென்.
''அகரமும் னகரமும் நானே'' என்கிறார் எல்லாம் வல்ல 8
ஆண்டவராகிய கடவுள். இருக்கிறவர், இருந்தவர், இனி
வருபவர் அவரே.

''திருவெளிப்பாட்டு'' நூல் ஒரு மடல்போல் தொடங்கி, அதே பாணியில் முடிகின்றது *(22:21)*. தமது பெயரைக் கூறித் தம்மை அறிமுகம் செய்துவிட்டு, தாம் யாருக்கு மடல் எழுதுகிறாரோ அவர்களையும் குறிப்பிடுகிறார் ஆசிரியர்; வாழ்த்தும் — ''அருளும் சமாதானமும்'' — வழங்குகின்றார். இஃது அக்காலத்தில் வழக்கிருந்த மடல் வரையும் முறை. இந்த முகவுரையில் அருளப்பர் ''திருவெளிப்பாட்''டின் மையக் கருத்தையும் கூறி விடுகின்றார் *(1:7)*.

4: அக்கால மரபுப்படி அருளப்பர் தமது பெயரையும் மடலைப் பெறும் சபைகளையும் குறிப்பிட்டுள்ளார். அப்போஸ்தலரான புனித அருளப்பரே இந்நூல் முழுவதையும் எழுதினார் என்று கொள்ளத் தேவையில்லை. ஆயினும் அவர் இந்நூலுக்கு ஊற்றும் மூலமுமாவார். அவர் விட்டுச் சென்ற மூலக் கருத்துக்களை அவருடைய சீடர் யாரேனும்

விரித்து, விளக்கி இன்றைய வடிவத்திற்குக் கொண்டு வந்திருக்கவேண்டும். மடலைப் பெறும் ஏழு சபைகளும் ஆசிய நாட்டில் உள்ளவை. ஆசிய நாடு என்று அன்று குறிக்கப்பெற்றது சின்ன ஆசியாவின் (இன்றைய துருக்கி) மேற்குப் பகுதியாகும். அப்பகுதியிலுள்ள ஏழு சபைகளுக்கு மட்டும் அருளப்பர் தமது திருவெளிப்பாட்டு மடலை எழுத வில்லை. இந்நூலில் இடம் பெருத திராவோசு **(Traos)**. கொலோசே **(Colossae)**, இயெராபொலிசு **(Hierapolis)** போன்ற பிற சபைகளுக்கும் சேர்த்து எழுதினர். இந்நூலில் வரும் ஏழு சபைகளின் நகரங்களும் [1:11] ஒரே சாலையில் இருந்தன. இந்நகரங்களை எல்லாம் தொட்டுச் சென்ற சாலை ஏறக்குறைய ஒரு வட்டமான அமைப்பில் இருந்தது. எபேசில் தொடங்கும் சாலை ஆறு நகரங்களுக்கும் சென்று மீண்டும் எபேசில் வந்து முடியும். இந்நகரங்களுக்கு மடல் அனுப்பினல், அதேப் பாதையில் இருக்கும் பிற சபை களுக்கும் எடுத்துச் செல்வது எளிதாகும். மேலும் ஏழு என்னும் எண் யூதரின் வழக்கில் முழுமையைக் குறிக்கும். ஆதலின் அருளப்பர் சின்ன ஆசியாவில் உள்ள எல்லாச் சபைகளுக்கும், ஏன், அனைத்துத் திருச்சபைக்கும் மடல் அனுப்பினர் என்று ஏற்பதே சாலும்.

இறையாசியோடு மடல் தொடங்குகிறது. 'அருளும் சமாதானமும்' என்னும் சொற்றொடர் புனித சின்னப்பரின் மடல்களில் காணும் வாழ்த்துதலாகும். இவ்வாழ்த்து காலங்கடந்த இறைவனிடமிருந்து வருகிறது. 'இருக்கிறவர், இருந்தவர், இனி வருபவர்' என்னும் சொற்கள் இறைவனின் காலங்கடந்த தன்மையை மட்டுமன்று, சிறப்பாக அவர் காலத்தை ஆண்டு நடத்தி மக்களுக்கு என்றும் துணை செய்யும் பண்பையும் குறிக்கும். அவரது இப்பண்பை யாத்திரை ஆகமத்திலேயே காண முடிகிறது [காண். யாத். 3:14]. இறைவன் அரியணைமுன் நிற்கும் 'ஏழு ஆவிகள்' பரிசுத்த ஆவியின் நிறைவைக் குறிக்கும் சொற்கள்போலும். ஆதலின் தந்தை, மகன், ஆவி ஆகியோரின் இறையாசியோடு மடல் தொடங்குகிறது.

5: இவ்வாக்கியம் அப்போஸ்தலர்களின் நற்செய்திப் போதனையைச் சுருக்கித் தருகின்றது. இது தொடக்கத் திருச்சபையினுடைய விசுவாச அறிக்கையின் முழுப் பொருளையும் உணர்த்துகின்றது. உண்மைக்குச் சான்று பகர வந்த இயேசு (காண். அரு. 18:37; 1 திமோ. 6:13) சாவை வென்று வெற்றி வீரராய் உயிர்த்தெழுந்த தலைப் பேறு (காண். கொலோ. 1:18; 1 கொரி. 15:20). இதனால் அவர் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தும் மண்ணக மன்னர் களுக்கும் தலைமையாவார் (காண். 19:12,16). இவ்வுண்மை துன்புறும் கிறிஸ்தவ சபைகளுக்கு மிகுந்த ஆறுதல் அளித்தது. கிறிஸ்து இரத்தம் சிந்திப் பலி செலுத்தி நம்மை மீட்டார். அவருடைய குருத்துவம் அரச குருத்துவம்.

6: தமது குருத்துவத்தில் கிறிஸ்தவர்களையும் பங்கு பெறச் செய்து (காண். 1 இரா. 2:9; யாத். 19:6) அரசகுல குருக்களாக்கினார். உரோமை நாட்டு மன்னர் வழிபாட்டுக்கு எதிராகக் கிறிஸ்தவர்கள் கடவுளுக்கு உலகனைத்தையும் அற்பணித்துக் குருத்துவப்பணி புரிந்து அவரது அரசில் என்றும் நிலைத்திருப்பவர்கள். இப்பேற்றை அளிக்கும் கிறிஸ்துவுக்கு ''மகிமையும் வல்லமையும் என்றென்றும் உரியனவாகுக.'' இது கிறிஸ்துவுக்கு அளிக்கப்பெறும் வாழ்த்துரைகளில் ஒன்று. 'ஆமென்' என்பது இவ் வாழ்த்துதலைப் பெற கிறிஸ்துவுக்கு உள்ள உரிமையை உறுதிப்படுத்துகின்றது.

7: கிறிஸ்து தம் மாட்சிமையில் வரும்போது உலகம் அனைத்தும் அவரைக் காணும். மேகங்கள் சூழ மகிமையில் தோன்றும் கிறிஸ்துவைத் தானியேல் இறைவாக்கினர் முன்னரே அறிவித்துள்ளார் (காண். தானி. 7:13; மத். 14:14; 24:30;26:64). அப்போது கிறிஸ்துவைக் கொன்ற வரும் அவரில் விசுவாசம் கொள்ளாது அவரைப் பகைத்து வெறுப்பவர் யாவரும் வருந்தி அழுவர் (காண். சக். 12:10; 14). 'ஆம், இது உண்மை' என்னும் சொற்றொடர் உறுதிப்பாட்டை இரட்டிக்கின்றது. 'அகரமும் னகரமும்' என்னும் சொற்றொடர் 'ஆல்ஃபா, ஒமெகா' (Alpha, Omega)

என்னும் கிரேக்க மொழியின் முதல், கடை எழுத்துக்களுக்காக வருகின்றது. அதாவது 'முதலும் முடிவும்' என்பது பொருள். கடவுள் படைப்பின் முதலும் அதன் முடிவுமாக உள்ளார் என்னும் உண்மை பழைய ஏற்பாட்டில் காணக்கிடக்கிறது. அவர் எல்லாம் வல்லவராதலின் கிறிஸ்தவர்களுக்கு எதிராக எழும்பும் எந்த எதிரியையும் வெல்ல வல்லவர் என்னும் உண்மை இங்குப் பொதிந்துள்ளது.

(ii) முதற்காட்சி *(1 : 9–20)*

இயேசுவுக்குள் உங்களோடு வேதனையிலும் அரசுரிமையி 9
லும் மனவுறுதியிலும் பங்குகொள்ளும் உங்கள் சகோதரனாகிய
அருளப்பன் யான், கடவுளின் வார்த்தையை அறிவித்து
இயேசுவுக்குச் சான்று பகர்ந்ததற்காகப் பத்மு என்ற தீவுக்கு
அனுப்பப்பட்டேன். அன்று ஞாயிற்றுக் கிழமை; தேவ ஆவி 10
என்னை ஆட்கொண்டது. எனக்குப் பின்னால் பெருங் குரல்
ஒன்று கேட்டது. அது எக்காளம்போல் ஒலித்தது. 'காட்சியில் 11
காண்பவற்றை ஏட்டில் எழுதி எபேசு, சிமிர்ணா, பெர்கமு,
தியத்தைரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா ஆகிய
ஏழு சபைகளுக்கு அனுப்பு' என்று அக்குரல் சொன்னது.
என்னோடு பேசியவர் யார் என்று அறியத் திரும்பிப் பார்த் 12
தேன். அப்படிப் பார்த்தபோது, ஏழு பொன் குத்துவிளக்கு
களைக் கண்டேன். அவற்றின் நடுவில் மனுமகனைப்போன்ற 13
ஒருவரைப் பார்த்தேன்; அவர் நீண்ட அங்கி அணிந்திருந்
தார். மார்பில் பொற்கச்சை கட்டியிருந்தார். அவருடைய 14
தலைமுடி வெண் கம்பளி போலும், உறைபனிபோலும்
இருந்தது. அவருடைய கண்கள் எரிதழல்போல் சுடர்விட்டன.
அவருடைய பாதங்கள் உலையிலிட்ட வெண்கலம்போல் இருந் 15
தன. அவரது குரல் கடல் அலைகளின் இரைச்சலை ஒத்திருந்
தது. தம் வலக்கையில் ஏழு விண்மீன்களை ஏந்திக்கொண்டி 16
ருந்தார். இரு புறமும் கூர்மையான வாள் அவரது வாயி
னின்று வெளிப்பட்டது. அவரது முகம் நண்பகல் கதிரவன்
ஒளி என ஒளிர்ந்தது. நான் அவரைக் கண்டதும் செத்த 17
வனைப்போல் அவருடைய அடிகளில் விழுந்தேன். அவர்
என்னை வலக் கையால் தொட்டு, சொன்னதாவது: ''அஞ்
சாதே, முதலும் இறுதியும் நானே. வாழ்பவரும் நானே.
சாவுக்குட்பட்டேனாயினும் இதோ, நான் என்றென்றும் வாழ் 18
கின்றேன். சாவின்மீதும் பாதாளத்தின்மீதும் அதிகாரம்
எனக்கு உண்டு. ஆகையால் நீ கண்டதையும் இப்போது 19

நிகழ்கின்றதையும் இனி நிகழப்போவதையும் எழுது. எனது 20
வலக்கையில் நீ கண்ட ஏழு விண்மீன்கள், ஏழு பொன் குத்து
விளக்குகள் இவற்றின் உட்பொருள் இதுவே: ஏழு விண்
மீன்கள் ஏழு சபைகளின் தூதர்களையும், ஏழு குத்துவிளக்குகள்
ஏழு சபைகளையும் குறிக்கின்றன.

9: முதற்காட்சி பத்மு தீவில் நிகழ்கின்றது. அங்கே தான் புனித அருளப்பர் நாடு கடத்தப்பெற்று தம் இறுதிக் காலத்தைக் கழித்தார். பத்மு தீவு எபேசு நகரத்துக்குத் தென் மேற்கில் ஐம்பது கல் தொலைவில் இருந்தது. ஏறக்குறைய 30 கல் சுற்றளவுள்ள தீவு இது. கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்த அருளப்பர் மறையெதிர்ப்புக்காரரால் நாடு கடத்தப் பெற்றதால் கிறிஸ்தவ சபையாரோடு ஒரே துன்பத்தில் பங்கு பெறுபவர். துன்பத்தின் வழியாகக் கடவுளரசில் நுழைய வேண்டுமாதலின் கிறிஸ்தவர்களின் மன உறுதியிலும் பங்கு பெற்றவர்.

10–11: காட்சி எக்காளத் தொனிபோல் ஒலித்துத் தொடங்குகிறது. திருவெளிப்பாட்டு நூல்களில் எக்காளத் தொனி வருவது இயல்பு. இது கடவுள் எழுந்தருளுவதை (பிரசன்னத்தை) வருணிக்க எடுத்துக்கொண்ட மரபாகும். திருவெளிப்பாட்டு நூல்கள் இம்மரபைப் பழைய ஏற்பாட்டில் கடவுளின் திருக்காட்சி நிகழ்ச்சிகளிலிருந்து எடுத்துக் கையாளுகின்றன (காண். யாத். 19 : 16, 19). காட்சியில் என்னென்ன நிகழ்ந்தன என்று கூறுதல் இயலாது. ஞாயிற்றுக்கிழமையில் முதற் காட்சி நிகழ்ந்தது ஆண்டவரின் நாளுக்குச் சிறப்பளிப்பதாகும். அஃதோடு இம்மடல்கள் எல்லாம் ஞாயிற்றுக்கிழமையில் திருவழிப்பாட்டிற்குக் கூடும் கிறிஸ்தவ மக்களுக்கு வாசிக்கப்படவேண்டியவை ஆதலின் இந்நாளில் முதற்காட்சி நிகழ்ந்ததுபோலும்.

12–16: ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளையும் குறிக்கின்றன (காண். 1:20). அவற்றின் நடுவே உள்ள கிறிஸ்து, கிறிஸ்தவ சபைகளின் நடுவே இருந்து (காண். 2 : 5) அவர்களை ஊக்குவித்து உதவி செய்கிறார் (காண். 2 : 1–3 ; 22). நமக்காக இறந்து உயிர்த்த கிறிஸ்து,

வானகத்திற்குச் சென்றவரெனினும் அவரடைந்த வெற்றியில் நாமும் பங்கடையும் பொருட்டு நம்மோடு, நம்மிடையே வாழ்கின்ருர். நீண்ட அங்கி குருத்துவத்தின் சின்னம் (காண். யாத். 28 : 4 ; 29 : 5). கிறிஸ்து ஒரு குரு. பொற்கச்சை அரச மகிமையின் அடையாளம், வெண்மையான தலேமுடி கிறிஸ்துவின் நித்தியத்தைக் குறிக்கும். எரிதழல் போன்ற கண்கள் அவருடைய எல்லாம் அறியும் இறையறிவுக்கு அடையாளம். அவர் உலகுக்கும் திருச்சபைக்கும் நடுவர். வெண்கலம் போன்ற பாதங்கள் அவரது ஆட்சி என்றும் நிலேத்து நிற்கும் என்பதைக்காட்டும். தானியேல் ஆகமத்தில் (2–33) வரும் நபுக்கொதொநொசொரின் நிலேயாமைக்கு மாருக ஈண்டு கிறிஸ்துவின் நிலேமை வலியுறுத்தப்படுகிறது. இறை மக்களுக்கு எதிராக எழுவோர் அனேவரும் நிலே நில்லாதார். கடலலேகளின் இரைச்சல் போன்ற குரல் யாரும் எதிர்க்கவியலா அவரது வன்மையைக் காட்டும். ஏழு விண்மீன்களும், ஏழு சடைகளுடைய தூதர்களாக நிற்கின்றன (காண். 1 : 20). மன்னர்கள் யாவரும் உலகாள் வேந்தர்கள் என்பதைக் குறிக்க, அவர்கள் உருவத்தில் வலக்கையில் ஏழு விண்மீன்களேச் செய்து வைப்பது உரோமையர் வழக்கம். கிறிஸ்துதான் உலகாள் மன்னன் என்பதை இந்த விண்மீன்கள் குறிப்பதாகவும் கொள்ளலாம். கிறிஸ்துவின் சொல் இருபுறமும் கூர்மையான வாள்போல் நின்று உலகையும் திருச்சபையையும் தீர்ப்பிடக்கூடிய வன்மையுள்ளது. இசை. 49 : 2 கடவுளின் சொல்லுக்கு இவ்வித வன்மையுள்ளதெனக் கூறுகிறது. கிறிஸ்துவின் முக ஒளிர்வு அவர் உருமாறிய நிகழ்ச்சியில் (காண். மத். 17 : 2) தோன்றும் ஒளிர்வினே ஒத்துள்ளது.

17–20 : இவ்வித அடையாளப் பொருட்களில் தோன்றிய கிறிஸ்துவைக் கண்ட அருளப்பர் முகங்குப்புற விழுந்து விடுகிருர். இறைக்காட்சியைக் கண்ட இசையாசும் (இசை. 6) எசேக்கியேலும் (எசேக். 1–3) இவ்வாறுதானே கடவுள் திருமுன் அஞ்சி நடுங்கினர். இவர்களேப் போன்று இறைவாக்குப் பணிக்கு அழைக்கப்பெறும் அருளப்பரும் தம்

இல்லாமையையும், இயலாமையையும் உணர்கின்ருர். இறைவன் இறைவாக்கினர் எல்லாருக்கும் உறுதியும் ஆற்றலும் அளித்து அவர்கள் வழியே தூது விடுத்ததுபோல், கிறிஸ்து அருளப்பருக்குத் தாம் வெளிப்படுத்தும் எல்லாவற்றையும் எழுதி, சபைகளுக்கு அறிவிக்க ஆற்றலையும் அதிகாரத்தையும் அளிக்கின்ருர். கிறிஸ்து மனிதனுய்ப் பிறந்து நமக்காக இறந்து உயிர்த்ததால், கடவுளுக்குரிய தன்மையில் குறையவில்லை. அவர் கடவுளாகையால், என்றும் வாழ்கிறவர். கிறிஸ்து தீய சக்திகள்மீது வெற்றி கொண்டதால், கிறிஸ்தவர்கள் துன்பத்திற்கோ, சாவிற்கோ அஞ்சத்தேவையில்லை. வ. 20-இல் வரும் '' தூதர்கள் '' கிறிஸ்துவ சபைகளின் கண்காணிப்பாளர்கள் என்பதைவிட அவற்றின் காவல் தூதர்கள் என்று கொள்ளுதலே பொருந்தும்.

(iii) ஏழு திருமுகங்கள் *(2 : 1–3 : 22)*

நூலின் 2–3 அதிகாரங்களில் இந்த ஏழு மடல்களும் அடங்கியுள்ளன. ஒவ்வொரு சபைக்கும் ஒரு மடல் என்ற விகிதத்தில் ஏழு சபைகளுக்கும் ஏழு மடல்களென இருப்பினும், இவை ஒவ்வொன்றும் தனித்து நிற்பவையல்ல. ஒவ்வொன்றும் ஒரு சில தனித்த செய்திகளைத் தாங்கிவரினும், அவை ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளவை. எனவே நூலின் ஒரு பகுதியாகவும் அமைந்துள்ளன. ஆதலின் திருவெளிப்பாட்டு நூலாசிரியரே இவற்றை எழுதினுர் என்பதில் ஐயமில்லை. இவையெல்லாம் (ஒவ்வொரு சபைக்கும் எழுதச் சொல்லும்) கிறிஸ்துவின் ஆணையோடு தொடங்குகின்றன. 'எபேசு சபையின் தூதருக்கு இதை எழுது' (2 : 1). அடுத்து, செய்தி விடுக்கும் கிறிஸ்துவின் மகிமையைச் சொல்லிப் பின்னர் ஒவ்வொரு சபையின் நிறைகுறைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. மடலின் இறுதியில் வரும் 'செவியுள்ளவன் கேட்கட்டும்' (2 : 7, 11, 17, 29) என்னும் சொற்கள் இம்மடல்களை ஒவ்வொரு கிறிஸ்தவனும் வாசித்துப் பயன்பெற வேண்டும் என்பதனைக் காட்டுகின்றன. இவை ஒவ்வொன்றும் எதிர்கால இன்ப வாழ்வைக் கிறிஸ்தவர்களின் மனக்கண்முன் வைப்பதோடு

முடிவுறுகின்றன. பொதுவில் இவை ஞானவுணர்வுக் கொள்கையைக் (Gnosticism) கண்டிக்கின்றன.

(அ) எபேசு சபைக்கு *(2 : 1–7)*

"எபேசு சபையின் தூதருக்கு இதை எழுது: 'தமது வலக் **2**
கையில் ஏழு விண்மீன்களை ஏந்திக்கொண்டு, ஏழு பொன்
குத்துவிளக்குகளின் நடுவில் நடப்பவர் உரைப்பதாவது:
உன் செயல்களை நான் அறிவேன்; நீ எவ்வளவு உழைத்திருக் 2
கிறாய், எவ்வளவு மனவுறுதி காட்டியிருக்கிறாய் என்பதை
அறிவேன். தீயவர்களின் போக்கை நீ சகிக்கிறதில்லை என்ப
தும் எனக்குத் தெரியும். அப்போஸ்தலர்களாய் இல்லா
திருந்தும் சிலர் தங்களை அப்போஸ்தலர்கள் ஆக்கிக்கொண்
டார்கள். அவர்களைப் பரிசோதித்து, அவர்கள் பொய்யர்கள்
என்று கண்டறிந்தாய். மனவுறுதியோடும் நீ விளங்குகிறாய். 3
என் பெயரின் பொருட்டு எவ்வளவோ தாங்கிக்கொண்டாய்.
ஆயினும் தளர்ச்சியுறவில்லை. ஆனால் உன் மேல் நான் 4
சொல்லவேண்டிய குறையொன்று உண்டு: தொடக்கத்தில்
உனக்கு இருந்த அன்பு இப்போதில்லை. உயர்ந்த நிலையி
னின்று நீ தவறிவிட்டாய். இதை நினைத்து மனந்திரும்பி, 5
தொடக்கத்தில் நீ செய்துவந்த செயல்களைச் செய்க. இல்லை
யேல் நான் உன்னிடம் வந்து உன் விளக்கை அது இருக்கு
மிடத்திலிருந்து அகற்றி விடுவேன்; நீ மனந்திரும்பாவிட்டால்
அப்படிச் செய்வேன். இருப்பினும் உன் நடத்தையில் நல்லது
ஒன்று உண்டு. நான் வெறுக்கிற நிக்கொலாயரின் செய்கை 6
களை நீயும் வெறுக்கிறாய். தேவ ஆவி சபைகளுக்குக் கூறு 7
வதைச் செவியுள்ளவன் கேட்கட்டும்; கடவுளுடைய இன்ப
வனத்தில் உள்ளதும் வாழ்வு தருவதுமான மரத்தின் கனியை
உண்ணும் பேற்றை வெற்றி கொள்பவனுக்கு அருள்வேன்.'

எபேசு நகர் அன்றைய ஆசியாவின் தலைவாயில் என்று பெயர் பெற்றது; செல்வச் செருக்கும் வணிகப்பெருக்கும் பண்பாட்டுச் சிறப்பும் மிகுந்த நகர். சமய வழிபாட்டின் மையமாயும் இருந்தது அந்நகர். ஆகவே ஆசியாவின் ஆளுநராக வந்த உரோமைய அதிகாரிகள் யாவரும் முதலில் எபேசு நகரில் இறங்க வேண்டும் என்ற ஒரு ஒழுங்கும் இருந்தது. இவ்வித சிறப்புமிக்க நகரில் புனித சின்னப்பர் கி. பி. 53–56-ஆம் ஆண்டுகளில் திருச்சபையை நிறுவினார். (காண் அ. பணி 19 : 8, 10). எபேசு நகர் சபை அக்காலத்

தில் சின்ன ஆசியாவின் பிற சபைகளுக்கெல்லாம் தலைமை சபையாகவும் இருந்ததில் வியப்பில்லை. அதனுற்ருன் முதல் மடல் இச்சபைக்கு அனுப்பப்பெற்றது. இங்கிருந்து புறப் படும் சாலை பிற ஆறு நகரங்களையும் தொட்டு இறுதியில் இந்நகருக்கே வந்துவிடுமாகையால் மடல் எடுத்துச் செல் வோனுக்கு முதலில் எபேசு நகரிலிருந்து புறப்படல் எளிதாயு மிருந்தது.

1 : கிறிஸ்து திருச்சபையில் வாழ்கின்ருர். (காண். மத். *18 : 20; 28 : 20*) எனவே அவர் எபேசு நகர் சபையின் செயல்களை நன்கு அறிவார். இவ்வாறே ஒவ்வொரு சபை யின் நல்லவை கெட்டவை எல்லாம் அறிந்துள்ளார்.

2–6 : எபேசு திருச்சபையில் போலி அப்போஸ்தலர் சிலர் தோன்றி ஊறுவிளைவிக்க முனைந்தனர். இவர்களைப் பற்றி 2 கொரி. *11:4–13* கூறுகிறது. இவர்கள் யூதமதத் தினின்று மனமாறியவரெனினும் மீட்புப் பெற மோயீசன் சட்டம் தேவையெனப் போதித்தனர். இவர்களைப் புனித சின்னப்பர் 'பேர்போன' அப்போஸ்தலர்கள் என்று கேலி யாகக் குறிப்பிடுகின்ருர் (2 கொரி. *11:5*). இவர்களுடைய போதனையை எபேசு திருச்சபை நம்பிவிடவில்லை. புனித சின்னப்பர் முன்கூட்டியே இவர்களுக்கு விடுத்த எச்சரிக்கை (காண். அ. பணி *20:29–30*) இவர்களைக் காப்பாற்றியது போலும்! எபேசு நகர்க் கிறிஸ்தவர்கள் நிக்கொலாயர் **(Nicolaitans)** என்போரின் போதனையையும் எதிர்த்து வெறுத்தவர்கள். நிக்கொலாயர் எபேசு நகரில் விளங்கிய அர்த்தேமிசு **(Artemis)** தேவதை வழிபாட்டில் ஈடுபடுவது தவறன்று என்றும், கற்புக்கு எதிரான பாவங்களைத் தீயவை யல்ல என்றும் ஏற்று வாழ்ந்த தரங்கெட்ட கிறிஸ்தவர்கள். புறவினத்தாரின் தீய பண்பாடுகளோடும், பிறமறை வழிபாடுகளோடும் கிறிஸ்தவர்களை ஈடுபடுத்த முயன்றனர். எபேசு நகர்க் கிறிஸ்தவர்கள் இப் போதனைகளை ஏற்காமல் தூயவராய் வாழ்ந்திடினும், தாங்கள் தொடக்கத்தில் பெற் றிருந்த அன்பில் குன்றிவிட்டார்கள்; கிறிஸ்துவின் போத கத்தைக் கடைப்பிடித்து விசுவாசத்தைக் காத்தவர்கள்தான்.

ஆயினும் உண்மையான அன்பில் குன்றியதால் உயர்ந்த நிலையினின்று இறங்கிவிட்டனர். அன்பு எல்லாவற்றிற்கும் அடிப்படை; அது குறையும் நிலையில் பிற நற்பண்புகள், புண்ணியங்களெல்லாம் மறைந்துவிடும். இஃது ஒரு பெரும் கேடு. அதனால்தான் இவர்களைக் கடிந்துரைக்கின்றார் கிறிஸ்து. உண்மையான அன்பில் (கடவுளன்பு+பிறரன்பு) நிலைகொள்ளாவிடில் கிறிஸ்தவ சபை என்னும் நிலையே போய்விடும்—'' உன் விளக்கை அகற்றிவிடுவேன் ''.

7: இந்தச் செய்திகளைத் தேவ ஆவி எபேசு வாழ் கிறிஸ்தவர்களுக்குத் தருகின்றார். கிறிஸ்து வானகம் சென்ற பிறகு திருச் சபைக்கு அனுப்பிய ஆவி இவரே. பரிசுத்த ஆவியே கிறிஸ்துவின் போதனைகளைத் தெளிவாக்குபவர் (காண். அரு. 15:26; 16:7). 'வாழ்வு தரும் மரத்தின் கனி' என்னும் சொற்கள் முதல் மனிதன் பாவம் செய்து வாழ்வை இழந்ததை (ஆதி. 3:22 காண்) நினைவுபடுத்து கின்றன. கிறிஸ்தவன் நித்திய வாழ்வைப் பெறப் போராட வேண்டும். துன்பச் சூழ்நிலையில் வாழும் கிறிஸ்தவர்கள் தீமைக்கு எதிராகப் போராடி வெற்றி பெற்றால்தான் நித்திய வாழ்வில் நுழைவர்.

(ஆ) சிமிர்ணு சபைக்கு (*2:8–11*):

'' சிமிர்ணுவிலுள்ள சபையின் தூதருக்கு இதை எழுது: 8
'முதலும் இறுதியுமானவர், சாவுக்குட்பட்டும் உயிர் வாழ்
கின்றவர் உரைப்பதாவது: நீ படும் வேதனையும் உற்றவறு 9
மையும் நான் அறிவேன்—எனினும் நீ செல்வமிக்கவனே—
தாங்கள் யூதர்கள் எனச் சொல்லிக்கொள்பவர்கள் உங்களைப்
பழித்துப் பேசுவதை எல்லாம் நான் அறிவேன். அவர்கள்
யூதர்களே அல்லர்; சாத்தானின் கூட்டமே. உனக்கு வரப் 10
போகும் துன்பங்களுக்கு அஞ்ச வேண்டாம். இதோ, அலகை
உங்களுள் சிலரைச் சிறையில் தள்ளிச் சோதனைக்கு உட்படுத்
தப்போகிறது. பத்து நாள் வேதனையுறுவீர்கள். சாவதாயினும்
விசுவாசத்தில் நிலைத்திரு. வாழ்வை உனக்கு நான் வெற்றி
வாகையாய்ச் சூட்டுவேன். தேவ ஆவி சபைகளுக்குக் கூறு 11
வதைச் செவியுள்ளவன் கேட்கட்டும். வெற்றி கொள்பவனை
இரண்டாவது சாவு தீண்டாது.'

8–11 : சிமிர்ளு நகர் எபேசுக்கு வடக்கில் 35 கல் தொலேவில் இருந்தது. எபேசுக்கு அடுத்து வணிகத்தில் இதுவே சிறந்து விளங்கியது. கி. பி. 26-இல் உரோமை மன்னன் திபேரியுசுக்கு இங்கு ஒரு கோயில் கட்டியிருந்தனர். இந்நகரில் கிறிஸ்தவ மறையின் தொடக்கம்பற்றி ஒன்றும் தெரியவில்லே. அங்கு வாழ்ந்த யூத மக்கள் கிறிஸ்தவர்களேப் பகைத்துத் துன்புறுத்தினர். 'அவர்கள் யூதர்கள் அல்லர் ; சாத்தானின் கூட்டமே' என்னும் சொற்கள் '' அலகையே உங்களுக்குத் தந்தை......அவன் பொய்யன்; பொய்க்குத் தந்தை'' (காண். அரு. 8:44) என்ற கிறிஸ்துவின் வசை மொழியை நினேவுபடுத்துகின்றன. ஊனியல்பினுல் வந்த யூத மக்களெல்லாரும் இறைமக்களல்லர்; இறைவனின் வாக்குறுதியினுல் புதிய படைப்பான கிறிஸ்தவர்களே இறை மக்கள் (காண் உரோ. 9:8; கலா. 6:15). இந்நகர் கிறிஸ் தவர்கள் ஏழ்மையாலும் பிறர் தந்த துன்பங்களாலும் வருந்தினர். அவர்கள் ஏழைகளாயினும் ஞானச் செல்வ மிக்கவர்கள். அவர்களின் துன்பம் பத்து நாட்களுக்குத்தான் நீடிக்கும். பத்து நாட்கள் என்பதற்கு ஒரு குறுகிய காலம் என்பது பொருள் (காண். தானி. 1:12, 14). துன்புறும் காலத்தை நித்திய வாழ்வின் காலத்தோடு ஒப்பிடும்போது அது மிகவும் குறுகியதே (காண். 2 கொரி. 4:17). துன்பத் தில் இறுதிவரை நிலேத்திருப்பவர்கட்கு ஆண்டவர் வெற்றி வாகை சூட்டுவார். வானக இன்பம் வெற்றிவகையாக அளிக்கப்படுகிறது. அலகையையும் அதன் தீய சக்திகளேயும் வென்றவர்களே இதனேப் பெறுவர். இரண்டாம் சாவு என்பது நித்திய நரகமாகும். கிறிஸ்துவோடு துன்புற்று இறப்பவர்கள் நித்தியத்திற்கும் சாவதில்லே; ஆனுல் என் றென்றும் வாழ்கின்றனர்.

இ. பெர்கமு சபைக்கு *(2 : 12–17)* :

'' பெர்கமுவினுள்ள சபையின் தூதருக்கு இதை எழுது : 12
'இருபுறமும் கூர்மையான வாளே உடையவர் உரைப்பதாவது:
நீ குடியிருப்பது எத்தகைய இடம் என்று நான் அறிவேன்; 13
சாத்தானின் அரியணே அங்கேதான் உள்ளது. என்பெயரை
உறுதியுடன் பற்றிக்கொண்டுள்ளாய். சாத்தான் குடியிருக்கிற

உங்கள் நகரத்திலே என் உண்மைச் சாட்சியான, அந்திப்
பாஸ் கொலையுண்ட நாளில்கூட, நீ என்மேல் வைத்த விசு
வாசத்தை மறுக்கவில்லை. ஆனால் உன்மேல் நான் சொல்ல 14
வேண்டிய குறைகள் சில உள்ளன : பாலாமின் போக்குக்
கேற்ற கொள்கையைப் பின்பற்றும் சிலர் உங்களிடையே
உளர். இந்தப் பாலாம்தான் இஸ்ராயேல் மக்கள் பாவத்தில்
விழும்படி செய்யப் பாலாக்குக்குச் சொல்லிக் கொடுத்தவன்.
அதனால் அவர்கள் சிலைகளுக்குப் படைக்கப் பட்டதை உண்
டார்கள்; விபசாரம் செய்தார்கள். இது போலத்தான் 15
நிக்கொலாயரின் கொள்கைகளைப் பின்பற்றும் சிலர் உங்க
ளிடையே உள்ளனர். ஆகவே மனந்திரும்பு. இல்லையேல் 16
விரைவில் நான் உன்னிடம் வந்து, என் வாயினின்று வெளிப்
படும் வாள்கொண்டு அவர்களுக்கெதிராகப் போர் தொடுப்
பேன். தேவ ஆவி சபைகளுக்குக் கூறுவதைச் செவியுள்ளவன் 17
கேட்கட்டும். வெற்றி கொள்பவனுக்கு மறைந்துள்ள மன்
னுவை அருளுவேன். மேலும் அவனுக்கு வெள்ளைக் கல்
ஒன்றையும் அளிப்பேன். அதில் ஒரு புதிய பெயர் பொறிக்கப்
பட்டிருக்கும். பெறுபவனன்றி வேறு எவனும் அதை அறி
யான்.'

12 : பெர்கமு நகர் சிமிர்னு நகருக்கு வடக்கே 40 கல் தொலைவில் இருந்தது. ஆசியாவை நிர்வகிக்கும் தலைமை இடமாக இது விளங்கியது. புறவினத்தார் வழிபட்ட அஸ்கிளேபியோசுவின் **(Asklepios)** கோயில் அக்காலத்தில் இந்நகரில் புகழ்வாய்ந்திருந்தது. அத்தெய்வம் பிற தெய்வங்களைப் போன்று, மீட்பர் என்னும் அடைமொழியோடு அழைக்கப்பெற்றாலும், இது சிறப்பாக குணமளிக்கும் தெய்வமாம். இதனால் அறிஞர்கள் இந்நகரை முற்கால உலகின் 'லூர்து நகர்' என்று கூறுகின்றனர். இதன் காரணமாகக் கிறிஸ்தவ மக்களிடையே சிறிது கலக்கம் ஏற்படத்தான் செய்தது. கிறிஸ்துவல்லவா உலகின் ஒரே மீட்பர்! அவரன்றோ உடல் நோயையும், உள்ள நோயையும் போக்குபவர்! ஆனால், இத்தெய்வ வழிபாட்டைவிட இந்நகரில் நிலைபெற்றிருந்த மன்னர் வழிபாடே மிகவும் அஞ்சற்குரியதாய் இருந்தது. உரோமைத் தேவதைக்கென்றும், மன்னர் அகுஸ்தூசுக்கென்றும் கோயில் ஒன்று கட்டப்பட்டிருந்தது. ஆசியாவில் இங்கேதான் மன்னர் வழிபாடு முதன் முதலில்

நிறுவப்பெற்றது. உரோமைப் பேரரசைச் சேர்ந்த ஆசிய நாட்டு குடிமக்கள் எல்லாரும் ஆண்டுக்கொருமுறை இவ்வாலயத்திற்குச் சென்று மன்னர் சிலேக்குத் தூபமிட்டுப் பின்னர் 'சீசர்தான் ஆண்டவர்' என்று அறிக்கையிட வேண்டும்.

13 : அஸ்கிளேபியோசு வழிபாட்டின் காரணமாக இந் நகரில் சாத்தானின் அரியணே உள்ளதாகத் திருவெளிப்பாடு கூறுகிறது. இத்தெய்வம் சாத்தானின் அடையாளமான பாம்பு உருவத்தில் இருந்ததால் (காண். *12 : 9*) சாத்தானேடு ஒப்பிடப்படுகின்றது. இங்கே மனனர் வழிபாடு நடைபெற்று வந்ததாலும், இந்நகர் சாத்தானின் அரியணேயெனக் கருதப்படலாம். இவ்வித சூழ்நிலேகளிலும் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை இழக்கவில்லே. 'ஆண்டவர்' என்னும் அடைமொழியைக் கிறிஸ்துவுக்கு மட்டும் உரித்தாக்கினர். வேதசாட்சியான அந்திப்பாசு (Antipas) யார் என்பது பற்றி ஒன்றும் தெரியவில்லே. இருப்பினும் தன்னேயே 'உண்மை சாட்சி' என்று கூறிய கிறிஸ்து (காண். *1 : 5 ; 3 : 14*), அதேச் சொற்களால் அந்திப்பாசையும் கூறுவதால் தம்மீது பிரமாணிக்கமாய் இருப்போருக்கெல்லாம் தமக்குரிய பெருமையை அளிப்பார் என்பதைச் சொல்லாமல் சொல்லுகின்ருர்.

14–17 : பாலாம் என்பவர் தம் தவருன போதனேயால் பழைய ஆகமத்தில் இஸ்ராயேல் மக்களேச் சிலே வழிபாட்டு முறைகளுக்கும், முறையற்ற உடல் இச்சைச் செயல்களுக்கும் இட்டுச் சென்றவர் (காண். எண். *31 ; 16 ; 2* இரா. *2 : 15*). அவரைப்போல் நிக்கொலாயரும் கிறிஸ்தவர்கள் சிலரை பெர்கமு நகரில் இத்தகைய பாவங்களுக்கு உள்ளாக்கிவிட்டனர். அவர்கள் மனந்திரும்பாவிடில், ஆண்டவர் விரைவில் வருவார் (காண். *3 : 11 ; 16 : 15 ; 22 : 7, 12, 7, 20*). கிறிஸ்து தம்மாட்சியில் வந்து உலகுக்கு நீதி வழங்குவார் என்பது இந்நூலின் முக்கிய போதனேயாகும். அவரது தீர்ப்பானது பாவச் செயலுக்கு அழைப்போரோடும், பாவம் செய்வாரோடும் போராடும் வாளாகும். ஆனல் இவ்வித தீய சக்திகளே எதிர்த்துப் போராடி வெற்றி பெறுப

வர்க்கு அவர் அளிப்பவை மறைந்துள்ள மன்னுவும், வெள்ளைக் கல்லுமாம். இம்மன்னு யூதர்களின் திருவெளிப்பாட்டு மரபு ஒன்றினை நம் நினைவுக்குக் கொண்டு வருகிறது. அம்மரபுப் படி எரெமியாஸ் இறைவாக்கினர் வாக்குறுதிப் பெட்டகத்தில் மன்னுவை மறைத்து வைத்தார் என்றும், அது மெசியாவின் காலத்தில் மீண்டும் தோன்றி விண்ணக உணவாக வரும் என்றும் யூதர்கள் நம்பினர் (காண். 2 மக். 2 : 4–8). ஆனால் இங்கே ஆண்டவர் மறைத்து வைத்துள்ளது இறுதிக் காலத்தில் இறைவனோடு நாம் கொள்ளும் ஒன்றிப்பு ஆகும் (காண். அரு. 6 : 32 ; கொலோ. 3 : 3). 'வெள்ளைக்கல்' பெர்கமு கிறிஸ்தவர்கள் சிலர், புறவினத்தாரின் தவறான செயல் ஒன்றில் ஈடுபட்டிருந்ததை உணர்த்துகிறது போலும். புறவின மக்கள் மாயதந்திர தாயத்துக்கள் அணிந்து வந்தனர். அவற்றில் மாய சக்தி வாய்ந்த பெயரைப் பொறித்து வைத்திருந்தனர். அப்பெயரினால் தீய ஆவியிடமிருந்து பாதுகாப்புப் பெறலாம் என்று குருட்டுதனமாக நம்பி வாழ்ந்தனர். இக்குருட்டுத்தனத்தை ஏற்காது வாழ்ந்த நல்ல கிறிஸ்தவர்களுக்குக் கிறிஸ்து தெய்வீக பராமரிப்பாகிய வெள்ளைக் கல்லைக் கொடுப்பார். கிறிஸ்துவின் பெயரால் மட்டும் அவர்கள் தீய சக்திகளை வெல்ல முடியும். கிறிஸ்துவின் பெயர் அதில் பொறிக்கப்பட்டிருக்கும். அது நமது கண்ணுக்கு மறைவாகத்தான் இருக்கும் (காண். 19 : 12).

ஈ. தியத்தைரா சபைக்கு (2 : 18–29) :

''தியத்தைராவிலுள்ள சபையின் தூதருக்கு இதை எழுது: 18
'எரிதழல்போலச் சுடர்விடும் கண்களும் வெண்கலம் போன்ற
பாதங்களும் உடைய இறைமகன் உரைப்பதாவது : உன் 19
செயல்களை நான் அறிவேன். உன் அன்பு, விசுவாசம், பணி
செய்யும் ஆர்வம், மனவுறுதி இவை எனக்குத் தெரியும். நீ
இன்று செய்துவருவது முன்பு செய்ததைவிட மிகுந்தது
என்றறிவேன். ஆனால் உன்மேல் நான் சொல்ல வேண்டிய 20
குறையொன்று உண்டு: யேசபேல் போன்ற ஒருத்தியை நீ
விட்டுவைத்திருக்கிறாய். இறைவாக்குரைப்பதாகச் சொல்லிக்
கொள்ளும் அவள், என் ஊழியர்களை ஏமாற்றி அவர்கள்
விபசாரம் செய்யவும், சிலைகளுக்குப் படைத்ததை உண்ணவும்
போதித்து வருகிறாள். அவள் மனந்திரும்புவாள் என நெடு 21

நாள் காத்திருந்தேன். ஆனால் அவள் தன் விபசாரத்தைவிட்டு
மனந்திரும்ப மாட்டேன் என்கிறாள். இதோ, அவளை நான் 22
படுகிடையாய்க் கிடத்திவிடுவேன். அவளோடு விபசாரம்
செய்பவர்கள் அவளுடைய செயல்களைவிட்டு மனந்திரும்பா
விட்டால் அவர்களையும் கொடியவேதனைக்குள்ளாக்குவேன்.
அவளுடைய பிள்ளைகளையும் கொன்று தீர்ப்பேன். மனித 23
உள்ளங்களையும் இதயங்களையும் ஊடுருவிக் காண்பவர் நான்
என்பதை எல்லாச் சபைகளும் அப்போது அறிந்துகொள்ளும்.
உங்களுள் ஒவ்வொருவருக்கும் செயல்களுக்குத் தக்கபடி கூலி
கொடுப்பேன். தியத்தைராவில் வாழும் ஏனையோரே, நீங்கள் 24
இந்தக் கொள்கைகளை ஏற்கவில்லை; சாத்தானின் ஆழ்ந்த
ஞானம் என்று பிறர் கூறுவதை நீங்கள் அறிய விரும்பவில்லை.
ஆகையால் நான் உங்களுக்குச் சொல்வது: உங்கள்மீது வேறு
எச்சுமையும் சுமத்தமாட்டேன்; நான் வருமளவும் நீங்கள் 25
பெற்றுக்கொண்ட போதனையில் நிலைத்திருங்கள். என் தந்தை 26
யிடமிருந்து நான் அதிகாரம் பெற்றிருப்பதுபோல, வெற்றி
கொள்பவனுக்கும் நான் விரும்பிய வழியில் இறுதிவரை நிலைத்
திருப்பவனுக்கும், ''புறவினத்தார்மீது அதிகாரம்அளிப்பேன்.
அவன் அவர்களை இரும்புக்கோல்கொண்டு நடத்துவான் 27
மட்பாண்டங்களைப்போல் நொறுக்கிவிடுவான்.'' விடிவெள்ளி
யையும் அவனுக்கு அளிப்பேன். தேவ ஆவி சபைகளுக்குக் 28.29
கூறுவதைச் செவியுள்ளவன் கேட்கட்டும்.'

18 : தியத்தைரா நகர் பெர்கமுக்குத் தென்கிழக்கில் ஏறத்தாழ 40 கல் தொலைவில் இருந்தது. பிற நகரங்களைப் போல் இது சிறப்பேதும் பெறவில்லை. எனினும் துணிகளுக்கு ஊதா வண்ணம் ஏற்றும் தொழிற்கூடங்கள் சில இங்கு இருந்தன. இவ்விதத் தொழிற்கூடம் ஒன்றில் பயின்று பின்னர், இரத்தாம்பரம் விற்று வந்தவள்தான் 'அப்போஸ்தலர் பணி'யில் வரும் லிதியா என்பவள் (காண். அ. பணி. *16 : 14*). கூட்டு முறையில் வணிகம் செய்த வணிகக் குழுக்கள் இந்நகரில் இயங்கி வந்தன. அவர்கள் வணிகம் செய்வதோடு நில்லாமல் கோவில்களில் பொதுவிருந்து நடத்தி உண்டு களித்தவர்கள். இவ்வித விருந்துகள் தேவர்களுக்குப் பலி செலுத்துவதோடு தொடங்கும். வணிகத்தில் ஈடுபட்டு வாழ்வில் உயரவேண்டுமாயின் இக்குழுக்களில் உறுப்பினராய் இருத்தல் வேண்டும். கிறிஸ்தவர்களுக்கு இஃது ஒரு பெரிய பிரச்சனை. இக்குழுக்களில் சேர்ந்தால் தேவர்களுக்கு எப்படி

பலி செலுத்துவது ? எப்படி படைத்த பொருள்களை உண்ணு வது? புனித சின்னப்பர் காலத்திலும் கொரிந்து நகரில் இதேப் பிரச்சனை எழுந்தது (1 கொரி. 10 : 23—33). இந்நக ரில் மன்னர் வழிபாட்டுக் கோயில் யாதொன்றும் இல்லையாத லின், கிறிஸ்தவர்களுக்குப் புறத்தேயிருந்து எத்துன்பமும் வரவில்லை.

20—22 : யேசபேல் என்பவள் ஆக்காபு மன்னனின் மனைவி இஸ்ராயேல் மக்களைப் பாவால் தெய்வ வழிபாட்டில் ஈடுபடுத்திச் சிலைவழிபாட்டை மக்களிடையே புகுத்தியவள் (காண். 2 அர. 9 : 22). தியத்தைரா நகரிலும் அவளைப் போன்ற ஒருத்தி கிறிஸ்தவர்கள் சிலரை வஞ்சித்துக் கெடுக் கும் அளவுக்கு இச்சபை அவளைவிட்டு வைத்தது. இவள் இறைவாக்கினள்போல் பேசி ஏமாற்றி வந்தவள். அவள் செய்த 'விபசாரம்' உண்மைக் கடவுளான கிறிஸ்துவின் வழியை விடுத்து, நெறி பிறழ்ந்து, பொய்க் கடவுளின் வழி பாட்டுக்குச் சென்றதேயாம். அவள் காட்டிய வழியில் சென்றவர்கள் யாவரும் அவளைப்போன்று விபசாரிகளே. இவ்வாறு உண்மைக் கடவுளைவிட்டுச் சென்றவர்களை விப சாரிகள் என்று கூறுவது பழைய ஏற்பாட்டு மரபாகும் (காண். 2 நாளா. 21 : 11; இசை. 23 : 17; எசேக். 16 : 29; ஓசே. 9 : 1). அவளுடைய வாரிசுகளாக வந்து அதே தவ றான போதகத்தைப் போதித்த நிக்கொலாயரே அவளுடைய பிள்ளைகள் எனக் கூறப்படுகின்றனர். ஆக்காபு மன்னனின் பிள்ளைகளுக்கு வந்த அழிவுதான் (காண். 2 அர. 10 : 7) இவர்களுக்கும் வரும்.

23 : மனித உள்ளங்களையும் இதயங்களையும் ஊடுருவிக் காண்பது யாவேக்கு (கடவுளுக்கு) உரிய செயலாகும் (காண். சங். 7 : 10; எரே. 11 : 20). கிறிஸ்து இதனைச் செய்வதால் அவரைக் கடவுளென திருவெளிப்பாடு மறை வாய்க் கூறுகிறது. ஒவ்வொருவருடைய செயல்களுக்கும் தக்கபடி கூலி கொடுப்பதும் யாவேயின் செயலே (காண். சங். 62 : 13; எரே. 17 : 10; மத். 16 : 27). இதனால்

திருவெளிப்பாடு கிறிஸ்துவின் கடவுள் தன்மையை நன்கு வெளிப்படுத்துகிறது.

24 : 'சாத்தானின் ஆழ்ந்த ஞானம்'. ஞான உணர்வுக் கொள்கையினரின் ஆழ்ந்த கடவுள் ஞானத்தை (முன்னுரை பக். 8 காண்க) இழிந்துரைப்பதற்காக அருளப்பர் இவ்வாறு கூறினர் போலும்! ஏனெனில் அவர்கள் கடவுள் ஞானத்தைக் கொண்டிருப்பதாகக் கூறிக்கொண்டவர்கள். ஆனல் கிறிஸ்துவைக் கடவுளாக ஏற்க மறுத்தவர்கள். உண்மையிலேயே கடவுளின் ஆழ்ந்த ஞானத்தைப் பெற்றவராயின் (காண். 1 கொரி. 2 : 10) இவ்விதப் பெருந்தவற்றை இழைத்திருக்கமாட்டாரல்லவா?

25 : கிறிஸ்தவ நெறியில் நின்றவர்கள்மீது கிறிஸ்து வேறு சுமை எதுவும் சுமத்தார். அவர்கள் புறவினத்தாரின் கடவுளர் வழிபாட்டினின்று விலக்கி வைக்கப்படுவர். அஃது அப்போஸ்தலர்கள் கிறிஸ்தவர்களுக்கு விடுத்த ஆணையாகும் (காண். அ. பணி 15 : 28). இதனைப் பெற்றுக் கொண்ட கிறிஸ்தவர்கள் கிறிஸ்து தம் மாட்சியில் வருமளவும் அதனைக் கடைப்பிடிக்க வேண்டும்.

26–27: இறுதிவரை நிலைத்திருக்கும் நல்லவர்கள் கிறிஸ்துவின் அரச மகிமையில் பங்கு பெறுபவர். மெசியாவின் காலத்தில் மாற்றூர் அடிபணிந்து கிடப்பர் என்ற யூதரின் கருத்துக்கு ஏற்ப 27ஆம் வாக்கியம் அமைந்துள்ளது. ஆசிரியர் இங்கே சங். 2 : 8–9-ஐ எடுத்துக் கையாளுகின்றூர். **'இரும்புக்கோல்'** கிறிஸ்துவின் அதிகாரத்தைக் காட்டும் (காண். 12 : 5; 19 : 15). இறுதிவரை நிலைத்திருந்து வெற்றிபெற்ற கிறிஸ்தவர்களும் இவ்வதிகாரத்தில் பங்கு பெற்று (காண். 17 : 14) கிறிஸ்துவோடு அரசாள்வர் (காண். மத். 25 : 21–28; 1 கொரி. 6 : 2)

28 : உயிர்த்த கிறிஸ்து **விடிவெள்ளி**யாவார் (காண். 2 இரா. 1 : 19). பழைய ஆகமத்தில் பாலாம் தீர்க்கதரிசி கிறிஸ்துவை 'யாக்கோபின் விண்மீன்' என்றும் (எண். 24:17) இசையாஸ் இறைவாக்கினர் அவரைப் "பேரொளி"

யென்றும் (இசை. 9 : 1) கூறுதலைக் காண்க. இவர் தானே இருளிலும் இறப்பின் நிழலிலும் இருப்போர்க்கு ஒளி (காண். லூக். 1 : 70 78 ; மத். 4 : 16). இறுதிக் காலத்தில் இறந்தோரினின்று உயிர்த்த நல்லோர்மேல் கிறிஸ்து தம் ஒளியை வீசுவார் (எபே. 5:14). இறுதியாக, கிறிஸ்தவர்கள் அவரது அதிகாரத்தை மட்டுமன்று; அவரையே பெற்றுக்கொள்வர்.

(உ) சர்தை சபைக்கு *(3:1–6)*

''சர்தை சபையின் தூதருக்கு இதை எழுது: 'கடவுளுடைய 3
ஏழு ஆவிகளையும் ஏழு விண்மீன்களையும் உடையவர் உரைப்ப
தாவது: நீ செய்வதெல்லாம் எனக்குத் தெரியும். நீ
உயிருள்ளவன் என்பது பெயரளவில்தான்; உண்மையில் நீ
செத்துக்கிடக்கிறாய். விழிப்புள்ளவனாகி, உன்னுள் எஞ்சி 2
நிற்பதையாவது திடப்படுத்து; அதுவும் சாகுந் தருவாயில்
உள்ளது. உன் செயல்கள், என் கடவுள் முன்னிலையில் நிறை
வற்ற செயல்களாய் இருக்கக் கண்டேன். தேவ வார்த்தை 3
யைக் கேட்டபோது நீ எவ்வளவு ஆர்வத்துடன் அதை
ஏற்றுக்கொண்டாய் என்பதை நினைத்துக்கொள். அதைக்
கடைப்பிடித்து மனந்திரும்பு. நீ விழித்தெழாவிட்டால்,
நான் கள்ளனைப்போல் வருவேன். அப்படி வந்து உன்னைத்
தாக்கும் நேரத்தை நீ அறியாய். உன் நிலை இப்படி இருப்பி 4
னும், தங்கள் ஆடைகளைக் கறைப்படுத்தாத சிலர் சர்தையில்
உள்ளனர். அவர்கள் வெண்ணுடை அணிந்து, என்னைப்
புடைசூழ்ந்து செல்வர்; அவர்கள் அதற்குத் தகுதியுடைய
வர்களே. வெற்றி கொள்பவன் இவ்வாறு வெண்ணுடை 5
அணிவிக்கப்படுவான். வாழ்வின் நூலிலிருந்து அவனது
பெயரை நான் நீக்கமாட்டேன். என் தந்தை முன்னிலையிலும்,
அவருடைய தூதர்கள் முன்னிலையிலும் அவனது பெயரை
வெளிப்படையாக ஏற்றுக்கொள்வேன். தேவ ஆவி சபை 6
களுக்குக் கூறுவதைச் செவியுள்ளவன் கேட்கட்டும்.'

சர்தை நகர் தியத்தைரா நகருக்குத் தென்கிழக்கில் ஏறத்தாழ 30 கல் தொலைவில் இருந்தது. இஃது ஒரு பழம் பெருமை வாய்ந்த நகர். முற்காலத்தில் லீதியா மன்னன் இதனைத் தன் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்தான். இது கிரேக்கர்கள் பாரசீகர்கள், உரோமையர்கள் முதலியோரின் படையெடுப்புக்களுக்கு இலக்கான நகர், நூலாசிரியரின் காலத்தில் இந்நகரில் செல்வம் விளையாடியது. துணிக்குச்

சாயம் ஏற்றும் தொழில்முறை முதன்முதலில் இங்கேதான் தொடங்கியது. மக்கள் வணிகத்தில் சிறக்கவில்லையெனினும், சிறு சிறு கைத்தொழிற் பொருட்கள் செய்து விற்று வந்தனர். இவர்கள் சைபெல் (Cybele) என்னும் தெய்வத்தை வழிபட்டு வந்தனர். பொதுவில் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வரைமுறையற்ற காம இச்சைச் செயல்களில் ஈடுபட்டிருந்தனர். இவர்களது ஒழுக்கம் சீரழிந்திருந்தது. இவ்வித சூழ்நிலையில் வாழ்ந்த கிறிஸ்தவர்களும் தமது கிறிஸ்தவ வாழ்வில் தாழ்ந்துவிட்டனர்.

1. இந்நகர் சபைக்குக் கிறிஸ்து ஏழு விண்மீன்களை மட்டுமன்று *(காண். 1:16)* கடவுளின் ஏழு ஆவிகளையும் *(காண். 1:4, 10 ; 2;7, 17)* உடையவராய்ப் பேசுகிறார். எண் '7' முழுமையைக் குறிக்குமாதலின், பரிசுத்த ஆவி திருச்சபையில் முழுமையாய் வந்து செயல்படுகிறார், அவர்தான் திருச்சபைக்கு உயிரளித்து வாழ்வளிப்பவர் என்று பொருள்.

2. ஞான வாழ்வை ஏறக்குறைய முழுமையாக இழந்து விட்ட இக்கிறிஸ்தவர்கள் விழித்தெழுந்து மனந்திரும்ப வேண்டும். ஏனெனில் ஆண்டவர் தீர்ப்பிடத் திடீரென்றல்லவா வருவார் *(காண். மத். 24:42 ; மாற். 13;37).* அருளப்பர் இங்கு முற்காலத் திருமுழுக்குச் சடங்கின்போது பாடப்பட்ட திருப்பண்ணின் ஒருபகுதியை நினைவுப்படுத்துகின்றார்போலும் "தூங்குபவனே எழுந்திரு. இறந்தோரினின்று எழுந்து நில். கிறிஸ்து உன்மேல் ஒளிர்வார்" *(எபே. 5:14).* கிறிஸ்தவ வாழ்வில் இறந்தவர்களைப்போல் ஆகிவிட்ட கிறிஸ்தவர்கள் மீண்டும் உயிர்பெற்று எழ ஆண்டவர் அறைகூவல் விடுக்கின்றார். சர்தையில் தரங்குறைந்த கிறிஸ்தவர் பலர் இருப்பினும் நல்லவர் சிலரும் இருந்தனர். அவர்கள் இறுதிக் காலத்தில் வெண்ணுடை அணிந்து கிறிஸ்துவைப்பின்செல்வர்.

3. **வெண்ணுடை** பழைய ஏற்பாட்டில் விழாக் கோலத்தையும் *(காண். சங்கத்திருவுரை 9:8)*, வெற்றியையும்

(காண். 2 மக். 11:8), விண்ணகத்தைச் சார்ந்ததென்பதை யும் (காண். தானி. 7:9) உணர்த்தும். இங்கே அது வெற்றியைக் குறிக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றி பெறுபவர்தான் வெண்ணுடை பெறுவர். இவர்களுடைய பெயரும் வாழ்வின் நூலில் இடம் பெற்றிருக்கும்.

4. **வாழ்வின் நூல்** என்பது யூதர்களின் மரபுப்படி கடவுள் மக்களின் பெயர்களைப் பதிவுசெய்து வைத்திருக்கும் ஒரு நூல். இதைப்பற்றிய குறிப்பு பழைய ஏற்பாட்டில் பரவலாக உள்ளது (காண். யாத். 32:32–33 ; இசை. 4:3 ; மலாக். 3:16). தீயோரின் பெயர்கள் இந்நூலிலிருந்து அகற்றப்படும் என்பது சங்கீத ஆசிரியரின் கருத்து (காண். சங். 68:28). தீயோர்களுக்கென ஒரு நூல் இருப்பதாகத் திருவெளிப்பாடு கூறும் (காண். 20:12). அவர்களெல்லாரும் 'இறந்தவர்கள்' அருளப்பர் இவ்வித மரபுக்கேற்ப எழுதி, நல்லவர்களை நல்வாழ்வில் நிலைநிற்க ஊக்குவிக்கின்றார் ; கெட்டவர்களை அச்சுறுத்துகின்றார். ஏனெனில் நல்லவர்கள் வானகக் குடியுரிமையைப் பெற்றுள்ளவர்கள் (காண். லூக். 10:20 ; பிலிப். 4:3) ; அவர்கள் நித்திய வாழ்வில் நுழைவர் (காண். 13:8 ; 17:8 ; 20:12, 15 ; 21:27). இவ்வாக்கியத்தின் இரண்டாம் பகுதி " மனிதர் முன்னிலையில் என்னை வெளிப்படையாக ஏற்றுக்கொள்பவன் எவனோ, அவனை நானும் வானகத்திலுள்ள என் தந்தையின் முன்னிலையில் வெளிப்படையாக ஏற்றுக்கொள்வேன்", என்ற நற்செய்தி (மத். 10:32) வாக்கியத்தின் பிரதிபலிப்பாக உள்ளது. இத்தகையோரை மனுமகன் வானதூதர்கள் முன்னிலையிலும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்வாரென்று புனித லூக்காசின் நற்செய்தியும் கூறுகின்றது (லூக். 12:8).

(ஊ) பிலதெல்பியா சபைக்கு (3:7–13)

இந்நகர் சர்தை நகருக்குத் தென் கிழக்கில் 30 கல் தொலைவில் அமைந்திருந்தது. கிரேக்க பண்பாட்டைப் பரப்பும் தலைமையகமாக இது நிறுவப்பட்டது. கிரேக்க

மொழியில் இதன் பொருள் "பிறரன்பு" என்ருகும். இஃது ஒரு செழிப்புள்ள நகர். இங்கே குடியேறின யூதர்கள் சிலர் செல்வம் பெருக்கி நிலையான வாழ்வு வாழ்ந்தனர். இங்கு வாழ் கிறிஸ்தவ மக்களோ கிறிஸ்துவின் புகழ்மொழிக்கு உரியவர்.

"பிலதெல்பியாவிலுள்ள சபையின் தூதருக்கு இதை 7
எழுது: 'பரிசுத்தர், உண்மையானவர், தாவீதின் திறவு
கோலை உடையவர், எவனும் பூட்ட முடியாதபடி திறந்து
விடுபவர், எவனும் திறக்க முடியாதபடி பூட்டி விடுபவர்
உரைப்பதாவது: எவனும் பூட்ட இயலாத கதவை நான் 8
உனக்கு முன்பாகத் திறந்து வைத்திருக்கிறேன். உன் செயல்
களை அறிவேன். உன் ஆற்றல் சிறிதே எனினும் நீ என்னு
டைய வார்த்தையைக் கடைப்பிடித்தாய்; என் பெயரை மறுக்க
வில்லை; இதோ, சாத்தானின் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் 9
சிலர் தங்களை யூதர்கள் எனச் சொல்லிக்கொள்கிருர்கள்.
அவர்கள் பொய்யர்கள், யூதர்களே அல்லர். அவர்கள் வந்து
உன் காலடிகளை வணங்கச் செய்வேன்; நான் உனக்கு அன்பு
செய்கிறேன் என்பதை அவர்கள் அறியச் செய்வேன். மன 10
உறுதி தரும் என் வார்த்தையை நீ கடைப்பிடித்தால்,
மண்ணுலகில் வாழும் அனைவரையும் பரிசோதிக்க மாநிலத்
தின்மீது பெருந்துன்பம் வந்து விழும் நேரத்தில் நான்
உன்னைக் காப்பாற்றுவேன். விரைவாகவே வருகிறேன். 11
உனக்குரிய வெற்றி வாகையை வேறு எவனும் பறித்துக்
கொள்ளாதபடி, நீ பெற்றுக்கொண்ட போதகத்தில் நிலைத்
திரு. வெற்றி கொள்பவனை என் கடவுளது ஆலயத்தில் ஒரு 12
தூணாக ஏற்படுத்துவேன். அவன் அவ்வாலயத்திற்கு ஒரு
போதும் புறம்பாக மாட்டான். என் கடவுளின் பெயரை
யும், என் புதிய பெயரையும் அவன்மீது பொறிப்பேன். என்
கடவுளது நகரத்தின் பெயரையும் எழுதுவேன், அந்த நகரம்
என் கடவுளிடமிருந்து, விண்ணகத்தினின்று இறங்கிவருகிற
புதிய யெருசலேம். தேவ ஆவி சபைகளுக்குக் கூறுவதைச் 13
செவியுள்ளவன் கேட்கட்டும்.'

7. **'பரிசுத்தர்' 'உண்மையானவர்'** என்னும் அடைமொழிகள் யாவேக்கு (கடவுள்) உரிய தனிப் பண்புகளைக் குறிக்கும். கடவுள் 'பரிசுத்தர்' என்று இசை. *6:3; 40:25; 43:15;* அபாக்கூக் *3:3* முதலிய இடங்களில் வருதலைக் காணலாம். எபிரேய மொழியில் 'பரிசுத்தர்' என்ருல்

முதற்பொருளில் ‘ பிரிந்து நிற்கின்ற ’ அல்லது ‘ வேறுபட்ட ’ என்று பொருளாகும். கடவுள் உலகினின்று உயர்ந்து, ‘ வேறுபட்டு ’ நிற்பவர். உலகின் இயல்பு வேறு ; கடவுளின் இயல்பு வேறு ; அதனுல் உலகினின்று ‘ வேறுபட்டு ’ ‘ பரிசுத்தர ’ாய் இருக்கிருர். திருவெளிப்பாடு கடவுளின் இத்தெய்வீகப் பண்பைக் குறிக்கும் சொல்லால் கிறிஸ்துவையும் அழைப்பதால், கிறிஸ்துவின் இறைத் தன்மையை வலியுறுத்துகின்றது. ‘ உண்மையானவர் ’ என்பது யாவேக்குக் கொடுக்கப்பெற்ற வேருெரு அடைமொழி (காண். இசை. 65:16). இச்சொல் உள்ளதை உள்ளவாறு சொல்லும் பண்பைக் குறிக்காது. அல்லது உண்மையின் நிறைவைக் கொண்டிருக்கும் பண்பை மட்டும் குறிக்காது. யாவே யூத மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் கொண்டிருந்த பிரமாணிக்கத்தைக் குறிக்கும். கிரேக்க மொழியில் இச்சொல்லுக்கு அலேதினேஸ் (alethinos) என்னும் பதத்தை உபயோகிப்பர். இஃது அருளப்பரின் நற்செய்தியில் ஒன்பது முறையும், அவரது முதல் திருமுகத்தில் நான்கு முறையும், திருவெளிப்பாட்டில் பத்து முறையும் கையாளப்பட்டுள்ளது. அருளப்பரின் பிற நூல்களில் இச்சொல்லின் பொருள் சிறிது வேறுபட்டு வந்திடினும், இங்கே கிறிஸ்துவின் பிரமாணிக்கத்தையே உணர்த்தும். உண்மையே உருவான கிறிஸ்து, துன்புறும் கிறிஸ்தவர்களின் துயரம் துடைத்து அவர்கட்கு நித்திய இன்பம் அளிப்பேன் என உறுதிப்பாடு பூண்டவர். இதினின்று அவர் கிஞ்சிற்றேனும் தவருர். இச்சொல்லே அக்கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த ஆறுதல் அளித்தது. அடுத்து, **திறவுகோல்** அதிகாரத்தின் அடையாளம். தாவீதின் கோத்திரத்திலே பிறந்த கிறிஸ்து விண்ணகத்திலும் மண்ணகத்திலும் கொண்டுள்ள அதிகாரத்தைக் காட்டுகின்றது இது (காண். மத். 28:18). தாவீது மன்னனுடைய அரசின் இறுதிக்கால நிறைவுதானே விண்ணகம். ஆகவே அது ‘தாவீதுடைய அரசின் திறவுகோலா’கிறது. இயேசுக் கிறிஸ்து அன்றி விண்ணிலும் மண்ணிலும் எதுவும் நடைபெருது.

8. 'கதவைத் திறத்தல்' நற்செய்தியின் போதகத்திற்கு உரிய நல்ல சூழ்நிலையைக் காட்டுகிறது. கிரேக்கப் பண்பாட்டை ஆசியாவில் பரப்புவதற்காக நிறுவப்பட்ட இந்நகரில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் போதனையைப் பரப்ப நல்லதொரு வாய்ப்பைப் பெற்றிருந்தனர். ஏனெனில் பிலதெல்பியா நகரம், லீதியா (Lyddia), மிசியா (Missia), பிரீஜியா (Phrygia) போன்ற மாநிலங்களின் எல்லைகளைத் தொட்டுக்கொண்டிருந்தது. அங்கெல்லாம் சென்று நற்செய்தியைப் போதிக்க இச்சூழ்நிலை ' திறந்த கதவு ' போன்று இருந்தது.

9. பிலதெல்பியாவில் வளமுடன் வாழ்ந்து வந்த யூதர்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிரானவரெனினும் (காண். 2:9) அவர்கள் மனந்திரும்பும் வாய்ப்பைத் திருவெளிப்பாடு சுட்டிக்காட்டிப் பேசுகிறது. கிறிஸ்து அந்நகர்க் கிறிஸ்தவர்களுக்குக் காட்டும் அன்பே யூதர்களுக்கு வழிகாட்டியாகும். சின்ன ஆசியாவின் ஏழு சபைகளிலும் இச்சபையினர்தாம் கிறிஸ்துவின் அன்புக்கு உரியவராய் வாழ்ந்தனர். ''நான் உனக்கு அன்பு செய்கின்றேன்''—ஆனால் இந்த அன்பு கண்டித்துத் திருத்தும் அன்பு (காண். 3:19).

10-11 **வரவிருக்கும் பெருந்துன்பம்** (காண். 7:14) உலக முடிவில் வரவிருக்கும் இறுதிக்கால துன்பமாம். மண்ணுலகில் வாழும் அனைவரும், அதாவது, கிறிஸ்துவில் விசுவாசங்கொள்ளாத புறவின மக்கள் அனைவரும் (காண். 6:10; 8:13; 11:10; 12:12; 13:8, 12, 14; 17:2, 8) தீர்ப்புக்கு உள்ளாவர். பிலதெல்பியா சபையினர் காப்பாற்றப் பெறுவர். அதுபோலவே கிறிஸ்தவ விசுவாசத்தில் நிலைநின்றோரும் காப்பாற்றப் பெறுவர். ஏனெனில் இவர்களெல்லோரும் வானக மகிமைக்கு உரியவர்கள். பெர்கமு சபையினரோடு போர்தொடுக்க இயேசு விரைவாக வருவார் (காண். 2:16); ஆனால் அவர் பிலதெல்பியா சபையினருக்கு வானக மகிமையும் அளிக்க விரைவாக வருகிறார். கிறிஸ்துவின் இறுதிக்கால வருகை தீயோருக்குத் துன்பமாகும். நல்லோருக்கு இன்பமாகும்.

12: இன்பம் நல்கும் விண்ணகம் கடவுளின் ஆலயத்திற்கு ஒப்பிடப்படுகின்றது. அங்குச் செல்வோர் அதன் தூண்களாக ஆவார்கள் என்பது அவர்களது நித்திய நிலையைக் குறிக்கும். அவர்களின் இன்பத்திற்கு முடிவேது? வானகம் செல்வோர் கடவுளின் உரிமைப் பொருளாகவும், கிறிஸ்துவின் உடமைப் பொருளாகவும் வானகத்தின் குடிமக்களாகவும் மாறுவதை அவர்கள்மீது முப்பெயர்கள் பொறிக்கப் பெறும் என்பது காட்டும். அவர்கள் கிறிஸ்துவோடும் வானகத் தந்தையோடும் ஒன்றித்து, அவர்களது உரிமைப் பொருளாகின்றனர். இவ்வாறு பெயர் பொறித்தல் (ஒருவரின் உரிமைப் பொருளாக்குவது) யூதமரபிலிருந்தும் அக்கால வழக்கிலிருந்தும் எடுக்கப்பட்ட அடையாளச் செயலாகும். மோயீசன் இஸ்ராயேல் மக்கள்மீது யாவேயின் பெயரைக் கூறியதால் அவர்கள் யாவேயின் மக்களானார்கள் (காண். எண். *6 : 22–27*). அடிமைகளின் உடலில் உரிமையாளர்கள் தங்கள் பெயரை எழுதிவைப்பது அக்கால வழக்கு. திருவெளிப்பாடு பழைய ஆகமத்தின் மரபில் நின்றும், அக்காலப் பண்பாடு, மொழி வழக்கு இவற்றினின்றும் அடையாள மொழிகளையும், சொற்களையும் பெற்றுக் கையாளுதலை இவ்விடத்தில் மட்டுமன்று, நூலின் எல்லாப் பகுதிகளிலும் காணலாம்.

ஏ. லவோதிக்கேயா சபைக்கு *(3 : 14–22)*

இந்நகர் பிலதெல்பியா நகருக்குத் தென்கிழக்கில் 40 கல் தொலைவில் இருந்தது. கொலோசெ நகருக்கு அண்மையிலும் இருந்தது. வணிகத் துறையில் சிறப்புற்ற நகர் இது. செல்வம் மிகுந்த இந்நகரில் வங்கிகளும் சில இயங்கின. இங்கு வாழ் யூதர்கள் மிகவும் வளம் பெற்றிருந்தனர். இங்கு ஒரு மருத்துவப்பள்ளி இருந்தது. அது கண், காது மருந்துக்குப் பெயர் பெற்றிருந்தது. ஆடை நெய்தல் தொழிலும் சிறப்புற்றிருந்தது. புனித சின்னப்பரின் சீடரான எப்பாபிராசு (Epaphras) இங்கே திருச்சபையை நிறுவினார்போலும் (காண். கொலோ. *4 : 12–13*). இந்நகரின் கிறிஸ்தவ மக்கள் செல்வம் படைத்தவராய் இருந்தனர் (காண். *3 : 17*).

ஆனால் நல்லவர்களல்லர். இவர்களில் கிறிஸ்து எந்த ஒரு நன்மையும் காணவில்லை.

''லவோதிக்கேயாவிலுள்ள சபையின் தூதருக்கு இதை 14
எழுது : 'ஆமென்' எனும் பெயருள்ளவர். உண்மையான
சாட்சியானவர். நம்பத்தக்க சாட்சியானவர், கடவுள்
படைத்த படைப்பின் ஆதியாய் உள்ளவர் உரைப்பதாவது :
உன் செயல்களை நான் அறிவேன். நீ இருப்பது தட்ப 15
நிலையுமன்று, வெப்ப நிலையுமன்று ; தட்ப நிலையிலோ,
வெப்ப நிலையிலோ இருந்தால் நலம். நீயோ வெப்ப நிலை 16
யிலுமில்லை, தட்ப நிலையிலுமில்லை ; வெதுவெதுப்பான
நிலையில் இருக்கிறபடியால், உன்னை என் வாயினின்று கக்கி
விடுவேன். 'நான் செல்வமுள்ளவன், வளமிக்கவன் 17
ஆகிவிட்டேன். எனக்குக் குறை ஒன்றுமில்லை' என்று நீ
சொல்கிறாய். உன் நிலையோ இழிவானது, இரங்கத்தக்கது;
நீ வறியவன், குருடன், ஆடையற்றவன். இதை நீ உணர்வ 18
தில்லை. ஆகவே நீ செல்வமுள்ளவனாகும் பொருட்டு,
புடம்போட்ட பொன்னை உன்னிடமிருந்து விலைக்கு வாங்கிக்
கொள் ஆடையின்றி வெட்கி நிற்கும் உன் நிலையைப் பிறர்
காணாதபடி வெண்ணுடை வாங்கி அணிந்துகொள். நீ
பார்வை பெறும்பொருட்டு உன் கண்களில் மருந்து வாங்கித்
தடவு. நான் யார்மேல் அன்புகூருகிறேனோ அவர்களைக் 19
கண்டித்துத் தண்டித்துத் திருத்துகிறேன். ஆகவே, நீ மனந்
திரும்பி ஆர்வமுள்ள வாழ்க்கை நடத்து. இதோ, 'நான் 20
கதவண்டை நின்று தட்டுகிறேன். ஒருவன் எனது குரலைக்
கேட்டுக் கதவைத் திறந்தால், அவனது இல்லத்தில்
நுழைந்து அவனோடு விருந்துண்பேன். நானும் அவனும்
ஒன்றாய் விருந்துண்போம். நான் வெற்றிகொண்டு என் 21
தந்தையின் அரியணையில் அமர்ந்ததுபோல, வெற்றிகொள்ப
வனுக்கு என் அரியணையில் அமரும் உரிமை அளிப்பேன்.
தேவ ஆவி சபைகளுக்குக் கூறுவதைச் செவியுள்ளவன் 22
கேட்கட்டும்.''

14 : 'ஆமென்' என்னும் சொல் இசை. 65 : 16ஐப் பிரதிபலிக்கிறது (காண். 3 : 7). திருவெளிப்பாட்டில் கிறிஸ்து வெற்றிகொண்டவராய் வந்து தீமையின் அழிவு, இக்காலத் துன்பத்தின் நிலையாமை, மண்ணக மன்னர்களின் மறைவு ஆகியவற்றைக் கூறி, விசுவாசத்தில் இறுதிவரை தளராது நிற்கும் கிறிஸ்தவர்களுக்கு வெற்றி வாகையாகிய

வானக இன்பத்தை வாக்களிக்கின்ருர். எனவே அவர் பெயரும் ‘ ஆமென் ’ ஆகிறது. திருவெளிப்பாட்டு நூலின் நோக்கமே இவ்வொரே சொல்லில் அடங்கிவிட்டது என்று சொல்லிவிடலாம். இவரே கடவுளின் திருவெளிப்பாடுகளுக்கு உண்மையான சான்று பகர்ந்தவர் (காண். 1 : 5). அவருடைய சாட்சியம் உண்மையினின்று ஒரு துளியேனும் பிறழ்வதில்லை. ஏனெனில் தந்தையின் திருவெளிப்பாடெல்லாம் கிறிஸ்துவில் நிறைவு பெறுகின்றன, ‘ ஆம் ’ ஆயின. அவரிடம் ‘ ஆம் ’, ‘ இல்லை ’ ஆகியவற்றின் கலப்பேயில்லை (காண். 1 கொரி. 2 : 19–20). படைப்பின் தொடக்கமும் அவர்தான் (காண். அரு. 1 : 3 ; 1 கொரி. 8 : 6 ; எபிரே. 1 : 2).

15–16 : லவோதிக்கேயா சபைக் கிறிஸ்தவர்கள் பிறர் எவரும் பெருத வசைமொழியைப் பெறுகின்றனர். அவர்கள் செல்வச் செருக்கில் தன்னிறைவுகொண்டு அரைகுறையான ஆர்வத்தோடு கிறிஸ்துவைப் பின்பற்றினவர்கள். பட்டும்படாத கிறிஸ்தவ வாழ்வு அவர்களது வாழ்வு. நன்மையை முழுமையாய் ஏற்பதுமில்லை ; தீமையை முழுமையாய்த் தள்ளுவதுமில்லை. ஆனுல் இவ்வித நிலையில் மனநிறைவு கொண்டிருந்தனர். இவ்வித வாழ்வு பெரும் ஆபத்தை விளைவிக்கக்கூடியது. ஆதலின் கிறிஸ்துவின் கண்டனமும் பெரியதாயுள்ளது.

17–20 : வறியவன், குருடன், ஆடையற்றவன் என இச்சபையை இழிந்துரைத்தலில் எதிர்மறையாக அங்குள்ள வங்கிகள், கண் மருத்துவம், ஆடை நெசவு ஆகியவற்றை மறைத்துரைத்து, அது ஞானச்செல்வம் இறையொளி, வெற்றி வெண்ணுடை அற்றது என்று கூருமல் கூறுகிருர். அவர்கள் கிறிஸ்துவிடமிருந்து மீட்பின் நிறைவைப் பெற்றுத் தங்கள் நிலையைச் சீர்செய்துகொள்ள வேண்டும். ஆனுல் கிறிஸ்துவின் இந்தக் கண்டிப்பைக் கண்டு மனத்திடம் இழக்கத்தேவையில்லை. இஃது அன்பினுல் வந்தது. ஆகவே கிறிஸ்தவர்களின் உள்ளக் கதவைத் தட்டுகிருர். இங்கே கிறிஸ்துவின் கவலையும் அக்கறையும் தொனிக்கிறது. உண்மையைச்

சார்ந்த எவனும் அவரது குரலுக்குச் செவிமடுப்பான் (காண். அரு. 18 : 38). கிறிஸ்துவின் ஆடுகளைப்போல அவரது குரலைக் கேட்டு (காண். அரு. 10 : 3) அவருடைய வார்த்தைகளையும் கேட்டு அன்பு செய்தால் விண்ணகத் தந்தையும் கிறிஸ்துவும் அவனோடு குடிகொள்வார்கள் (காண். அரு. 14 : 23). அவனோடு குடியிருப்பது மட்டுமன்று; அவனோடு விருந்துண்பார்கள். விருந்துண்ணல் கிறிஸ்துவோடு ஐக்கியமாவதைக் குறிக்கும். இஃது இறுதிக்கால நிகழ்ச்சியாயினும் (காண், 2 : 17), நற்கருணை இதன் பிணையாக இருப்பதால் (காண். அரு. 6 : 56) நற்கருணை உணவையும் இங்கு மறைத்துரைத்தலைக் காணலாம்.

21 : வாழ்வில் கிறிஸ்துவைப் போன்று வெற்றி கொண்டவன் அவரோடு வாழ்தல் மட்டுமன்று, அவரோடு அரசாள்வான் (காண். 2 : 26). கிறிஸ்துவின் வெற்றி, சிலுவையின் வெற்றி. சிலுவை வழியே அவரைப் பின்பற்றினவன்தான் (காண். லூக். 22 : 28–30) அவருடைய வெற்றியில் பங்கு பெற முடியும். செல்வச் செருக்கால் தன்னிறைவு மனப்பான்மையோடு வாழ்ந்த லவோதிக்கேயா மக்கள் துன்பத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றினால், அவர்களது இழிநிலையிலிருந்து எழுந்திட முடியும்.

II. காட்சிகள் (4 : 1—22 : 21)

முன்னுரையில் குறிப்பிட்டுள்ளவாறு திருவெளிப்பாட்டின் முதல் மூன்று அதிகாரங்களும் நூலின் முகவுரைபோல் அமைந்துள்ளன. புனித அருளப்பர் சின்ன ஆசியாவின் கிறிஸ்தவ சபைகளுக்கு மடல்கள் விடுக்கிறார். அம்மடல்களில் அவர்களின் நிறைகுறைகளைச் சுட்டிக் காட்டி, அதற்கேற்பப் புகழ்ந்தும் கடிந்தும் அவர்களைக் கிறிஸ்தவ வாழ்வில் ஊன்றி வளர ஊக்குவிக்கின்றார். திருவெளிப்பாட்டின் நான்காம் அதிகாரம் முதல் இரண்டாம் பகுதி தொடங்குகிறது. இது 22 : 21 வரை தொடர்கின்றது. இதுதான் நூலின் முக்கிய பகுதியாகும். இதனுடைய அமைப்பைப் பற்றி நிலவும் மூவித ஊகக் கோட்பாடுகளை முன்னுரையில்

காண்க. எந்த ஓர் ஊகக் கோட்பாட்டையும் சாராது காட்சிகளின் வரிசையில் நின்று அவற்றிற்கு விளக்கம் கூற முயலுவோம்.

(i) இறுதி நாளை முன்னறிவிக்கும் காட்சிகள் *(4 ; 1–16 : 21)*

அ. கடவுளின் அரியணை *(4:1-11)*

4 இதன்பின் நான் கண்ட காட்சியாவது: விண்ணகத்தில்
கதவு ஒன்று திறந்திருக்கக் கண்டேன். எக்காளத்தின் ஒலி
யைப்போல் என்னோடு முதலில் பேசிய குரல்: ''மேலே வா,
இனி நடக்கவேண்டியதை உனக்குக் காட்டுவேன்'' என்றது.
உடனே தேவ ஆவி என்னை ஆட்கொண்டது. அரியணை 2
ஒன்று விண்ணகத்தில் இருக்கக் கண்டேன். அதில் ஒருவர்
வீற்றிருக்கிறார். பார்வைக்கு அவர் மணிக்கல் போலும், 3
கோமேதகம் போலும் காணப்படுகின்றார். மரகதம்போன்ற
வானவில் அரியணையைச் சூழ்ந்திருக்கிறது. அவ்வரியணை 4
யைச் சுற்றி இருபத்து நான்கு இருக்கைகள் இருக்கின்றன.
அவ்விருக்கைகளில் இருபத்து நான்கு மூப்பர் அமர்ந்திருக்
கின்றனர். அவர்கள் வெண்ணுடை அணிந்து தலையில்
பொன் முடி சூடியிருக்கின்றனர். அரியணையினின்று மின்ன 5
லும் பேரிரைச்சலும் இடிமுழக்கமும் கிளம்புகின்றன. அரியணை
முன் ஏழு தீப்பந்தங்கள் எரிகின்றன. அவை கடவுளுடைய 6
ஏழு ஆவிகளே. அரியணை முன்னே பளிங்கெனத் தெளிந்த
கடல்போன்றதொன்று தென்படுகிறது. நடுவில் அரியணை
யைச் சுற்றிலும் நான்கு உயிர்கள் இருக்கின்றன. அவற்றிற்கு
முன்புறமும் பின்புறமும் கண்கள் பல இருக்கின்றன. அவ்வுயிர் 7
களுள் முதலாவது, சிங்கத்தைப் போல் உள்ளது; இரண்டா
வது இளங்காளைபோல் உள்ளது; மூன்றாவதற்கு மனித முகம்
இருக்கிறது; நான்காவது பறக்கும் கழுகை ஒத்திருக்கிறது.
இந்நான்கு உயிர்கள் ஒவ்வொன்றிற்கும் ஆறு சிறகுகள் 8
உள்ளன. உள்ளும் புறமும் கண்கள் நிறைந்திருக்கின்றன,
''பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் எல்லாம் வல்ல ஆண்டவ
ராகிய கடவுள்! இருந்தவரும் இருக்கிறவரும் இனி வருப
வரும் இவரே'' என்று அவை இரவும் பகலும் ஓய்வின்றிப்
பாடுகின்றன. என்றென்றும் வாழ்பவர்க்கு, அரியணையில் 9
வீற்றிருப்பவர்க்கு அவ்வுயிர்கள் மகிமையும் மாட்சியும் நன்றியும்
செலுத்தும் போதெல்லாம், இருபத்து நான்கு மூப்பர்களும் 10
அரியணையில் வீற்றிருப்பவர் முன், அடிபணிந்து என்றென்
றும் வாழ்கின்ற அவரைத் தொழுகின்றனர். அவர்கள் தங்கள் 11
பொன் முடிகளை எடுத்து அரியணைமுன் வைத்து, ''எங்கள்

ஆண்டவரே! எங்கள் இறைவனே! மகிமையும் மாட்சியும் வல்லமையும் பெறத் தக்கவர் நீரே, ஏனெனில் அனைத்தையும் படைத்தவர் நீரே! அனைத்தும் உண்டானது உம் விருப்பத் தாலே, உம் விருப்பத்தாலே எல்லாம் படைக்கப்பட்டன'' என்று பாடுகின்றனர்.

விண்ணக அரசவையைக் காண்கின்றார் அருளப்பர். அரியணையில் அமர்ந்து அரசோச்சும் இறைவனைச் சுற்றி அமர்ந்திருக்கின்றார்கள் அவரது பரிவாரங்கள். பலவகை விலங்கினங்களும், பல்வேறு மக்களும் அங்கே இருக்கின்றார் கள். இறைவனே அனைத்தையும் படைத்தவர். படைப்புக் கள் எல்லாம் எப்பொழுதும் அவரைப் புகழ்கின்றன என்பதைச் சொல்லாமல் சொல்கிறார் ஆசிரியர்.

1: 'இதன் பின் நான் கண்ட காட்சியாவது'—என்பது பின்வருவனவற்றை முதற் பகுதியோடு இணைக்கின்றது. இப்பகுதியும் முன்பகுதியும் ஒன்றுக்கொன்று தொடர் புடையன. இவ்வாறான இணைப்புச் சொற்களை 7:1, 9; 15:5; 18:1 ஆகிய வாக்கியங்களிலும் காணலாம். இது வரை காட்சிகள் மண்ணகத்தில் நிகழ்ந்தன. இப்பகுதியோ காட்சிகள் நிகழும் இடம் விண்ணகமென வருணிக்கின்றது. 'மேலே வா' என்னும் சொற்களை வைத்து அருளப்பர் விண்ணகத்திற்கு அழைத்துச் செல்லப் பெற்றார் எனக் கொளல் சரியன்று. எல்லாம் காட்சிகள்தான் என்பதை மனதில் கொள்வோம். 2 கொரி. 12:2-இல் புனித சின்னப் பர் தம்மைப் பற்றிக் கூறுவதோடு இதனை ஒப்பிடுக. காட்சி யில் வருபவையெல்லாம் கட்டாயம் நடைபெற வேண்டி யவை (1:1). எக்காளத் தொனி கடவுளின் சன்னிதியைக் காட்டுகிறது (1:10).

2: பரிசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்பெற்று, ஒரு தனி நிலையை அடைந்து அருளப்பர் காட்சிகளைக் காண்கின்றார். விண்ணகத்தில் கடவுளின் அரியணையைப் பற்றி 1 அரசர். 22:19; இசை. 6:1; எசேக். 1:26; சங். 46:8; தானி. 7:9 முதலியன கூறுகின்றன. இஃது இறைவனின் தெய்வீக உயர்நிலையைக் குறிக்கும். இது 20:11-இல் நீதிபதியின்

(இறைவன்) அரியணையாகவும், 22:1, 3-இல் செம்மறிக்கு உரியதாகவும் வருதலைக் காணலாம். ஆதலின் திருவெளிப்பாடு அரியணையில் வீற்றிருக்கும் இறைவனை அரசரென்றும் நீதிபதியென்றும் கூறும்.

3: இங்கே கடவுளின் பெயரைக் காணோம். யூதரின் மரபுப்படி அவரின் மகிமை நிறைந்த திருப்பெயரை உச்சரிக்க அருளப்பர் துணியவில்லை போலும். கடவுளது திருமுன் நின்றாலும் அருளப்பரால் அவரைக் காண முடியவில்லை. தெய்வீக ஒளி கடவுளைச் சூழ்ந்து கொண்டது (காண். 10:1). மணிக்கல்லும், கோமேதகமும் இதனைக் குறிக்கும் (காண். யாத். 24:10; எசேக். 1:26-27). கடவுளை மனித உருவில் வருணிக்காது விட்டுவிடுகின்றது திருவெளிப்பாடு. இதுவும் யூதரின் மரபாகும். வானவில் பழைய ஆகமத்தில் கடவுள் நோவேயோடு செய்துகொண்ட உடன்படிக்கையை நினைப்பூட்டும் (காண். ஆதி. 9:12-17). அது கடவுளின் பிரமாணத்திற்கு அடையாளம்.

4: கடவுளின் அரியணையைச் சுற்றி இருந்த இருபத்து நான்கு இருக்கைகளில் அமர்ந்திருக்கும் இருபத்துநான்கு மூப்பர்கள் யார் என்பது பற்றி வாதங்கள் எழுந்துள்ளன. இவர்களை வான தூதருக்கு ஒப்பிட்டுப் பேசுவோரும் உண்டு. இருபத்து நான்கை இரண்டாகப் பிரித்து (12 + 12) முதல் பன்னிரண்டு பழைய ஏற்பாட்டின் பன்னிரண்டு கோத்திரங்களின் பிரதிநிதிகளெனவும், அடுத்த பன்னிரண்டைப் புதிய ஏற்பாட்டின் பிரதிநிதிகளான அப்போஸ்தலர்களெனவும் கூறி, இந்த எண் (இருபத்து நான்கு) நிறைவு பெற்ற திருச்சபையைக் குறிப்பதாக வாதிப்போரும் உண்டு. இன்னொரு சாரார் திருவெளிப்பாட்டின் பழைய ஏற்பாட்டு பின்னணியையும், அதனின்று எடுத்துக்கொண்ட சொற்றொடர், அடையாளச் சொற்கள், செயல்கள் ஆகியவற்றையும் சுட்டிக்காட்டி வாதாடுகின்றனர். அவர்கள் கருத்துப்படி குறிப்பாக இந்நூல் 4 முதல் 11 வரையுள்ள அதிகாரங்களில் இஸ்ராயேல் குலத்தைப் பற்றிப் பேசுகின்றது. எனவே இங்கு வரும் இருபத்து நான்கு மூப்பர்களும் பழைய ஏற்

பாட்டுப் புனிதர்களின் பிரதிநிதிகளையேக் குறித்து நிற்கின்றனர் என்பது அவர்கள் கூற்று. அந்த மூப்பர்களின் பணி வழிபாட்டுப் பணி. அவர்கள் கடவுளையும் செம்மறியையும் மகிமைப்படுத்துகின்றனர் (காண். 4:9-11; 5:8-11, 14; 11:16-18; 19:4).

5: 'மின்னல்', 'பேரிரைச்சல்', 'இடிமுழக்கம்' என்பன கடவுளின் வல்லமையையும் மகிமையையும் உணர்த்தும் சொற்கள் (காண். 8:5; 11:19; 16:18; யாத். 19:16; எசேக். 1:13).

6அ. 'பளிங்கு போன்ற கடல்' 15:2, 3-இலும் வருகின்றது. இது யாவே இஸ்ராயேல் மக்களுக்கு அளித்த மீட்பினை நினைவூட்டுகிறது. இந்த இருபத்திநான்கு மூப்பர்களும், பழைய ஏற்பாட்டில் யூதமக்கள் எகிப்திலிருந்து மீட்கப் பட்டதுபோல், உலகினின்று மீட்கப்பட்டவர்கள் என்பது இதனின்று விளங்கும் உண்மையாம்.

6ஆ–9: அரியணையைச் சுற்றிலும் நிற்கும் நான்கு மிருகங்களும் புதிரானவை. இவ்வுருவங்கள் இறைவாக்கினர் எசேக்கியேலின் காட்சியில் தோன்றிய நான்கு உருவங்களின் (காண். எசேக். 1:6, 10, 22, 26) அடிப்படையில் வந்தவை. வேதாகமத்தைச் சேராத முதல் இரண்டு 'ஏனோக் திருவெளிப்பாட்டு' நூல்களிலும் இவ்வித உருவங்களைக் காணலாம். இவ்வுருவங்களை முறையே, நற்செய்தியாளர்களான மத்தேயு, லூக்கா, மாற்கு, அருளப்பர் ஆகியோருக்கு ஒப்பிடுவது ஒரு மரபாகும். ஆனால் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் என்பதனை யாரும் கூறவில்லை. மாறாக இவ்வுருவப் பொருட்கள் அனைத்துப் படைப்பின் சீர்மைக்கும், சிறப்புக்கும் அடையாளங்களாக நின்று படைத்தவனை வாழ்த்துகின்றன. 'எல்லாம் வல்ல ஆண்டவராகிய கடவுள்' என்னும் சொற்களில் 'சீசரன்று ஆண்டவர்' என்பது மறைந்து தொனிக்கிறது போலும். அக்காலத்தில் மன்னர் வழிபாட்டால் துன்புற்ற கிறிஸ்தவர்களுக்கு இஃது ஒரு விசுவாச அறிக்கை போன்றது. இறைவன் மக்களோடு என்றும் இருந்து துணைபுரிபவர் (காண். 1:4).

5

10: மூப்பர்களும் சேர்ந்து தங்கள் பொன்முடிகளைக் கழற்றி வைக்கின்றனர். இவ்வாறு இறைவனுக்குத் தங்கள் கீழ்ப்படிதலையும், இறைவனால்தான் இருக்கின்றோம் என்ற சார்பு நிலையையும் காட்டுகின்றனர். படைப்பின் இறைவனைப் போற்றிப் புகழ்கின்றனர்.

ஆ. ஏழு முத்திரைகள் அடங்கிய நூலும் செம்மறியும் *(5 : 1–14):*

இறைமாட்சியைக் கண்டவர் இப்பொழுது இறைமீட்பரையும் காண்கின்றார். படைப்பின் இறைவனின் மகிமையைக் கண்டவர் இப்பொழுது மீட்பரின் மகிமையையும் காண்கின்றார். தமது பலியினால் மகிமையின் வெற்றியை அடைந்தவர் செம்மறியானவர். இப்பொழுது மகிமை பெற்றிருந்தாலும், எந்தப்பாடுகள் இந்த மகிமைக்கு அவரை இட்டுச் சென்றனவோ, அந்தப்பாடுகளின் தழும்புகளை இன்னும் தம்மில் தாங்கியுள்ளார் அவர். இந்தத் தம் தனிச் சிறந்த வெற்றியின் காரணமாக உலக வரலாற்றினை நிறைவு செய்யும் உரிமையைப் பெற்றவர் அவர் ஒருவரே.

அரியணையில் வீற்றிருப்பவரின் வலப்புறந்தில் ஓர் ஏட்டுச் **5**
சுருளைக் கண்டேன். அதில் உள்ளும் புறமும் எழுதியிருந்தது.
அது ஏழு முத்திரை பொறித்து மூடப்பட்டிருந்தது. ''முத்திரை 2
களை உடைத்து, சுருளைப் பிரிக்கத் தகுதியுள்ளவன் யார் ?''
என்று வலிமை மிக்க வானதூதர் ஒருவர் உரத்த குரலில் பறை
சாற்றக் கண்டேன். அதை பிரிக்கவும் படிக்கவும் மேலுலகிலே 3
பூவுலகிலோ கீழுலகிலோ உள்ள எவராலும் இயலவில்லை.
அதைப் பிரிக்கவும் படிக்கவும் தகுதியுள்ளவர்கள் யாரும் 4
காணோமே என நான் தேம்பி அழுதேன். அப்போது மூப் 5
பருள் ஒருவர் என்னைப் பார்த்து, ''அழாதே, யூதா குலத்தின்
சிங்கமும் தாவீதின் வேருமானவர் வெற்றி பெற்றார். ஆகவே
அவர் அந்த ஏழு முத்திரைகளை உடைத்து, சுருளையும் பிரித்து
விடுவார்'' என்றார். அந்நான்கு உயிர்களும் மூப்பர்களும் 6
சூழ, அரியணை நடுவில் செம்மறி ஒன்று நிற்கக் கண்டேன்.
அது பலியிடப்பட்டதுபோல் காணப்பட்டது. அதற்கு ஏழு
கொம்புகளும் ஏழு கண்களும் இருந்தன. மண்ணுலகெங்கும்
அனுப்பப்பட்ட, கடவுளின் ஏழு ஆவிகளே அக்கண்கள்.
செம்மறியானவர் சென்று, அரியணையில் வீற்றிருந்தவரின் 7
வலக்கையிலிருந்து அந்தச் சுருளை எடுத்தார். அவர் அதை 8

எடுத்தபோது நான்கு உயிர்களும் இருபத்து நான்கு மூப்பரும்
செம்மறியின்முன் அடிபணிந்தனர். அவர்கள் ஒவ்வொரு
வருடைய கையிலும் சாம்பிராணி நிறைந்த பொற் கலசங்களும்
இருந்தன. இறை மக்களின் செபங்களே அக்கலசங்கள்.
அவர்கள் புதியதொரு பாடலைப் பாடினர்: "சுருளை எடுக்க 9
வும் அதன் முத்திரைகளை உடைக்கவும் தகுதியுள்ளவர் நீரே,
ஏனெனில், நீர் பலியாக்கப்பட்டு உமது இரத்தத்தால் எல்
லாக் குலத்தையும் மொழியையும் இனத்தையும் நாட்டையும்
சார்ந்த மக்களைக் கடவுளுக்காக மீட்டீர். அவர்களை எம் 10
கடவுளுக்கு அரசகுலக் குருக்களாக்கினீர்; அவர்களும் மண்
மீது அரசாள்வார்கள்." மேலும் நான் கண்ட காட்சியில், 11
அரியணையையும் உயிர்களையும் சுற்றி வானதூதர் பலரின்
குரலையும் கேட்டேன். அவர்களின் எண்ணிக்கையோ கோடா
னுகோடி, ஆயிரமாயிரம். இவர்கள் உரத்த குரலில் பாடியது: 12
"பலியான செம்மறி வல்லமையும் செல்வமும் ஞானமும்
பலமும் மாட்சியும் மகிமையும் போற்றியும் பெறத் தகுதி
யுள்ளவர்." பின்பு மேலுலகம், பூவுலகம், கீழுலகம், ஆழ்கடல் 13
எங்குமுள்ள படைப்புகள் அனைத்தும், "அரியணையில்
வீற்றிருப்பவருக்கும் செம்மறியானவர்க்கும், போற்றியும்
மாட்சியும் மகிமையும் வல்லமையும் என்றென்றும் உரியன
வாகுக" என்று பாடக் கேட்டேன். நான்கு உயிர்களும் 14
அதற்கு 'ஆமென்' என்று சொல்ல, மூப்பர்கள் அடிபணிந்து
தொழுதனர்.

1–5 : காட்சி தொடர்கிறது. உள்ளும் புறமும் எழுதி யிருந்த ஏட்டுச் சுருள் எசேக்கியேல் இறைவாக்கினர் பெற்ற ஏட்டுச் சுருளின் அடிப்படையில் அமைந்துள்ளது (காண். எசேக். 2 : 9, 10). அக்காலத்தில் எழுதுவதற்குப் பயன் பட்ட பப்பிரசு **(Papyrus)** என்னும் ஒருவகைத் தாள் இது. அதன் உள்ளும், புறமும் எழுதும் அளவுக்குச் செய்திகள் நிரம்பி இருந்தன.

2 : ஏழு முத்திரைகள் பதிக்கும் வழக்கு ஆதிகாலத்தில் உரோமையர் கையாண்டது. இறுதிச் சாசனத்திற்கு ஏழு காட்சிகளின் முன் ஏழு முத்திரையிட்டனர். இது அந்தச் சாதனத்தின் முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது. இங்கே அருளப்பர் காணும் சுருளும் முக்கியமானதொன்று. இறை வனின் திருவுளத்தை அறிய வல்லார் யார்? அவர் உலக

வரலாற்றின் போக்கையும், அதற்கான திட்டங்களையும், அதன் முடிவையும் தம் திருமகனுக்கன்றி யாருக்கும் அறிவியார். இதையே இச்சுருள் காட்டுகிறது. அருளப்பரின் அழுகை, துன்புறும் கிறிஸ்தவர்களின் பிரதிபலிப்பு. உரோமை நாட்டு மன்னர்களாலும், பேதகக் கொள்கைகளாலும் துன்புற்ற கிறிஸ்தவர்கள் கடவுள் தங்களுக்கு ஏன் இந்தத் துன்பத்தைத் தருகிறுர், இத்துன்பத்திற்குப்பின் என்ன வரவிருக்கிறது என்றெல்லாம் எண்ணி அழுதவர்கள். மூப்பருள் ஒருவர் 'அழாதே' என்று சொன்னது, இயேசு நயீம் ஊரின் விதவையைப் பார்த்து 'அழாதே' என்று சொன்னது போல் இருக்கிறது (காண். லூக்கா. 7 : 13 ; 'அழவேண்டாம்' லூக். 8 : 52). யூதா குலத்தின் சிங்கமும் தாவீதின் வேருமானவர் கிறிஸ்து ; கடவுளின் மறைபொருளை வெளிப்படுத்துகிறவர். கிறிஸ்து யூதா குலத்தின் சிங்கமென முன்னறிவிக்கப் பெறுதலை ஆதி. 49 : 9–10-இல் காண்க. அவர் தாவீதின் வேர் (காண். இசை. 11 : 1, 10; உரோ. 15 : 12). இந்தக் கிறிஸ்து வெற்றி பெற்றவர். "நான் உலகை வென்று விட்டேன்" (அரு. 16 : 33) என்றும் கிறிஸ்துவின் சொற்கள் இங்கே தொனிக்கின்றன. உயிர்த்த கிறிஸ்து, வரலாற்றின் உண்மைப் போக்கைக் காட்டுபவர். அவர் வழியாக கடவுளின் திட்டங்களை அறிந்து மகிழ்வார்கள் கிறிஸ்தவர்கள்.

6–7 : அரியணையில் தோன்றும் செம்மறி கிறிஸ்துவே. புனித ஸ்நாபக அருளப்பர் கிறிஸ்துவைச் 'செம்மறி' என்று கூறினுர் (அரு. 1 : 29). இவர் மாசுமருவற்ற செம்மறி (காண். 1 இரா. 1 : 19). ஆனுல் கிறிஸ்து பலியான செம்மறியாக வானகத்தில் தோன்றுவது அவருடைய பலியின் நித்தியத் தன்மையை (விண்ணகத் தன்மையை)க் காட்டும் பலியான நிலையில் உள்ள செம்மறி கிறிஸ்துவின் தாழ்வையும் பாடுகளையும், சாவையும் காட்டினுலும், ஏழு கொம்புகள் வெற்றியையும், அதிகாரத்தையும் உணர்த்தும் (காண். உபா. 33 : 17 ; 1 அரசர். 22 : 11 ; சங். 1 : 18). 'ஏழு' என்ற எண் முழுமையைக் குறிக்கும். அது கிறிஸ்துவின் அதிகாரம் முழுமையானதெனக் காட்டும். "விண்ணிலும்

மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது'' — என்பது உயிர்த்த கிறிஸ்து கூறியது (காண். மத். 28 : 18). விண்ணக செம்மறியின் அதிகாரத்திற்கும், ஆளுகைக்கும் உட்படாதவர் யாருமிலர். கிறிஸ்து உலகில் எல்லாவற்றையும் அறிபவர். மகிமை அடைந்த கிறிஸ்து தூய ஆவியை அளித்தலையும் அருளப்பர் இங்கு மறைவாகக் கூறுகின்றார் போலும். 'அனுப்பப்பட்ட' என்னும் சொல் இதனைக் கோருகின்றது.

8 : செம்மறி கடவுளிடமிருந்து சுருளை எடுத்தல் அதிகாரம் பெறுதலைக் குறிக்கும் அடையாளச் செயல். கிறிஸ்து தந்தையின் திட்டங்களுக்கேற்ப உலக வரலாற்றினை இயக்கி அதற்கு முடிவு கொடுப்பவர். 9, 12, 13-ஆம் வாக்கியங்களில் வரும் வாழ்த்துரைகளும் இதனை உணர்த்துகின்றன. அதிகாரம் பெற்ற கிறிஸ்துவுக்கு விண்ணகத்திலே ஒரு வழிபாடு நடைபெறுகின்றது. கிறிஸ்துவுக்கு அடிபணிந்து தங்கள் கீழ்ப்படிதலையும், சார்பையும் காட்டிவிட்டு (காண். 4 : 11), புதியதொரு பாடலைத் தொடங்குகின்றனர்.

9—10 : சங்கீதங்களில் 'புதிய பாடல்' என்பது எப்பொழுதுமே கடவுள் புதிதாய் அளித்த உதவியையோ, இரக்கத்தையோ நினைத்துப் பாடுதலைக் குறிக்கும் (சங். 32 : 3; 39 : 3; 97 : 1 முதலின). கிறிஸ்து செய்யும் செயல்களெல்லாம் புதியன. ஆகவே விண்ணகத்தில் புதிய பாடல் பாடப்பெறுகிறது [காண். 'புதிய பெயர்' (2:17); புதிய எருசலேம் (3 : 12 ; 21 : 2) ; புதிய வானமும் வையமும் (21 : 1); அனைத்தும் புதியனவாக்குதல் (21 : 5)] இந்தப் புதியவையெல்லாம் புதுத்தன்மையைக் கொண்டிருப்பவை. இத்தன்மை உடைத்ததாய் முன்பு ஒன்றும் இருந்ததில்லை. இப்புதுத் தன்மையை ''கைனோஸ்'' (Kainos) என்னும் கிரேக்கச் சொல் உணர்த்துகிறது. கிறிஸ்து தம் மீட்புச் செயலால் புது உலகையே உருவாக்குகிறார். எல்லாக் குலம், இனம், நாட்டு மக்கள் ஆகியச் சொற்கள் கிறிஸ்துவின் மீட்புச் செயலின் பொதுத் தன்மையைக் காட்டுகின்

றன. இச்சொற்கள் திருவெளிப்பாட்டில் பலவிடங்களில் வருதலைக் காண்க (7:9 ; 10:1 ; 11:9 ; 13:17 ; 14:6 ; 17:15). கிறிஸ்துவால் மீட்கப் பெற்ற எல்லாரும் அவரது குருத்துவத்திலும் பங்கு பெறுகின்றனர் (1:6 ; 1 இரா. 2:9).

11. அடுத்துவரும் வாழ்த்துரை பெருந்தொகையான வான தூதரின் வாழ்த்துரையாகும். 4:11-இல் கடவுளுக்கு அளித்த வாழ்த்துரையைக் கொஞ்சம் விரிவுபடுத்தி, பலி யான செம்மறிக்கு அளிக்கின்றனர். கிறிஸ்துவுக்கு அவர்கள் காட்டும் கீழ்ப்படிதல் இங்கே விளங்குகின்றது

12. படைப்புக்கள் எல்லாமே கிறிஸ்துவை வாழ்த்த, திருப்பண் 'ஆமென்' என்னும் சொல்லால் முடிவுபெறு கிறது. கடவுளுக்கு அளித்த வாழ்த்தினைக் கிறிஸ்துவுக்கும் அளித்தல் சரியே என்பதுபோல் உள்ளது இந்த 'ஆமென்'. நான்காம் அதிகாரத்திலும், ஐந்தாம் அதிகாரத்திலும் வரும் வாழ்த்துரைகளை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஐந்தாம் அதிகாரத்தின் வாழ்த்துரையில் கிறிஸ்து வின் மீட்புச் செயல் கூறப்படுதலைக் காணலாம். இது நான் காம் அதிகாரத்தில் இல்லை அருளப்பரின் இந்த விண்ணகக் காட்சியைப் படிக்கும் கிறிஸ்தவர்களுக்கு, தங்களை மீட்ட கிறிஸ்துவை விண்ணகத்தில் கண்டு எப்பொழுது வாழ்த்து வோம் என்னும் ஆவலையன்றோ தூண்டுகிறது.

(இ) ஏழு முத்திரைகளை உடைத்தல் (6:1-8:1)

1. முதல் நான்கு முத்திரைகளை உடைத்தல் *(6:1-8)*:

போரும் பசியும் பிணியும் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டிருக்கின்றன. இது வரலாறு கூறும் உண்மை. இவைகளை வெறும் இயற்கையின் செயலாக அருளப்பர் கருத வில்லை. மாறாக, இவற்றில் கடவுளின் நீதிக் கரங்களையேக் காண்கிறார் அவர். இப்பகுதியில் அவரின் இந்தக் கருத்தே விளக்கப்பெறுகின்றது. ஒவ்வொரு முத்திரையும் உடைக்கப் படும்போது தோன்றும் குதிரைகளும், அவற்றை ஓட்டுபவர்

களும், அவர்களுக்குக் கொடுக்கப்படும் அதிகாரங்களும் இதைக் குறித்து நிற்கின்றன.

6

பின்னர், செம்மறியானவர் ஏழு முத்திரைகளுள் முதல்
முத்திரையை உடைக்கக் கண்டேன். அப்போது நான்கு
உயிர்களுள் ஒன்று, 'வா' என இடிமுழக்கம்போன்ற குரலில்
சொன்னதைக் கேட்டேன். என் கண்முன் ஒரு வெள்ளைக் 2
குதிரை தோன்றிற்று. அதன்மேல் ஏறியிருந்தவனுடைய
கையில் வில் ஒன்று இருந்தது. அவனுக்கு வெற்றிவாகை
சூட்டப்பட்டது, வெற்றி வீரனை அவன் வெற்றிமேல் வெற்றி
கொள்ளச் சென்றான். செம்மறியானவர் இரண்டாவது முத்தி 3
ரையை உடைத்த போது, அவ்வுயிர்களுள் இரண்டாவது, 4
'வா' என்று சொல்லக் கேட்டேன், அப்போது செந்நிற
மான மற்றொரு குதிரை வெளிவந்தது. அதன்மேல் ஏறியிருந்
தவனுக்கு, உலகில் அமைதியைக் குலைக்கவும், மனிதர் ஒருவரை
ஒருவர் சொல்லும்படி செய்யவும் அலுவல் அளிக்கப்பட்டது.
பெரியதொரு வாளும் அவனிடம் கொடுக்கப்பட்டது. அவர் 5
மூன்றாவது முத்திரையை உடைத்தபோது, அவ்வுயிர்களுள்
மூன்றாவது. 'வா' என்று சொல்லக் கேட்டேன். என் கண்
முன் கருநிறக் குதிரை ஒன்று தோன்றிற்று. அதன்மீது ஏறி
யிருந்தவனுடைய கையில் துலாக்கோல் ஒன்று இருந்தது.
''ஒருநாள் கூலிக்குக் கோதுமை அரைப்படி, வாற்கோதுமை 6
ஒன்றரைபடி என்றாகட்டும். ஆனால் எண்ணெயையும்
திராட்சை இரசத்தையும் சேதப்படுத்த வேண்டாம்'' என்ற
குரல் நான்கு உயிர்களின் நடுவினின்று எழக்கேட்டேன். நான் 7
காவது முத்திரையை உடைத்தபோது, அவ்வுயிர்களுள் நான்
காவது, 'வா' என்று சொல்லக் கேட்டேன். வெளிறிய 8
குதிரை ஒன்று என் கண்முன் தோன்றிற்று. அதன்மீது ஏறி
யிருந்தவன் பெயர் சாவு. பாதாளம் அவனைப் பின் தொடர்ந்
தது. வாளாலும் பஞ்சத்தாலும் கொள்ளை நோயாலும் மண்மீ
துள்ள விலங்குகளாலும் மண்ணுலகில் கால் பாகத்தை வதைத்
தொழிக்க அவர்களுக்கு வல்லமை அளிக்கப்பட்டது.

1-2 நான்கு முத்திரைகளை உடைத்தபின் தோன்றும் முத்திரைகள் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையன. இவை பொதுவில் போரையும் போருக்குப்பின் எழும் துன்பச் சூழ்நிலையையும் காட்டும். முதல் முத்திரையைச் செம்மறியானவர் உடைத்ததும் தோன்றும் வெள்ளைக் குதிரை குறிப்பதென்ன? இவ்வெள்ளைக் குதிரை உருவம் *19:11-16* இல் வருதலையும் கண்டு, இதனை வெற்றிக்கொள்ளும் கிறிஸ்து

என்றோ, உலக முடிவுக்குமுன் நற்செய்தி பரவுதல் என்றோ கொள்வது பொருந்தாது. திருவெளிப்பாடு எழுந்த காலத்தையும், அதன் நோக்கத்தையும் பின்வரும் மூன்று குதிரை உருவங்களின் பொருளேயும் ஆய்ந்து பார்க்குமிடத்து, வெள்ளைக் குதிரை உரோமையர்கள் அஞ்சிய பார்த்தியர் களைக் குறிக்கும் எனலாம். அவர்கள் கி. பி. 62இல் வெள்ளைக் குதிரைமீது ஏறி விற்போர் புரிந்து உரோமையர் களைப் புறங்காட்டி ஓடச் செய்தவர்கள். எனவே வெள்ளைக் குதிரையும், வில்லும் உரோமையர்களுக்கு அச்சக் குறிகளா யின. திருவெளிப்பாட்டு நூல், வரலாற்றின் போக்கைக் காட்ட எண்ணி கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தும் உரோமைப் பேரரசும் தோல்வியுறும் என்பதை உணர்த்துகின்றது (3-4). செந்நிறக் குதிரை போர்க் காலத்தில் ஏற்படும் உயிர்ச் சேதம், பொருட்சேதம் ஆகியவற்றைக் குறிக்கும் (5-6). போரின் விளைவாக வரும் பஞ்சத்திற்கு, கருப்புக் குதிரை அடையாளம். சாதாரணமாக, கூலியாள் ஒருவன் ஒரு நாளைக்கு ஒரு தெனாரியுஸ்* (Denarius) கூலி வாங்குவான். அக்காலத்தில் ஒரு தெனாரியுசுக்கு 6 படி கோதுமையேனும் கிடைக்கும். ஆனால் போர்ப் பஞ்சக் காலத்தில் அவனுக்குக் கூலியாகக் கிடைப்பது அரைப்படி கோதுமை. இருப்பினும் எண்ணெயும், திராட்சை இரசமும் கிடைப்பதால் இப் பஞ்சத்தின் கொடுமை அவ்வளவு பெரிதன்று. பஞ்சத்தைத் தொடர்வது கொள்ளைநோய். வெளிறிய குதிரை இதன் அடையாளம். 'பாதாளம்' யூதர்களின் நம்பிக்கைப்படி இறந்தோர் செல்லும் இடமாம். இந் நான்கு குதிரைகளின் வழியாக திருவெளிப்பாடு கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய உரோமைப் பேரரசின் தோல்வியையும், அழிவையுமே குறிப் பிடுகின்றது. எனினும் பொதுவில் கிறிஸ்தவர்க்கு எதிரான எந்த அரசும், எந்த சக்தியும் இறுதியில் மாயும் என்னும் நம்பிக்கையூட்டும் செய்தி இவ்வுருவகங்களில் மறைந்து கிடக்கின்றது.

---

*ஒரு தெனாரியுஸ் இன்றைய நமது பணமதிப்புப்படி ஏறக் குறைய 50 காசுகள் (அரை ரூபாய்) ஆகும்

2. ஐந்தாம், ஆறும் முத்திரைகளை உடைத்தல் *(6:9-17).*

ஐந்தாவது முத்திரையை உடைத்தபோது, கடவுளுடைய 9
வார்த்தையை அறிவித்துத் தாங்கள் கொடுத்த சாட்சியத்திற்
காகக் கொலையுண்டவர்களின் ஆன்மாக்களைப் பீடத்தின் கீழே
கண்டேன். அவர்கள் உரத்த குரலில், பரிசுத்தரும் உண்மை 10
யுமான ஆண்டவரே, எவ்வளவு காலம் நீதி வழங்காமல்
இருப்பீர்? எங்கள் இரத்தத்தைச் சிந்திய மண்ணுலகத்தாரை
எவ்வளவு காலம் பழிவாங்காமல் இருப்பீர்?'' என்று கத்தினர்.
பின்பு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வெண்ணுடை அளிக் 11
கப்பட்டது. ''இன்னும் சிறிது நேரம் பொறுத்திருங்கள். உங்
களைப்போலவே கொல்லப்பட வேண்டிய உங்கள் உடன்
ஊழியரான சகோதரர்களின் தொகை நிறைவுபெற வேண்டும்
என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

9-11 பலிப்பீடத்தின் அடியில் பலிப் பொருளின் இரத்தம் ஊற்றுதல் (காண். லேவி. *4:7*) உயிரைக் கடவுளுக்கு அர்ப்பணம் செய்தலுக்கு அடையாளம். ஏனெனில் யூதர்கள் கருத்துப்படி பலிப்பீடம் கடவுளுக்குப் பதிலாக நிற்பது; இரத்தம் உயிரின் உறைவிடம் (காண். லேவி. *11:14;* உபா. *12:23*). இங்கே கிறிஸ்துவுக்காக உயிர் துறந்த வேதசாட்சிகள் விண்ணகத்திலே நிற்பதைக் குறிக்கிறது. அவர்களின் முறையீடு நீதியின் கோரிக்கையாக உள்ளது. பழி வாங்குதல் (காண். உரோ. *12:19;* லேவி. *19:18;* உபா. *32:35*), அதாவது, தீயோருக்குரிய தண்டனை அளிப்பது கடவுளுக்கே உரியதாகையால், பழைய ஏற்பாட்டுச் சங்கீத ஆசிரியர் பாணியில் '' எவ்வளவு காலம்...?'' என்று கேட்கின்றனர் (சங். *78:5-10*). ஆண்டவரின் நாளை அண்மையில் எதிர்பார்த்த ஆதிக்கால கிறிஸ்தவர்களின் ஆவலை இக்கேள்வியில் தெரிந்து கொள்கிறோம். இக்காலத் துன்பம் இன்னும் எத்தனை நாட்கள் நீடிக்குமோ என்னும் அவர்களது ஏக்கமும் இங்கே மறைந்துள்ளது. இஃது அவர்களுக்கு ஒரு பிரச்சனையாகவே இருந்தது. இப்பிரச்சனையைத் தீர்க்கவே இந்நூல் எழுந்தது என்பதை மறத்தலாகாது. இந்த வேதசாட்சிகள் கிறிஸ்துவுக்கென உயிர் துறந்து வெற்றி பெற்றவர்கள். ஆதலின் வெண்ணுடை அணிகின்றனர். ஆனால் தீயோர்கள் இறுதிக் காலத்தில்தான் தீர்ப்புப்

பெறுவர். 'தெய்வம் நின்று கொல்லும்' கிறிஸ்துவுக்காக உயிர் துறப்பவர்கள் இன்னும் பலர் வருவர். அதுவரை இறுதித் தீர்ப்பு நிகழாது. அல்லது தொமீசியன் மன்னன் *(81-96)* காலத்திய வேதசாட்சிகளை நினைத்து திருவெளிப்பாடு இவ்வாறு கூறுகின்றதோ? இருக்கலாம். அப்படியாயின் விண்ணில் நிற்பவர் நீரோ மன்னன் காலத்து *(54-68)* வேதசாட்சிகள் போலும். மேலும் யூதரின் இறுதிக் காலத்தைப் பற்றிய போதனைப்படி வேதசாட்சிகளின் தொகை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை அடைந்த பின்னரே இறுதித் தீர்ப்பு நடைபெறும் என்ற கருத்து இங்கே தொனிக்காமலில்லை.

ஆறுவது முத்திரையை உடைத்தபோது, நான் கண்ட 12
காட்சியில் பெரியதொரு நிலநடுக்கம் உண்டாயிற்று. கதிரவன்
கறுப்புச் சாக்குத்துணிபோல் கறுத்தது. நிலவு இரத்தமய
மாயிற்று. பெருங் காற்றால் அசைக்கப்படும் அத்திமரத்தி 13
லிருந்து காய்கள் உதிர்வதுபோல் விண்மீன்கள் மண்மீது
விழுந்தன. சுருட்டப்படும் சுருள்போல வானம் மறைந்து 14
விட்டது. மலைகள் தீவுகள் எல்லாம் நிலைபெயர்ந்துபோயின.
மண்ணுலகின் அரசர்கள், பெருங்குடி மக்கள், படைத் தலைவர் 15
கள், செல்வர்கள், வலியோர் அனைவரும், அடிமைகள் யாவ
ருமே குகைகளிலும் மலைப் பாறைகளின் இடுக்குகளிலும்
ஒளிந்து கொண்டனர். அந்த மலைகளையும் பாறைகளையும் 16
நோக்கி அவர்கள், ''எங்கள்மேல் விழுந்து, அரியணையின்
மேல் வீற்றிருப்பவரின் முகத்தினின்றும், செம்மறியின் சினத்தி
னின்றும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், 17
அவர்களது சினம் வெளிப்படும் பெருநாள் வந்துவிட்டது.
அதை எதிர்த்து நிற்பவன் யார்?'' என்று சொன்னார்கள்.

6-ஆம் முத்திரை உலக முடிவைக் காட்டுகின்றது. நிலநடுக்கம் *(காண். ஆமோஸ் 8 8; எசேக். 38:19; யோவேல் 2:10)*, கதிரவன் கருத்தல் *(காண். ஆமோஸ். 8:8; இசை. 13:13)*, சாக்குத் துணிபோல் ஆதல் *(காண். இசை. 50:3)*, நிலவு இரத்த மயமாதல் *(காண். யோவேல் 2:3)* இவையெல்லாம் உலக முடிவைப் பற்றிப் பழைய ஏற்பாட்டில் காணப்படும் உருவக மொழிகள் உருவகத்தில் பொதிந்துள்ள உண்மையை எடுத்துக்கொண்டு கற்பனையை நீக்கல்

வேண்டும். உலகம் எப்படி முடியும் என்பதை யார்தான் விவரிக்க இயலும்?

12-17: விண்மீன்கள் எல்லாம் வானம் என்னும் போர்வையில் ஒட்டவைக்கப் பெற்றவை என்பது அக்கால எபிரேய வானவியல் கூற்று. ஆதலின் உலக முடிவு வருணனையில் அவை அத்தி மரத்தின் காய்கள் போன்று உதிர்கின்றன. வானம் ஒரு போர்வை போன்றதென்பது அவர்கள் எண்ணம். எனவே அது சுருட்டப்படுகின்றது. இவ்வித வருணனையை நம் ஆண்டவரும் கையாண்டதைக் காண்க (காண். மத். *24:29*; மாற். *13:24-27*; லூக். *21:25-27*). பொதுவில் இச்சொற்கள் உலக முடிவில் நிலவவிருக்கும் ஒரு ஒழுங்கேதும் இல்லாத குழப்ப நிலையை உணர்த்துகின்றன. உலகமே அழியும் போது மன்னன் என்ன? தலைவர்கள் என்ன? செல்வர்கள் என்ன ... ...? எல்லோருமே அழிவர். தீயோரின் மனச்சாட்சியே இவர்களைக் குத்தும். அவர்கள் ஒளிந்துகொள்ளப் பார்ப்பர். இத்தகையோர் தாங்கள் சாவதைவிட நடுவராய் வரும் கிறிஸ்துவைக் காணவே அதிகம் அஞ்சுவர். இஃது ஆண்டவரின் நாள். ஒரு பெருநாள் (காண். யோவேல் *2:11; 3:4;* சொப்போ. *1:14-18; 2:3*).

3. புதிய இஸ்ராயேல் *(7:1-17)*

ஆறும் முத்திரை நிகழ்ச்சிக்கும், ஏழாம் முத்திரை நிகழ்ச்சிக்கும் நடுவில் இடைச் சொருகல் போன்று இப்பகுதி அமைந்துள்ளது. 6-ஆம் அதிகாரத்தின் இறுதியில் 'ஆண்டவரின் பெருநாளில்' வரவிருக்கும் உலகத்தின் அழிவு நிலையை வருணித்த அருளப்பர், அந்நாளில் நன்மக்கள் துன்ப துயரங்களுக்கு உள்ளானலும் அழியாமல் காப்பாற்றப்பெறுதலை விளக்குகின்றார் இறுதித் துன்பத்திற்கு யாரும் தப்ப முடியாது; ஆனல் நன்மக்கள் துன்பத்தினூடே சென்றிடினும் வெற்றிவாகை சூடியவர்கள் ஆவார்கள். *(7 : 9)* இவ்வுண்மையைப் பழைய ஏற்பாட்டு மரபுக்கும் அக்கால மக்களின் பொதுவான கருத்துக்கும் ஏற்றவாறு விளக்குகிறார் அருளப்பர்.

7 இதற்குப்பின் மண்ணுலகின் நான்கு மூலைகளிலும் வான
தூதர் நால்வர் நிற்கக் கண்டேன். மண்மீது வீசும் நான்கு
காற்றுகள் நிலத்தின்மீதோ, எந்த மரத்தின் மீதோ
வீசாதவாறு அவர்கள் நிறுத்தி வைத்திருந்தார்கள். கதிரோன் 2
எழும் திசையிலிருந்து இன்னொரு வானதூதர் எழுந்து வரு
வதைக் கண்டேன். உயிருள்ள கடவுளின் முத்திரை அவர்
கையில் இருந்தது. அவர் நிலத்திற்கும் நீருக்கும் தீங்கு
விளைவிக்க அதிகாரம் பெற்றிருந்த வானதூதர் நால்வரையும்
உரத்த குரலில் அழைத்து, ''எங்கள் கடவுளுடைய ஊழியர் 3
களின் நெற்றியில் நாங்கள் முத்திரை யிடுமளவும் நிலத்திற்கோ
நீருக்கோ மரத்திற்கோ தீங்கு யாதும் விளைவிக்க வேண்டாம்''
என்றார். முத்திரையிடப்பட்டவர்களின் தொகை என்ன 4
வென்று சொல்லக் கேட்டேன். இஸ்ராயேல் மக்களின் குலங்
கள் அனைத்திலும் முத்திரையிடப்பட்டவர்கள் ஒரு இலட்சத்து
நாற்பத்து நாலாயிரம்பேர். யூதா குலத்தில் முத்திரையிடப் 5
பட்டவர்கள் பன்னீராயிரம், ரூபன் குலத்தில் முத்திரையிடப்
பட்டவர்கள் பன்னீராயிரம். காத் குலத்தில் முத்திரையிடப்
பட்டவர்கள் பன்னீராயிரம். ஆசேர் குலத்தில் முத்திரையிடப் 6
பட்டவர்கள் பன்னீராயிரம். நப்தலி குலத்தில் முத்திரையிடப்
வர்கள் பன்னீராயிரம், மனாசே குலத்தில் முத்திரையிடப்பட்ட
வர்கள் பன்னீராயிரம். சிமியோன் குலத்தில் முத்திரையிடப் 7
பட்டவர்கள் பன்னீராயிரம். லேவி குலத்தில் முத்திரையிடப்
பட்டவர்கள் பன்னீராயிரம். இசக்கார் குலத்தில் முத்திரை 8
யிடப்பட்டவர்கள் பன்னீராயிரம். செபுலேகன் குலத்தில்
முத்திரையிடப்பட்டவர்கள் பன்னீராயிரம். யோசேப்பு குலத்
தில் முத்திரையிடப்பட்டவர்கள் பன்னீராயிரம். பென்யமின்
குலத்தில் முத்திரையிடப்பட்டவர்கள் பன்னிராயிரம்.

1–2 : உலகம் தட்டையாய், சதுரமாகவோ, நீண்ட சதுரமாகவோ இருப்பதாக அக்கால மக்கள் எண்ணிவந்தனர். நான்கு திசைகளிலிருந்து வரும் காற்றுகள் நன்மை பயப்பவை. நான்கு மூலைகளிலிருந்தும் வருபவை தீயவை; தீமை செய்பவை (காண். எரே. *49 : 36;* சக். *2 : 6;* தானி. *8 : 8; 11 : 14).* காற்றையும் நெருப்பையும் *(14 : 18),* நீரையும் *(16 : 15)* கடவுளின் ஆணையின்கீழ் நிருவகித்து வருபவர் வானதூதர் என்பதும் அக்காலத்தோரின் கருத்தாகும். ஆண்டவரின் பெருநாளைப்பற்றிய வருணனையே மனதிற்கொண்டு அதனை வேறு உருவக மொழிகளில் கூறுகின்றார் அருளப்பர். தீங்கு விளைவிக்கும் காற்றுகளை தடுத்து,

உலகில் வரவிருக்கும் துன்பத்தையும் நிறுத்திக் கேட்பவர் கதிரோன் எழும் திசையில் தோன்றிய வேறொரு தூதர்.

(3) மெசியா கிழக்கிலிருந்து வருவார் என்ற யூத மக்களுடைய நம்பிக்கையின் உருவகம் போலும் இது. கடவுளின் முத்திரையை நன்மக்களின் நெற்றியில் பதிப்பிக்கும்வரை உலகப் பெருந்துன்பம் நிகழக்கூடாது என்பது இத்தூதரின் விருப்பம். முத்திரை பதிப்பிக்கும் வழக்கு, கீழைநாட்டு அரசர்கள் கையாண்டதாகும். தங்கள் உடைமைகளில் தங்கள் மோதிரத்தின் முத்திரையைப் பதிய வைத்தனர். நெற்றியில் அடையாளமிடுதலைப்பற்றி எசேக். *9:1–7* கூறுகிறது. பாஸ்கா செம்மறியின் இரத்தத்தால் எகிப்து நாட்டில் இஸ்ராயேல் மக்களின் கதவு நிலைகள் அடையாளம் இடப்பட்டதை யாத். *12 : 1–7*-இல் காண்க. இவ்வாறு கடவுளின் முத்திரையிடப்பெற்றவர்கள் 'பெருநாளின்' துன்பத்தில் காப்பாற்றப் பெறுவர் ஏனெனில் இவர்கள் எல்லாரும் கடவுளின் உடைமைகளாவர் (காண். 2 கொரி. *1 : 22*; கலா. *6 : 17* ; எபேசு. *1 : 13; 4 : 30*).

4: பழைய ஏற்பாட்டுப் பன்னிரண்டு கோத்திரங்களைப் பற்றி இங்கே பேச்சில்லை. ஆசிரியர் இங்கே கூறுவது புதிய இஸ்ராயேலைப்பற்றி. இவர்கள் கடவுளின் உண்மை ஊழியர்களாக (காண். *7 : 3*) வாழ்ந்து காட்டியவர்கள். ஏனெனில் புறத்திலே மட்டும் யூதனாய் இருப்பவன் யூதனல்லன்; அவ்வாறே புறத்தில், அதாவது உடலில் மட்டும் செய்யப்படும் விருத்த சேதனமும், விருத்த சேதனமன்று; ஆனால் உள்ளூர யூதனாய் இருப்பவனே யூதன்; எழுதிய சட்டத்தின்படியல்லாமல், ஆவியானவர் அருளியபடி உள்ளத்தில் செய்யப்படும் விருத்த சேதனமே உண்மையான விருத்த சேதனம். அத்தகையவன் மனிதரிடமிருந்து அன்று, கடவுளிடமிருந்தே பாராட்டுப் பெறுவான் (காண். உரோ. *2 : 28–29; 9 : 6–7;* கலா. *3 : 29; 6 : 16;* பிலிப். *3 : 3*). *5–8*-இல் வரும் பன்னிரண்டு கோத்திரங்களும் புதிய இஸ்ராயேலின் அடையாளம். *12* என்ற எண் யூதர்களுக்கு முழுமையைக் குறிக்கும் எண். இதனை *12*ஆல் பெருக்க, எண்ணிக்கை

இன்னும் முழுமைபெறும். அப்பெருக்குத் தொகையை 1000ஆல் பெருக்க, இதனினும் பெரிதாகி நிறைவான முழுமைபெறும். இது மனிதரின் கணக்குக்கெட்டாத ஒரு தொகையைக் குறிக்கும். இறுதியில் தேரிந்தெடுக்கப்படுபவ ரின் எண்ணிக்கையைக் கடவுள்தாம் அறிவார்; மனிதன் அதனை அறியான்.

இதற்குப்பின் யாராலும் எண்ண இயலாத பெருந்திர 9
ளான மக்களைக் கண்டேன். இவர்கள் எல்லா நாட்டையும்
குலத்தையும் இனத்தையும் மொழியையும் சார்ந்தவர்கள். இவர்
கள் அரியணைக்கும் செம்மறிக்கும் முன்பாக நின்று கொண்டி
ருந்தனர்; வெண்ணுடை அணிந்திருந்தனர்! கையில் குருத்
தோலைகளை ஏந்தியிருந்தனர். உரத்த குரலில், ''அரியணை 10
மீது வீற்றிருக்கும் எங்கள் கடவுளுக்கும் செம்மறிக்குமே மீட்பு
உரியது'' என்று பாடினர். அரியணையையும் மூப்பர்களையும் 11
நான்கு உயிர்களையும் சூழ்ந்து நின்ற வானதூதர்கள் அனை
வரும் அரியணைமுன் முகம் குப்புற விழுந்து கடவுளைத்
தொழுது, ''ஆமென், போற்றியும் மகிமையும் ஞானமும் 12
நன்றியும் மாட்சியும் வல்லமையும் பலமும் நம் கடவுளுக்கு என்
றென்றும் உரியனவாகுக, ஆமென்'' என்றனர். மூப்பர்களுள் 13
ஒருவர் என்னை நோக்கி, ''வெண்ணுடை அணிந்த இவர்கள்
யார்? எங்கிருந்து வந்தனர்? தெரியுமா?'' என்று கேட்க,
நான், ''ஐயா நீர்தான் சொல்ல வேண்டும்'' என்றேன். 14
அதற்கு அவர் சொன்னது: '' இவர்கள் பெரும் வேதனையி
லின்று மீண்டவர்கள், தங்கள் ஆடைகளைச் செம்மறியின் இரத்
தத்தில் தோய்த்து வெண்மையாக்கிக்கொண்டார்கள். ஆகவே 15
தான் இவர்கள் கடவுளது அரியணை முன் நின்று அவரது ஆல
யத்தில் இரவும் பகலும் அவருக்கு வழிபாடு செலுத்துகிறார்கள்.
அரியணையில் வீற்றிருப்பவர் அவர்களைத் தம் நிழலில் வாழச்
செய்வார். இனி அவர்களுக்குப் பசி, தாகம் இராது. வெயிலோ 16
வெப்பமோ அவர்களைத் தாக்காது. ஏனெனில் அரியணை 17
நடுவில் இருக்கும் செம்மறியானவர் அவர்களை மேய்த்து. வாழ்
வளிக்கும் நீரூற்றுக்கு அவர்களை நடத்திச் செல்வார். கடவுள்
அவர்களது கண்ணீர் அனைத்தையும் துடைத்து விடுவார்.

9–14: மண்ணகத்தில் இறுதிவரை கடவுளின் நன் மக்களாய் நிலைத்திருந்து, இறுதிக் காலத் துன்பத்தையும் சகித்து, கிறிஸ்துவுக்கு முழுமையாய்ச் சான்று பகர்ந்தவர் விண்ணகத்தில் வெற்றி வெண்ணுடை அணிந்து செம்மறி

யாகிய கிறிஸ்துவின் திருமுன் நிற்பதைக் காட்டுகின்றது, அடுத்துவரும் காட்சி. இவர்கள் கையில் பிடித்திருக்கும் குருத்தோலைகள் வெற்றியின் அடையாளங்கள் (2 மக். 10:7). இவர்கள் அடைந்த மீட்பு வானகத் தந்தை கிறிஸ்து வழியாக நல்கியது. ஆதலின் தந்தையையும், கிறிஸ்துவையும் புகழ்ந்து பாடுகின்றனர். உடனே இருபத்து நான்கு மூப்பர்களும், நான்கு மிருகங்களும் முன்கூறிய வாழ்த்தினையே (5:13—14) கூறுகின்றனர். இவ்வாறு மீட்கப் பெற்றோரைத் திருவெளிப்பாடு, பெரும் வேதனையினின்று மீண்டவர்கள், அதாவது வேதசாட்சிகள் எனக் கூறுகின்றது. வேத சாட்சிகள் என்றால் அருளப்பர் காலத்தில் மறைத்தியாகிகளாய் உயிர் துறந்தவர் மட்டுமன்று, அக்காலமுதல் இறதிக் காலம் வரை கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதியாய் நின்று இறந்தவர்கள் என்று கொள்ளலே பொருந்தும்.

15 : கிறிஸ்துவின் இரத்தம் இவர்களைத் தூய்மையாக்குகிறது. 'இயேசுவின் இரத்தம் எல்லாப் பாவத்தினின்றும் நம்மைத் தூய்மைப் படுத்துகின்றது' (1 அரு. 1:7). கிறிஸ்துவின் இரத்தம் அவரது பலிக்கே அடையாளமானதால் (காண். உரோ. 3:25) இவர்களெல்லாரும் கிறிஸ்துவில் பலியானவர்கள். வாழ்வின் வெற்றியை, அதாவது, வானக உரிமைப்பேற்றைப் பெறுகின்றனர். வானகத்திலே கடவுளுக்கு வழிபாடு செலுத்துவர். வழிபாடு குருக்களுக்கு மட்டும் உரியதன்று. கடவுள் திருமுன் செல்லும் எல்லாருக்கும் உரியதாகும். தேர்ந்தெடுக்கப்படுவோர் விண்ணகத்தில் கடவுளின் நிழலில் வாழ்தல் என்பது ஆழ்ந்த பொருள் கொண்டதாகும். '**நிழல்**' என்னும் சொல் பழைய ஏற்பாட்டில் தொடங்கி புதிய ஏற்பாட்டில் நிறைவுபெறும் ஒரு கருத்தோட்டத்தையே இங்குக் கொணர்கிறது. எபிரேய மொழியில் இது 'ஷெக்கினா' (**Shekinah**) எனப்படும். இச்சொல் இருக்கையை (பிரசன்னத்தை)க் குறிக்கும். மோயீசன் அமைத்த கூடாரத்தில் யாவேயின் மகிமை தங்கியது (காண். யாத். 40:32—33). யாவேயின் மகிமை மேகவடிவில் நின்று பாலைவனத்தில் இஸ்ராயேல் மக்களுக்குப் பகலில்

நிழலாயும் இரவில் ஒளியாயும் இருந்ததை யாத். 40:34-36ல் வாசிக்கின்ருேம். இதே யாவேதான் ஆலயத்தை நிரப்பியவர் (2 நாளா. 7:1–3). இவ்வாறு பழைய ஏற்பாட்டில் யாவே மக்களோடு தங்கியிருந்து அவர்களுக்குப் பலவாறு உதவிய நிகழ்ச்சிகளை யூதமக்கள் 'ஷெக்கிளு' என்றே கூறினர். அதே சொல்லைப் பயன்படுத்தி, திருவெளிப்பாடு இங்கே, கடவுள் தாம் தேரிந்து கொண்ட மக்களோடு தங்கிக் குடியிருத்தலைக் கூறுகிறது. இம்மக்கள் இறைமகிமையில் வாழ்வர்.

16–17: இவ்வாறு வீடுபேறு அடைந்தவர்களுக்குப் பசி என்பது கிடையாது; தாகமும் அவர்களை அண்டாது. இவர்களெல்லாரும் கிறிஸ்துவில் விசுவாசங் கொண்டு அவரிடம் சென்றவர்களாயிற்றே (காண். அரு. 6:35; 4:14). நல்லாயனுன கிறிஸ்து இவர்களுக்கு நிறைவு அளிக்கின்ருர். ஆயனைப் பற்றிய பழைய ஏற்பாட்டுக் கருத்தோட்டம் திருவெளிப்பாட்டில் நிறைவெய்துதலை ஈண்டுக் காண்கிருேம்.

(4) ஏழாவது முத்திரையை உடைத்தல் *(8:1)*

ஏழாவது முத்திரையை உடைத்தபோது, விண்ணகத்தில் அரை மணியளவு மௌனம் நிலவியது. **8**

ஏழாவது முத்திரையை உடைத்தபின் விண்ணகத்தில் நிலவும் அமைதி, திருவெளிப்பாட்டு நூல் வெளியிடும் உயரிய இறுதிக் கட்டமாயுள்ளது. உலக வாழ்க்கைப் போராட்டத்தின் பின் கடவுள் திருமுன் மக்கள் கொண்டிருக்கும் நிலையைக் காட்டுகின்றது போலும். கடவுளை அடைந்தபின் இனி என்ன உளது? அதுவே எல்லாம் நிறைவேறிய இறுதி நிலையாகும். இஃது ஆண்டவரின் நாளில் அமைதி கொள்ளக்கேட்கும் சொப்போனியாஸ் (சொப்போ. 1:7), சக்கரியாஸ் (சக். 3:13) ஆகிய இறைவாக்கினரின் கூற்றைப் பிரதிபலிக்கின்றது. அல்லது மண்ணகத்திலிருந்து வரும் இறைமக்களின் செப்ங்களைக் கடவுள் கேட்கும் பொருட்டு இவ்வித அமைதி நிலவுகின்றது போலும்!

ஈ. ஏழு எக்காளங்கள் *(8:2–11:19)*

ஏழு வகை முத்திரைகளுக்குப் பின் ஏழு வகை எக்காளங்கள் தொடர்கின்றன. ஏழாவது முத்திரையை உடைத்தவுடன் மறையெதிர்ப்பும் துன்ப துயரமும் முடிவுற்ற ஒரு நிம்மதியான நிலை தோன்றுகின்றது. விண்ணகத்தில் நிலவிய அமைதியும் அதற்கு அடையாளமாக இருப்பதாய்த் தெரிகிறது. ஆனால் அடுத்து வரும் ஏழு எக்காளங்களும் இவ்வித எண்ணத்தை மாற்றி விடுகின்றன.

1. முன்னறிவிப்பு *(8:2–5)*

பின்பு கடவுள்முன் நிற்கும் ஏழு வானதூதர்களைக் கண் 2
டேன். அவர்கள் கையில் ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்
டன. வேறொரு வானதூதர் பொன் தூபக்கால் ஒன்றை 3
ஏந்திக்கொண்டு பீடத்தின்முன் வந்து நின்றார். அரியணை
முன் நிற்கும் பொற்பீடத்தின்மேல், இறைமக்கள் அனைவ
ருடைய செபக் காணிக்கைக்குத் தூபமிடுமாறு, அவருக்கு
ஏராளமான சாம்பிராணி அளிக்கப்பட்டது. அச்சாம்பிராணிப் 4
புகை இறைமக்கள் செபங்களோடு சேர்ந்து வானதூதர் கையி
னின்று கடவுள் முன்பாக எழுந்தது. பின்பு வானதூதர் 5
தூபக்காலை எடுத்து, பீடத்திலிருந்த நெருப்பினால் அதை
நிரப்பி, மண்ணுலகில் கொட்டினார்; கொட்டவே, இடிமுழக்க
மும் பேரிரைச்சலும் நிலநடுக்கமும் உண்டாயின.

2 : ஏழு எக்காளங்களுக்கும் முன்னுரை போன்று அமைந்துள்ளன இவ்வைந்து வாக்கியங்களும். 2-ஆவது வாக்கியம் இம்முன்னுரையில் தவறாகச் சேர்க்கப்பட்டதுபோலும். இதனை 5ஆம் வாக்கியத்திற்குப் பிறகு சேர்த்தால் கருத்துக் கோவைக்குப் பொருத்தமாயிருக்கும். இப்பிழை படியெடுத்தோரின் (முற்காலத்தில் கைகளால் பிரதிகள் எடுத்தவர்களின்) பிழையாயிருக்கலாம்.

3 : இவ்வாக்கியத்தில் வரும் பீடம் எருசலேம் ஆலயத்தில் இருந்த நறுமணப் புகை ஒப்புக்கொடுக்கும் பீடத்தின் உருவகமாகும்.

4 : உலகில் துன்புறும் இறைமக்களின் செபங்களை வானதூதர் கடவுளிடம் எடுத்துச் செல்கின்றனர் என்பது பழைய ஏற்பாட்டு மக்களின் கருத்தாகும். அச்செபங்களை இவ்வானதூதர் தூபமிட்டுத் தூய்மையாக்கிக் கடவுள் ஏற்

6

பதற்கு உகந்தனவாக்குகின்றுர். இறைமக்களின் செபந் தான் என்ன? உடனடியாக வரும் நிகழ்ச்சிகளோடு தொடர்புப்படுத்திப் பார்க்குங்காலை, அது "பரிசுத்தரும் உண்மையுமான ஆண்டவரே, எவ்வளவு காலம் நீதி வழங் காமல் இருப்பீர்? எங்கள் இரத்தத்தைச் சிந்திய மண்ணுல கத்தாரை எவ்வளவு காலம் பழிவாங்காமல் இருப்பீர்" *(6:10)* என்ற நீதிக் கோரிக்கையாகும்.

5: பீடத்தின் நெருப்பு கடவுளின் சினத்திற்கு அறிகுறி. கடவுளின் சினம் உலகில் உள்ள கொடியோருக்குக் கொடுமை யையும், கொள்ளை நோய்களையும் கொணர்கின்றது.

2. முதல் நான்கு எக்காளங்கள் *(8:6–13)*:

அப்போது ஏழு எக்காளங்களை ஏந்தியிருந்த ஏழு வான 6
தூதர்களும் அவற்றை ஊதத் தயாராயினர். முதல் வானதூதர் 7
ஊதினுர். இரத்தம் கலந்த கல் மழையும் நெருப்பும் உண்டாகி,
மண்மீது பெய்தது. மண்ணில் மூன்றிலொரு பாகம் எரிந்து
போயிற்று; மரங்களில் மூன்றிலொரு பாகம் தீய்ந்துபோயிற்று;
பசும் புல்லெல்லாம் எரிந்துபோயிற்று. இரண்டாவது வான
தூதர் எக்காளம் ஊதினுர். தீப்பற்றி எரிந்த பெரிய மலை 8
போன்றதொன்று கடலில் எறியப்பட்டது. அப்போது கடலில்
மூன்றிலொரு பாகம் இரத்த மயமாயிற்று. கடலில் வாழும் 9
உயிர்களுள் மூன்றிலொரு பாகம் மடிந்தது. கப்பல்களில்
மூன்றிலொரு பாகம் அழிந்தது. மூன்ருவது வானதூதர் எக் 10
காளத்தை ஊதினுர். பெரிய தொரு விண்மீன் தீப்பந்தம்போல்
கொழுந்துவிட்டு எரிந்து கொண்டே வானினின்று பாய்ந்து,
ஆறுகளில் மூன்றிலொரு பாகத்திலும் நீரூற்றுகளிலும் விழுந்
தது. அந்த விண்மீனின் பெயர் 'எட்டி' என்பது. ஆகவே 11
தண்ணீரில் மூன்றிலொரு பாகம் எட்டிபோல் கசப்பாயிற்று;
கைப்புற்ற அந்நீரால் மனிதர் பலர் இறந்தனர். நான்காவது
வானதூதர் எக்காளத்தை ஊதினுர். கதிரோனில் மூன்றி 12
லொரு பாகமும், நிலாவில் மூன்றிலொரு பாகமும், விண்மீன்
களுள் மூன்றிலொரு பாகமும் தாக்குண்டன. அதனுல் அவற்
றில் மூன்றிலொரு பாகம் இருளடைந்தது. பகலொளி மூன்றி
லொரு பாகம் குறைந்தது; இரவுக்கும் அப்படியே ஆயிற்று.
பின்பு நான் கண்ட காட்சியில், வானத்தில் உயரப் பறந்து 13
கொண்டிருந்த ஒரு கழுகு உரத்த குரலில், "இன்னும் மூன்று
வானதூதர்கள் எக்காளம் ஊதப்போகிருர்கள். அதனுல்,
மண்ணுலகில் வாழ்கிறவர்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ
கேடு" என்று கத்தியது.

6 : வான தூதர் எழுவர் ஏழு எக்காளங்களை ஏந்தி நிற்கின்றனர். மண்ணக மன்னன் முன் நிற்பதைப் போன்ற ஒரு வருணனை. இவர்கள் கடவுள் முன் நிற்றல் அவருக்குப் பணிபுரியத் தயாராக இருத்தலைக் காட்டுகின்றது. வேதாகமத் தொகுப்பைச் சேராத முதல் ஏனோக் திருவெளிப்பாட்டு நூற்படி இவர்கள் பெயர் பின்வருமாறு குறிக்கப்படுகின்றன. மிக்காயேல், கபிரியேல், ரஃபாயேல், உரியேல், இராகுவேல், சாரியேல், இரெமியேல் ஆகும் *(காண். 1 ஏனோக். 20:1–8).* பழைய ஏற்பாட்டு நூல்களின்படி 'எக்காளம்' கடவுள் உலகைச் சந்தித்தலுக்கு அடையாளம் *(காண். யாத். 19:16, 19 ; யோவேல். 2 : 1 ; சொப்போ. 1 : 16 ; சக். 9 : 14).* புதிய ஏற்பாட்டில் எக்காளம் இறுதித் தீர்ப்பை அறிவிக்கின்றது *(காண். மத். 24:31 ; 1 கொரி. 15:52, 53 ; 1 தெச. 4-16).*

7–12 : முதல் நான்கு எக்காளங்களால் நிகழ்ந்த கொடும் நிகழ்ச்சிகள் எகிப்தில் நிகழ்ந்த நான்கு கொள்ளை நோய்களுக்கு ஒப்பாக இருக்கின்றன. முதல் எக்காளம் விளைவித்த அழிவு எகிப்து அனுபவித்த ஒன்பதாவது கொள்ளைநோயை ஒத்தது *(காண். யாத். 9:22–26).* இரண்டாம் எக்காள நிகழ்ச்சி எகிப்தின் முதல் கொள்ளை நோயை ஒத்தது *(காண். யாத். 7:20, 21 ; சங். 77:44).* மூன்றும் எக்காளம் வருவித்த கொடுமையை எகிப்தில் நடந்த முதல் கொள்ளைநோயோடு ஒப்பிட்டுப் பார்த்தால் *(காண். யாத். 7:20–21)* அது நல்ல நீர் காணாத நிலையை வருணிக்கின்றது. *11*-ஆம் வாக்கியத்தில் வரும் 'எட்டி' கடவுளின் தண்டனைக்கு அடையாளம் *(காண். எரே. 9:15 ; 23:15 ; புலம்பல். 3:15, 19).* தீயோர்கள் கடவுளின் தண்டனையைப் பெறுவர் என்பது சொல்லாமல் விளங்கும். நான்காம் எக்காளம் கொணர்வது இருள். எகிப்தில் ஒன்பதாம் கொள்ளை நோய் இது *(காண். யாத். 10:21–23).* இவ்வாறு அருளப்பர் யாத்திரை ஆகம நிகழ்ச்சிகளை உருவகமாகக் கொண்டு செய்தியினை வெளிப்படுத்துகிறார். அந்நிகழ்ச்சிகள் கல்மனம் படைத்த பாரவோன் மன்னனுக்கு எச்சரிக்கையாய் அமைந்

தன போன்று, எக்காள நிகழ்ச்சிகள் தீயோருக்கு எச்சரிக்கை யாயும் அமைந்துள்ளன.

13 : இன்னும் வரவிருக்கும் பெருங்கேடுகளை வலியுறுத்தி ஒரு கழுகும் எச்சரிக்கின்றது. கழுகு வழியே தூது விடுத்தல் 2 ஏனோக். 77:21—22-இல் காணப்படுகிறது. அருளப்பர் அதனைத் தம் நூலில் கையாண்டுள்ளது இந் நூலுக்கு ஏற்ற இயல்பாகும். ஆனால் ஆழ்ந்து பார்க்குமிடத்து கடவுள் மனிதனை நல்வழிப்படுத்த இயற்கை முழுவதையும் கையாள முடியும், கையாளுகின்றார் என்பது இங்குப் புலப்படாமலில்லை.

3. ஐந்தாம் எக்காளம் *(9:1—12)*

பின்பு ஐந்தாம் வானதூதர் எக்காளத்தை ஊதினர். அப் **9**
போது வானத்திலிருந்து மண்ணில் விழுந்த ஒரு விண்மீனைக்
கண்டேன். பாதாளக் குழியின் திறவுகோல் அவருக்குக்
கொடுக்கப்பட்டது. அவர் பாதாளக் குழியைத் திறந்தார்.
குழியிலிருந்து பெருஞ் சூளையைப்போல் புகை எழும்ப, கதிர 2
வனும் வான்வெளியும் அப்புகையால் இருளடைந்தன. புகை 3
யினின்று வெட்டுக்கிளிகள் கிளம்பி மண்ணின்மீது படை
யெடுத்து வந்தன. தரையிலூரும் தேள்களுக்குள்ள கொடுமை
அவற்றிற்கு அளிக்கப்பட்டது. மண்மீதுள்ள புல்லுக்கோ, 4
பசும்பூண்டுக்கோ, மரங்களுக்கோ தீங்கிழைக்காமல், கடவுளின்
முத்திரை நெற்றியில் இல்லாதவர்களை மட்டும் தாக்க வேண்டு
மென்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனால் அவர்களைக் 5
கொல்லக்கூடாது; ஐந்து மாத அளவு வேதனைக்குள்ளாக்க
வேண்டும் என்பது அவற்றிற்குக் கொடுத்த கட்டளை. அந்த
வேதனையோ தேள் கொட்டும் போது ஏற்படும் வேதனைபோல்
இருந்தது. அந்நாட்களில் மனிதர் சாவைத் தேடுவர்; ஆனால் 6
சாவதற்கு வழி இராது. அவர்கள் செத்துவிட விரும்புவர்;
ஆனால் சாவதற்கு வழி இராது. அவர்கள் செத்துவிட விரும்
புவர்; ஆனால் சாவும் கிட்டவராது. அந்த வெட்டுக்கிளிகள் 7
போருக்குத் தயாரான குதிரைகளைப்போல் காணப்பட்டன.
அவற்றின் தலைகளில் பொன்முடிகள் இருந்ததுபோல் தென்
பட்டது, அவற்றின் முகங்கள் மனிதரின் முகங்களை ஒத்தி
ருந்தன. அவற்றின் பிடரிமயிர் பெண்களின் கூந்தலையும், 8
அவற்றின் பற்கள் சிங்கங்களின் பற்களையும் ஒத்திருந்தன.
மார்பில் இருப்புக் கவசங்கள் அணிந்திருந்ததுபோல் தோன் 9
றிற்று. அவற்றின் சிறகுகளின் இரைச்சல் போர்முனைக்கு

விரையும் பெரியதொரு தேர்ப் படையின் இரைச்சல் போன்றி
ருந்தது. தேள்களைப்போல் அவை வால்களும் கொடுக்குகளும் 10
கொண்டிருந்தன. ஐந்து மாத அளவு மனிதருக்குத் தீங்கு
செய்யும் வல்லமை அவற்றின் வாலிலிருந்தது. பாதாளக்
குழியின் தூதனே அவற்றின் அரசன். அவன் பெயர் எபிரேய 11
மொழியில் 'அபத்தோன்.' கிரேக்க மொழியில் அப்போல்லி
யோன்.' இவ்வாறு முதலாவது பெருந் துன்பம் கடந்துவிட் 12
டது. இதோ, இன்னும் இரண்டு பெருந் துன்பங்கள் வரப்
போகின்றன.

1–6: இதுவரை இயற்கைச் சக்திகள் உலகில் துன்பத்தை விளைவித்தன. இனி உலகினுக்கடுத்த உயிரினங்கள் தோன்றிக் கேட்டைக் கொணர்கின்றன. அவை புதிரானவை. ஐந்தாம் எக்காளத்தில் தோன்றும் விண்மீன் விண்ணகத்திலிருந்து கெட்டு வீழ்ந்த தூதர் எனத்தெரிகிறது. சாத்தான் வானத்தினின்று 'மின்னலைப் போல்' வீழ்ந்தவன் (லூக். 10:18). கெட்டுப்போன தூதர்கள் தண்டனை பெறும் இடம் பாதாளக் குழியாகும். இவ்விடம் தற்காலிகமானது (11:7; 20:1, 3; காண். லூக். 8:31). அவர்களின் நிரந்தரமான இடம் கந்தக நெருப்புக் கடலாகும் (காண். 20:10). இப்பாதாளக் குழியில் தோன்றும் புகை இருளின் அடையாளம். பேய்கள் ஒளியின்றி இருளில் வாழ்பவர்களாயிற்றே. அதனின்று வரும் வெட்டுக்கிளிகள் அழிவுக்கு அடையாளமாயுள்ளன. யோவேல் இறைவாக்கினர் வெட்டுக்கிளிகளின் உருவகத்தில் விவரிக்கும் பயங்கரமான அழிவை அவரது நூலில் முதல் இரண்டு அதிகாரங்களில் காணலாம். அருளப்பர் தாம் விவரிக்கும் அழிவுக்கு யோவேல் ஆகமத்திலிருந்து அடையாள மொழிகளை எடுத்துக் கையாண்டுள்ளார் என்பதனைச் சொல்லத் தேவையில்லை. ஆனால் ஒரே ஒரு வேறுபாடு. அங்கே வெட்டுக்கிளிகள், பயிரினங்கள், கால்நடைகள், வீடுவாசல் எல்லாவற்றையும் அழித்தன. இங்கே அவற்றிற்கு எவ்விதத் தீங்கும் ஏற்படவில்லை. நெற்றியில் கடவுளின் முத்திரை (காண். 7:3–8) இல்லாதவர்களை மட்டுமே அவை தாக்குகின்றன.

7–12: வெட்டுக்கிளிகள் குதிரைகளுக்கொப்ப இருத்தல், போர்ச் சூழலைக் குறிக்கும். இவற்றின் பொன்முடிகள்

வெற்றியைக் காட்டும். மனித முகங்கள் அறிவையும் பிடரிமயிர் காட்டுமிராண்டித் தன்மையையும் காட்டி நிற்கும். சிங்கப் பற்கள் அவைகளின் செயல்களின் கோரத் தன்மையையும் காட்டுகின்றன. இவற்றின் தலைவன் பெயர் 'அபத்தோன்' அல்லது 'அப்பொல்லியோன்'. அதற்கு அழிவு என்று பொருள். பொதுவில் பார்க்குமிடத்து இது வரை இல்லாத பேய்த் தன்மை வாய்ந்த கொடுமை திருச் சபையைத் துன்புறுத்தியோரை ஆட்கொள்ளப் போகிறது. இதனால் ஏற்படும் வேதனை தேள் கொட்டுதலால் உண்டாகும் வேதனை போன்றதாம். பாலஸ்தீன நாட்டு மக்கள் தேள்களுக்கு மிகவும் அஞ்சுபவர். தேள் கொட்டுதலால் சாதாரணமாகச் சாவு நேரிடுவதில்லை யெனினும், அது தரும் வலி மரண வேதனை போன்றது. இவ்வித வேதனை ஐந்து மாதத்திற்கு நீடிக்கும். ஐந்து மாதக் கணக்கு வெட்டுக்கிளியின் வாழ்நாட்களுக்கு ஒப்பக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு அருளப்பர் வேறு ஓர் உண்மையையும் கூற விரும்புகிறார். அதாவது, இவ்விதப் பெருங்கேடும் தீயோர்க்கு அழிவை உடனடியாகக் கொண்டு வராது. அவர்கள் இறக்க விரும்பினும் கடவுள் இத் தண்டனை மூலம் அவர்களுக்கு வாழ்வை நீட்டிக்கிறார். அவர்கள் மனந் திரும்பவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். கடவுளே இப் பேய் உருவங்களை இயக்குவதால் (காண். 9 : 5), இவை அவருடைய விருப்பத் திற்கும் திட்டத்திற்கும் ஏற்ப இயங்குகின்றன.

4. ஆறாம் எக்காளம் *(9:13–21)*

பின்னர் ஆறாம் வானதூதர் எக்காளத்தை ஊதினார். கடவுள் 13
முன் உள்ள பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலிருந்து குர
லொலி ஒன்று கேட்டேன், அக்குரல், எக்காளம் வைத்திருந்த 14
ஆறாம் வானதூதரிடம், ''யூப்ரட்டீஸ் என்னும் பேராற்றின
ருகே கட்டுண்டிருந்த தூதர் நால்வரையும் அவிழ்த்துவிடு''
என்றது. அவர்கள் அவிழ்த்துவிடப்பட்டார்கள். மனிதருள் 15
மூன்றிலொரு பாகத்தை அழித்துவிடும்படி, இவ்வாண்டு, இம்
மாதம், இந்நாள், இந்நேரம் வருமளவும் அவர்கள் குறித்து
வைக்கப்பட்டிருந்தனர். குதிரைப் படையின் தொகையைச் 16
சொல்லக் கேட்டேன்; அது இருபது கோடி. குதிரைகளையும் 17
குதிரைமேல் ஏறியிருந்தவர்களையும் நான் காட்சியில் கண்டது

இவ்வாறு: அவர்கள், நெருப்பு, நீல, கந்தகநிற மார்புக் கவசங்
களை அணிந்திருந்தனர். குதிரைகளின் தலைகள் சிங்கங்களின்
தலைகள் போன்றிருந்தன. நெருப்பும் புகையும் கந்தகமும்
அவற்றின் வாயினின்று வெளிவந்தன. அவற்றின் வாயி 18
லிருந்து வெளிவரும் நெருப்பு, புகை, கந்தகம் ஆகிய மூன்று
வாதைகளால் மனிதருள் மூன்றிலொரு பாகம் கொல்லப்பட்
டது. ஏனெனில், குதிரைகளின் கொடுமை அவற்றின் வாய் 19
களிலும், வால்களிலும் உள்ளது. அவற்றின் வால்கள் பாம்பு
கள் போலிருந்தன. அவற்றிற்குள்ள தலைகளைக்கொண்டு
அவை தீங்கு செய்யும். அந்த வாதைகளால் கொல்லப்படாமல் 20
எஞ்சியவர்கள், தங்கள் செயல்களை விட்டுவிட்டு மனந்திரும்ப
வில்லை. பொன், வெள்ளி, செம்பு, கல், மரம் ஆகியவற்றால்
செய்யப்பட்டு, பார்க்கவோ கேட்கவோ நடக்கவோ முடியாத
சிலைகளையும், பேய்களையும் வணங்குவதை விட்டுவிடவில்லை. 21
தாங்கள் செய்துவந்த கொலைகள், சூனியங்கள், விபசாரம்,
களவுகள் இவற்றை விட்டு மனந்திரும்பவில்லை.

13–15: ஆறும் எக்காளத்துக்குப் பின் நறுமணப் புகைப் பீடம் (காண். 8:3) மீண்டும் தோன்றுகிறது. அங்கிருந்து எழும்பும் குரலொலி இறைமக்களின் நீதிக் கோரிக்கைக்குக் (காண். 6:9–10) கடவுளிடமிருந்து வரும் பதிலாம். கடவுள் அவிழ்த்துவிடச் சொல்லும் நான்கு தூதர்களும் பிற திருவெளிப்பாட்டு மரபுப்படி அவருக்காகப் பழிவாங்கும் தூதர் என்பர் சிலர். 7:1-இல் தோன்றும் தூதர்தாம் இவர் என்று வாதிடுவர் வேறு சிலர். அவர்கள் யாவரெனினும், அவர்கள் கொணரும் துன்பத்தைப் பற்றி அறிதலே இங்கு நமது பணியாகும். அவர்கள், கடவுள் குறிப்பிட்ட காலம் வருமட்டும் காத்திருக்கின்றனர். பின்னர் அவரது விருப்பத்திற்கிணங்கச் செயல்படுகின்றனர். அவர்கள் யூப்ரட்டீஸ் (Euphrates) ஆற்றினருகே நிற்றல், ஆறும் துன்பம் கிழக்கிருந்து வருதலை உணர்த்துகிறது போலும். இதனை இருவகைக் கண்ணோட்டம் கொண்டு பார்க்கலாம். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் யூப்ரட்டீஸ் ஆற்றை அடுத்து வாழ்ந்த பாபிலோனியரும் அசீரியருமே எருசலேம் மீது அடுத்தடுத்துப் படையெடுத்து வந்து இஸ்ராயேல் மக்களைத் துன்புறுத்தினர். அவர்கள் படையெடுப்பை இறைவாக்கினர் இசையாஸ் 'யூப்ரட்டீசின்

வெள்ளப் பெருக்கு' என்றே கூறியுள்ளார் (காண். இசை. 8 : 7—8). ஆதலின் யூப்ரட்டீஸ் ஆறு எருசலேமுக்குத் துன்பம் தொடங்கும் கிழக்கு எல்லேயாயிற்று. அருளப்பர் இதனே உருவகமாக வைத்து வரவிருக்கும் கேட்டினே அவ் வாற்றினின்று வருவதாக வருணிக்கின்ருர் என்று சொல்ல லாம். அல்லது திருவெளிப்பாட்டு நூல் எழுந்த காலத்தில் அவ்வாற்றுக்குக் கிழக்குக் கரைவரை வந்து குடி கொண் டிருந்த பார்த்தியர்கள் உரோமைப் பேரரசுக்குப் பெருந் தோல்வியை அளித்ததுமன்றி, அதற்குப் பேராபத்தாகவே இருந்தனர். எனவே, யூப்ரட்டீஸ் நதிக்கரையைக் கேடு எழும்பும் எல்லேயாக வருணிக்கிருர் என்றும் சொல்லலாம்.

16–19 : இதனே மனதிற்கொண்டு அடுத்து வரும் வாக்கியங்களேப் படிக்குங்கால், அவற்றின் உருவக மொழி களுக்குப் பொருள் விளங்குகின்றது. இங்கு வருவது உண்மையான குதிரைப் படையன்று. இவற்றைப்பற்றி வரும் வருணனேயிலும் சொல்லுக்குச் சொல் பொருள் தேடக்கூடாது. இவற்றில் பேய்த்தன்மை வாய்ந்த சக்தி களே காண்கின்ருேம்; அவ்வளவே. இவை கொணர்ந்த பேரழிவின் காரணமாய் உலகின் தீய மாந்தரில் மூன்றில் ஒரு பகுதி அழிகின்றனர்.

20–21 : எஞ்சி நின்றவரும் நல்லோராய் இல்லே ; தங்களின் சிலே வழிபாட்டினேயும், தீய ஒழுக்கத்தையும் விட்டுவிட்டு மனந்திரும்பவில்லே; எகிப்தின் பாரவோன் மன்னனேப் போன்று கடின தங்கள் இதயத்தைக் கடினப் படுத்திக் கொண்டார்கள்; தண்டித்துத் திருத்தும் கடவுள் பக்கம் திரும்பாது இருந்து விடுகின்றனர்.

5. இறுதித் தண்டனே வருகிறது *(10:1-11; 14)*

இப்பகுதி ஆருவது எக்காள நிகழ்ச்சிக்கும் ஏழாவது எக்காள நிகழ்ச்சிக்கும் இடையே ஓர் இடைக்காட்சியாக வருகின்றது. இப்பகுதியினேயும் இரண்டு சிறு பகுதிகளாகப் பிரிக்கலாம். அ. விண்ணின்று வந்த வானதூதர் வைத் திருந்த ஏட்டுச் சுருள். ஆ. கோவிலே அளத்தலும், இரு சாட்சிகளும்.

(அ) விண்ணின்று வந்த வானதூதர் வைத்திருந்த ஏட்டுச் சுருள் *(10 : 1–11)*

பின் வல்லமைமிக்க இன்னொரு வானதூதர் விண்ணகத்தி **10**
லிருந்து இறங்கிவரக் கண்டேன். அவர் மேகத்தை ஆடை
யென அணிந்திருந்தார். அவர் தலைமேல் ஒரு வானவில் இருந்
தது. முகம் கதிரவனைப்போலவும், கால்கள் நெருப்புத் தூண்
கள்போலவும் இருந்தன. அவர் கையில் சிறியதோர் ஏட்டுச் 2
சுருள் பிரித்திருந்தது. வலக்காலைக் கடலின்மீதும், இடக்
காலைத் தரையின்மீதும் வைத்து | கர்ச்சிக்கும் சிங்கம் போல 3
முழக்கம் செய்தார். அப்படி முழக்கம் செய்தபோது ஏழு இடி
கள் எதிரொலித்துப் பேசின. ஏழு இடிகளும் அப்படிப் பேசிய 4
போது நான் எழுதப்போனேன். ஆனால் விண்ணிலிருந்து
வெளிவந்த ஒருகுரல், ''ஏழு இடிகளும் பேசியதை மறைத்து
வை, எழுதாதே'' என்று சொல்லக் கேட்டேன். கடலிலும் 5
தரையிலும் நிற்கிறதாக நான் கண்ட வானதூதர் தம் வலக்
கையை விண்ணோக்கி உயர்த்தினார். விண்ணையும் அதில் 6
உள்ளதையும், மண்ணையும் அதில் உள்ளதையும், கடலையும்
அதில் உள்ளதையும், படைத்தவரும் என்றென்றும் வாழ்பவரு
மானவரின் பெயரால் ஆணையிட்டு, '' இனித் தாமதம் இராது. 7
ஏழாவது வானதூதர் எக்காளம் ஊதும் நாளில் கடவுளின்
மறைவான திட்டம் நிறைவேறியிருக்கும். இறைவாக்கினரான
தம் ஊழியர்களுக்குக் கடவுள் அறிவித்த நற்செய்தியின்படியே
அவை நிறைவேறும்'' என்றார். விண்ணின்று நான் கேட்ட 8
குரல் என்னிடம் திரும்பவும் பேசி, ''கடல்மீதும் தரைமீதும்
நிற்கிற வானதூதரின் கையிலுள்ள பிரித்த ஏட்டுச் சுருளை நீ
போய் வாங்கிக்கொள்'' என்றது. நானும் அந்த வானதூதரி 9
டம்போய், அந்த ஏட்டுச் சுருளை எனக்குத் தரும்படி கேட்
டேன். அவரோ. ''இதை எடுத்துத் தின்றுவிடு. இது உன்
வயிற்றில் கசக்கும். ஆனால் வாயிலே தேனைப்போல் இனிக்
கும்'' என்று என்னிடம் சொன்னார். அப்போது வானதூதரின் 10
கையிலிருந்த அச்சுருளை வாங்கித் தின்றேன். அது வாயில்
தேனைப்போல இனித்தது. ஆனால் தின்றதும் வயிற்றில் கசந்
தது. ''பல மக்களினம், பல நாடுகள், மொழியினர் பலர், 11
அரசர் பலர் இவர்களைக் குறித்து நீ மீண்டும் இறைவாக்
குரைக்க வேண்டும்'' என்று எனக்குச் சொல்லப்பட்டது.

நான்காம் அதிகாரத்தின் தொடக்க முதல் இதுவரை விண்ணகக் காட்சிகளையே கண்டு கொண்டிருந்தார் அருளப்பர். இப்பொழுது காட்சி மண்ணகத்திற்கு வருகின்றது.

விண்ணகத்திலிருந்து மண்ணகத்துக்கு வரும் தூதர் நேரிடையாக கிறிஸ்துவின் திருமுன் நின்று வருவதாகத் தெரிகிறது. அவர் அணிந்திருந்த மேக ஆடை, கதிரவனையொத்த முகம், அவரது தலைமேல் இருந்த வானவில், நெருப்புத் தூண் போன்ற கால்கள்—இவையெல்லாம் அவர் கடவுளின் மாட்சிமையில் பங்கு பெற்றவரெனக் காட்டுகின்றன. இவ் வருணனையெல்லாம் முதல் அதிகாரத்தில் தோன்றும் மனு மகனின் *(1:12-16)* வருணனையை ஒக்கும். அவர் மறு உருவான காட்சியையும் *(மத். 17:2-8)* நினைவுபடுத்தும். இதன் காரணமாக சிலர் இத்தூதர் மகிமையடைந்த கிறிஸ்துதான் என்றும் கூறுகின்றனர்.

அவர் கொண்டுவரும் செய்தி அவருக்கே தெரியாத முத்திரையிடப்பட்ட செய்தியன்று *(காண். 5:1)*. அது திறந்த சுருளாதலின் அச்செய்தி அவருக்குத் தெரிந்ததே. அதனை உலக முழுமைக்கும் அறிவிக்கவேண்டும். அச்செய்தியின் பொதுத் தன்மையைத் தூதர் கடல் மீது ஒரு காலும் தரை மீது ஒரு காலுமாய் நிற்றல் குறிக்கிறது. ஏனெனில் நீர்ப்பரப்பும், நிலப்பரப்பும் சேர்ந்துதான் உலகம். உலகினுக்கே வரவேண்டிய செய்தி திருவெளிப்பாட்டில் சாதாரண முறையிலா வரும்? தூதர் விண்ணிலிருந்து கொணர்ந்த செய்தி, கர்ச்சிக்கும் சிங்கம் போல் வருகின்றது. கடவுளின் குரலே கர்ச்சிக்கும் சிங்கம் போன்றது *(காண். ஓசே. 11 : 10; யோவேல் 3 : 16; ஆமோஸ். 1:2; 3:8)*. இப்படி ஒரு செய்தியைத் தூதர் வெளியிடினும் விண்ணகத் தந்தையே இதனை எழுதி அறிவிக்க வேண்டாமென அருளப்பருக்குத் தடை விதித்து விடுகிறார். இறைவனே அருளப்பரைப் பல முறைகளில் எழுதப் பணிந்தார் *(காண். 1:11-19; 14:13; 19:9; 21:5)*. "இந்நூலிலுள்ள இறைவாக்குகளை மறைத்து வைக்காதே" *(22:10)* என்றும் பணித்துள்ளார். ஆனால் அதே இறைவன் இச்செய்தியை மட்டும் மறைத்து வைக்கச் சொல்லல் எதற்காகவோ? இவ்வாறு மறைத்தல், இந்நூல் கடவுளின் முழுத் திருவெளிப்பாடுகளையும் கொண்டிருக்கவில்லை என்பதைக் குறிக்கும் போலும்!

ஒரு வேளை அருளப்பர் கேட்டவை "மனித மொழிக் கெட்டாத சொற்களும், மனிதன் திருப்பிச் சொல்லக் கூடாத சொற்களும்" போலும் (2 கொரி. 12:4). கடவுள் மனிதனோடு உறவாடும் போது இந்நிலை ஏற்படுதல் வியப்பன்று.

5-7: (எதிர்க்கிறிஸ்து-Antichrist) அடுத்து வரும் மூன்று வாக்கியங்களும் தானியேல் இறைவாக்கினரது நூலின் 12:5-7 பகுதிக்கு மிகவும் ஒத்துள்ளதைக் காணலாம். தானியேலின் பகுதியைச் சிறிது கூட்டிக் குறைத்துக் கையாண்டு அதில் அடங்கிய உண்மையினை அறிவிக்கின்றார் ஆசிரியர். கடவுளின் திட்டத்தின் நிறைவேற்றத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கும் துன்புறும் கிறிஸ்தவர்களுக்குத் தூதர் வாழும் கடவுள் பெயரால் ஆணையிட்டு "இனித் தாமதம் இராது" என்று கூறுதல் ஆறுதல் அளிக்கும் செய்தியன்று. இஃது இறுதிக்கால இன்ப வாழ்வுக்குத் தாமதம் இராது என்னும் பொருளில் வரவில்லை. தானியேல் பகுதியோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் **எதிர்க் கிறிஸ்து** (Anti-Christ) வரும் காலம் தாமதமாகாது என்றே பொருளாகின்றது. ஏனெனில் தானி. 12:7-இல் விண்ணையும் மண்ணையும் படைத்த என்றும் வாழும் கடவுள் பெயரால் ஆணையிட்டுக் கூறப்பட்ட செய்தி தனிப்பட்ட துன்ப சோதனைக் காலமாம். எப்பொழுது வருமோ இறுதிநாள் என்று ஏங்கி நிற்கும் கிறிஸ்தவர்கள் இதனையும் பார்க்கப் போகின்றனர்.

திருவெளிப்பாட்டில் எதிர்க் கிறிஸ்து பல உருவங்களில் வருவதைப் பார்க்கிறோம். 11 : 7-இல் பாதாளக் குழியிலிருந்து கிளம்பும் கொடிய விலங்கு 12ஆம் அதிகாரத்தில் பறவை நாகம். 13ஆம் அதிகாரத்தில் ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் கொண்ட கொடிய விலங்கு. 17:3-இல் விபசாரப் பெண் எனப் பல வடிவங்கள் எதிர்க் கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்படுகின்றன. திருவெளிப்பாட்டின் வரும் இவ்வித உருவகங்கள் ஒவ்வொன்றுக்கும் தனிப் பொருள் உண்டு. எனினும், பொதுவில் அவையெல்லாம் தீமை விளைவிக்கும் அக்கிரமங்களைக் குறிக்கும் என்று திட்டமாகக் கூறலாம்.

இந்த அக்கிரமச் சோதனைக் காலம் வந்து விட்டால், அதுவரை மறைவாயிருக்கும் கடவுளின் திட்டம் நிறைவேறி விடும். ஆதலின் கிறிஸ்தவர்கள் இச்சோதனையையும் அனுப விக்க வேண்டும். இதில் தீமை தோல்வியடைவது உறுதி ; எதிர்க் கிறிஸ்துவின் தோல்வி திண்ணம். இறுதி வெற்றி கிறிஸ்துவுக்கே. இச்செய்தி எந்தக் காலக் கிறிஸ்தவ மக்களுக்கும் மிகுந்த நம்பிக்கை தரும் செய்தியாகும். கடவுள் இது பற்றி இறைவாக்கினர் எல்லாருக்கும் அறிவித் துள்ளார். அவர்கள் காலத்தின் தன்மையை உணர்ந்து நிகழ்ச்சிகளின் உட்பொருளை அறிவித்தனர்.

8-11: செய்திச் சுருளை அருளப்பர் வான தூதரிட மிருந்து கேட்டு வாங்கிக் கொள்கிறார். இது கடவுள் வெளிப் படுத்தும் செய்தியினை அவர் விரும்பிப் பெறுதலைக் குறிக்கும். எசேக்கியேல் இறைவாக்கினர் கடவுளால் இறைவாக்குரைக் கும் பணிக்கு அழைக்கப்பெற்றபோது கடவுள் கொடுத்த சுருளை உணவுபோல் உண்டார் (எசே. *3:1, 3*). அதாவது கடவுளுக்குப் பதிலாக மக்களிடம் அவரது செய்தியை அறிவிக்குமுன் அதனை உள்ளூர உணர்ந்து ஏற்றார் என்று பொருள். அருளப்பரும் கடவுளின் கருவியாகுமுன் அவர் வெளிப்படுத்தும் செய்தியினை உள்ளூர உணர்ந்து ஏற்றல் வேண்டும். இதைக் குறித்துக் காட்டவே அவர் ஏடுச் சுருளை வாங்கித் தின்றார். அச்சுருள் கூறுவது ஒரு வெற்றிச் செய்தி. ஆனால் அவ்வெற்றி துன்பத்தில் பிறக்கும் வெற்றி யாகும். ஆதலின் இனிப்பும் கசப்புமாயுள்ளது. அருளப்பரின் தனி வாழ்வும் கிறிஸ்தவர்களின் வாழ்வும் இதற்கு எடுத்துக் காட்டு. இறுதி இன்பத்திற்குத் துன்பமே முன்னோடி. அருளப்பரின் இறைவாக்குப் பணியின் பயனைப் பெறுபவர்கள் கிறிஸ்தவர்கள் மட்டும் அல்லர். உலகனைத்துக்கும் அவரது பணி பயன்படும். திருவெளிப்பாட்டு நூல் உலக வரலாற் றின் போக்கையும் அதன் பொருளையும் எடுத்துரைக்கின்றது. அதன் வழியாக இறுதிக்கால இன்பச் செய்தியையும் உலகம் முழுவதற்குமே அறிவிக்கின்றது. இதுவே இந்நூலின்பொதுத் தன்மை (காண். *5:9-10; 7:9; 11:9; 13:7: 14:6; 17:15*).

(ஆ) கோவிலை அளத்தலும் இரு சாட்சிகளும்

(11 : 1–14)

பின்பு பிரம்புபோன்றதோர் அளவுகோலை என் கையில் 11
கொடுத்துச் சொன்னதாவது: ''எழுந்து, கடவுளின் ஆல
யத்தையும் அதன் பீடத்தையும் அளவிடு; அங்கே வழிபடு
வோரையும் கணக்கிடு. ஆலயத்திற்கு வெளியே உள்ள முற் 2
றத்தையோ அளக்காமல் விட்டுவிடு. ஏனெனில், அது புற
வினத்தார் கையில் கொடுக்கப்பட்டுள்ளது. பரிசுத்த நகர்
அவர்களால் நாற்பத்திரண்டு மாதம் மிதிபடும். என் சாட்சி 3
கள் இருவரை அனுப்புவேன். அவர்கள் கோணித் துணி
உடுத்தி, அந்த ஆயிரத்து இருநூற்று அறுபது நாளளவு
இறைவாக்கு உரைப்பர். மண்ணுலகை ஆளும் ஆண்டவர் 4
முன் நிற்கும் இரண்டு ஒலிவ மரங்களும், இரண்டு விளக்குத்
தண்டுகளும் அவர்களே. அவர்களுக்குத் தீங்கு செய்ய யாரா 5
வது முற்பட்டால் அவர்கள் வாயினின்று தீ வெளிப்பட்டு
எதிரிகளை விழுங்கிவிடும். ஆம், அவர்களுக்குத் தீங்கு செய்ய
முற்படுபவனுக்கு இவ்வாறு அழிவு வந்தே தீரும். தாங்கள் 6
இறைவாக்குரைக்கும் நாளில் மழை பொழியாதபடி வானத்தை
அடைத்துவிட அவர்களுக்கு வல்லமை இருக்கும். விரும்பும்
போதெல்லாம் அவர்கள் தண்ணீரை இரத்தமாகவும், மண்
ணுலகை வாதைகள் பலவற்றால் வாட்டவும் அவர்களுக்கு வல்
லமை இருக்கும். அவர்கள் சான்று பகரும் பணியை முடித்த 7
பின், பாதாளக் குழியினின்று வெளியே கிளம்பும் கொடிய
விலங்கு அவர்களோடு போர் தொடுத்து, வென்று அவர்
களைக் கொன்றுவிடும். அவர்களுடைய பிணங்கள் அந்த 8
மாநகரத்தின் பெரு வீதியில் கிடக்கும். அந்நகரைச் சோதோம்
என்றும், எகிப்து என்றும் உருவகப்படுத்துவர். அவர்களு
டைய ஆண்டவர் அறையுண்டது அந்தகரிலேதான். பல 9
இனங்கள், குலங்கள், மொழிகள் நாடுகளைச் சார்ந்த மனிதர்
மூன்றரை நாளளவு அவர்களுடைய பிணங்கள் அங்குக் கிடைப்
பதைப் பார்ப்பார்கள். அவற்றைக் கல்லறையில் அடக்கஞ்
செய்யவிட மாட்டார்கள். மண்ணில் வாழ்வோர் இதைப் 10
பார்த்து, மகிழ்ச்சி கொண்டாடுவர். அந்த மகிழ்ச்சியில் ஒரு
வர்க்கொருவர் அன்பளிப்புகள் வழங்கிக்கொள்வர். ஏனெ
னில், இவ்விரு இறைவாக்கினரும் மண்ணில் வாழ்ந்தவர்களுக்
குப் பெருந்தொல்லையாக இருந்தார்கள். மூன்றரை நாளுக்குப் 11
பின் உயிரளிக்கும் ஆவி கடவுளிடமிருந்து வந்து அவர்களுக்
குள் நுழைந்தது; நுழையவே, அவர்கள் எழுந்து நின்றார்கள்.
அதைப் பார்த்தவர்களைப் பேரச்சம் ஆட்கொண்டது. அப் 12

போது விண்ணகத்தின் உண்டான பெரியதொரு குரல்,
'' இங்கே வாருங்கள் '' என்று தங்களுக்குச் சொல்வதை அந்த
இறைவாக்கினர் கேட்டனர். உடனே பகைவர் கண்ணுக்கெதி
ரிலேயே அவர்கள் மேகத்தின்மீது விண்ணகத்திற்குச் சென்
ருர்கள். அதே நேரத்தில் ஒரு பெரும் நில நடுக்கம் உண்டா 13
யிற்று, நகரத்தின் பத்திலொரு பாகம் இடிந்து விழுந்தது.
அந்த நில நடுக்கத்தில் ஏழாயிரம் பேர் மடிந்தனர். எஞ்சி
யிருந்தோர் அச்சமேலிட்டு விண்ணகக் கடவுளுக்கு மகிமை
அளித்தனர். இங்ஙனம் இரண்டாவது வாதை கடந்து விட் 14
டது. இதோ, மூன்ருவது வாதை விரைவிலே வரப்போகிறது.

இப்பகுதியில் உருவகங்களும் அடையாளங்களும் மலிந்துள்ளன. இவற்றின் உட்பொருளை அறிந்து கொள்ளல் சிறிது கடினமாகவே உள்ளது. இவ்வளவு கடினமான பகுதி இந்நூலில் வேறெங்கும் வரவில்லை. அதனுல்தான் அறிஞர் பலர் இப்பகுதிக்குப் பலவாருக விளக்கம் கூற முயல்கின்றனர். அவற்றையெல்லாம் ஒன்று திரட்டி ஈண்டுத் தருவது இயலாது. நமது நோக்கமும் அதுவன்று. பொதுவில் பலர் ஏற்கக்கூடிய கருத்துக்களை மட்டும் இங்கே தருதல் நலமாகும்.

1-2: அருளப்பர் இப்பகுதியினை எழுதுமுன் சில முக்கிய நிகழ்ச்சிகள் நடந்திருந்தன: நீரோ மன்னனின் மறையெதிர்ப்பு ; அதுபோழ்து மறைத் தியாகிகளான அப்போஸ்தர்கள் இராயப்பர், சின்னப்பர் ஆகியோரின் இறப்பு; கி. பி. 70-இல் எருசலேம் அதன் பேராலயம் ஆகியவற்றின் அழிவு. இவ்வுண்மை நிகழ்ச்சிகளைப் பின்னணியாக வைத்துக் கொண்டு, உருவக மொழிகளில் வேறு ஓர் உண்மையினையும் போதிக்க விரும்புகிருர்.

இங்கேவரும் ஆலயம் எருசலேமின் ஆலயம் மட்டுமன்று. இது திருச்சபை என்னும் ஆலயம். புனித சின்னப்பர் பல விடங்களில் திருச்சபையை ஆலயத்திற்கு ஒப்பிட்டுப் பேசுவதைக் காண்க (காண். 1 கொரி. 3:16–17 ; 2 கொரி. 6:16 ; எபே. 2:19–21 ; 1 இரா. 2:5). வரவிருக்கும் பேராபத்தில் இறைமக்கள் காப்பாற்றப்படுவர். ஆலயத்தை அளத்தல் இதனைக் குறிக்கும் (காண். சக். 2:1–5). அள

விடுதல் *7:1–8*-இல் வரும் முத்திரையிடுதலுக்கு ஒப்பாகும். இறைமக்களுக்கு ஏற்ற ஒழுக்கத்தில் நிலைநிற்பவர்கள்தாம் பாதுகாப்புப் பெறுகின்றனர். ஆலயத்தின் வெளிமுற்றத்தில் உள்ளவர்கள், அதாவது உண்மையான இறையன்பும் ஆழ்ந்த விசுவாசமுமின்றி வாழ்பவர்கள், இறைவனின் இத்தகைய பாதுகாப்பைப் பெறமாட்டார்கள். எருசலேம் ஆலயத்தில் புறவினத்தார் முற்றம் என்றொன்று இருந்தது. அவ்விடத்தைத் தாண்டி அவர்கள் நுழைதல் கூடாது. அடுத்துள்ள பகுதியில் யூதகுலப் பெண்கள் மட்டும், அதற்கு அடுத்த பகுதியில் ஆண்கள் மட்டும், அதற்கடுத்து குருக்கள் மட்டும் என்ற வரம்பு இருந்தது. புறவினத்தார் முற்றம் ஆலயப் பகுதியில் சேராத பகுதியாகும். ஆசிரியர் இவ்விதப் பாகுபாட்டினை உருவகமாக அமைத்து கிறிஸ்தவ நெறியில் ஊன்றி நில்லாதவர்களை ஆலய முற்றத்தில் உள்ளவர்களுக்கு ஒப்பிட்டுப் பேசுகின்றார். இவர்களது இடம் அளக்காமல் விடப்பட்டதால் இவர்கள் கடவுளின் அரசினின்றுத் தள்ளப் பட்டவர்போலாகின்றனர் (காண். லூக். 13:27–28).

இத்துன்பக் காலம் 42 மாதங்கள் நீடிக்கும். 42 மாதங்கள் அல்லது $3\frac{1}{2}$ ஆண்டுகள் என்பது சோதனைக் காலத்துக்கு அடையாளம். இவ்வடையாளம் தானி. 7:25 ; 12:7-இலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் நான்காம் அந்தியோகுஸ் எப்பிபானெஸ் (Antiochus IV Epiphanes) நடத்திய மறையெதிர்ப்பு மூன்றரை ஆண்டுகள் என்று கூறுவது துன்பத்தின் நிலையாமையையும் குறிக்கும்.

3 : இந்தச் சூழ்நிலையில் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வோர்களைப் பற்றித் திருவெளிப்பாடு கூறுகிறது. இருசாட்சிகள் என்று குறிப்பிடுவதால், நீரோ மன்னன் காலத்தில் உயிர் துறந்த புனித இராயப்பர், சின்னப்பர் ஆகியோர் இருவரையும் பின்னணியாக வைத்து அருளப்பர் இங்குப் பேசுகிறாரெனக் கூறலாம். ஆனால் இங்குவரும் இருசாட்சிகளும் அவ்விருவர்தாம் என்று உறுதியாகச் சொல்லுவதற்கில்லை. ஆசிரியர் அடுத்துவரும் வாக்கியங்களில் வலியுறுத்த விரும்புவது கிறிஸ்துவுக்குச் சான்று பகர்பவர்களின் சிறப்புப் பண்

மையும் பெருமையையுமே. துன்பக் காலத்தில் கிறிஸ்துவுக்குச் சான்றுக நிற்கும் திருச்சபையை மனதில் வைத்து எழுதுகிருர் என்ருலும் பொருந்தும்.

4 : இவர்கள் ‘ இரு ஒலிவ மரங்கள் ’. இச்சொற்கள் நம்மை யூதமக்கள் பாபிலோன் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று நாடு திரும்பிப் புதுவாழ்வு வாழத் தொடங்கிய காலத்துக்கே அழைத்துச் செல்கின்றன. அப்பொழுது யூத மக்களுக்கு அரசியல் தலைவராய் இருந்த சொரொபாபெலையும் (Zorobabel) இறை பணியாற்றிய யோசுவாவையும் (Joshua) இரு ஒலிவ மரங்கள் என்றும், விளக்குத் தண்டுகள் என்றும் சக். *4:1–14* கூறுகின்றது. இவர்கள் இருவரும் யூத சமுதாயத்தைச் சீர்செய்து மறைவழியில் நிற்கச் செய்ய உழைத்தவர்கள். திருவெளிப்பாடு கூறும் சாட்சிகளும், கிறிஸ்தவ சபையாருக்கு வழிகாட்டிகளெனவும் அவர்களைக் கிறிஸ்தவ நெறியில் நெறிப்படுத்துபவரெனவும் காட்டுகின்றன. விளக்குத் தண்டுகள் எருசலேம் ஆலயத்தில் இறைவனைக் குறிக்கும் அடையாளமாய் இருந்தன. இங்குவரும் சாட்சிகள் தங்கள் பணிக்கு வேண்டிய ஆற்றலையும் அஞ்சாமையையும் இறைவனிடமிருந்து பெற்றவர்கள் என்பது இதனுல் விளங்குகிறது. நூலின் தொடக்கத்தில் கிறிஸ்தவ சபைகள் குத்துவிளக்குகளுக்கு ஒப்பிடப்பட்டுள்ளதால் (காண். *1:13*), பொதுவில் திருச்சபையே இறைவனிடமிருந்து இவ்வருங்குணங்களைப் பெறுகின்றது என்பதையும் இவ்வாக்கியத்திலிருந்து புரிந்துகொள்ளலாம்.

5–6 : அடுத்துவரும் வாக்கியங்கள் இந்தச் சாட்சிகளை இறைவாக்கினரான எலியாசுக்கும், மோயீசனுக்கும் ஒப்பிட்டுப் பேசுகிறது. இஸ்ராயேலின் அரசன் ஒக்கோசியாசு அனுப்பிய வீரர்களை இறைவாக்கினர் எலியாசு வானத்திலிருந்து நெருப்பு வரச் செய்து அழித்தார். அருளப்பர் அதை இங்கு நினைவுபடுத்துகின்ருர் (காண். 2 அரசர். *1:9–14*). அதே இறைவாக்கினரின் வாக்கினுல் வானம் பொய்த்துவிட்டதை 1 அரசர் *17:1*-இல் வாசிக்கிருேம். இத்தகைய வன்மை இச் சாட்சிகளுக்கும் இருப்பதால்

தாங்கள் சான்றுரைக்கும் காலம் முடிவுறுமுன் தங்களுக்குத் தீங்கிழைப்போரை இவர்கள் அழிக்க முடியும் என்பது இங்கே தெளிவாகின்றது.

எகிப்தில் தண்ணீரை இரத்தமாக மாற்றிய மோயீச னின் வன்மையும் இவர்கட்கு உண்டு (காண். யாத். 7:17 —20). இவ்வாறு அருளப்பர் இவர்களைப் பழைய ஏற்பாட்டு இறைவாக்கினரோடும், சட்ட நூலைக் கொடுத்தவரான மோயீசனோடும் ஒப்பிட்டுக் கூறுதல் வேறொரு ஆழ்ந்த உண்மையை உணர்த்தும். இச் சாட்சிகள் சட்டத்தையும், இறைவாக்கையும் தம் பணியால் நிறைவு செய்கின்றனர். இதுவரை கூறியவற்றைச் சுருக்கி சொல்ல வேண்டுமெனின் : புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலத்துவப் பணி பழைய ஏற் பாட்டு அரசியல் பணி, இறை பணி, இறை வாக்கு, திருச் சட்டம் ஆகியவற்றை நிறைவு செய்யும் பணியாகும்.

7—10 : இவர்களது பணி முடிந்தபின் எதிர்க் கிறிஸ்து வின் உருவகமாயுள்ள பாதாளத்திலிருந்து புறப்படும் கொடிய விலங்கு இவர்களைக் கொன்றுவிடும். சான்று பகருவதின் உச்சக் கட்டமாக இவர்களின் மரணம் வருகின் றது. இவர்களின் மரணம் நிகழ்வது 'மாநகரில்'. திரு வெளிப்பாட்டில் 'மாநகர்' என்பது உரோமை நகரையே குறிக்கும் (காண். 16:19; 17:18; 18:10, 16). இந்நகர் சோதோமுக்கும் எகிப்துக்கும் உருவகம். சோதோமும் எகிப்தும் மறைநூலிலே கயமைக்கு அடையாளங்கள். ஆதலின் உரோமை நகரும் கயமையின் உரு. ஆனால் அடுத்து வரும் வாக்கியத்தில் அவர்களுடைய ஆண்டவர் அறையுண்டது அந்நகரிலே தான் என்பது சிறிது புதிராக உள்ளது. எனினும், இங்கு ஆசிரியர் எருசலேமை உரோ மைக்கு ஒப்பிடுவது கண்கூடு. அவ்வாறெனில், ஆண்டவ ரைக் கொன்று அதன் பழியைச் சுமந்துகொண்ட எருசலே மும் உரோமையைப் போன்று பழிபாவத்தின் அடையாள மாகும். ஆதலின் மேற்கூறிய நகர்களைத் தனித்தனியே வைத்துப் பார்க்கலாகாது. அவற்றின் பெயர்களைக் கிறிஸ் துவுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் எதிராகத் தீங்கிழைத்து,

அதன் பழிபாவத்தைச் சுமந்துகொள்ளும் உருவகச் சொற்களாய்க் கொள்ளல் வேண்டும். இவ்வித இடத்தில் நேர்ந்த **மறைத் தியாகிகளின்** மரணத்தைக் குறித்துத் தீயோர் மகிழ்வது இயல்பாகும். அவர்களின் பிணங்கள் வீதிகளில் கிடத்தல் அக்கால வேதசாட்சிகளின் அவலமான சாவைக் காட்டுகின்றது.

11–14. ஆனால் **மறைத் தியாகிகள்** சாவோடு அழிந்துவிடுபவரல்லர். அவர்கள் என்றும் கிறிஸ்துவில் வாழ்பவர்கள். எசேக்கியேல் இறைவாக்கினர் பாபிலோன் அடிமைத்தனத்தில் வாழ்ந்த இஸ்ராயேல் மக்களை உலர்ந்த எலும்புகளாய்க் காட்சியில் கண்டார். கடவுளின் ஆவி அவற்றுள் புக, அவையெல்லாம் உயிர்பெற்று எழும்பின(காண். எசேக். *37:1–14*). இஃது இஸ்ராயேல் மக்களின் புதுவாழ்வைக் குறித்தது. அந்த உருவகத்தை மனதிற்கொண்டு இங்கே ஆசிரியர் மறையெதிர்ப்பினால் துன்புறும் திருச்சபை மீண்டும் புத்துயிர்பெற்றெழும் என்னும் உண்மையைக் கிறிஸ்தவர்களுக்கு உணர்த்த விரும்புகிறார்.

இவர்கள் இறுதிக் காலத்தில் கிறிஸ்துவால் மகிமைப் படுத்தப் பெறுவர். வெண்ணுடை பூண்டு விண்ணகம் செல்வர். இவ்வுண்மையைக் கூற எலியாசு விண்ணேக்கிச் சென்று மறைத்தார் (காண். 2 அரசர் *2:11*). யூதர்களின் ஒரு பாரம்பரியத்தின்படி மோயீசன் மேலே மேகத்திற்குள் சென்று மறைந்தார். இவைகளையும் இவ்வாக்கியத்தில் அருளப்பர் உருவகமாக மறைத்து வைத்துள்ளதைக் காணுமல் இருக்கமுடியாது. இந்நேரத்தில்தான் கடவுளின் தண்டனையும் வரும். அது மக்கள் திருந்தவேண்டும் என்று விடுக்கப்படும் தண்டனை. நிலநடுக்கம் தண்டனைக்கு அடையாளமாக வரும் நிகழ்ச்சியாகும் (காண் *6:12*; எசேக். *38:19–23*). அதில் பலர் இறப்பினும், மிகப் பலர் மனந்திரும்புகின்றனர். அவர்கள் கடவுளுக்கு மகிமை அளிப்பது இதனைக் காட்டுகிறது.

இப்பகுதியினை ஆழ்ந்து படிக்குங்கால் சிலுவையில்தான் மீட்பு என்பது புலனாகின்றது. கிறிஸ்துவுக்குத் தம் மரணத்

தால் சான்று பகரும் **மறைத் தியாகிகள்**தாம் தீயோருக்குக் கடவுளின் மீட்பைக் கொணர்கின்றனர். துன்பமே மீட்பின் வழியாகின்றது. கிறிஸ்துவுக்காகத் துன்புறுகின்றனர் சிலர். அதனால் வேறு சிலர் வாழ்வு பெறுகின்றனர். அக்காலத்தில் துன்புற்ற கிறிஸ்தவர்களுக்கு இவ்வரிய உண்மைகளையும் நூலாசிரியர் ஈண்டு எடுத்துரைக்கின்றார்.

6. ஏழாவது எக்காளம்: (11 : 15-19)

பின் ஏழாவது வானதூதர் எக்காளம் ஊதினார். விண் 15
ணகத்தில் பேரொலிகள் உண்டாகி, "இவ்வுலகை ஆளும்
உரிமை நம் ஆண்டவருக்கும் அவரின் மெசியாவுக்கும் உரிய
தாயிற்று; அவர் என்றென்றும் ஆட்சி செலுத்துவார்" என்று
முழங்கின. கடவுள் முன்னிலையில் தம் இருக்கைகளில் அமர்ந் 16
திருந்த இருபத்துநான்கு மூப்பர்களும் முகம் குப்புற விழுந்து
கடவுளை வணங்கிச் சொன்னதாவது: ஆண்டவராகிய கட 17
வுளே, எல்லாம் வல்லவரே, இருப்பவரும் இருந்தவருமான
உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஏனெனில், உம் பெரும் வல் 18
லமையைக் காட்டி ஆட்சி செலுத்தலானீர். புறவினத்தார்
சினந்தெழுந்தனர்; உம் சினமும் வெளிப்பட்டது. இறந்
தோருக்குத் தீர்ப்பிடவும், உம் அடியார்கள், இறைவாக்கினர்,
பரிசுத்தர்கள், உம் பெயருக்கு அஞ்சுவோர், சிறியோர், பெரி
யோர் அனைவர்க்கும் கைம்மாறு அளிக்கவும், மண்ணுலகை
அழிப்பவர்களை அழித்துவிடவும் நேரம் வந்துவிட்டது. பின்பு 19
விண்ணகத்தில் கடவுளின் ஆலயம் திறக்கப்பட்டது. உடன்
படிக்கையின் பேழை அவரது ஆலயத்தினுள் காணப்பட்டது.
மின்னல்களும் பேரிரைச்சலும் இடி முழக்கமும் நில நடுக்கமும்
கனத்த கல் மழையும் உண்டாயின.

ஏழாவது எக்காளம் விண்ணகக் காட்சியொன்றைத் திறந்துவிடுகிறது. ஏழாவது முத்திரைக்குப் பின் விண்ணகத்தில் அமைதி நிலவியது. இப்பொழுதோ, ஆர்ப்பரிப்பும், மகிழ்ச்சியும் தோன்றுகின்றன. இவையெல்லாம் வரவிருக்கும் துன்பதுயரங்களையும் வெற்றியையும் எதிர்பார்த்துக் கூறுவனபோல் அமைந்துள்ளன. ஆனால், அந்தத் துன்பத் துயரங்கள் யாவை என்பது தெரியவில்லை.

15–18 : இவ்வுலகை ஆளும் உரிமை, கடவுளையும் அவரின்மெசியாவையும் சார்ந்ததாகும். உலகின் தீய சக்தி

க்ள் எல்லாம் அடக்கி ஒடுக்கப்பட்டு அவை கடவுளின் ஆளு கைக்கு உட்படுகின்றன. 4 : 4-இல் வந்த இருபத்தி நான்கு மூப்பர்கள் இக்காட்சியில் மீண்டும் தோன்றுகின்றனர். இவர்கள் தங்கள் வாழ்த்துரையில் கடவுளாட்சி வந்து விட்டது என்று கூறுகின்றனர். அதாவது, இறுதிக் காலத்தில் வரவிருக்கும் இக்கடவுளாட்சி எவ்வளவு நிச்சயமான தென்றால், அது வந்துவிட்டதென, இறந்த காலத்தில் சொல்லப்படுகின்றது. அதைப்போல் 'இருப்பவரும் இருந்த வருமான......' என்றே சொல்லுகின்றனர். 'இனி வருபவ ரான' என்று சேர்ப்பதில்லை. கடவுளாட்சி வரப்போகும் ஒன்றன்று. ஏற்கனவே அது வந்துவிட்டது என்பது இதன் பொருளாம். இவ்வாட்சியின்போது எல்லாரும் தீர்ப்புப் பெறுவர். நல்லோர், தீயோர் எல்லாருமே தீர்ப்புப்பெறுவர். இதற்கு யாரும் தப்பமாட்டார்கள். நல்லவர்கள் வெகுமதி யும், தீயோர் தண்டனையும் பெறத்தான் போகின்றனர்.

19: இதன் பின்னர் மக்கள் கடவுளை அடைகின்றனர். மக்களுக்கும் கடவுளுக்கும் இடையே எவ்வித குறுக்கீடும் இருக்கவில்லை. திறக்கப்பட்ட ஆலயமும், அதனுள் தெரியும் உடன்படிக்கையின் பேழையும் இதற்கு அடையாளங்கள். யூதர்களின் ஆலயத்தில், உடன்படிக்கையின் பேழை இருக்கும் இடம், ஒரு திரைச்சீலையால் மூடப்பட்டிருக்கும். கடவுளின் இருப்பிடமான இவ்விடத்தை யாரும் அணுக முடியாது. பெரியகுரு மட்டும், ஆண்டுக்கு ஒரு முறை பாவப் பரிகார நாளில் அங்குச் செல்வார். ஆனால், இங்கே இத்தகைய பிரிவு இல்லை. கடவுளாட்சியில், மக்கள் கடவு ளோடு ஐக்கியமாகின்றனர். இறுதியாகக் கடவுளின் பிர சன்னத்தை வருணிக்கத் திருவெளிப்பாட்டு முறைப்படி மின்னல், பேரிரைச்சல், நிலநடுக்கம் முதலியன நிகழ் கின்றன (காண். யாத். 19 : 16 ; சங். 28 : 3–9).

(எ) செம்மறியும் பறவை நாகமும் : *12 : 1–14 : 20)*

இப்பகுதியில் கிறிஸ்துவுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் எதிராக எழும்பிய தீமையின் செயல்கள் வருணிக்கப்படு கின்றன. உரோமைப் பேரரசு, கொடிய விலங்கின் உருவில்

வருகின்றது. அலகை, அதனைக் கிறிஸ்துவுக்கும், அவரது திருச்சபைக்கும் எதிராகப் பயன்படுத்திக் கொள்கிறது. இப்போராட்டத்தில், கிறிஸ்தவர்கள் விசுவாசத்தோடும், மனவுறுதியோடும் போராடவேண்டும். வெற்றி அவர்களதே.

1. பெண்ணும் பறவை நாகமும்: (12:1-17)

விண்ணகத்தில் அரியதோர் அறிகுறி தோன்றியது; பெண் 12
ஒருத்தி காணப்பட்டாள். அவள் கதிரவனை ஆடையாக அணிந்
திருந்தாள்; நிலவின்மேல் நின்றுகொண்டிருந்தாள்; தலையின்
மீது பன்னிரு விண்மீன்களை முடியாகச் சூடியிருந்தாள். அவள் 2
கருவுற்றிருந்தாள்; பேறுகால வேதனைப் பட்டுக் கடுந்துய
ருடன் கதறினாள். வேறொரு அறிகுறியும் விண்ணகத்தில் 3
தோன்றியது. இதோ நெருப்பு மயமான ஒரு பெரிய
பறவைநாகம் காணப்பட்டது. அதற்கு ஏழு தலைகளும் பத்துக்
கொம்புகளும் இருந்தன. தலைகளிலே ஏழு முடிகள் இருந்தன.
தன் வாலால் விண்மீன்களின் மூன்றிலொரு பகுதியை மண் 4
மீது இழுத்துப்போட்டது. பேறு காலமான அப்பெண்முன்
பறவைநாகம் நின்றது; அவள் பிள்ளையைப் பெற்றவுடன்,
அதனை விழுங்கிவிடக் காத்திருந்தது. எல்லா நாடுகளையும் 5
இருப்புக்கோல்கொண்டு நடத்தவிருக்கும் ஓர் ஆண் குழந்
தையை அவள் பெற்றெடுத்தாள். அக்குழந்தையோ கடவுளி
டம் அவரது அரியணையுள்ள இடத்திற்கு எடுத்துச் செல்லப்
பட்டது. அந்தப் பெண் பாலைவனத்திற்கு ஓடிப்போனாள்.
அங்கே ஆயிரத்து இருநூற்று அறுபது நாட்கள் அவளைப் 6
பேணும்படி கடவுள் ஓரிடத்தை ஏற்பாடு செய்திருந்தார். பின் 7
விண்ணகத்தில் ஒரு போர் உண்டாயிற்று. மிக்கேலும் அவரு
டைய தூதர்களும் பறவைநாகத்தோடு போர் தொடுத்தனர்.
பறவைநாகமும் அதன் தூதர்களும் போரிட்டனர். | பறவை 8
நாகம் தோல்வியுற்றது. விண்ணகத்தில் அவர்களுக்கு இட
மேயில்லாமல் போயிற்று. அப்பெரிய பறவைநாகம் வெளியே
தள்ளப்பட்டது. அலகை என்றும் சாத்தான் என்றும் அழைக் 9
கப்படும் அதுவே ஆதியில் தோன்றிய பாம்பு; உலகனைத்தை
யும் வஞ்சிப்பதும் அதுவே. அது மண்ணுலகுக்குத் தள்ளப்
பட்டது. அத்துடன் அதன் தூதர்களும் தள்ளப்பட்டனர்.
பின்பு விண்ணகத்தில் நான் பெரும் குரல் ஒன்று கேட்டேன்: 10
அது சொன்னதாவது: ''இதோ, வந்துவிட்டது, நம் கடவுள்
தரும் மீட்பு; இதோ, அவரது வல்லமையும் அரசும் வெளியா
யிற்று; இப்போது அவருடைய மெசியாவின் அதிகாரம் விளங்

குகிறது; நம் சகோதரர்களைக் குற்றம் சாட்டியவன் வீழ்த்தப்
பட்டான்; நம் கடவுளின் முன்னிலையில் இரவும் பகலும் அவர்
களைக் குற்றம் சாட்டியவன் ஒழிந்தான். அவர்கள் செம்மறியின் 11
இரத்தத்தினாலும், தாங்கள் சான்று பகர்ந்த வார்த்தையினா
லும் அவனை வென்றனர். அவர்கள் சாவதற்கும் தயங்கவில்லை;
தங்கள் உயிரைப் பொருட்படுத்தவில்லை. ஆகவே, வானமே, 12
அங்கு வாழ்வோரே, அகமகிழுங்கள். ஆனால், வையகமே,
பெருங் கடலே, உங்களுக்கு ஐயோ கேடு! அலகை கடுங் கோபத்
துடன் உங்களிடம் வந்துள்ளது. தனக்கு எஞ்சியிருப்பது
சிறிது காலமே'' என்று அதற்குத் தெரியும். தான் மண்மீது 13
வீழ்த்தப்பட்டதைக் கண்டதும் பறவைநாகம் ஆண் குழந்தை
யைப் பெற்றெடுத்த அப்பெண்ணைத் துரத்திச் சென்றது.
ஆனால் பாலைவனத்தில் குறிக்கப்பட்ட இடத்திற்குப் பறந்து 14
செல்லும்படி பெருங் கழுகின் சிறகுகள் அப்பெண்ணுக்கு அளிக்
கப்பட்டன. அங்கே அப்பாம்பின் கையில் பிடிபடாமல்
மூன்றரை ஆண்டுக் காலம் பேணப்படுவாள். அப்பெண்ணை 15
வெள்ளம் அடித்துச் செல்லும் பொருட்டு அவள் பின்னால்
பறவைநாகம் தன் வாயினின்று ஆறுபோல் தண்ணீர் பாயச்
செய்தது. ஆனால் நிலம் அப்பெண்ணுக்குத் துணை நின்றது. 16
பறவைநாகத்தின் வாயினின்று பாய்ந்த பெரு வெள்ளத்தை
அதுதன் வாயைத் திறந்து உறிஞ்சிவிட்டது. ஆகவே பறவை 17
நாகம் பெண்மீது சினங்கொண்டு, எஞ்சிய அவள் பிள்ளைக
ளோடு போர் தொடுக்கச் சென்றது. அவர்கள் கடவுளுடைய
கட்டளைகளைக் கடைப்பிடித்து இயேசு தந்த சாட்சியத்தை
ஏற்றுக் கொண்டவர்கள்.

இவ்வதிகாரத்தில் வரும் பெண் யார் என்பது பற்றி இரு கருத்துக்கள் நிலவுகின்றன. இடைக்காலத்தில் அறிஞர்கள் நமது ஆண்டவரின் தாயான மரியாள்தான் இப்பெண் என்று கூற முற்பட்டனர். இவ்வாறே அறிஞருள் ஒரு சிலர் இன்றும் கருதுகின்றனர். புனித அருளப்பர் தம்மிடம் ஒப்படைக்கப்பெற்ற இயேசுவின் தாயைப்பற்றி இங்கே குறிப்பிடுகிறார் என்பதை ஏற்பது அவ்வளவு கடினமன்று. எனினும், இவ்வதிகாரத்தில் அமைந்துள்ள அடையாளங்கள், உருவகங்கள், இன்னும் வேறு சில கருத்துக்கள் ஆகியவை எல்லாம் இவ்வித கருத்துக்கு ஏதுவாக இல்லை. எடுத்துக்காட்டாக, அப்பெண் ''பேறுகால வேதனைப்பட்டுக் கதறினாள்'' (வ. 2); ''குழந்தைப் பேறுக்குப்பின் அவள்

பாலைவனத்துக்குத் துரத்தப்பட்டாள்'' (வ. 6); அவள் ''எஞ்சிய தன் பிள்ளைகளோடு'' துன்புறுத்தப்பட்டாள் (வ. 17)–இவையெல்லாம் மரியாளைப்பற்றித்தான் என்று சொல்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதாய் இல்லை. எனவே இங்கு குறிப்பிடப்படும் ''பெண்'' திருச்சபையையேக் குறித்து நிற்கிறாள் என்று மறை நூல் அறிஞர் பலர் கூறுகின்றனர். அப்படியானால்தான் அப்பெண்ணுக்கு இழைக்கப்பட்ட துன்பத்துக்குப் பொருள் இருக்கின்றது. திருச்சபை பிறரால் துன்புறுத்தப்படுகின்றது. கடவுளின் வல்லமையின் கரங்களால் காக்கப்பெறுகின்றது. இந்த ஒரு கருத்து 'திருவெளிப்பாடு' நூல் முழுவதும் பரவிக்கிடக்கின்றது. திரும்பத்திரும்ப வருகின்றது. எனவே துன்பத்தால் வாதிக்கப்படும் இப்பெண்ணும் அந்தத் திருச்சபையே குறித்து நிற்றலில் சீரிய பொருள் இருக்கின்றது.

இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது, மக்கள் குலத்தையோ, ஒருநாட்டையோ, நகரத்தையோ ஒரு பெண்ணாக உருவகம் செய்துப் பேசுவது பழைய ஏற்பாட்டின் ஒரு வழக்கம். எடுத்துக் காட்டாக இசையாஸ் 50 : 1-ஐயும் எரேமியாஸ் 50 : 12-ஐயும் காண்க. எனவே இங்கு வரும் பெண் இறை மக்களும் உண்மை இஸ்ராயேலுமான திருச்சபையையே குறிக்கும் என்று கொள்ளல் தகும். இப்படி சொன்னவுடன் இப்பகுதி மரியாளுக்கு அறவே பொருந்தாது என்றும் கூறிடல் முடியாது. ஒரு வேளை இரண்டு பொருட்களைப் உள்வைத்து அருளப்பர் இப்பகுதியினை வரைந்திருக்கலாம்.

இவ்வதிகாரத்தின் அமைப்பைச் சிறிது மாற்றினால் கருத்துக் கோவை தெளிவாகும் போலும். ஆதலின் 10 முதல் 12 வாக்கியங்கள் ஈறாக, இப்பொழுதுள்ள அவற்றின் இடத்தை மாற்றி, அவற்றை அதிகாரத்தின் இறுதியில் அமைத்துப் பொருள் கூறலாம்.

1–2 : நூலாசிரியர் இப் பெண்ணை வருணிக்க, ஆதி. 37 : 9–10-இல் உள்ள சூசையின் கனவுக் காட்சியைக் கையாளுதலை அறிகிறோம். கடவுளின் உயர்வைக்காட்ட,

சங்கீத ஆசிரியர் கூறிய, "ஒளியை நீர் போர்வையாகக் கொண்டுள்ளீர்" (சங். 103:2) என்னும் வாக்கியமும் ஆசிரியருக்கு இங்குத் துணை நிற்கின்றது. இவை அடையாள மாய்த் தோன்றும் பெண்ணின் உயர்வைக் காட்டும்.

2: புதிய உலகை வருணிக்கப் பழைய ஏற்பாட்டில் கையாண்டுள்ள வருணனைகள் இவை. "சீயோன் பிரசவ வேதனைப்படுமுன்னே பிள்ளை பெற்றுள். பிரசவ நேரம் வருமுன்னே ஆண் குழந்தையை ஈன்றெடுத்தாள்...... ஒரே நொடியில் மக்களினம் ஒன்றைப் பிறப்பிக்கமுடியுமோ? ஆயினும், சீயோன் பிரசவ வேதனையுற்றவுடனே தன் பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள்......" என்று இசையாசு இறைவாக்கினர் மீட்பரின் காலத்தைப் பற்றிக் கூறுவதைக் கவனிக்கவும் (இசை. 66:7–14; 26:17–19; காண். ஓசே 13:13–15; மிக். 4:10). இந்தப் பின்னணியில் ஆராயுங் கால், மீட்பரைத் தோற்றுவித்த உண்மையான இஸ்ராயேல் தான் இங்கே ஒரு பெண்ணுகக் காட்டப்படுகின்றது. மேலும், இந்த இஸ்ராயேலினின்று இயேசு தெரிந்துகொண்ட பன்னிரு அப்போஸ்தலர்களும், அவரது இறப்பிலே பெரும் வேதனை அனுபவித்தவரன்றே! ஆண்டவர் இவர்களது வேதனையைப்பற்றிக் கூறிய வார்த்தைகளைப் புனித அருளப் பரே தமது நற்செய்தி நூலில் எழுதி வைத்துள்ளார்: "அவர்கள் தம்மை வினவ விரும்புவதை இயேசு அறிந்து, அவர்களை நோக்கி, 'இன்னும் சிறிது காலத்தில் என்னைக் காணமாட்டீர்கள், பின்னும் சிறிது காலத்தில் மீண்டும் என்னைக் காண்பீர்கள், என்று நான் சொன்னதைப் பற்றி உங்களுக்குள் உசாவுகிறீர்கள் அல்லவா? உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள், உலகமோ மகிழும். நீங்கள் துன்புறுவீர்கள், ஆனுல், உங்கள் துன்பம் இன்பமாக மாறும். குழந்தை பிறக்கும்போது, தாயானவள், தனக்குப் பேறு காலம் வந்துவிட்டதால் துன்புறுகிறுள். குழந்தையைப் பெற்றெடுத்த பின்போ, உலகில் மனிதன் ஒருவன் தோன்றி ஞன் என்ற மகிழ்ச்சியால், தன் வேதனையை மறந்து

விடுகிருள். அதுபோலவே, இப்பொழுது நீங்கள் துன்புறு கிறீர்கள். ஆனால் நான் உங்களை மீண்டும் காணும்போது, உங்கள் உள்ளம் மகிழ்வுறும். உங்கள் மகிழ்ச்சியை உங்களிட மிருந்து எவனும் பறித்துவிடமாட்டான்'' (அரு. 16:19–22).

3–9 : இங்கே இயேசுவின் மனிதப் பிறப்பைப் பற்றி பேசவில்லை. அவர் சிலுவையில். மீட்பின் முதற்கனியாகப் பிறத்தலே, இங்கு உணர்த்தப்படுகின்றது. (காண். கொலோ. 1:15, 18).

இயேசு சிலுவையில் இறந்து, மகிமையடைந்ததால் தான், மீட்பின் புதிய மக்கள் பிறந்தனர். இயேசு இவ்வாறு புதிய உலகை உருவாக்கி அதனை ஆளும் நிகழ்ச்சியை 5-ஆம் வாக்கியம் கூறிவிடுகின்றது. அப்பெண் பெற்றெடுத்த குழந்தை எல்லா நாடுகளையும் இருப்புக்கோல் கொண்டு ஆளும். இது கிறிஸ்துவின் அதிகாரத்தைக் குறிக்கும். இச் சொற்கள் சங். 2:9-இல் கிறிஸ்துவின் அரச மகிமையைக் குறிப்பவை. அதனால்தான் அவர், விண்ணகத் தந்தைக்குச் சரியொத்தவராய் விண்ணேற்றமானார். கிறிஸ்துவின் இந்த மீட்பின் நிகழ்ச்சியில் பறவை நாகம் தோற்கடிக்கப்பட்டது. பறவை நாகம் என்பது பேயின் அடையாளம். அதன் ஏழு தலைகளும், பத்துக் கொம்புகளும், அதன் வன்மைக்கும், வலிமைக்கும் அடையாளங்கள். விண்மீன்களின் மூன்றி லொரு பகுதியை இழுத்தல். அது உலகின்மீது கொண்ட அதிகாரத்திற்கு அடையாளம் (காண். லூக். 4:6; அரு. 12:31; 14:30; 16:11). யூதர்களின் பாரம்பரியத்தில் பேய் இஸ்ராயேலைக் கெடுக்கும் மூல எதிரி. ஆதி ஆகமத்தில் ஏவாளை வஞ்சித்தது இங்கே நினைவுக்குக் கொண்டு வரப்படு கிறது. இப்பேயை இயேசு, தமது இறுதி நேரத்தில் வென் ருர். "இப்பொழுதே, இவ்வுலகின் தலைவன் புறம்பே தள்ளப் படுவான்'' (அரு. 12:31).

இந்த வெற்றியை எடுத்துரைப்பதற்காகத்தான் மிக் கேல் தூதரும் அவருடைய துணைவர்களும், பறவை-நாகத் தோடு போர் புரிந்து, அதனை வென்றதாக அருளப்பர் கூறு

கிறுர். இங்கே மிக்கேல் தூதர் இஸ்ராயேலின் பாதுகாவலர் என்ற யூத மக்களின் நம்பிக்கை காணக்கிடக்கின்றது. இங்கு நிகழும் போர் விண்ணகத்தில் நடந்ததாக ஏன் அருளப்பர் கூறவேண்டும்? ஏனெனில், கிறிஸ்துவின் உயிர்ப்பில்தான் சாத்தான் இறுதித் தோல்வியை அடைந்தான் என்பதை உணர்த்துவதற்காகவே.

பேயை வென்ற இயேசுவின் விண்ணேற்றத்திற்குப்பின், திருச்சபை (உண்மையான இஸ்ராயேல்) பாலைவனத்துக்கு ஓடிப்போகிறது. (2. 5). பாலைவனம், எகிப்திலிருந்து வந்த யூத மக்களைத் தூய்மைப்படுத்தும் இடம். வாக்குறுதி நாடாகிய காஞன் நாட்டை அடையுமுன் அவர்கள் நாற்பது ஆண்டுகள் பாலை நிலத்தில் தூய்மைபெற வேண்டியிருந்தது. அங்கே அவர்கள் பலவித துன்பங்களை அனுபவித்தனர். அதுபோன்று, திருச்சபை தன் இறுதி இன்ப நாடாகிய வானகம் சேருமுன், இவ்வுலகில் பலவித துன்ப துயரங்களை அனுபவிக்க வேண்டும். துன்பக் காலத்தில் கடவுள் அதனைப் பேணிக் காத்திடுவார். எகிப்தினின்று வெளியேற்றம்பெற்ற யூத மக்களுக்குப் பாலைவனத்தில், 'யாவே' அளித்த மன்ஞவையும், கற்பாறையினின்று சுரக்கச் செய்த நீரையும், ஆசிரியர் இங்கு உள்ளக்கிடக்கையிருத்திப் பேசுகிறுர் என்பதில் ஐயமில்லை. பழைய ஏற்பாட்டு இறை மக்களுக்கு நடந்தது புதிய ஏற்பாட்டு இறை மக்களில் நிறைவுபெறுகின்றது என்பதை அருளப்பர் சொல்லாமல் சொல்கின்றுர்.

13–17 : பேயின் தாக்குதல்கள், பாலைவனத்திலும் வந்திடினும், திருச்சபை, கடவுளால் ஏற்பாடு செய்த இடத்தில் அதாவது, பாதுகாப்பான நிலையில் இருப்பதால், அதற்கு எவ்வித தோல்வியும் ஏற்படாது. 14-ஆம் வாக்கியத்தில், பெண்ணுக்கு அளிக்கப்படும் சிறகுகள் கடவுளின் அரவணைப்பைக் காட்டுகின்றன. கழுகுகள், தங்கள் குஞ்சுகளைத் தூக்கிச் செல்வதுபோல், 'யாவே' பாலைவனத்தில் வாழ்ந்த யூதமக்களை, வாக்குறுதி நாட்டுக்கு அழைத்துச் சென்றதாக வருணிப்பதை யாத். 19:4; உபா. 32:11, 12-இல் காண்க. திருச்சபையை அழிப்பதற்குப் பறவை

நாகம் அனுப்பும் வெள்ளம், தீமையின் வெள்ளப்பெருக்கு இது சங்கீதங்களில் காணப்படும் உருவகமாகும் (காண். சங். 17:4 ; 31:6 ; 123:4). திருச்சபைக்குக் கடவுளின் பாதுகாப்பு இருப்பதால், அந்தத் தீங்கும் மறைந்துவிடும். திருச்சபையையே அழிக்க முற்பட்ட பேய், அதனை அழிக்கவியலாததால் (காண். மத். 16:18), அதன் உறுப்பினர்களைத் துன்புறுத்தும். இவர்கள் எல்லாரும் அதன் தாக்குதல்களுக்கு இலக்காவர். கிறிஸ்துவுக்குப் பிரமாணிக்கமாயிருந்து உயிர் துறந்தால், அவருக்குச் சான்று பகர்ந்தவராவார்.

10–12 : சாத்தானின் தோல்வியும், கிறிஸ்துவின் மீட்பும், திருப்பண்ணில் கூறப்படுகின்றன. இங்குச் சாத்தானைக் குற்றம் சாட்டுபவனாக வருதலைக் காண்க. கிறிஸ்தவ மக்களை வஞ்சிக்கும் பேயைப்பற்றி, லூக்காசும் குறிப்பிடுகிறார் (காண். லூக். 22:31). உலகில், பேயின் தாக்குதல்கள் இன்னும் நீடிப்பதால், உலகத்தில் உள்ளவர்கள் துன்புறத்தான் வேண்டும். கிறிஸ்துவில் இறப்பதால்தான், இப்பேயை வெல்லமுடியும். பேயை வென்றவர்கள் எல்லாரும் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்தவர்கள். வெற்றி கொண்ட மறைத்தியாகிகள் இத்திருப்பண்ணைப் பாடுகின்றனர் போலும்.

2. கடலினின்று வெளிவந்த விலங்கு : (13:1-10)

13
நான் கடற்கரையில் நின்றுகொண்டிருந்தேன். 1 அப்
போது கொடியதொரு விலங்கு கடலிலிருந்து வெளி
வரக்கண்டேன். அதற்கு ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும்
இருந்தன. அதன் கொம்புகளில் பத்து முடிகளும், அதன் தலை
களில் தூஷணப் பெயர்களும் இருந்தன. நான் கண்ட 2
விலங்கு சிறுத்தைபோல இருந்தது. அதன் கால்கள் கரடியின்
கால்கள்போலும், வாய் சிங்கத்தின் வாய்போலும் இருந்தன.
அதற்கு அந்தப் பறவை நாகம் தன் வல்லமையையும் அரி
யணையையும் பேரதிகாரத்தையும் அளித்தது. அதன் தலை 3
களுள் ஒன்று படுகாயப்பட்டிருந்ததாகக் காணப்பட்டது.
ஆனால் அப்படுகாயம் குணமாய்விட்டது. அவ்விலங்கைப்
பார்த்து, மண்ணில் வாழ்வோர் அனைவரும் வியந்து அதன்
பின் சென்றனர். பறவை நாகம் அவ்விலங்குக்கு அதிகாரம் 4
அளித்ததால், மக்கள் நாகத்தை வணங்கி, ''விலங்குக்கு

ஒப்பானவன் யார்? இதனோடு போரிடக்கூடியவன் யார்?''
என்று அவ்விலங்கையும் தொழுதார்கள். அவ்விலங்கு ஆணவச் 5
சொற்களையும் தூஷணங்களையும் பேசுவதற்கு விடப்பட்டது.
நாற்பத்திரண்டு மாதமளவு அதற்கு அதிகாரம் அளிக்கப்பட்
டது. கடவுளுக்கு எதிராகத் தூஷணம்பேச வாய் திறந்து, 6
அவரது பெயரையும் உறைவிடத்தையும், அதாவது விண்
ணில் உறைபவர்களையும் தூஷிக்கலாயிற்று. இறைமக்களோடு
போர் தொடுக்கவும், அவர்களை வெல்லவும் அதற்கு அனுமதி 7
கிடைத்தது. குலம், இனம், மொழி, நாடு ஆகிய ஒவ்வொன்
றின்மீதும் அதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. மண்ணில் 8
வாழ்வோர் அனைவரும், அதாவது பலியிடப்பட்ட செம்மறியா
னவர் வைத்திருக்கும் வாழ்வு நூலில் உலகத் தொடக்க முதல்
பெயரெழுதப்படாதவர் அனைவரும், அதைத் தொழுவர். செவி 9
யுள்ளவன் இதைக் கேட்கட்டும். சிறைக்குக் குறிக்கப்பட்டவன்
சிறைக்குச் செல்லத்தான் வேண்டும்; வாளால் கொல்லப்பட 10
வேண்டியவன் வாளால் கொல்லப்படத்தான் வேண்டும்.
ஆகவே இறைமக்கள் மனவுறுதியும் விசுவாசமும்கொண்டு
விளங்க வேண்டும்.

1: கிறிஸ்துவின் உயிர்ப்பிலே தோல்விகண்ட பேய் மண்ணகத்தில் மக்களை வதைக்கத் தொடங்குகிறது. கடலினின்று அஃது அனுப்பும் கொடிய விலங்கு வினோதமான தொன்று இதற்குரிய உடலமைப்புக்களைத் தானி. 7: 2-8-இல் காணலாம். தானியேல் கூறும் விலங்குகள் எல்லாம் இஸ்ராயேல் மக்களைத் துன்புறுத்திய அக்கால வல்லரசுகளைக் குறிப்பவை. இங்கே கிறிஸ்தவ மக்களைத் துன்புறுத்தும் பேரரசாகிய உரோமையைக் குறித்துப் பேசுகிறது திருவெளிப்பாடு. விலங்கு கொண்டிருந்த ஏழு தலைகளும், உரோமைப்பேரரசின் முக்கிய மன்னர் எழுவரைக் குறிப்பன போல் அமைந்துள்ளன. அதன் பத்துக்கொம்புகளும் அதிகாரத்தைக் குறிப்பன. இம்மன்னர்கள் எல்லாரும் ஒருவர் பின் ஒருவராகக் கிறிஸ்துவர்களைத் துன்புறுத்தியவர்கள். மன்னர் வழிபாட்டை வற்புறுத்தி அரசாண்டவர்கள். தங்களையே தெய்வம் என்றும், கடவுளின் மகன் என்றும், உலகின் மீட்பர் என்றும், ஆண்டவர் என்றும் பலவாறாகக் கூறிக்கொண்டனர். பிறர் அப்படிக்கூறி வணங்கவும் வேண்டுமென்று ஆணையிட்டனர். இப்பெயர்கள் எல்லாம் இறை

நிந்தைச் சொற்களென (தேவதூஷணங்களென) நூலாசிரியர் கூறுகின்றார்.

2 : தானியேல் கண்ட நான்குவகை விலங்குகளின் உருவ அமைப்பெல்லாம், இங்கே ஒரே விலங்கில் காணப்படுகின்றது. அதாவது, இவ்விலங்கு பதுங்கிப் பாயும் தன்மையதாயும் (சிறுத்தை), வலிமை மிக்கதாயும் (கரடியின் கால்கள்), அச்சம் வருவிக்கும் தன்மையதாயும் (சிங்கத்தின் வாய்) இருக்கின்றது. இதன் பொருள் என்னவெனில், அக்காலத்தில் உரோமைப் பேரரசு அவ்வளவு வலிமைமிக்கதாய், பிறரை அச்சுறுத்துவதாய், கொடியதாய் இருந்தது. இப்பேரரசு, உலகில் தீங்கிழைக்கும் பொருட்டுப் பேயால் ஏவப்பட்டிருந்தது. அலகை உலகின் தலைவனாதலின் (காண். லூக். 4:6), உரோமைப் பேரரசைத் தனது அழிவு வேலைக்கு அதனை வயப்படுத்திக் கொண்டான்.

3 : நீரோவின் தற்கொலைக்குப் பின் உள்நாட்டுப் போரினால், உரோமைப் பேரரசின் முன்னேற்றம் சிறிது தடைப்பட்டது. அதனால்தான், இவ்விலங்கின் தலைகளில் ஒன்று படுகாயமுற்றதாக இங்கே கூறப்பட்டுள்ளது, ஆனால், அடுத்து, ஆட்சி பீடம் ஏறிய வெஸ்பாசியம் (Vespasiam) இந்நிலையைச் சீர்செய்து விட்டான். அப்படுகாயமும் குணமாகி விடுகிறது.

4 : அலகையின் சூழ்ச்சிக்கு இலக்கானவர்கள் எல்லாரும் உரோமை நாட்டு மன்னர் வழிபாட்டை ஏற்றுக்கொண்டனர். ஆதலின், அவர்கள் ‘இவ்விலங்குக்கு ஒப்பானவன் யார்?’ என்று கூறுவதில் வியப்பில்லை. இச்சொற்றொடர் இங்குக் கேலியாகக் கையாளப்பட்டுள்ளது என்பது நன்கு விளங்குகிறது. ஆதிகாலத்தில் வானதூதர்கள் சிலர் கடவுளுக்கு எதிராக எழுந்தபோது, மிக்கேல் தூதரன்றோ “கடவுளுக்கு ஒப்பானவன் யார்?” என்று கடவுள் சார்பில் பறைசாற்றி அவர்களை வென்று வீழ்த்தினார்! அவரைப் போன்றனன்றோ இவர்களும் விலங்கைக் குறித்துக் கூறுகின்றனர். இவர்கள் இவ்வாறு கூறுதல் தகாது. விலங்கு வீழ்த்தப்

படும் என்பது ஆசிரியருக்குத் தெரியும். ஆதலின், வீழ்த்தப்படும் இவ்விலங்கைக் குறித்து இவர்கள் இப்படிப் பெருமையடித்துக்கொள்கின்றனரே என்று இழிந்துரைப்பதுபோல், இச்சொற்றொடர் அமைந்துள்ளது. பேய் எவ்வாறு மனிதர்களைத் தன் கருவிகளாக அமைத்துக் கொள்கிறது என்பது, இவ்வதிகாரத்தில் எவ்வளவோ தெளிவாக விளங்குகிறது. இறைவனுக்கும் இறைமக்களுக்கும், எதிராகப் போர் தொடுத்த உரோமை நாட்டு மன்னர்கள், எல்லா அதிகாரத்தோடும் இப்பேய் வேலையில் ஈடுபட்டனர் இந்த விலங்குக்கு அனுமதி கிடைத்ததாக 7-ஆம் வாக்கியம் கூறுகிறது. எல்லா அதிகாரமும் கடவுளிடமிருந்தே வருவதால், இந்தத் தீச்செயலைப் புரியும் பேயும் அவருடைய அனுமதியின்றி, ஒன்றும் செய்திருக்க முடியாது என்னும் கருத்தைக் காண்கிறோம்.

5–7 : 42 மாதங்கள் துன்ப துயரத்தின் காலமாதலின், *(11:2; 12:6, 14).* திருச்சபையின் வாழ்வில், துன்பதுயரம் எப்பொழுதும் வந்துகொண்டுதான் இருக்கும். துன்பத்தின் வகையும், அது தோன்றும் இடம், பொருள், ஏவல் வேறுயினும், இவ்வுலகில் திருச்சபை சோதனைக் காலத்தினின்று விடுபட்டதன்று.

6 : இவ்விலங்கு, ‘கடவுளின் உறைவிடத்தை இழிவாகப் பேசுவது’ இரு உண்மைகளை நம் நினைவுக்குக் கொண்டு வருகிறது. கடவுளின் உறைவிடம் வானகமாதலின், வானகத்திற்கும், அங்குள்ளோர்க்கும் எதிராக நடத்தின தீச்செயல் என்பது ஒருபுறமிருக்க, அருளப்பர் வேறொரு நிகழ்ச்சியை மனதில் வைத்துப் பேசுகிறார். ‘யாவே’யின் மகிமை, எருசலேம் ஆலயத்தின் தூயகத்தில் தங்கியிருந்தது என்று யூதர்கள் நம்பி வந்தனர். அங்கிருந்த வாக்குறுதிப் பெட்டகமே அதன் இருக்கை. இந்தத் தூய இடத்தில், உரோமை மன்னருள் ஒருவரான கலிடுவா *(37–41)* என்பவன் தன் உருவச் சிலையை வைக்க முயன்றான். யூதர்களின் எதிர்ப்பைச் சமாளிக்க ஒரு போர் அணியையும் திரட்டினான். ஆனால், அதை நிறைவேற்று முன் இறந்தான்.

இதன் எதிரொலியாகத்தான், திருவெளிப்பாடு இறைவனின் உறைவிடத்தை இழிவுப்படுத்துதல் பற்றிக் கூறுகிறது.

8–9 : இவ்விதமாக, மன்னர் வழிபாட்டில் ஈடுபட்டு உண்மைக் கடவுளைவிட்டு விலகியவர் இல்லாமலில்லை. ஆனால், அவர்கள் யாவரும் வாழ்வின் நூலில் தங்கள் பெயர் களைக் கொண்டிருக்காதவர்கள். இந்த 8-ஆம் வாக்கியத்தை, கிரேக்க மூலநூற்படி, இருவிதமாய் மொழிபெயர்க்கலாம்.

(அ) நமது மொழிபெயர்ப்பில் உள்ளவாறு, அல்லது, (ஆ) ''உலகத் தொடக்கமுதல் பலியிடப்பட்ட செம்மறி யானவர் வைத்திருக்கும்........'' என்றும் மொழிபெயர்க் கலாம். கிரேக்க மூலத்தின் வாக்கிய அமைப்பு, இவ்விரு மொழிபெயர்ப்புக்களுக்கும் இடம்தரும் முதல் மொழி பெயர்ப்புப்படி பார்த்தால், உலகம் உருவாகுமுன்னரே, கடவுள் நம்மைக் கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொண்டார் (காண். எபே. 1 : 4) என்னும் பொருள் வரும். இது 17 : 8-இல் உள்ள கருத்துக்கு இணையானது. இரண்டாவது மொழிபெயர்ப்பினால் வரும் பொருள் 1 இரா. 1:19–20-இல் உள்ள கிறிஸ்துவின் பலியின் நித்திய தன்மையை ஒத்துள் ளது. அதாவது, உலகம் தோன்றுமுன்னே, கிறிஸ்து மீட்ப ராக முன்னறிவிக்கப்பட்டார். முதற் பொருளில் நாம் நித்தியகாலமாகக் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளோம் என்பது சிறப்பிடம் பெறுகிறது இரண்டாம் பொருளில் கிறிஸ்துவின் பலி நித்தியகாலமாக முன்னறிவிக்கப்பட்டது சிறப்பிடம் பெறுகிறது. எப்பொருளை ஏற்றாலும், என்றும் வாழும் இறைவனே நம்மை வானகவாழ்வுக்குத் தேர்ந் தெடுப்பவர். அவரே, நமக்கு வரும் துன்ப துயரங்களில் ஆறுதல். எல்லாச் சோதனைகளினின்றும் நம்மை மீட்பவரும் அவரே. கடவுளின் இந்த முன்னேற்பாட்டை யாரும் மாற்றமுடியாது.

10 : உலகில், துன்பத்தை அனுபவிக்கத்தான் வேண் டும். அது கடவுளின் திட்டத்தின்படி நிகழும். வாளுக்கு இறையானாலும், சிறைத் தண்டனைக்கு உள்ளானாலும்,

எல்லாம் கடவுளின் மாறுத் திட்டமே. ஆதலின், இறை மக்கள் மனவுறுதியும் விசுவாசமும் கொண்டு விளங்கவேண்டும். ஆனால், இந்த 10-ஆம் வாக்கியத்தில், 'வாள் எடுப்போர் எல்லாரும். வாளால் மடிவர்'' (மத். 26 : 52) என்னும் இயேசுவின் எச்சரிக்கை தொனிப்பதைக் கவனியாதிருக்கமுடியாது

ஒருவேளை, வாளெடுத்துத் துன்புறுத்திய தீயோர் உரியகாலத்தில், தண்டனை பெறுவர் என்னும் கருத்தையும் இங்கே காணலாம் போலும்.

3. மண்ணினின்று வெளிவந்த விலங்கு (13:11—18):

அப்போது மண்ணிலிருந்து வேறொரு விலங்கு வெளி 11
வரக் கண்டேன். செம்மறியின் கொம்புகள்போன்ற இரு
கொம்புகள் அதற்கு இருந்தன; ஆனால் அது பறவை நாகத்
தைப்போல் பேசியது; முதல் விலங்கு காட்டிய அதிகாரத்தை 12
யெல்லாம் அதன் சார்பாக இரண்டாம் விலங்கு காட்டியது,
படுகாயத்திலிருந்து குணமாக்கப்பட்ட அம்முதல் விலங்கை
மண்ணுலகும் அதில் வாழ்வோரும் தொழும்படி செய்தது.
அது பெரிய அருங்குறிகள் புரிந்தது. எல்லாரும் பார்க்க 13
விண்ணினின்று நெருப்பு விழும்படிகூடச் செய்தது. தனக்குக் 14
கிடைத்த வல்லமையால், அம்முதல் விலங்கின் சார்பாகச் செய்த
அருங்குறிகளின் வாயிலாக, மண்ணில் வாழ்பவர்களை அது
வஞ்சித்தது. வாளால் காயப்பட்டிருந்தும் உயிர் வாழ்ந்த
அவ்விலங்கிற்குச் சிலை அமைக்கவேண்டுமென்று அவர்களிடம்
சொன்னது. அச்சிலைக்கு உயிரளித்துப் பேசச் செய்யவும், 15
அதைத் தொழாதவர்களைக் கொன்றுவிடவும், இரண்டாவது
விலங்குக்கு வல்லமை கிடைத்தது. சிறியோர், பெரியோர், 16
செல்வர், வறியவர், குடிமக்கள், அடிமைகள் ஆகிய அனைவரும்
தம் வலக்கையிலோ நெற்றியிலோ அடையாளம் போட்டுக்
கொள்ளும்படி செய்தது. அந்த விலங்கின் பெயரையோ 17
அதன் பெயரின் எண்ணையோ அடையாளமாய்க்கொண்டிராத
வர்கள், வாங்கவோ விற்கவோ முடியாதிருந்தார்கள். இங்கே 18
அறிவுக் கூர்மை தேவைப்படுகிறது. அறிவுள்ளவன் விலங்கின்
எண்ணைக் கணிக்கட்டும். அது ஒரு மனிதனைக் குறிக்கும்
எண். அவ்வெண் அறுநூற்று அறுபத்தாறு.

11–18 : பறவை நாகத்தின் கையாளாகிய இவ்விரண்டாம் விலங்கு, சின்ன ஆசிய நாடுகளில் உரோமைப் பேரரசின் கையாட்களாய் வேலைசெய்து மன்னர் வழிபாட்டை மக்களிடையே பரப்ப முனைந்தவர்களைக் குறிக்கும் (காண். *16 : 13; 19 :20; 20 : 10).* அதனால்தான் இவர்களின் செயல்கள் முதல் விலங்குக்குச் சார்பாக அமைகின்றன. இவர்கள் மக்களைக் கவர்ந்திழுக்க, மந்திரவித்தைகளைக் கையாண்டனர். முற்காலத்தில், எகிப்து நாட்டில் பாரவோன் மன்னனின் அரண்மனையிலும், மந்திரவித்தைகள் நடைபெற்றதை, யாத்திராகமம் கூறும் (யாத். *7:11, 22).* இவ்விதப் ''போலி இறைவாக்கினர்கள் தோன்றி, கூடுமானால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும், ஏமாற்றக்கூடிய அருங்குறிகளும், அற்புதங்களும் செய்து காட்டுவார்கள்'' என்பது ஆண்டவர் இயேசுவின் திருமொழி (மாற். *13:22).* எதிர்க்கிறிஸ்துவின் இவ்வித சக்தியினைப்பற்றிப் புனித சின்னப்பர் கூறுவது: ''சாத்தானின் வல்லமையோடு (அவன்) வருவான். எல்லா வகையான போலி அருங்குறிகளையும், அற்புதங்களையும், வல்லமைமிக்க செயல்களையும் செய்து காட்டுவான். அழிவுறுபவர்களுக்குக் கேடாக, அநீத ஏமாற்றுச் செயல்களெல்லாம் நடக்கும்'' (2 தெச. *2:9-10).* ஆதலின், அவர்கள் பேயின் ஆற்றல் கொண்டு, இவ்விதப் போலி அருங்குறிகளைச் செய்து, மக்களை வஞ்சித்தது வியப்பன்று. மன்னன் சிலைக்கு வழிபாடு செலுத்தாதவன் கொலைத் தண்டனைக்குரியவனெனினும், அத்தண்டனை எப்பொழுதும் அமுலாக்கப்படவில்லை. ஆனால் கிறிஸ்தவர்கள் வணிகத்திலோ, வருவாய் தரும் வேறு எந்த ஊழியத்திலோ ஈடுபட்டு வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ள முடியவில்லை.

இவ்வகைப் போலி இறைவாக்கினர்களால் வஞ்சிக்கப்பட்டவரும் இருந்தனர். அத்தகையோர் சமுதாயத்தின் பல நிலைகளிலும் காணப்பட்டனர். அவர்கள் யாவரும் மன்னர் வழிபாட்டினர் என்பதைக் குறிக்க, நெற்றியிலோ வலக்கையிலோ அடையாளம் போட்டுக்கொண்டனர்.

இஃது ஒருவனை உரோமைப் பேரரசனுக்குச் சொந்தமாக்கு கிறது. அதுமுதல் அவன் எப்பொழுதும் உரோமைப் பேர ரசின் பாதுகாப்புக்கு உரியவன். இவர்கள் கடவுளுடைய ஊழியர்கள் என்று முத்திரையிடப்பட்டோருக்கு எதிரான வர்கள் (காண். 7:3). யூதபக்தர்களும் தங்கள் மரபுக்கு ஏற்ப, இடக்கையின் மணிக்கட்டிலும் நெற்றியிலும் சீட்டுப் பட்டங்களைக் கட்டியிருந்தனர் என்று மத். 23:5 கூறுகிறது.

இறுதி வாக்கியத்தில் (18) இவ்விலங்கின் எண் சொல் லப்படுகிறது. எபிரேய, கிரேக்க, இலத்தீன் மொழிகளில், ஒவ்வொரு எழுத்துக்கும் உரிய எண் மதிப்பு உண்டு. இங்கே அவ்விலங்சின் எண் 666. ''நீரோ-சீசர்'' என்னும் பெயரை எபிரேய மொழியில் எழுதி (Nrwn qsr) அவ்வெழுத்துக் களுக்குரிய எண்களைக் கூட்டிப்பாக்குமிடத்து (50 + 200 + 6 + 50 + 100 + 60 + 200) = 666 ஆகும். இலத்தீன் மொழி யில் எழுதிப் பார்த்தால். அவ்வெழுத்துக்களின் கூட்டுத் தொகையும் 666 ஆகும் (N = 50 + E = 6 + R = 500 + O = 60 + N = 50). இலத்தீன் மொழியில் ''நீரோன்'' (Neron) என்று எழுதாமல் ''நீரோ'' (Nero) என்று எழுதினல், N—கு உரிய 50 குறைய 616 என்ருகும். இவ்வாக்கியத்தின் மாற்றுப் பாடம் ஒன்று, 666கு மாருக 616 ஆகவும் குறிப் பிடுகிறது. அது எவ்வாருயினும், இந்த எண் நீரோ மன்ன னைக் குறிக்கும் என்பதில் ஐயமில்லை. அவன்தான் கிறிஸ் தவர்களுக்கு எதிராக முதன் முதலில் மறையெதிர்ப்பைத் தொடங்கியவன். மன்னர் வழிபாட்டைத் தொடங்கி, கிறிஸ்தவர்களைப் பெருந்துன்பத்திற்கு ஆளாக்கியவன். அது மட்டுமன்று, இவன் இறந்த பின்னும், மறுவாழ்வுடன் மீண்டும் வருவான் என்னும் ஒரு நம்பிக்கை அக்காலத்தில் நிலவியது. அருளப்பர் இந்நூலை எழுதிய காலத்தில் ஆண்ட தொமீசியனை மறுவாழ்வு பெற்ற நீரோ என்று மக்கள் கருதி வந்தனர். ஆதலின், நீரோ மறையெதிர்ப்பினை நடத்தியது மட்டுமன்றி, பின்னர் தொமீசியன் உருவிலும் வந்து கிறிஸ்த வர்களைத் துன்புறுத்தினன் என்ற கருத்து ஆதிகாலக் கிறிஸ்தவர்களிடையே நிலவியிருந்தது. இவ்விதச் சூழ்நிலை

யில் திருவெளிப்பாடு நீரோ மன்னனை இவ்விலங்கிற்கு ஒப்பிட்டுக் கூறுவதில் எவ்விதத் தவறுமில்லை.

4. செம்மறியின் தோழர் : (14 : 1-5)

பின்பு இதோ, சீயோன் மலைமீது செம்மறியானவர் நிற் 14
கக் கண்டேன். அவரது பெயரையும் அவருடைய தந்தையின்
பெயரையும் தங்களது நெற்றியிலே பொறித்திருந்த நூற்று
நாற்பத்து நாலாயிரம் பேர் அவரோடு இருந்தனர். பின் 2
விண்ணினின்று ஒரு குரல் கேட்டது. அது பெருவெள்ளம்
போலும், பேரிடி முழக்கம்போலும் ஒலித்தது. நான் கேட்ட
குரல் யாழை மீட்டுவோர் எழுப்பும் இசைபோலும் இருந்தது.
அரியணை முன்னிலையில் நான்கு உயிர்களுக்கும் மூப்பர்களுக் 3
கும் முன்பாக அவர்கள் புதியதொரு பாடலைப் பாடினார்கள்.
மண்ணுலகினின்று மீட்கப்பட்ட நூற்று நாற்பத்து நாலா
யிரம் பேரைத் தவிர மற்றெவரும் அந்தப் பாடலைக் கற்க இயல
வில்லை. இவர்கள் பெண்களோடு சேர்ந்து தங்களை மாசுபடுத் 4
தாதவர்கள் : கன்னிமை காத்தவர்கள். இவர்கள் செம்மறி
செல்லுமிடமெல்லாம் அவரைத் தொடர்ந்து செல்பவர்கள்.
கடவுளுக்கும் செம்மறிக்கும் அர்ச்சிக்கப்பட்ட முதற்கனிகளாக
மனித குலத்தினின்று மீட்கப்பட்டவர்கள். இவர்கள் வாயி 5
னின்றும் பொய் வெளிப்பட்டதில்லை. இவர்கள் மாசற்றவர்கள்.

பதிமூன்றாம் அதிகாரத்தில் கண்ட இரு விலங்குகளின் தீயசெயல்களுக்குப்பின், இவ்வதிகாரம் நேர்மாறான ஒரு காட்சியைக் காட்டுகிறது. கடவுளின் திருச்சபை எவ்வித எதிர் சக்திகளையும் வென்று என்றும் நிலைநிற்கக்கூடியது என்னும் உண்மை நன்குப் புலப்படுகிறது.

1 : செம்மறி (கிறிஸ்து) சீயோன் மலைமீது நிற்கும் காட்சியோடு இவ்வதிகாரம் தொடங்குகிறது. பழைய ஏற்பாட்டில் சீயோன் மலை 'யாவே'யின் அரியணையாகக் கருதப்பட்டது (காண். மிக். 4 : 7 ; இசை. 24 : 23). இதுவே மெசியா—மன்னனின் புனித மலையெனவும் (சங். 2 : 6) கூறுகிறது. இதனைப் புனித சின்னப்பர் 'உயிருள்ள கடவுளின் நகர்' (எபிரே. 12 : 22) என்றும் குறிப்பிடுகின்றார். இறைவாக்கினரின் நூல்களில் சீயோனை மெசியாவின் காலத்தில் எஞ்சியோரைக் (remnant) கூட்டிச்சேர்க்கும் இடமெனக் கூறுதல் வழக்காகும் (காண். 2 அரசர். 19 : 30, 31 ;

யோவேல். 2 : 32 ; சொப்போ. 3 : 11–13). கிறிஸ்து தமக்குச்சான்று பகர்ந்து இறுதிவரை நிலைத்திருந்தோரை இறுதிக்காலத்தில் கூட்டிச் சேர்த்தலை இங்கு வருணிக்கிறார் அருளப்பர். இக்காட்சி ஒழுங்குப்படி நூலின் இறுதியில் வந்தால் பொருத்தமாக இருக்கும். ஆனால் இவ்விறுதி நிகழ்ச்சி முன் கூட்டியே காட்டப்படுகிறது போலும்! கிறிஸ்துவைச் சூழ்ந்திருப்பவர்கள் யாவரும் 7-ஆம் அதிகாரத்தில் உள்ளது போல் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் என்னும் முறையில் நெற்றியிலே முத்திரையைப் பதிப்பித்திருக்கின்றனர். கடவுளின் முத்திரை, செம்மறியின் முத்திரை என்று இரு முத்திரைகளாசப் பிரித்துக்கூறத் தேவையில்லை. கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் யாவருமே விண்ணகத் தந்தைக்கும் சொந்தமானவர்கள். அவர்களின் தொகை 1,44 000. இது ஒரு முழுமையைக் குறிக்கும் எண்ணுகும் (காண். 17 : 4).

2 : 3 : 'விண்ணின்று கேட்ட குரல்' என்பது திருவெளிப்பாட்டில் அடிக்கடி வரும் ஒரு சொற்றொடர் (10:4 ; 14:15 ; 18 : 4) ; அது பெருவெள்ளம் போலும் (1 : 15 ; 19 : 6), பேரிடி முழக்கம் போலும் ஒலித்தது (19 : 6). பெருவெள்ளம் யாரும் எதிர்க்கமுடியாத கடவுளின் குரலுக்கு உள்ள வன்மையையும், பேரிடி முழக்கம் எல்லாருக்கும் தவறாது ஒலிக்கக்கூடிய அதன் தன்மையையும் குறிக்கும். கடவுள் பேசினால் அதற்கு எதிர்த்துப் பேசுபவர் யாருமிலர் ; அவரது குரலைக்கேட்கவில்லை என்று சொல்வோரும் யாருமிலர் ; கடவுளின் குரலோ யாழினின்று பிறக்கும் இனிமையான இசையாம். துன்பத்தில் உழல்பவர்கள் எல்லாரும் கடவுளின் குரலைக்கேட்பாரெனில், மனவமைதியைப் பெறுமலிரார். உடனே மூப்பர்களும் (அவர்களை நிறைவுபெற்ற திருச்சபையின் அடையாளமென்றோ, பழைய ஏற்பாட்டுப் புனிதரின் அடையாளமென்றோ கொள்ளலாம், (காண். 4 : 4), நான்கு உயிர்களும் (படைப்பின் சிறப்புக்கு அடையாளம் – காண். 4 : 6–8) புதிய பாடலைப் பாடுகின்றனர். (புதிய பாடலைப்பற்றி 5 : 9-இன் விளக்கம்

காண்க). அன்று மோயீசன் எகிப்திலிருந்து இஸ்ராயேல் மக்கள் மீட்கப்பட்டதைக் குறித்துப் பாடியது போன்று (காண். யாந் 15 : 1–21), இங்கே இறைமக்கள் மண்ணுல கினின்று மீட்கப்பட்டதற்காகப் புதிய பாடலைப் பாடு கின்றனர். இங்கே மண்ணுலகு கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளாத உலகு என்று பொருளாகும் (அரு. 17 : 9). கிறிஸ்துவால் மீட்கப்பட்டோரைத்தவிர (144000 பேர்) வேறு எவரும் இப்பாடலைப் பாடவியலவில்லை.

4–5 : மீட்கப்பட்டவரோ பெண்களோடு சேர்ந்து தங்களை மாசுபடுத்தாதவர்கள்; கன்னிமையைக் காத்தவர் கள். இங்கே கன்னிமையின் உயர்வைப் பற்றிப் பேச்சில்லை. வேதாகம வழக்கில் பிற தெய்வங்களை வணங்கிய யூதர்களை 'விபசாரிகள்' எனக் கூறுவது உண்டு (2:14 எசேக். 16 ; 23 யாக. 4:4 ; எபே. 5:23). கன்னிமை என்பது கடவுள் மீது கொண்ட பிரமாணிக்கத்தைக் குறித்தது (காண். ஓசே. 2:14–21 ; எரே. 2:2, 3, 32 ; சொப்போ. 3:9–13). இஸ்ராயேல் கடவுளோடு செய்து கொண்ட உடன்படிக்கை யின் காரணமாக அவருடைய மணவாட்டியாக இருந்தது. திருவெளிப்பாடும் திருச்சபையைச் செம்மறியின் மண வாட்டியாகக் கூறுவதைக் கவனிக்கவும் (19:7 ; 21:2–9). ஆதலின் கிறிஸ்துவுக்குப் பிரமாணிக்கமாய் இருப்பவர்கள் திருவெளிப்பாட்டில் கன்னியர்களாவர். வாழ்நாட்களில் அவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள். அதாவது, கிறிஸ்து கூறியது போன்று, தங்களது சிலுவையைச் சுமந்து அவரைப் பின் சென்றவர்கள் (காண். மத். 10:38). துன்பத் தில் பின் சென்றவர்கள் மகிமையிலும் பின் செல்கின்றனர். இவ்வாறு கிறிஸ்துவுக்கென வாழ்ந்ததால் அவர்கள் புனித மாக்கப்பட்டவர்கள். இங்கே பலிப்பொருளாக அர்ப்பணித் தல் என்னும் பொருளைக் காணல் வேண்டும். மறையெதிர்ப் பின் காலத்தில் கிறிஸ்துவுக்காக உயிர் துறந்த மறைத் தியாகிகளை மனதிற்கொண்டு அருளப்பர் இவ்வாறு வருணிக் கிறார் போலும். இருப்பினும் கிறிஸ்தவ வாழ்வே ஒரு பலி வாழ்வு என்பதை மறத்தலாகாது. 'மாசற்றவர்கள்' எனும்

சொல்லும் இதற்குச் சான்றாக உளது. மாசற்ற செம்மறியைத்தான் எகிப்தில் யூதமக்கள் பாஸ்காப்பலியாக ஒப்புக்கொடுத்தனர் (காண். யாத். 12:5). இயேசுவின் பலி மாசற்ற பலி (காண். எபிரே. 9:14). 'மாசுமறுவற்ற செம்மறி போன்ற கிறிஸ்துவின் விலைமதிப்பில்லாத இரத்தம்' என்று புனித இராயப்பர் கூறுகிறார் (1. இரா. 1; 19). ஆதலின் 'மாசற்ற' என்னும் சொல் பலியோடு சேர்ந்து வரும் சொல். திருவெளிப்பாட்டில் கிறிஸ்துவைச் சூழ்ந்திருப்பவர்கள் எல்லாரும் கிறிஸ்தவ வாழ்க்கை என்னும் பலியில் தங்களையே அர்ப்பணித்து விண்ணகம் சென்றவர்கள். அவர்கள் எவ்வாறு பொய்யின் தலைவனைப் பின்பற்ற முடியும்? அவர்கள் பொய் சொல்லாதவர்கள்; அதாவது, பொய் வழிபாடாகிய மன்னர் வழிபாடு, பிற தெய்வ வழிபாடு ஆகியவற்றில் ஈடுபடாது, கிறிஸ்துவுக்குப் பிரமாணிக்கமாயிருந்தவர்கள்.

5. வானதூதர் தீர்ப்பின் நேரத்தை அறிவித்தல் (14 : 6-13)

பின் இன்னொரு வானதூதர் வானத்தில் உயரப் பறக்கக் 6
கண்டேன். மண்ணில் வாழ்வோர்க்கும், இனம், குலம்,
மொழி, நாடு ஒவ்வொன்றிற்கும் அறிவிப்பதற்கு நித்திய நற்
செய்தியை அவர் தாங்கிச் சென்றார். "கடவுளுக்கு அஞ்சுங் 7
கள், அவரை மகிமைப்படுத்துங்கள். அவர் தீர்ப்பிடும் நேரம்
வந்துவிட்டது. விண்ணும் மண்ணும் கடலும் நீரூற்றுக்களும்
படைத்தவரைத் தொழுங்கள்" என்று அவர் உரத்த குரலில்
கூறினார். அவரைப் பின் தொடர்ந்த இன்னொரு வானதூதர், 8
"வீழ்ந்தது, வீழ்ந்தது, பாபிலோன் மாநகர்; காமவெறி
என்னும் தன் மதுவை நாடுகள் எல்லாம் குடிக்கச் செய்த
பாபிலோன் வீழ்ச்சியுற்றது" என்றார். மூன்றாவது தூதர் 9
ஒருவர் அவரைப் பின்தொடர்ந்து உரத்த குரலில் சொன்ன
தாவது: "விலங்கையும் அதன் சிலையையும் தொழுது, நெற்
றியிலோ கையிலோ அடையாளம் பெற்றிருப்பவன் | எவனும் 10
கடவுளுடைய கோபம் என்னும் மதுவைக் குடிக்கத்தான் வேண்
டும். அது இறைவனது சினம்; அவர் தம் கிண்ணத்தில்
கலப்பில்லாமல் வார்த்த மதுவே அது. அவன் பரிசுத்த வான
தூதர் முன்னிலையிலும், செம்மறியின் முன்னிலையிலும் தீயாலும்
கந்தகத்தாலும் வேதனைக்குள்ளாவான். அந்த வேதனையில் 11

உண்டாகும் புகை என்றென்றும் மேலே எழுகிறது. அந்த
விலங்கையும் அதன் சிலையையும் தொழுவோருக்கும், அதன்
அடையாளத்தைப் பெறுவோருக்கும், இரவும் பகலும் ஓய்வு
இராது. ஆகவே, கடவுளுடைய கட்டளைகளையும், இயேசுவின் 12
மேலுள்ள விசுவாசத்தையும் காக்கிற இறைமக்களிடம் மன
வுறுதி இருக்கவேண்டும். பின்பு விண்ணினின்று ஒரு குரலைக் 13
கேட்டேன், அக்குரல், ''ஆண்டவருக்குள் இறப்பவர் பேறு
பெற்றோர்; ஆம், அவர்கள் இனித் தங்கள் உழைப்பினின்று
இளைப்பாறுவார்கள். ஏனெனில், அவர்கள் செய்த நன்மையே
அவர்களோடுகூட வரும் என, தேவ ஆவி கூறுகிறது. இதை
எழுதி வை'' என்று சொன்னது.

இறைமக்களின் நிலையை மேலே கண்டோம். இவர்களைச் சேராதவர்களின் நிலை யாது?

6:7: இங்குவரும் வானதூதர் *11:15*-இல் வந்த தூதருக்கு அடுத்து வருபவர். அவர் உலக முழுமைக்கும் நற்செய்தியை அறிவிக்க வானத்தில் உயரப் பறக்கிறார். ''இறையரசைப் பற்றிய இந்நற்செய்தி எல்லா இனங்களுக்கும் சான்றாக உலக முழுவதும் அறிவிக்கப்படும்'' (மத். *24:14*) என்னும் இயேசுவின் வார்த்தையை நிறைவேற்றுகின்றார் போலும். அவர் தாங்கிச் சென்றது நித்திய நற்செய்தியாகும். நற்செய்தியின் திட்டத்தைக் கடவுள் தொன்று தொட்டு மறைபொருளாய் வைத்திருந்ததால் (காண். உரோ. *16:25*), இது நித்திய நற்செய்தியாகிறது. இந்நற்செய்தியின் போதனை புனித சின்னப்பரும் பர்னபாவும் லிஸ்திரா (Lystra) மக்களுக்கு அளித்த போதனையை ஒத்துள்ளது. ''இப்பயனற்ற சிலைகளை விட்டுவிட்டு உயிருள்ள கடவுள் பக்கம் திரும்பவேண்டுமென்று நற்செய்தியை அறிவிக்கிறோம். விண், மண், கடல் யாவற்றையும் அவற்றிலடங்கிய அனைத்தையும் ஆக்கியவர் அவரே'' (பணி. *14:15*). கிறிஸ்துவை அறியாத மக்கள் வானமும் பூமியும் படைத்த இறைவனையேனும் அறிந்திருக்கவேண்டும். இதனை அறிந்தால் இறைவனுக்கும் தங்களுக்கும் உள்ள தொடர்பை அறிவர். அவரைத் தொழுவர். அவர் வரும் நாளுக்கு அஞ்சுவர். பின்னர் பாவ உணர்வையும், மீட்பரின் தேவையையும் அறிவர். இவை கிறிஸ்தவ விசுவாசத்திற்கு வழி

யாகும். தூதர் கூறும் செய்தி மதத்தின் அடிப்படைச் செய்தியாகும்.

8 : அடுத்து வந்த வானதூதர் உரோமைப் பேரரசின் அழிவை முன்னறிவிக்கின்ருர். உரோமையைப் பாபிலோன் மாநகர் என்று கூறுகிருர். பழைய ஏற்பாட்டில் பாபிலோன் ஒழுக்கமின்மைக்கும் விபச்சாரத்துக்கும் அடையாளமாயிருந்தது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் உரோமையும் அத்தன்மையதாய் விளங்குகிறது. ஆதலின் உரோமையைப் பாபிலோன் என்று திருவெளிப்பாடு கூறுகிறது. புனித இராயப்பரும் இவ்வாறு கூறுவதைக் காண்க (1 இரா. 5:12). இப்பேரரசு தன் அதிகாரத்தால் நாடுகள் பலவற்றை ஒழுக்கக்கேடான செயல்களுக்கு உள்ளாக்கியதால், மதுவைக் குடிக்கச் செய்ததென அடையாள மொழியில் நூலாசிரியர் பேசுகிருர். இதுவும் பழைய ஏற்பாட்டு மரபாகும் (காண். எரே. 51:7). அதன் வீழ்ச்சிக்கு உறுதியாயிற்று. இறுதி நாளில் அது கடவுளின் தண்டனைக்குத் தப்பாது. "வீழ்ந்தது பாபிலோன் மாநகர்". இவ்வாக்கியம் இசை. 21:9-ஐப் பிரதிபலிக்கின்றது.

9–12 : மூன்ரும் வானதூதர் மன்னர் வழிபாட்டில் ஈடுபட்டவரின் அழிவை அறிவிக்கின்ருர். இவர்கள் யாவரும் மன்னர் சிலைக்கு வழிபாடு செலுத்தி அதன் சான்ருக அடையாளத்தைப் பெற்றிருந்தவர்கள் (13:16). கடவுளின் சினத்துக்கு உள்ளாகின்றனர். ஒழுக்கக் கேடு 'மது' என்னும் சொல்லால் குறிக்கப்பட்டது போன்று கடவுளின் சினமும் அதே சொல்லால் இங்குக் குறிக்கப்படுகின்றது. இதுவும் பழைய ஏற்பாட்டில், குறிப்பாக இறைவாக்கினர் நூல்களில், காணக்கிடப்பது (காண். இசை. 51:17; எரே. 25:15; சங். 74:8). 'நன்னெறி தவறிய இவர்கள் கந்தகத்தாலும் லும் தீயாலும் வேதனைக்குள்ளாவார்கள்'—இச்சொற்கள் சோதோம், கொமோரா நகரங்களின் அழிவை நினைவு படுத்துகின்றன. அவை வானகத்தினின்று வீழ்ந்த கந்தகத்தாலும் தீயாலும் அழிந்தன. ஆபிரகாம் அந்நகரங்களைப் பார்த்தபோது சூளையில் எழும்பும் புகைபோல் பூமியிலிருந்து

தீப்பொறி கிளம்பக் கண்டார் (காண். ஆதி. 19:24–28). இவர்களின் இறுதித் தீர்ப்பை இவ்வாறு வருணிப்பது இவர்கள் பெறவிருக்கும் கொடிய இறுதித் தண்டனையைக் குறிக்கும். இவர்களின் வேதனைக்கு முடிவு இராது. இரவும் பகலும் ஓய்வின்றித் துன்புறுவர். இந்த நித்திய வேதனைக்கு மாறாக நல்லவர்கள் கடவுளின் திருமுன் என்றென்றும் மகிழ்ந்திருப்பதை 4:8 கூறியது. ஆதலின் இக்காலத் துன்பத்தைக் கண்டு மனத்திடம் நெகிழவிடக்கூடாது. இவ்வுலக இன்பத்தில் திளைப்பவர்கள் மறுவுலகத் துன்பத்தில் வீழ்வர். மாறாக கிறிஸ்துவின் விசுவாசத்தைப் பேணிக் காத்து எவ்விதத் துன்பத்திலும் அவரைப் பின்பற்றும் யாவரும் இறுதிக்கால இன்பத்தில் என்றென்றும் நிலைத்திருப்பர்.

13: விண்ணின்று வரும் குரல் புதிய பேறு ஒன்றை அறிவிக்கிறது. இந்நூல் அறிவிக்கும் ஏழு பேறுகளின் வரிசையில் இஃது இரண்டாவதாகும் (1:3 காண்). ''ஆண்டவருக்குள் இறப்பவர் பேறுபெற்றோர்''-புனித சின்னப்பர் கிறிஸ்துவில் துஞ்சியவர் (காண். 1 கொரி. 15:18; 1 தெச. 4:14-16) அவரோடு உயிர்த்தெழுந்து விண்ணகம் செல்வார் என்று கூறுகிறார். இவர்கள் தங்கள் உழைப்பினின்று இளைப்பாறுவார்கள் எனத் திருவெளிப்பாடு கூறுகிறது. மறையெதிர்ப்பினில் பலவித துன்பங்களை அனுபவித்த கொடுமையினின்று இளைப்பாறுவர் போலும். இப்பேறு மறைத்தியாகிகளாய் மரணம் அடைபவர்களுக்கு மட்டும் உரியதன்று. நற்செயல்கள் புரிந்து இறந்த எவரும் இப்பேற்றினைப் பெறுவர். யூதர்களின் நம்பிக்கைப்படி ஒவ்வொருவருடைய செயல்களும் அவர்களோடு வந்து இறுதிநாளில் கடவுள்முன் சாட்சி சொல்லுமாம். இங்கு ஆசிரியர் அவ்வித நம்பிக்கையை உணர்த்த விரும்பவில்லையெனினும், விசுவாசத்தில் ஊன்றிப் பிறந்த எந்நற்செயலும் பயன்தரக்கூடியது (காண். யாக. 2:14–26) என்பதை வலியுறுத்துகிறார். நற்செயல்கள் எல்லாம் தூய ஆவியின் கனிகளாதலின் (காண் கலா. 5:22, 23), அவரே இந்நற்செயல்களைப்பற்றிப் பேசுகின்றார். ''சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னி

டம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன்'' என்னும் கிறிஸ்துவின் ஆறுதல் மொழி இங்கே தொனிக்கின்றது.

6 நாடுகள் ஒன்று திரட்டப்படுதல் (14:14—20)

பின்னர் இதோ ஒரு வெண் மேகத்தையும், அதன்மேல் 14
மனுமகனைப்போன்ற ஒருவர் வீற்றிருப்பதையும் கண்டேன்.
அவர் தலையில் ஒரு பொன் முடியும், கையில் கூரிய அரிவாளும்
இருந்தன. மற்றொரு வான்தூதர் ஆலயத்தினின்று வெளி 15
வந்து, மேகத்தின்மீது வீற்றிருப்பவரை நோக்கி, உமது அரி
வாளை எடுத்து அறுவடை செய்யும். அறுவடைக்காலம் வந்து
விட்டது; மாநிலப் பயிர் முற்றிவிட்டது'' என்று உரக்கக்
கத்தினர். மேகத்தின்மீது வீற்றிருந்தவர் தமது அரிவாளை 16
மாநிலத்தின்மீது வீசினர். மாநிலமும் அறுவடையாயிற்று.
வேறொரு வானதூதர் விண்ணிலுள்ள ஆலயத்திலிருந்து 17
வெளியே வந்தார். அவரிடமும் கூரிய அரிவாள் இருந்தது.
இன்னுமொரு வானதூதர் பீடத்தினின்று வெளி வந்தார். 18
அவர் நெருப்பின்மேல் அதிகாரம் உள்ளவர். கூரிய அரிவாள்
ஏந்தியவரைப் பார்த்து, ''உம் கூரிய அரிவாளை எடுத்து
மாநிலத்தின் திராட்சைக் குலைகளைக் கொய்துவிடும்; கனிகள்
பழுத்துவிட்டன'' என்று உரக்கக் கத்தினர். ஆகவே, வான 19
தூதர் மாநிலத்தின்மீது தம் அரிவாளை வீசி, மாநிலத் திராட்
சைக் கொடியின் குலைகளைக் கொய்தார். கடவுளது கோபம்
என்னும் பெரிய ஆலையில் அவற்றைப் போட்டார். நகருக்கு 20
வெளியே உள்ள ஆலையிலே அவை மிதிக்கப்பட்டன. அந்த
ஆலையினின்று பாய்ந்த இரத்தம் குதிரைகளின் கடிவாள உயர
மளவு இருநூறு கல் தொலைவுக்குப் பரவியது.

14-16: இக்காட்சி இறுதித் தீர்ப்பைப்பற்றியதாகும். அன்று தானியேல் கண்ட காட்சி (தானி. 7:13) இங்கேயும் தோன்றுகின்றது. கிறிஸ்து மேகத்தின்மீது வருகிறார். மனுமகன் மேகத்தின்மீது வருதல் கிறிஸ்துவே அறிவித்த ஒன்று (காண். மாற். 13:26). அவர் அணியும் பொன்முடி வெற்றி முடியாம் (4:4 காண்.) அரிவாள் நீதி வழங்குதலைக் குறிக்கும். கிறிஸ்துவின் நீதி வழங்கும் இவ்விறுதிச் செயலுக்கு வானதூதர்கள் பணியாளர்கள் போல் வருகின்றனர்.

15: இந்த இறுதித் தீர்ப்பைக்குறித்து அவர் கூறிய அறுவடை உவமையில் வானதூதர்கள் வருதலைக் காண்க.

(மத் 13:39, 41). இச்செயல் அறுவடைச் செயலால் குறிக்கப்படுவதும் வேதாகம மரபாகும் (காண். யோவேல் 3:13; இசை. 17:5; 27:12; எரே. 51:33; மத். 3;12; 13:30; மாற் 4:29).

16 : முதலில் நல்லோர்கள் ஒன்று சேர்க்கப்படுகின்றனர். மனுமகன் வீசிய அரிவாளும் அதுசெய்த அறுவடையும் இதனைக்குறிக்கும். பின்னர் தீயோர் திரட்டப்பட்டு தண்டனை பெறுகின்றனர். இத்தண்டனை திராட்சைப் பழம் பிழிதல் உருவகத்தில் வருகிறது. இதுவும் பழைய ஏற்பாட்டில் காணப்படும் மரபாகும் (காண். இசை 63:3-5; எரே. 25:30-31; யோவேல் 4:13).

17-18 : வானதூதர்கள் ஆலயத்தினின்று வருதல் கடவுள் திருமுன்னே செயல்படுதலைக் குறித்தாலும், அங்கே தோன்றும் பீடம் 6:9-இல் எழுந்த மறைத்தியாகிகளின் நீதிக்கோரிக்கையின் இருப்பிடமாய் இருத்தலை திருவெளிப்பாடு நினைவுபடுத்துகின்றது.

வானதூதர் தீயோரைத் திராட்சைக் குலைகளெனக் கொய்து கடவுளின் கோபம் என்னும் ஆலையில் போட்டு விடுகின்றூர். அதுவும் நகருக்கு வெளியே நடைபெறும். நகர் எருசலேமைக் குறிக்கும். இங்கே பழைய ஏற்பாட்டுக் கருத்து ஒன்று பின்னணியாக உள்ளது அதாவது, தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களின் எதிரிகள் எருசலேம் நகருக்குப் புறம்பே அழிக்கப்படுவர் (காண் யோவேல் 3:12; சக். 14:2-4; எசேக். 38, 39). ஆதலின் தீயோர் புனிதமான இடத்திற்குப் புறம்பே தண்டனை பெறுவர். ஏனெனில் அவர்கள் இருக்க வேண்டிய இடம் புனிதமற்ற இடம். திராட்சை ஆலையில் மிதிபடுதல் ஆலை இயங்கிய முறையைக் குறிக்கும் திராட்சைக்குலைகளை முதலில் ஒரு தொட்டியில் போட்டு மிதிப்பர். அதனின்று சாறு ஒரு வாய்க்காலின் வழியே வேறொரு தொட்டிக்குச் செல்லும். வாய்க்கால் வழியே ஓடும் திராட்சைச்சாறு இரத்தம்போல் இருக்குமாதலால், தீயோர் பெறும் தண்டனையின் காரணமாய்ச்

சிந்தும் இரத்தமும் அவ்வாறு ஓடுமாம். அதுவும் குதிரைகளின் கடிவாள உயரமளவு அவ்வளவு இரத்தம் வடிப்பாராம். இது மறை நூல் திருப்பட்டியலில் சேராத பிற திருவெளிப்பாட்டு நூல்களில் காணப்படும் உருவகம். "குதிரைகள், பாவிகள் சிந்திய மார்பு அளவு இரத்தத்தில் நடந்து செல்லும்" (1 ஏனோக். 100:3). "வாளால் வடியும் இரத்தம் குதிரையின் வயிறு அளவு உயர்ந்து வரும்" (4 எஸ்ரா. 15:35). பொதுவில் பார்க்குமிடத்து திருவெளிப்பாடு இவ்வுருவக மொழிகளில் தீயோர் பெறவிருக்கும் பெருந் தண்டனையை நம் மனக்கண்முன் வைக்கிறது. தீமையில் நிலைத்திருப்போர் எவரும் இறைவனின் நீதிக்குத் தப்பமாட்டார். இரத்தம் இருநூறு கல் தொலைவு சென்று பரவுதல், உலகின் எல்லா நாடுகளிலிருந்தும் தீயோர் தண்டனை பெறுதலைக் குறிக்கும். இந்த இருநூறு கல் தொலைவை, கிரேக்கமூலநூல் 1600 ஸ்தாதியா (Stadia) என்று கூறுகிறது. ஒரு ஸ்தாதியம் ஏறக்குறைய ஒரு பர்லாங்குக்குச் சமமானதால், தமிழில் 200 கல் என மொழி பெயர்த்துள்ளனர். இதன்படி உருவகப்பொருள் விளங்கவில்லை. ஆனால் $1600 = 100 \times 4 \times 4$. 100 ஒரு பெருந் தொகைக்காக நிற்கும். நான்கு என்பது உலகின் நான்கு எல்லைகளைக் குறிக்கும். ஆதலின் எல்லா உலகும் நீதித் தீர்ப்புக்கு உள்ளாகும். இதுவே எண் 1600-இல் நாம் காண முடிந்த பொருள். இது வேறு எப்பொருளையும் உணர்த்துவதாகத் தெரியவில்லை.

(ஊ) ஏழு கோபக் கலசங்கள் *(15:1–16:21)*

எழுமையில் தோன்றிய முத்திரைகளுக்கும், எக்காளங்களுக்கும் பின்னர் ஏழு வாதைகள் வருகின்றன. இவை ஆசிரியர் எழுமையில் வருணிக்கும் துன்பங்களில் மூன்றாவது. இவையே இறுதியுமாகும். கடந்த அதிகாரத்தோடு உலகில் கடவுள் நிறைவேற்றிய திட்டம் முடிவுற்றதென ஒரு எண்ணம் தோன்றும். அவ்வாறு தோன்றினும், மீண்டும் வரும் காட்சியில் மேலும் துன்பம் வருகின்றது. ஏழு ஏழாகச் சேர்த்து மும்முறை பேசுதல் திருவெளிப்பாட்டு நூல்களின் ஒரு மரபு ஆகும். இம்மரபுப்படி நூலாசிரியரின் கருத்து

முழுமைபெற்று நிறைவெய்துதலைக் காண்கிறோம். பதினைந்தாம் அதிகாரம் இறுதி வாதைகளுக்கு முன்னுரை போன்று அமைந்துள்ளது.

1. மீட்படைந்தோர் பாடிய கீதம் (15:1—4)

பின்பு அரிய பெரிய அறிகுறி இன்னொன்று விண்ணில் **15**
கண்டேன். ஏழு வானதூதர் ஏழு வாதைகளை வைத்திருந்
தனர். இறுதியான வாதைகள் அவையே. அவற்றோடு கட
வுளின் கோபம் நிறைவுறும். நெருப்போடு கலந்த கண்ணாடிக் 2
கடல்போன்ற ஒரு காட்சியைக் கண்டேன். விலங்கின்மீதும்
அதன் சிலையின்மீதும் எண்களால் குறிக்கப்பட்ட ஆள்மீதும்
வெற்றி கொண்டவர்களையும் நான் கண்டேன். அவர்கள்
கடவுள் தந்த யாழ்களைக் கையில்கொண்டு கண்ணாடிக் கட
லருகே நின்றனர். கடவுளுடைய ஊழியனாகிய மோயீசனின் 3
பாடலையும் இவ்வாறு பாடினர்: எல்லாம் வல்ல கடவுளாகிய
ஆண்டவரே, உம் செயல்கள் பெரியன, வியப்புக்குரியன.
நாடுகளுக்கெல்லாம் அரசரே, உம் வழிகள் நேர்மையானவை,
உண்மையானவை. ஆண்டவரே, உமக்கு அஞ்சாதவர் எவர்? 4
உமது பெயரை மகிமைப்படுத்தாதவர் எவர்? நீர் ஒருவரே
புனிதர். எல்லா இனத்தவரும் வந்து உம் திருவடி பணிவர்.
ஏனெனில் உம் நீதிச் செயல்கள் வெளிப்படையாயின.

1: காட்சி விண்ணகத்தில் தோன்றுகிறது. முதல் வாக்கியத்தை 5-ஆம் வாக்கியத்தின் முன் வைத்தால் சரியாய்ப் பொருந்தும். கடவுள் உலகிற்கு அனுப்பும் இறுதித் துன்பங்களையும், வானதூதர்கள், ஏந்தி நிற்பதாக உள்ளது. இப்படிக் கூறல் திருவெளிப்பாட்டு நூலின் வழக்கமாகும்.

2—4: அவர்களைப்பற்றிய விவரிப்பு தொடங்குமுன் மீட்படைந்தோரின் கீதம் குறுக்கிடுகின்றது. காட்சியில் வரும் கண்ணாடிக் கடல் பழைய ஏற்பாட்டில் எகிப்திலிருந்து விடுதலையடைந்த யூத மக்கள் கடந்து சென்ற செங்கடலைக் குறித்து நிற்கும். ஆனால் இக்கடல் நெருப்போடு கலந்ததாக காணப்படுதல் கடவுளின் தீர்ப்பைக் காட்டும். இதனால், மீட்படைந்தோரின் காட்சியோடு தீயோரின் அழிவும் உணர்த்தப்படுகின்றது. திருவெளிப்பாடு இங்கே உரோமைப் பேரரசின் கொடிய மறையெதிர்ப்புக்களில் மறைத்தியாகி

களாய் (வேத சாட்சிகளாய்) உயிர் துறந்தவர்களைப்பற்றிப் பேசினாலும், பிற்றைக் காலத்தில் கிறிஸ்துவுக்காக இறந் தோரை ஒதுக்கிவிடுவதில்லை. விலங்கு உரோமைப் பேரரசின் அடையாளம் (13-ஆம் அதி.). சிலை, மன்னர் வழிபாட்டைக் குறிக்கும். எண்கள் : 666 = நீரோ (காண். 13:18) மறைத் தியாகிகள் கிறிஸ்துவுக்காக இறந்ததால் நீரோவையும், அவனுடைய வழித்தோன்றல்கள், அவர்களின் வழிபாட்டு முறைகள் இவற்றையெல்லாம் வென்றவர்கள். இப்பகுதியை 7:9–17 உடன் ஒப்பிட்டுப்பார்த்தால், இவர்கள் யாவரும் செம்மறியின் இரத்தத்தால் மீட்படைந்தோர் என்பது தெரியவரும். இவர்கள் மோயீசனின் பாடலைப் பாடியதாக நூல் கூறினாலும், இவர்களின் பாடல் தங்களின் வெற்றிக் காகக் கடவுளைப் புகழ்வதாய் அமைந்துள்ளது. மோயீசனின் பாடலோ எதிரிகளை வெற்றி கொண்டதற்காகப் பாடப் பெற்றதாகும் (யாத். 15:1–19). யாழ், கடவுளைப் புகழ்ந்து பாட யூதர்கள் பயன்படுத்திய இசைக் கருவிகளில் ஒன்று. மீட்படைந்தோரும் யாழை மீட்டிப் பாடுகின்றனர். இப் பாடல் பழைய ஏற்பாட்டு மேற்கோள்களால் நிறைந்த ஒன்று. 'எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவரே' (ஆமோ 4:13–எழுபதின்மர் மொழி பெயர்ப்பு-Septuagint); 'உம் செயல்கள் பெரியன, வியப்புக்குரியன' (சங். 91:5; 110:2; 97:1: 138:14.) 'நாடுகளுக்கெல்லாம் அரசரே' (எரே. 10:7) 'உம் வழிகளில் நேர்மையானவை, உண்மை யானவை' (சங். 144:17; உபா. 32:4); 'ஆண்டவரே- உமக்கு அஞ்சாதவர் எவர்?' (எரே. 10:7); 'உமது பெயரை மகிமைப்படுத்தாதவர் எவர்? (சங். 85:9)? 'நீர் ஒருவரே புனிதர்' (1 சாமு. 2:2; சங். 98:3; 110:9); 'எல்லா இனத்தவரும் வந்து உமது திருவடி பணிவர் (சங். 85:9). 'உமது நீதிச் செயல்கள் வெளிப்படையாயின' (சங். 97:2). மீட்படைந்த புதிய இஸ்ராயேல் மக்கள் இறைவனைப் புகழ, பழைய ஏற்பாட்டு மேற்கோள்களைப் பயன்படுத்தினரென்றால், பழைய இஸ்ராயேல் மக்களிலிருந்து புதிய இஸ்ராயேல் மக்கள் பிறக்கின்றனர் என்பது தெளிவு. அத்தோடு அவர்கள் தங்களைப்பற்றியே ஒன்றும் சொல்ல

வில்லே. ஏனெனில் விண்ணகத்தில் நம்மைப்பற்றிப் பேச என்ன இருக்கிறது ?

வாதைகள் ஏழு (15:5—16:21)

அதற்குப்பின், நான் கண்ட காட்சியில் விண்ணகத்தி 5
லுள்ள சாட்சியக் கூடாரமாகிய ஆலயம் திறக்கப்பட்டது. ஏழு 6
வாதைகளை வைத்திருந்த ஏழு வானதூதர்கள் அவ்வாலயத்தி
லிருந்து வெளிவந்தனர். அவர்கள் ஒளிமிக்க தூய ஆடை
அணிந்து, மார்பிலே பொற்கச்சைகள் கட்டியிருந்தனர்.
நான்கு உயிர்களுள் ஒன்று என்றென்றும் வாழ்கிற கடவுளின் 7
கோபத்தால் நிறைந்த ஏழு பொற்கலசங்களை ஏழு வானதூதர்
களுக்கும் அளித்தது. கடவுளின் மாட்சிமையும் வல்லமையும் 8
அவ்வாலயத்தைப் புகையினுல் நிரப்பின. ஏழு வானதூதர்
கொணர்ந்த ஏழு வாதைகள் முற்றுப் பெறும்வரை, ஒருவரும்
அவ்வாலயத்தினுள் நுழைய இயலவில்லை.

5 : பின்னர் ஏழு வாதைகளை வைத்திருந்த வான தூதர் சாட்சியக் கூடாரமாகிய ஆலயத்திலிருந்து வெளிவருகின்றனர். 'சாட்சியக் கூடாரம்' என்பது இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் அமைத்திருந்த ஆசாரக் கூடாரத்தைக் குறிக்கும். இதுதான் சாட்சியக் கூடாரம் என்னும் பெயரால் வழங்கப்பட்டது. (காண் யாத். 25:22; 27:21; எண். 9:15). இஃது எருசலேம் ஆலயத்தைக் குறிக்காது. இதிலே வாக்குறுதிப் பெட்டகம் வைக்கப்பட்டிருந்தது. வாக்குறுதிப் பெட்டகத்தில் மோயீசனின் சட்டத்தை வைத்திருந்தனர்.

6 : இவ்வித இடத்தினின்று தூதர்கள் புறப்படுவது, அவர்கள் கடவுளின் கட்டளைகளைத் தாங்கி வருதலைக் குறிக்கும். அவர்களின் ஒளிமிக்க தூய ஆடையும், **பொற்கச்சையும்** குருக்களின் ஆடைகளின் அடையாளங்கள். குருக்கள் கடவுளின் பிரதிநிதிகளென நின்று, அவருடைய கட்டளைகளுக் கேற்ப வாழ்க்கை நடத்தும்படி மக்களைப் பணிப்பது போல், தூதர்களும் அவ்வாறே கடவுளின் கட்டளைகளைத் தாங்கி வருகின்றனர்.

7 : இக்காட்சியில் நான்கு உயிர்களும் கோபக் கலசங்களைத் தூதர்களிடம் கொடுப்பதால் இயற்கை உலகு கடவு

ளின் தீர்ப்புக்குத் தன்னையே கையளித்தலை அறிகிறோம். எல்லா உலகும் அவருடைய தீர்ப்புக்கு உள்ளாகத்தான் வேண்டும்.

8. கடவுளின் தீர்ப்புச்சூழ்நிலையில் ஆலயம் புகையால் நிறைதல் அவரது அச்சத்துக்குரிய பிரசன்னத்தைக் குறிக்கும் (காண். யாத். 19:9, 18; 40:35; இசை 6:4; எசேக். 10:4; 1 அர. 8:10, 11). இதனால் ஆலயத்தில் யாரும் நுழைய முடியாத நிலைதோன்றுகிறது. இவ்வித உருவக மொழிகளில் ஆசிரியர் என்ன கூற விரும்புகிறார்? கடவுளின் தீர்ப்புநாள் வரும்போது அதனைத் தடுத்து நிறுத்த வல்லார் யாரும் இருக்கமாட்டார்கள். அவருடைய திட்டப்படி குறித்த நாளில் உலகுக்கு அவரின் தீர்ப்பு கட்டாயம் வரும்.

பின், ஆலயத்தினின்று உரத்த குரல் ஒன்றைக் கேட் 16
டேன்: ''நீங்கள் போய், கடவுளின் கோபம் நிறைந்த ஏழு
கலசங்களையும் மண்ணுலகின்மீது ஊற்றுங்கள்'' என்று அக்
குரல் ஏழு வானதூதர்களிடமும் கூறியது. முதல் வானதூதர் 2
போய், தம் கலசத்தை மண்ணுலகின் மீது ஊற்றவே, கொடிய
விலங்கின் அடையாளத்தைக் கொண்டிருந்தவர்கள், அதன்
சிலையைத் தொழுதவர்கள் உடம்பெல்லாம் மிகக் கொடிய புண்
உண்டாயிற்று. இரண்டாவது வானதூதர் தம் கலசத்தைக் 3
கடலில் ஊற்றவே, அது பிணத்தின் இரத்தம்போல் மாறியது.
கடலில் வாழும் உயிர்கள் அனைத்தும் மடிந்தன. மூன்றாவது 4
வானதூதர் தம் கலசத்தை ஆறுகள்மீதும், நீரூற்றுக்கள்
மீதும் ஊற்றவே, அவையும் இரத்தமாயின. நீர்த்திரளைப் 5
பார்வையிடும் வானதூதர் இவ்வாறு சொல்லக் கேட்டேன்:
''இருக்கிறவரும் இருந்தவருமான புனிதரே! இங்ஙனம் தீர்ப்
பிடும் நீர் நீதியுள்ளவர். ஏனெனில், பரிசுத்தருடைய இரத் 6
தத்தையும், இறைவாக்கினருடைய இரத்தத்தையும் மக்கள் சிந்
தியதால், நீர் அவர்களுக்கு இரத்தத்தையே குடிக்கக் கொடுத்
தீர். இது அவர்களுக்குத் தகுந்த தண்டனையே.'' பீடத்தி 7
னின்று எழுந்த குரலும், ''ஆம், எல்லாம் வல்ல கடவுளாகிய
ஆண்டவரே, உம் தீர்ப்புகள் உண்மையும் நீதியுமானவையே''
என்றது. நான்காவது வானதூதர் தம் கலசத்தைக் கதிரவன் 8
மீது ஊற்றவே, அது மனிதரை நெருப்பாய் எரிக்கும் வன்மை
பெற்றது. கடும் வெப்பத்தால் மனிதர் எரிக்கப்பட்டவர் 9
களாய், இவ்வாதைகளின்மீது வன்மை கொண்டிருந்த கடவு
ளின் பெயரை அவர்கள் தூஷித்தார்களேயொழிய, மனந்
திரும்பி அவரை மகிமைப்படுத்த விரும்பவில்லை.

1 : பின்னர் வரும் காட்சியில் துன்பக் கலசங்களை வைத்திருந்த ஏழு தூதர்களும் செயல்படும் படியாக ஆலயத்தினின்று குரல் ஒன்று கேட்கிறது. இஃது இறைவனின் குரல் போலும்.

2 : தூதர்கள் இறைவனின் ஆணைக்கிணங்க, துன்பங்களை மண்ணுலகுக்கு அனுப்புகின்றனர். இந்த ஏழுவகைத் துன்பங்களும் 8–11 அதிகாரங்களில் திருவெளிப்பாடு குறிப்பிடும் கொள்ளை நோய்களுக்கு ஏறக்குறைய ஒத்திருத்தலைக் காண்க. இந்தக் கொள்ளை நோய்கள் பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து விடுதலை பெறுமுன் அந்நாட்டு மன்னனுக்கு எதிராக மோயீசன் எகிப்து மக்கள்மீது வருவித்த கொள்ளை நோய்களின் அடிப்படையில் அமைந்துள்ளன என்று பார்த்தோம். அவ்வகையில் ஆசிரியர் இங்கும் பலவகையான துன்ப துயரங்களை முன்னறிவிக்கின்றார். உரோமைப் பேரரசுதான் இவ்வித வாதைகளை அனுபவிக்கப் போகிறது. கடவுள் காட்டும் நல்லொழுக்க நெறியில் வாழாத எல்லாருமே இக்கொடுமைக்கு உள்ளாவர் என்பதையும் நூல் அறிவிக்கிறது.

முதல்வாதை மிகக்கொடிய புண். உரோமைப் பேரரசு அமுலாக்கிய மன்னர் வழிபாட்டில் ஈடுபட்டோர் இதனால் துன்புறுகின்றனர். உபாகமத்தில் இது கடவுளுக்குக் கீழ்ப்படியாதவர் அனுபவிக்கும் வேதனையின் அடையாளமாயுளது. (காண் உபா 28:35).

3. இரண்டாவது துன்பம் கடல்நீர் இரத்த மயமாய் மாறிக் கடலில் வாழும் உயிரினங்களை அழிப்பது (காண். யாத். 7:17–21). 'பிணத்தின் இரத்தம் போல்' என்று நூல் கூறுவது, கொலை செய்யப்படுவோரின் இரத்தம் வெளிப்படுதலைக் குறிக்கிறதுபோலும்; மனிதர் மட்டுமல்ல உயிரினங்களும் அழிவுறும்.

4–6 : மூன்றும் வாதையும் நீர் நிலைகளை இரத்த மயமாய் மாற்றும். யூதர்களின் கருத்துப்படி வானதூதர்

குழுக்களாகப் பிரிந்து இயற்கையின் பல்வேறு பிரிவுகளைக் கண்காணித்தனர். இக்கருத்துக் கேற்ப இவ்வாக்கியத்தில் நீர்த்திரளைப் பார்வையிடும் வானதூதர் ஒருவர் வருகிறார். அவர் கடவுளின் இத்தகைய தண்டனை நீதியுள்ளது (15:4; உபா. 32:4; சங். 144:17) என்று சொல்லுகிறார். இத் தண்டனையை அனுபவிப்பர் கிறிஸ்தவ மக்களையும் அவர் களுடைய போதகர்களையும் கொன்று குவித்தவர்கள் ஆத லின் இத்தீயோர்கள் இவ்வித தண்டனை பெறுதல் முறையே (காண். உரோ. 1:24, 26, 28).

7 : ஆண்டவரில் உயிர் துறந்த வேதசாட்சிகளின் குரலும் (காண். 6:9; 8:3, 4) இதற்கு ஒப்புதல் தெரிவிக் கிறது. வேதசாட்சிகளின் நீதிக் கோரிக்கை இப்போது நிறைவேறுகிறது. நூல் இதுவரை கூறிய துன்பங்கள், தண்டனைகள் எல்லாம் இடைக்காலத்தவை. இப்பொழுது கூறுபவையெல்லாம் இறுதிக் காலத்தவை. ஆதலின் கடவு ளின் நீதிச் செயலும் நிறைவு பெறுகிறது.

8–9 : அடுத்து, கதிரவன் கொடுமையாய்க் காய்ந்து மனிதரை எரிப்பான். 7:16-இல் செம்மறியின் இரத்தத்தால் மீட்கப்பட்டோரை 'வெயிலோ வெப்பமோ தாக்காது' என்பதற்கு நேர்மாறாய் இத்தண்டனை இருப்பதைக் காண்க. மேற்கூறியவற்றால் கடவுள் தம் இறுதித் தண்டனைக்கு இயற்கை முழுவதையும் பயன்படுத்திக் கொள்வது நன்கு விளங்கும். (9) இவை எவ்வளவு கொடியவையாயினும், தீயோரின் அழிவுக்காகவன்று, அவர்களின் மனந்திரும்பு தலுக்காகவே கடவுள் இவற்றை அனுப்புகிறார். ஆனால் அவர்கள் மனந்திரும்பவில்லை (காண். 19:20, 21). எகிப்து நாட்டுப் பாரவோனைப்போல் நெஞ்சைக் கல்லாக்கி வரு கின்றனர் (காண். யாத். 7;3, 22; 8:15). "கடவுளுக்கு அஞ்சுங்கள், அவரை மகிமைப்படுத்துங்கள். அவர் தீர்ப் பிடும் நேரம் வந்துவிட்டது. விண்ணையும் மண்ணையும் கடலையும் நீரூற்றுக்களையும் படைத்தவரைத் தொழுங்கள்" (14:7) என்ற வானதூதரின் நற்செய்திக் குரலும் வீணாயிற்று.

ஐந்தாவது வானதூதர் தமது கலசத்தை விலங்கின் 10
அரியணைமீது ஊற்றவே, அதன் அரசை இருள் கவ்வியது.
பட்டபாட்டைத் தாங்க முடியாமல் மக்கள் தங்கள் நாவைக்
கடித்துக் கொண்டனர். தங்கள் பாடுகளையும், புண்களையும் 11
முன்னிட்டு, விண்ணகக் கடவுளைத் தூஷித்தார்களேயொழிய,
தங்கள் செயல்களை விட்டுவிட்டு மனந்திரும்பவில்லை.

10–11 : ஐந்தாவது தண்டனை இருள் (காண். 9:1–12; யாத். 10:21–23). விலங்கின் அரியணை உரோமை நகரைக் குறிக்கும். அக்காலத்தில் உரோமைநகர் உலக அதிகாரத்தின் தலைமைப் பீடமாக இருந்தமையால் அரியணை என்னும் சொல் பொருத்தமாய் அமைந்துள்ளது. (11) இருளின் காரணமாக வந்துற்ற துன்பங்கள் எவை என்று ஆசிரியர் கூறவில்லை. இருளுக்கும் மக்கள் நாவைக் கடித்துக் கொள்வதற்கும் உள்ள தொடர்பைப் புரிந்து கொள்ள இயலவில்லை. ஆனால் அவர்களின் கன்னெஞ்சம் வெளிப்படுகிறது.

ஆறாவது வானதூதர் தமது கலசத்தைப் பெரிய யூப்ரடீஸ் 12
ஆற்றில் ஊற்றவே, தண்ணீர் வற்றிப்போக, கீழ்த்திசை
மன்னர்களுக்கு வழியுண்டாயிற்று. பறவைநாகத்தின் வாயி 13
னின்றும் விலங்கின் வாயினின்றும் போலித் தீர்க்கதரிசிகளின்
வாயினின்றும் தவளை வடிவில் மூன்று அசுத்த ஆவிகள் 14
வெளிவரக் கண்டேன். அவை அருங்குறிகளைப் புரியும் பேய்
களின் ஆவிகள். எல்லாம்வல்ல கடவுளின் பெருநாளிலே போர்
செய்யுமாறு உலகனைத்திலுமுள்ள அரசர்களை ஒன்றுசேர்க்க
அவை செல்லுகின்றன.—இதோ நான் திருடனைப்போல் வரு
கின்றேன். ஆடையின்றி எல்லார் முன்னிலும் வெட்கி நிற்க 15
நேராதவாறு ஆடைகளைக் களையாமல் விழித்திருப்பவன் பேறு
பெற்றவன். எபிரேய மொழியில் அர்மகெதோன் எனப்படும் 16
இடத்தில் அரசர்களை அவை ஒன்று சேர்த்தன.

12 : ஆறாவது வாதை வாசகர்களை வேறொரு நாட்டுக்கு அழைத்துச் செல்கிறது. அது முற்காலப் பாபிலோன் நாடு ஆகும். பாபிலோன் நாட்டு ஆறாகிய யூப்ரட்டீஸ் வற்றிப் போவதால் கீழ்த்திசை மன்னர்கள் வந்துவிடுகின்றனர். இங்கு ஆசிரியர் ஏதோ ஒரு வரலாற்று நிகழ்ச்சியை நினைவில் வைத்துப் பேசுவதை உணர்கிறோம். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் பாபிலோன் நாட்டைக் கைப்பற்ற வந்த

சைரஸ் என்ற பெர்சியா நாட்டு மன்னன், அப்பட்டணத்தின் பாதுகாப்பை முறியடிக்க வழியின்றி, பட்டணத்தின் இடையே ஓடும் யூப்ரட்டீஸ் ஆற்றைப் பட்டணத்திற்கு வெளியே தடுத்து மாற்று வாய்க்காலால் அதனை ஓர் ஏரிக்கு மடக்கிவிட்டு, பட்டணத்தின் ஊடே செல்லும் ஆற்றுப் பகுதியை வற்றடித்து, அதன் வழியே சென்று பாபிலோனைக் கைப்பற்றினன். இதனை நினைவில் வைத்து ஆசிரியர் எழுது கிருர் போலும். இந்த வரலாற்றுப் பின்னணியிலே அவர் கூற விரும்பும் உண்மை வேறு. அதாவது, உரோமைப் பேரரசு அஞ்சிய பார்த்தியர்கள் யூப்ரட்டீஸ் ஆற்றுக்குக் கிழக்கிலிருந்து வருவார்கள் (காண். 9:15–19). இந்த ஆறு வற்றுதல் அவர்களின் படையெடுப்புக்கு ஏதுவாகும். இதனை உருவகமாக வைத்து நூலாசிரியர் ஆருவது தண்டனையைப் பற்றிப் பேசுகிருர். வாதைகள் தோன்றும் இடம், சூழ்நிலை இவற்றைப் பார்க்குங்கால், கடவுள், தீயோருக்கு வாதைகளை எந்த வழியேனும் அனுப்பலாம் என்று தெரியவருகிறது. அவை இப்படித்தான் வரும், அப்படித்தான்வரும் என்று சொல்வதற்கில்லை. இதுதான் ஈண்டுக் கருத்தாகப்படுகிறது.

13–16 : இங்குவரும் உருவகங்கள் எல்லாவற்றிற்கும் பொருள்கூறுவது அவ்வளவு எளிதாகத்தெரியவில்லை. பறவை நாகத்தின் உருவில் பேய் வருதலை 12:3, 9-இல் பார்த்தோம். விலங்கு உரோமைப் பேரரசின் அடையாளம் (காண். 13:1). இவர்களின் வாயினின்று புறப்படும் போலித் தீர்க்கத்தரிசிகள் யார் ? இந்தச் சொல் திருவெளிப்பாட்டில் வருவது இதுவே முதல் முறையாகும். இவர்கள் அருங்குறிகள் புரியும் ஆற்றலைப் பெற்றுள்ளதாக 14-ஆம் வாக்கியம் கூறுகிறது. பிறரை வஞ்சிக்கும் தன்மையும் பெற்றிருப்பவர்கள் இவர்கள். ஆதலின் உரோமைப் பேரரசின் கையாட்களாகத் தான் இவர்கள் இருக்க முடியும். இவர்களைத்தான் மண்ணினின்று வந்த விலங்கின் அடையாளத்தில் 13:11–16 வாக்கியங்கள் குறிப்பிட்டன. இந்த இறைவாக்கினர்கள் உரோமைப் பேரரசின் எல்லா நாடுகளிலும் மன்னர் வழிபாட்டைப் பரப்பவும் மக்களை அதில் ஈடுபடுத்தவும் எண்ணங்

கொண்டு அவர்களை வஞ்சித்தவர்கள். இவர்களின் வாயினின்று வரும் தவளைகள் எதற்கு அடையாளம்? வேதாகமத்தில் தவளைகள் எகிப்தின் கொள்ளை நோய் ஒன்றை நினைவுபடுத்தும் (காண். யாத். *8:5–11*; சங். *77:45*; *104:30*). அடுத்து அவை அசுத்தப் பொருட்களின் பட்டியலில் வருகின்றன (காண். லேவி. *11–10*). ஆதலின் தீயபோக்குக்கும் செல்வாக்குக்கும் அடையாளமாகின்றன. அரிஸ்டோஃபானெஸ் (**Aristophanes**) என்ற கிரேக்க எழுத்தாளர் தவளையை வறட்டுப் பேச்சுக்கு அடையாளமாகக் கூறியுள்ளார். புனித அகுஸ்தீனுரும் இவற்றின் வறட்டு இரைச்சலைக்குறித்து, இவற்றை வீண்பேச்சால் பெருமை கொள்ளுதற்கு அடையாளமாகக் குறிப்பிடுகிருர்.

மேற்கூறிய நிகழ்ச்சிகளைக் கூட்டிச் சேர்த்துப் பார்க்குங்கால் இந்த உரோமைக் கையாட்களின் சொற்களும் செயல்களும் உண்மைக் கடவுளுக்கு எதிரானவையாய் இருந்தமையால், தீயபோக்கை மக்களிடையே பரப்பின. தீயவை பேய்களிடமிருந்து பிறப்பவையாதலின் அசுத்த ஆவிகள் என்றே கூறப்படுகின்றன. அவர்கள் புரியும் அருங்குறிகள் எல்லாம் மாய மந்திர தந்திர வித்தைகள்.

14 : இதனுல் மக்கள் ஏமாந்து போதல் இயல்பாகும். கடவுளின் பெருநாளில் உலக அரசர்களை ஒன்றுசேர்த்துப் போரிடமுனைவது, தீயசக்திகள் இறுதியாகச் செம்மறியோடு போரிட முயலுவதைக்குறிக்கும். இவ்வாக்கியம் சங். *2:2*-இன் அடிப்படையில் உருவான ஒன்று. ''தலைவர்கள் ஒன்று சேர்ந்து ஆண்டவரையும் அவர் அர்ச்சனை செய்த அரசரையும் எதிர்த்துச் சதிசெய்கிருர்கள்'' என்று சங்கீத ஆசிரியர் இறுதிநாள் போரை முன்னறிவிக்கிருர். அதே போல் திருவெளிப்பாடும் அறிவிக்கிறது.

15 : இவ்வாக்கியம் முன் வாக்கியத்தோடு தொடர்பின்றி வருவது போல் தோன்றும். இஃது இறுதிநாளுக்காக ஆண்டவரின் எச்சரிக்கை. ''இதோ நான் திருடனைப்போல் வருகின்றேன். ......'' என்பது ஆண்டவரின் குரல் என்பதில்

ஐயமில்லை. நம்மை விழிப்பாயிருக்கக் கேட்கின்றார் (காண். 1:3; 3:3, 4, 8; மத். 24:42). ஏனெனில் இறுதிநாளில் திடீரென்று நாம் ஏமாந்து வானக இன்பத்தை இழந்துவிடக் கூடாது..

16. இறுதிநாள் போராட்டம் அர்மகேதோன் (Armageddon) என்னும் இடத்தில் நடைபெறுமாம். இச்சொல் தமிழ்ச் சொல்லன்று. கிரேக்கமொழியில் உள்ளசொல்லை அப்படியே கையாண்டுள்ளனர். இது கிரேக்க மொழிச் சொல்லுமன்று. கிரேக்க நூலில் ' அர் மகெதோன் ' என்ற இரு எபிரேயச் சொற்களை அப்படியே பெயர்த்து எழுதினர். இச் சொற்கள் 'மெக்கிடோ குன்று', அல்லது 'மெக்கிடோ கோட்டை' என்றும் பொருள்தரும். பாலஸ்தீனு நாட்டு மெக்கிடோ குன்று யூதர்களின் நினைவில் சில முக்கிய நிகழ்ச்சிகளை நிலைநிறுத்தியது. இஸ்ராயேல் மக்களின் வரலாற்றில் முக்கியமான போர்கள் பல நிகழ்ந்த இடம் இது. குறிப்பாக இது யூதா நாட்டு அரசன் யோசியாஸ், எகிப்தின் நெக்கோ பாரவோனோடு (Neco Pharas) போரிட்டு மடிந்த இடம் (காண். 2 அரசர். 23:29, 30). இந்நிகழ்ச்சி அவர்களின் நினைவில் நீங்கா இடம் பெற்றது (காண். சக். 12:11). இந்நிகழ்ச்சியிலிருந்து இவ்விடம் அழிவின் அடையாளமாகவே நின்றுவிட்டது. திருவெளிப்பாடு இவ்விடத்தைக் குறிப்பிடுவதால் இறுதியில் தீய சக்திகளின் அழிவு முன்னறிவிக்கப் படுகிறது.

ஏழாவது வானதூதர் தம் கலசத்தை வான்வெளியில் 17
ஊற்றவே, ஆலயத்தின் அரியணையினின்று, ''முடிந்து விட்
டது'' என்றொரு பெருங் குரல் ஒலித்தது. மின்னலும் 18
பேரிரைச்சலும் இடிமுழக்கமும் உண்டாயின. பெரியதொரு
நிலநடுக்கமும் ஏற்பட்டது. மனிதன் மண்ணில் தோன்றிய
நாள்முதல், இதுவரை இத்தகைய நிலநடுக்கம் உண்டானதே
யில்லை; அது அவ்வளவு கொடியதாய் இருந்தது. அந்தப் 19
பெருநகரம் மூன்று பாகங்களாகப் பிரிந்து போயிற்று;
மாநிலத்தின் நகரங்கள் இடிந்து விழுந்தன. பாபிலோன்
மாநகரையும் பழிவாங்கக் கடவுள் மறக்கவில்லை; தம் கடுங்
கோபம் என்னும் மதுக் கிண்ணத்தைக் குடிக்கச் செய்தார். 20
எல்லாம் மறைந்துபோயின. மலைகளும் இருந்த இடம் தெரி

யாமல் போயின. அம்மிக் கல் போலக் கல்மழை விண்ணின்று 21
மக்கள்மீது பெய்தது. கல்மழையால் ஏற்பட்ட இவ்வாதை
மிகக் கொடியதாய் இருந்ததால், மக்கள் கடவுளைத் தூஷித்
தனர்.

17-18. ஏழாவது துன்பத்தோடு எல்லாம் முடிவுறும். இத்துன்பமோ உலகெங்கணும் நிகழ்வது. ஆதலின், கலசம் வானவெளியில் ஊற்றப்படுகிறது. இடி, மின்னல், பேரிரைச்சல் யாவும் கடவுள் உலகைத் தீர்ப்பிடுவதன் அடையாளங்கள் (காண். 12:1; யாத். 9:24). முதல் நூற்றாண்டில் சின்ன ஆசியாவைச் சார்ந்த உரோமைப் பேரரசின் பட்டணங்கள் நில நடுக்கங்களால் மிகவும் பாதிக்கப்பட்டதை ஆசிரியர் அறிந்தவர். இவை கிறிஸ்தவ மக்களுக்கு அழிவின் குறிகளாய் இருந்தன. ஆசிரியரும் இவற்றை அழிவின் அடையாளமாகக் கையாளுகின்றார்.

19 : இந்நிகழ்ச்சிகளால் உரோமை நகரும், அதன் பேரரசும் வீழ்கின்றன. 11:13-இல் கூறப்பட்ட அழிவு, பத்தில் ஒருபகுதி. ஆனால் இங்கே கூறப்படுவது முழுமையான அழிவு. உரோமை நகர் தீயொழுக்கம் என்ற மதுக் கிண்ணத்தைத் தான் குடித்துப் பிறரைக் குடிக்கச் செய்ததால் (காண். 14:8), இப்பொழுது கடவுளின் கோபக்கிண்ணத்தைக் குடிக்கிறது (காண். 14:10).

20 : மலைகள் அழிதல் திருவெளிப்பாட்டு நூல்களில் இறுதிநாளைக் குறிக்கும் அடையாளங்களில் ஒன்றாகும். "உயர் மலைகள் தாழ்ந்து விடும்; மலைக்குன்றுகள் ஆட்டங் கொண்டு வீழ்ந்துவிடும்" (காண். மோயீசனின் விண்ணேற்பு 10:4).

21 : கல் மழை எகிப்தின் ஏழாவது கொள்ளை நோயை நினைவுபடுத்துகிறது (காண். யாத். 9:22–26). பழைய ஏற்பாட்டில் யோசுவாவின் தலைமையில் இஸ்ராயேல் மக்கள் அம்மோரியரின் மன்னர்களோடு போர்புரிந்தபோது, இவர்கள் மீது கல்மழை பெய்ததை யோசுவா ஆகமம் கூறுகிறது (காண். யோசுவா 10:11). இங்கே கல்மழையும் ஓர் அழிவுச் சின்னமாகிறது. திருவெளிப்பாடு பலவிதமான உருவகங்கள்,

அடையாளங்கள் முதலியவற்றை வைத்து இறைவனின் இறுதி நாளை வருணிக்கிறது. இந்தச் சூழ்நிலையிலும் மனந் திரும்பாத தீயோர்கள் சிலரேனும் இருப்பர்.

(ii) பாபிலோனின்(உரோமை) அழிவு (17:1—19:10)

(அ) செந்நிற விலங்கின்மீது அமர்ந்திருந்த வேசி. *(17:1-6)*

17 ஏழு கலசங்களையுடைய ஏழு வானதூதர்களுள் ஒருவர்
என்னைப் பார்த்து, ''வா, நீர்த்திரள்மேல் அமர்ந்திருக்கும்
பேர்போன வேசி தண்டனைத் தீர்ப்புக்குள்ளாவதை உனக்குக்
காட்டுவேன். மண்ணக அரசர்கள் எல்லாரும் அவளோடு 2
விபசாரம் செய்தார்கள். மண்ணில் வாழும் மக்கள் எல்லாரும்
அவளுடைய விபசார மதுவினால் வெறிகொண்டார்கள்''
என்று சொன்னார். தேவ ஆவி என்னை ஆட்கொள்ளவே, 3
வானதூதர் என்னைப் பாலைவனத்திற்குக் கொண்டு சென்றார்.
அங்கே செந்நிற விலங்கின்மேல் அமர்ந்திருந்த பெண்
ஒருத்தியைக் கண்டேன். அந்த விலங்கின் உடலெல்லாம்
தூஷணப் பெயர்கள் நிறைந்திருந்தன. அதற்கு ஏழு தலை
களும் பத்துக் கொம்புகளும் இருந்தன. அப்பெண் இரத்தாம் 4
பரமும் செந்நிற ஆடையும் அணிந்து, பொன்னாலும் இரத்தி
னங்களாலும் முத்துகளாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தாள்.
கையில் அவளது விபசாரத்தின் அருவருப்பும் அசுத்தமும்
நிறைந்த பொற் கிண்ணம் இருந்தது. மறைவான பொருள் 5
கொண்ட பெயர் ஒன்று அவளது நெற்றியில் எழுதியிருந்தது.
பாபிலோன் மாநகர் வேசிகளுக்கும், மண்ணகத்தில் அருவரு
ப்பான யாவற்றிற்கும் தாய் என்பதே அப்பெயர். அப்பெண், 6
பரிசுத்தர்களின் இரத்தத்தையும், இயேசுவின் சாட்சிகளது
இரத்தத்தையும் குடித்து வெறி கொண்டிருப்பதைக் கண்
டேன் ; அவளைக் கண்டபோது மிகவும் வியப்படைந்தேன்.

இவ்வதிகாரத்தில் திருவெளிப்பாடு உரோமையின் முழு உருவத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறது. வழக்கம் போல் இவ்வதிகாரத்திலும் கருத்துக் கோர்வையில் தெளிவு இல்லை. கருத்துக்கள் முன்னுக்குப் பின்னாக பின்னிப் பின்னி வருகின்றன.

1 : எடுத்த எடுப்பிலேயே உரோமைப் பேரரசு ''பேர் போன வேசி'' என அழைக்கப்படுகிறது. அஃது உண்மைக்

கடவுளை விட்டுப் பொய்த் தெய்வங்களையும் தேவதைகளை யும் வழிபட்டதால் இப்பெயர் பெற்றது போலும். ஏனெனில் உண்மைக் கடவுளை விடுத்து பொய்க் கடவுளரை நாடின வரை பழைய ஏற்பாடு, விபசாரிகள், வேசிகள் என்றே கூறு கிறது. ''தீர் (Tyre) ஒரு விலைமகள், வேசித்தனம் செய்பவள்'' (இசை. 23:16, 17); ''நினிவே (Ninive) ஒரு விலைமகளைப் போல் தன் வேசித்தனத்தால் மக்களினத்தை மயக்கும்'' (நாகும். 3:4); இஸ்ராயேலின் வேசித்தனத்தை எசேக்கி யேல் இறைவாக்கினர் கடிந்துரைத்தார் (எசேக். 16); எருசலேம், சமாரியா பட்டணங்களை இரு வேசிகளாக வரு ணிப்பதை எசேக். 23:3-இல் காண்க. அல்லது அக்காலத் தில் உரோமைப் பேரரசின் ஆலயங்களிலெல்லாம் விலை மகளிர் நிறைந்திருந்ததையும் பட்டணத்திலும் விலைமகளிர் பலர் தங்கள் குலத்தொழிலை வெளிப்படையாக நடத்தி வந்ததையும் மனதிற்கொண்டு திருவெளிப்பாடு உரோமை யைப் 'பேர் போனவேசி' என்று வருணிக்கின்றது எனவும் கூறலாம். எவ்வாருயினும் அப்பேரரசு ஒழுக்கக் கேட்டால் நிறைந்திருந்தது என்பது உண்மை. இப்பெண் நீர்த்திரள் மேல் அமர்ந்திருப்பவள். 'நீர்நிலைகளின் அருகில் செழித் திருந்த பாபிலோன்' என்று பாபிலோன் நாட்டைப்பற்றி சொல்வது வழக்கு (காண். எசெக். 51:13). திருவெளிப்பாட் டில் ஆசிரியர் உரோமைப் பாபிலோன் என்று கூறுவ தால், அந்த அடைமொழியையும் உரோமைக்குப் பயன் படுத்துகிருர்.

2 : உரோமைப் பேரரசின் ஆளுகைக்கு உட்பட்ட அடிமை நாடுகள் எல்லாம் பொய்க் கடவுளர் வழிபாடு, மன்னர் வழிபாடு இவற்றை ஏற்றன. அத்துடன் உரோ மையின் எல்லாவித தீயொழுக்கங்களையும் ஏற்றன. உரோ மைப் பேரரசு அக்காலத்தில் மிகமிகப் பரந்திருந்ததால் மண்ணக மக்கள் எல்லாரும் அதனுடைய செல்வாக்கினுல் தவறியதில் வியப்பில்லை.

3 : இவ்வாக்கியத்தில் இப்பேரரசும் அதன் தலைநகரும் இரு உருவகங்களில் வருகின்றன. செந்நிற விலங்கு

உரோமைப் பேரரசைக் குறிக்கும். 13-ஆம் அதிகாரத்தில் கடலினின்று வெளிவந்த விலங்குக்கு நாம் கூறிய விளக்கத்தைக் காண்க. அதன்மேல் அமர்ந்திருந்த பெண் உரோமை நகரைக் குறிக்கும். இக் காட்சி பாலைவனத்தில் தோன்றுகின்றது. எந்தப் பாலைவனம், என்று ஆராயத் தொடங்குவது தேவையற்றது. பொதுவாக, இங்குப் பாலைவனம் என்பது அசுத்த ஆவிகளின் இடத்தைக் குறிக்கப் பயன் படுத்தப்படுகிறது. இறைநிந்தைப் பெயர்களைப் பற்றி முன்பே அறிந்துள்ளோம் (காண். 13:5). அக்காலத்தில் உரோமைப் பேரரசின் எல்லாப் பொதுவிடங்களிலும், நினைவுச் சின்னங்களிலும் மன்னர் வழிபாட்டுச் சொற்றொடர்களை எழுதியிருந்தனர் (உ-ம். "சீசர் ஆண்டவர்"). இவை பேரரசு முழுவதும் பரவியிருந்ததால், 'விலங்கின் உடலெல்லாம் தூஷண(இறைநிந்தை)ப் பெயர்கள்' என்று நூல் வருணிக்கிறது. இதற்கு உள்ள ஏழு தலைகள், உரோமை நகரின் ஏழு மலைகளைக் குறிப்பதாக எடுத்துக்கொள்ளலாம் (காண். 17:9). அல்லது ஏழு தலைகளும் பேரரசின் சிறந்த மன்னர்கள் எழுவரைக் குறிக்கும் என்றும் கொள்ளலாம்.

4 : செந்நிற ஆடை, பொன், இரத்தினங்கள் முதலியவை உரோமை நகரின் செல்வப் பெருக்கையும் அதிகாரச் செருக்கையும் குறிக்கும் அடையாளங்கள். உரோமை நகரில் தீயொழுக்கங்கள் நிறைந்திருந்தமையால் 'விபசாரத்தின் பொற்கிண்ணம்' என்னும் உருவகப் பொருளில் அழைக்கப்படுகின்றது.

5 : பெண்ணின் நெற்றியில் எழுதியிருந்த பெயர், உரோமையில் வாழ்ந்த விலைமகளிர் தங்கள் பெயரை நெற்றிப் புருவங்களில் தொங்கவிட்டிருந்ததை நினைவு படுத்துகிறது. அதுபோல் உரோமையும் 'விலைமகளிர் தாய்' என்றும் பெயர் பெறுகிறது. அதாவது, எல்லாத் தீயொழுக்கத்திற்கும் அது பிறப்பிடம். இவ்வித வசை மொழி கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே புரியுமாறு அமைந்தது. இப் பெண் 12:1-இல் தோன்றிய விண்ணகப் பெண்மணிக்கு

எவ்வளவு எதிர்மாருக உள்ளாள் என்று காண்க. அவளிடம் உள்ள தெய்வீகத் தூய்மை இவளிடம் சிறிதேனும் இல்லை.

5 : உரோமை நகர் மறைத் தியாகிகளின் (வேதசாட்சிகளின்) இரத்தத்தைச் சுவைத்த இடம். கி.பி. 64-இல் நீரோ மன்னன் கிறிஸ்தவர்களை நகருக்குத் தீவைத்தவர்கள் எனப் பொய்க் குற்றம் சாட்டிப் பலவகைகளில் அவர்களைக் கொலை செய்தான். இந் நிகழ்ச்சியை நூலாசிரியர் மனதில் வைத்து எழுதுகிருர்போலும். இவ்வாறு பலவிதங்களில் கெட்டொழியும் இந்நகரைப் பார்த்து அருளப்பரும் வியந்து நிற்கிருர்.

(ஆ) வானதூதரின் விளக்கம் *(17:7–18) :*

வானதூதர் என்னை நோக்கிக் கூறியதாவது: ''நீ 7
வியப்படைவதேன்? அந்தப் பெண்ணைப்பற்றிய மறைபொரு
ளையும், ஏழு தலைகளும் பத்துக் கொம்புகளும் கொண்டதாய்
அவளைத் தூக்கிச்செல்லும் விலங்கின் மறை பொருளையும்
உனக்குச் சொல்லுகிறேன். நீ கண்ட விலங்கு முன்பு 8
இருந்தது; தற்போது உயிரோடு இல்லை. பாதாளக் குழியி
லிருந்து எழப்போகிறது; ஆனல் அழிந்துபோகும். வாழ்வு
நூலில் உலகத் தொடக்கமுதல் பெயர் எழுதப்படாத மண்ணுல
கினர், அந்த விலங்கைக் காணும்போது வியப்படைவார்கள்.
ஏனெனில் முன்பு உயிரோடு இருந்து தற்போது இல்லாத
அந்த விலங்கு திரும்பவும் உயிர்பெற்று வருவதைக் காண்பார்
கள். இங்கே நுண்மதியும் அறிவுக் கூர்மையும் தேவை: ஏழு 9
தலைகளும் அப்பெண் அமர்ந்திருக்கும் ஏழு மலைகளைக்குறிக்கும்;
ஏழு அரசர்களையும் குறிக்கும். அவர்களுள் ஐவர் ஒழிந்தனர். 10
இப்போதுள்ளவன் ஒருவன்; ஒருவன் இன்னும் தோன்ற
வில்லை. அவன் தோன்றியபின் சிறிது காலமே இருப்பான். 11
முன்பு இருந்து, தற்போது உயிரோடில்லாத விலங்கே எட்டா
வது அரசனைக் குறிக்கும். அவன் ஏழு அரசர்களுள் ஒருவன்.
அவனும் அழிந்துபோவான். நீ கண்ட பத்துக் கொம்புகளும் 12
பத்து அரசர்களைக் குறிக்கும். அவர்கள் இன்னும் ஆட்சிக்கு
வரவில்லை. ஆனல் அவர்கள் விலங்கோடு ஒரு மணியளவு
அரசாள அதிகாரம் பெறுவார்கள். அவர்கள் ஒரு மனத் 13
தவராய், தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் அவ்விலங்
கினிடம் ஒப்படைப்பார்கள். செம்மறிக்கு எதிராக அவர்கள் 14
போரிடுவார்கள். செம்மறியோ அவர்களை வெல்வார்.

ஏனெனில் அவரே ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவர், அர
சர்க்கெல்லாம் அரசர். அழைக்கப்பெற்றுத் தேர்ந்தெடுக்கப்
பட்டவர்களாய் அவரோடு இருக்கும் உண்மை ஊழியர்களும்
அவரோடு வெற்றி கொள்வர்.'' மேலும் அவர் எனக்குச்
சொன்னதாவது : ''அந்த வேசி, நீர்த்திரள்மேல் அமர்ந் 15
திருக்கக் கண்டாயே, அந்த நீர்த்திரள் பல இனங்கள், பல
நாடுகள், பல மொழிகளைச்சார்ந்த மக்கள் திரளைக் குறிக்கும்.
நீ கண்ட பத்துக் கொம்புகளும் விலங்கும் வேசியின்மேல் 16
வெறுப்புக்கொண்டு, அவள் ஆடைகளைப் பறித்து, அவளைப்
பாழாக்கிவிடும். அவளது தசையைத் தின்னும்; அவளை
நெருப்பினால் சுட்டெரித்துவிடும். கடவுள் தமது எண்ணத்தை 17
நிறைவேற்றும் பொருட்டே இங்ஙனம் அந்நாட்டினரின் உள்
ளங்களை ஏவிவிட்டார். கடவுள் கூறியது நிறைவேறுமட்டும்,
அவர்கள் ஒரு மனத்தவராய்த் தங்கள் ஆட்சியை விலங்கினிடம்
ஒப்படைத்தது அதே ஏவுதலால்தான். நீ காட்சியில் கண்ட 18
பெண் மண்ணுலக அரசர்கள்மேல் ஆட்சி செலுத்தும் பெரிய
நகரம்.

7 : வானதூதர் ஒருவர் மேலே கண்ட காட்சிக்கு உண்மை விளக்கம் கூறுவதுபோல் இப்பகுதி அமைந்துள்ளது. திருவெளிப்பாட்டு நூல்களில் வான தூதர்களை விளக்க வுரையாளராக வைத்துப் புனைதல் இயல்பாகும் (காண். தானி. *7:15–28; 8:15–26*). முந்திய பகுதியில் வந்த உருவக மொழிகளும் இப் பகுதியில் வராமலில்லை. 'பெண்' உரோமையின் அடையாளம்.

8 : 'விலங்கு' நீரோ மன்னனுக்கு அடையாளமாய் வருகிறது. அவன் உரோமைப் பேரரசின் உருவாய்த் திகழ்ந்தவன்; மக்களின் மனத்திரையில் நீங்கா இடம் பெற்றிருந்த மாமன்னன். அவன் இறந்தான். ஆனால் அவன் பார்த்தியரின் நாட்டுக்குச் சென்றுவிட்டதாகவும் பின்னர் மீண்டும் வருவான் என்றும் மக்கள் நம்பிருந்தனர். வெஸ்பாசியன் மன்னனின் காலத்தில் இருந்து ஆசிரியர் எழுதுவதாகத் தோன்றுகின்றது. ஏனெனில் தொமீசியன் காலத்தில் எழுதுவதாகக் காட்டியிருந்தால், நீரோ மன்னன் தொமீசியன் உருவத்தில் மீண்டும் வந்தான் என்ற மக்களின் கருத்துக்கு ஏற்ப ஆசிரியரும் விலங்கு (நீரோ) பாதாளக் குழியிலிருந்து எழுந்துவிட்டது என்று இறந்தகாலத்தில்

எழுதியிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு செய்யவில்லை. வெஸ்பாசியன் காலத்தில் எழுதுவதாகவே காட்டுகிருர். ஆசிரியர் நடக்கப்போவதை நடந்ததாக வைத்து எழுதியதைக் கிறிஸ்தவர்கள் புரிந்துகொண்டிருக்க வேண்டும். ஏனெனில் திருவெளிப்பாட்டு மரபுகள், பண்புகள் யாவற்றையும் இவர்கள் நன்கு அறிந்திருந்தவர்கள். ஆதலின் நீரோ அழிந்ததுபோல், தொமீசியனும் (உயிர்பெற்ற நீரோ) அழிவான். நீரோவுக்குப்பின் தொமீசியன்தான் கிறிஸ்தவர்களைப் பலவித கொடுமைகளுக்கு உள்ளாக்கினவன். இத்தகைய செயல்களுக்காகக் கிறிஸ்தவரல்லாதார் இவனைக் கண்டு வியப்பது இயல்பே. கிறிஸ்தவர்கள் இவர்களது போக்குக்கும் கொள்கைக்கும் மாருகப் போதித்தவர்களாயிற்றே. ஆனல் வாழ்வின் நூலில் இவர்களின் பெயர்கள் இடம் பெறவில்லை. கிறிஸ்தவர்கள் அல்லாதார் விண்ணகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். இவர்கள் உயிர்பெற்று வரும் நீரோவை (தொமீசியனைக்) காண்பார்கள். ஆனல் செம்மறியைக் காணமாட்டார்கள்.

9 : (காண். வ. 3) உரோமை நகர் ஏழுமலைகள் மீது கட்டப்பட்டிருந்தது. அதைப் பற்றி எந்த ஐயமுமில்லை.

10 : ‘ஏழு அரசர்கள்’ யாவர்? (1) அகுஸ்துஸ் (கி.மு. 27-கி. பி. 14) ; (2) திபேரியாஸ் (கி. பி. 14-37) ; (3) கலிகுலா (கி. பி. 37-41); (4) கிலாதியுஸ் (கி. பி. 41-54) ; (5) நீரோ (கி. பி. 54-68) ; (கல்பா, ஒத்தோ, வித்தெல்வுஸ்) (6) வெஸ்பாசியன் (கி. பி. 69-79); (7) தீத்துஸ் (கி. பி. 79-81) ; (8 ?) தொமீசியன் (கி. பி. 81-96) அடைப்புக்கோடுகளில் உள்ளவர் மூவரும் வரலாற்றுச் சிறப்புப் பெருதவர்கள். ஆதலின் மன்னரின் வரிசையில் இடம் பெறவில்லை. (முன்னுரை காண்க). இப்பட்டியல்படி நூல் எழுந்த காலத்தில் வாழ்ந்த தொமீசியன் மன்னனேடு எட்டு பேர்களல்லவா உள்ளனர்? எழுவர் என்று சொல்லல் எவ்வாறு பொருந்தும்? இதற்கு இருவகை விளக்கங்கள் உள. நீரோ மன்னன் தொமீசியன் உருவில் மீண்டும் உயிர் பெற்று வருவான் என்ற நம்பிக்கை அக்கால மக்களிடையே

பரவியிருந்தாக முன்பு கூறினேம் (காண். 13 : 18). தொமீசியன் நீரோவின் மறு பிறப்பு என்றுல் அவனைப் பட்டியலில் சேர்க்கத்தேவையில்லை. ஆதலின் திருவெளிப்பாடு எழுந்த காலம் வரை உரோமைப் பேரரசின் மன்னர்கள் எழுவர் ஆவர். வேறெரு கோணத்திலிருந்தும் இதற்கு விளக்கம் கூறலாம். திருவெளிப்பாட்டு நூல்கள் காலத்தை முன் தள்ளி வைத்துப் பேசும் பண்புடையன. இம் முறையில் ஆசிரியர் இப்பகுதியைத் தொமீசியன் காலத்தில் எழுதினுலும், வெஸ்பாசியன் காலத்தில் எழுதுவதாகத் தோன்றும் பொருட்டு, இம் மன்னனேடு மன்னர் பட்டியலை நிறுத்தி எழுவர் என்று கூறுகின்றுர் எனலாம். (முன்னுரை பக். 17 காண்.) இக்கணக்குப்படியும் திருவெளிப்பாடு எழுந்த காலத்தை கருத்தில் கொண்டும் பார்க்குங்கால் இறந்த ஐவர் அகுஸ்துஸ், திபேரியுஸ், கலிகுலா, கிளாதியுஸ், நீரோ ஆகியோர் ஆவர். 'இப்போது உள்ளவன்' வெஸ்பாசியன் (ஆறும் மன்னன்). 'இன்னும் தோன்றுத ஒருவன்' என்பது தீத்துசைக் (ஏழாம் மன்னன்) குறிக்கும். நூலின்படி அவன் சிறிது காலமே வாழ்பவன். அவனும் இரண்டு ஆண்டுகள் தான் வாழ்ந்தான். அவன் நோய்வாய்ப்பட்டிருந்ததால் நீண்டநாள் வாழவில்லை.

11 : "முன்பு இருந்து, தற்போது உயிரோடில்லாத" விலங்கே எட்டாவது அரசனைக் குறிக்கும். இவ்வாக்கியத்தில் ஆசிரியர் தொமீசியனின் உருவில் நீரோ மீண்டும் வாழ்கின்றுன் என்ற மக்களின் கருத்தைக் கூறினுலும், அக்கருத்துக்கு அவர் ஒப்புவதில்லை என்பது கண்கூடு. அதனுல்தான் 'தற்போது உயிரோடில்லாத' என்று எழுதுகின்றுர். நீரோ தொமீசியனுக மீண்டும் வாழ்கிறுன் என்று மக்கள் நம்பியிருந்தாலும், அவனும் அழிவான்.

12 : பத்து அரசர்களும் பொதுவில் உரோமைப் பேரரசின் அடிமை நாடுகளின் சிற்றரசர்கள் (16 : 12).

13 : இவர்களிடமே நீரோ சென்றிருந்தாகவும், இவர்கள் எல்லாரும் நீரோவின் தலைமையில் உரோமையைக்

கைப்பற்றுவதாகவும், மக்களிடையே ஒரு பொதுவான நம்பிக்கை நிலவி வந்தது. நீரோ இந்தச் சிற்றரசர்களின் துணைகொண்டு நாட்டைக் கைப்பற்றி, உரோமையை அழிப்பான். இந்த அழிவைத்தான் (காண்: *18 : 10, 17, 19*) 'ஒரு மணி நேர அரசாட்சி' (வ. *12*) என நூல் குறிப்பிடுகின்றது போலும். இவர்கள் எல்லாரும் செம்மறிக்கு எதிராகப் போரிடுவர். இப்போரைப்பற்றி *19 : 11-21*-இல் காண்க. ஆனால் செம்மறி (கிறிஸ்து) இவர்களை வென்றுவிடுவார். எனெனில் கிறிஸ்து அரசர்க்கெல்லாம் அரசர் (காண். உபா. *10 : 17 ;* சங். *135:3 ;* தானி. *2 : 47 ; 2* மக். *13 : 4 ; 1* திமோ. *6 : 15*). இந்த வெற்றியில் கிறிஸ்தவர்களும் பங்கு பெறுவர்.

15 : முதல் வாக்கியத்தில் வரும் 'நீர்த்திரளு'க்கு விளக்கம் கூறுகிறார் வானதூதர். பாபிலோனுக்குக் கொடுக்கப்பட்ட அடைமொழியை ஆசிரியர் கையாளுவதாகச் சொன்னோம். இச்சொல் உரோமைப் பேரரசின் ஆளுகைக்கு உட்பட்ட எல்லா நாடுகளையும் மக்களையும் குறிக்கும்.

16 : பத்து கொம்புகளின் அடையாளமாய் நிற்கும் அடிமை மன்னர்களும் நீரோமன்னனும் உரோமை நகரை அழிக்கும் கருவிகளாய் அமைந்துவிடுகின்றனர். பழைய ஏற்பாட்டில் அழிவைக் குறிக்கும் அடையாளச் சொற்களாகிய ஆடைகளைப் பறித்தல், தசையைத் தின்னுதல், நெருப்பில் சுட்டெரித்தல் ஆகியவற்றை ஆசிரியர் இங்குக் கையாண்டுள்ளார் (காண். இசை. *49 : 26 ;* எசேக். *23:25-29 ;* மிக். *3 : 3 ;* லேவி. *20 : 14 ; 21 : 9*).

17 : உரோமையை அழிப்பவர்கள் யாவரும் கடவுளின் தம் திட்டத்தை நிறைவேற்ற அவருக்கு உதவிய கருவிகள் போன்று உள்ளனர். அதுவும் மீண்டும் உயிர்பெற்றெழுந்த நீரோ மன்னனின் தலைமையில் இது நடைபெறுவதாக நூல் கூறுகிறது. கடவுள் இந்தத் தமது திட்டத்தை நிறைவேற்ற நீரோ மன்னனையா கருவியாக்கிக் கொண்டார்? நூலாசிரியர் அப்படித்தான் கூறுவதாகத் தெரிகிறது. அப்

படியாயின் இந்நோக்கத்திற்காக அவரே நீரோவை உயிர்ப்பித்தார் என்றும் கூறத்தோன்றும். ஆனால் உண்மை இதுவன்று. நீரோவைப்பற்றி அன்றைய உரோமைப் பொது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை ஆசிரியர் ஏற்கவில்லை. அவருக்குத் தெரியும் இந்நம்பிக்கை குருட்டுத்தனமானது என்று. ஆனால் மீண்டும் வரும் நீரோ, உரோமையை அழிப்பான் என்ற ஒரு கருத்து யூதர்களின் திருவெளிப்பாட்டு நூல்களிலே நிலைபெற்ற ஒரு கருத்தாகும் (சிபில்லின் திருவாக்குகள் 4 : 119–22, 137–9 ; 5 : 143–148, 361-4). ஏனெனில் இந்த அழிவு, எருசலேமை அழித்தவர்கள்மீது கடவுள் கொணரும் அழிவாம். இன்னும் முதல் நூற்றாண்டின் இறுதியில் உயிர் பெற்றெழும் நீரோ சாத்தானின் கையாளாகவோ, அவதாரமாகவோ கருதப்பட்டான் (சி. பி. திரு. 5 : 28–34 ; 214–227). இந்தத் திருவெளிப்பாட்டு நூல்கள் பொதுமக்களின் குருட்டுத்தனமான நம்பிக்கையைத் திரித்து மேற்கூறிய பொருட்களில் கையாண்டுள்ளதை அருளப்பர் தமது நூலிலும் பயன்படுத்துகின்றார். யூதர்களின் திருவெளிப்பாட்டு நூல்களில் உயிர்த்து வரும்— நீரோ உருவகப் பொருளாய் இருப்பதால், நம் திருவெளிப்பாட்டிலும் இதே உருவகத்தின் அடிப்படையில் பொருள் கூறவேண்டும். ஆதலின் இங்கே உயிர்த்தெழும் நீரோ, உரோமையின் அழிவுக்குக் காரணம். அவன் செம்மறியோடு போர்புரிவதால், சாத்தானின் அவதாரம் அல்லது கையாள் என்றுகிறது.

16 : மீண்டும் ஒரு முறை ஆசிரியர் காட்சியில் வரும் பெண் யார் என்று கூறுகிறார் (17 : 9). உரோமை நகர் தனக்கு அழிவைக் கொணரும் மன்னர்மேல் ஆட்சி செலுத்தியது என்று இழிந்துரைப்பது போல் அமைந்துள்ளது இவ்வாக்கியம்.

(இ) பாபிலோனின் வீழ்ச்சி: (18 : 1-24.)

18 இதற்குப்பின் பெரும் வல்லமையுள்ள இன்னொரு வான
தூதர் விண்ணினின்று இறங்கி வரக்கண்டேன். மண்ணுலகு
அவரது மாட்சியால் மிகுந்த ஒளிபெற்றது. அவர் உரத்த 2

குரலில் கூறினதாவது: 'வீழ்ந்தது, வீழ்ந்தது, பாபிலோன்
மாநகர், அது பேய்களின் உறைவிடமாயிற்று, அசுத்த ஆவி
யெல்லாம் நடமாடும் கூடமாயிற்று, அசுத்தமும் அருவருப்பும்
மிக்க பறவைகள் எல்லாம் வாழும் கூடம் அதுவே. அவ்வேசி 3
காமவெறி என்னும் தன் மதுவை நாடுகள் எல்லாம் குடிக்கச்
செய்தாள். மண்ணக அரசர்கள் அவளோடு விபசாரம் செய்
தனர். அவளது செல்வச் செருக்கினால் மண்ணக வணிகர்கள்
செல்வம் திரட்டினர்.' பின்னர் விண்ணினின்று இன்னொரு 4
குரலைக் கேட்டேன். அது சொன்னதாவது: ''என் மக்களே,
நீங்கள் அவளுடைய பாவங்களில் பங்கு கொள்ளாதிருக்கவும்,
அவளுக்கு நேரும் வாதைகளில் அகப்படாதிருக்கவும், அவளை
விட்டுப் போய்விடுங்கள். அவளுடைய பாவங்கள் வானளாவக் 5
குவிந்துவிட்டன; அவளுடைய அநீதச் செயல்களைக் கடவுள்
நினைவில் வைத்துள்ளார். அவள் கொடுத்ததற்கேற்றபடி 6
திருப்பிக் கொடுங்கள்; அவள் செயல்களுக் கேற்றவாறு
இரட்டிப்பாகத் திருப்பிக் கொடுங்கள்; அவள் கலந்து
கொடுத்த கிண்ணத்தில் இரு மடங்காகக் கலந்து கொடுங்கள்.
அவள் தன்னை மகிமைப்படுத்தி, செல்வச் செருக்குடன் வாழ்ந்த 7
அளவுக்கு வேதனையும் துயரமும் அவளுக்குக் கொடுத்துவிடுங்
கள். 'நான் அரசியாக வீற்றிருக்கிறேன், நான் கைம்பெண்
அல்லேன், ஒருநாளும் துயருறேன்' என்று தன் இதயத்தில்
கூறினாளன்றோ? ஆகவே, சாவு, துயரம், பஞ்சம், ஆகிய 8
வாதைகளெல்லாம் ஒரே நாளில் அவள் மீது வந்து விழும்:
நெருப்பு அவளை எரித்துவிடும்: ஏனெனில் அவளுக்குத்
தீர்ப்பிடும் ஆண்டவராகிய கடவுள் வல்லமை மிக்கவர்.'' அவ 9
ளோடு விபசாரம் செய்து செல்வச் செருக்கோடு வாழ்ந்த
மண்ணக அரசர்கள் அவள் எரியும்போது எழும் புகையைப்
பார்த்துப் பார்த்து அவளுடைய வேதனைகளுக்கு அஞ்சி, 10
தொலைவிலே நின்று, '' ஐயோ! ஐயோ!! வல்லமை மிக்க
நகரே! பாபிலோன் மாநகரே! ஒரு மணி நேரத்தில் உனக்குத்
தீர்ப்பு வந்துவிட்டதே'' என்று அழுது புலம்புவார்கள். மண் 11
ணக வணிகர்களும் அவளுக்காக அழுது புலம்புவார்கள்.
ஏனெனில் அவர்களுடைய சரக்குகளை வாங்குவோர் யாரும்
இல்லை. பொன், வெள்ளி, இரத்தினங்கள், முத்துக்கள், 12
மெல்லிய துணி, இரத்தாம்பரம், பட்டாடை, செந்நிற ஆடை,
வாசனைக் கட்டைகள், தந்தப் பொருட்கள், விலையுயர்ந்த மரம்,
வெண்கலம், இரும்பு, சலவைக் கல் இவற்றாலான பொருட்கள்,
இலவங்கம், ஓமம், தூபவர்க்கம், பரிமளத்தைலம், சாம்பிராணி, 13
திராட்சை இரசம், எண்ணெய், மெதுமாவு, கோதுமை, ஆடு
கள், மாடுகள், குதிரைகள், தேர்கள், அடிமைகள், மனித உயிர்

கள் இவையெல்லாம் வாங்க யாருமில்லை. "நீ இச்சித்த கனி 14
கள் எட்டாமல் போயின. உன் பகட்டும் மினுக்கும் எல்லாம்
ஒழிந்தன. இனி யாரும் அவற்றைக் காணப்போவதில்லை"
என்பார்கள். இச்சரக்குகளைக்கொண்டு, அவளோடு வாணி 15
பம் செய்து, செல்வம் திரட்டியவர்கள் அவளுடைய வேதனை
களுக்கு அஞ்சி, தொலைவிலே நின்று: "ஐயோ, ஐயோ 16
மாநகரே, மெல்லிய துணியும் இரத்தாம்பரமும் செந்நிற
ஆடையும் அணிந்து, பொன் இரத்தினம் முத்துக்களால் அலங்
கரிக்கப்பட்டவளே, ஒரு மணி நேரத்தில் உன் செல்வமெல்லாம் 17
அழிந்து போய்விட்டதே" என்று அழுது புலம்புவார்கள்.
கப்பல் தலைவர்கள், கடல் பயணஞ் செய்வோர், கப்பலோட்டி
கள், கடல் வணிகர்கள் அனைவருமே தொலையில் நின்று, அவள்
எரியும்போது எழும் புகையைப் பார்த்துப் பார்த்து, "இம் 18
மாநகர்க்கு நிகரான ஒரு நகருண்டோ?" என்று கத்தினர்கள்.
புழுதியை வாரித் தலைமேல் போட்டுக்கொண்டு, "ஐயோ, 19
ஐயோ, கடலில் கப்பல் செலுத்திய அனைவரையும் தன் செல்வ
வளத்தால் செல்வமிக்கவராக்கிய இம் மாநகர் ஒரு மணி நேரத்
தில் பாழாகி விட்டதே" என்று அழுது புலம்பினர். 'வான 20
கமே, இறைமக்களே, அப்போஸ்தலர்களே, இறைவாக்கினரே.
அவளைப் பார்த்து அகமகிழுங்கள்; உங்கள் சார்பாகக் கடவுள்
அவளைப் பழிவாங்கிவிட்டார்.' வலிமை மிக்க வானதூதர் 21
ஒருவர் எந்திரக் கல் போன்றதொரு பெரிய கல்லை எடுத்து,
கடலில் எறிந்து சொன்னதாவது: "பாபிலோன் மாநகர்
இவ்வாறே வீசி எறியப்படும்; இருந்த இடம் தெரியாமல்
அது மறைந்துவிடும். யாழ் மீட்டுபவர், பாடகர், குழல் 22
வாசிப்பவர், எக்காளம் ஊதுவோர் இவர்களின் ஓசை இனி
உன்னிடம் ஒருபோதும் எழாது. எத்தொழில் துறையிலும்
உள்ள தொழிலாளிகள் இனியொருபோதும் உன்னகத்தே
காணப்படமாட்டார்கள். எந்திரக் கல் அரைக்கும் ஓசை இனி
ஒருபோதும் உன்னகத்தே கேட்காது. விளக்கொளி உன் 23
னிடம் இனி ஒருபோதும் ஒளிராது; மணவிழாவின் மங்கல
ஒலி இனி ஒருபோதும் உன்னிடம் எழாது. உன் வணிகர்கள்
மண்ணகத்தில் தனிச்சிறப்புற்று விளங்கினர். உன் மந்திர
மாயத்தால் எல்லா நாடுகளும் ஏமாந்தன, இறைவாக்கினரின் 24
இரத்தமும், இறைமக்களின் இரத்தமும், மண்ணுலகில் கொல்
லப்பட்ட அனைவரின் இரத்தமுமே அவளிடம் காணப்பட்டது."

1. வீழ்ச்சி.

உரோமைப் பேரரசின் சீர்கேட்டையும் அதன் அழி வையும் முன்னறிவித்தது 17-ஆம் அதிகாரம். இந்த அதி

காரம் அஃது அழிந்துவிட்டதெனக் கூறிவிடுகின்றது. வரப் போகும் அழிவு அவ்வளவு நிச்சயமானதால், அது வந்து விட்டதாகக் கூறி வருணிக்கிறது.

1 : பெரும் வல்லமையுள்ள வான தூதர் அழிவை அறிவிக்கின்றார். அவர் மிகுந்த அதிகாரம் உள்ளவர். அவர் கடவுள் திருமுன்னின்று வருவதால் கடவுளின் மாட்சி அவரது முகத்தில் ஒளிர்கின்றது.

2 : அதிகாரத் தொனியோடு அழிவை அறிவிக்கின்றார் (காண். எசேக். 43:2; இசை. 21:9). "வீழ்ந்தது, வீழ்ந்தது, பாபிலோன் மாநகர்" — ஆசிரியர் இறந்த கால நிகழ்ச்சியாக வருணிப்பதைக் கவனிக்கவும். இவ்வதிகாரத்தில் உரோமையின் அழிவு ஒரு 'புலம்பலாக' எழுதப் பட்டுள்ளது. இந்த இலக்கிய வகை பழைய ஏற்பாட்டிலிருந்து எடுக்கப்பெற்றதாகும். முற்காலப் பாபிலோனைப் பற்றிய புலம்பலை இசை. 13:19–22–உம், ஏதோமின் அழிவைப்பற்றிய புலம்பல் பாடலை இசை. 34:11–15–உம், நினிவேயின் அழிவைப்பற்றிய புலம்பலை சொப்போ. 2:13–15–உம் கொண்டுள்ளன. திருவெளிப்பாட்டு நூலாசிரியர் இவற்றின் அடிப்படையில் உரோமையின் வீழ்ச்சியைப் புலம்பலாக அமைத்துள்ளார். இசை. 34:11–15 அறிவித்ததுபோல் உரோமையும் பாழான இடமாய் மாறி, மனிதர் நடமாடாது, மிருகங்கள் இருக்கும் இடமாயும், பேய்களின் உறைவிடமாயும் ஆகிவிடுகிறது (பாருக். 4:35).

3 : காமவெறியே அதன் அழிவுக்குக் காரணம். இச்சொல் இயற்பொருளிலும் உருவகப் பொருளிலும் உரோமைக்குப் பொருந்தும் (17:1 காண்). இப்பட்டணத்தின் பாவ வாழ்வு பிறரையும் கெடுத்தது அக்காலத்தில் உலகின் எத்திசையிலிருந்தும் நாடுகள் பல உரோமையோடு வணிகத் தொடர்பு வைத்திருந்தன. எகிப்து, சீரேன், கிரேத்து, அரேபிய நாடுகள், கிரேக்க நாடுகள், பாபிலோன், பார்த்தியா, இந்தியா, சீனு இன்னும் பிற நாடுகள் பலவிதமான பொருட்களை உரோமைக்கு விற்பனை செய்தன. ஆதலின்

உலக நாடுகள் உரோமையின் செல்வச் செருக்கினுல் பணம் திரட்டின என்பது சாலப்பொருந்தும். இதற்குவரலாறு சான்று பகரும். இவ்வளவு உய்ந்து வாழ்ந்த உரோமை அழிகின்றது!

4–8: கடவுளின் தண்டனையை அனுபவிக்கப்போகும் இந்நகரைவிட்டுக் கிறிஸ்தவ மக்கள் வெளியேறல் வேண்டும். 'அவனைவிட்டுப்போய் விடுங்கள்' என்பது விண்ணின்று வந்த குரலின் எச்சரிக்கை. இச்சொற்களில் எரேமியாஸ் இறைவாக்கினர் இஸ்ராயேல் மக்களைப் பாபிலோன் நாட்டி லிருந்து ஓடிப்போகச் சொல்லி எச்சரித்த மொழி (எரே. 51:6, 45) எதிரொலிக்கின்றது. "பாபிலோனைவிட்டுப் புறப் படுங்கள், கால், தேயாவைவிட்டு வெளியேறுங்கள்" (இசை. 48:20) என்ற இசையாசின் எச்சரிக்கையும், இங்கு தொனிக்கின்றது. மேலும் சோதோம், கொமோ ஆகிய நகர்கள் அழியுமுன் வானதூதர் லோத்தையும் அவர் மனைவி மக்களையும் அப்பட்டணங்களைவிட்டுப் போகும்படி ஏவினதும் (ஆதி. 19:12–14) நினைவிற்கு வருகின்றது. அவ்வாறெனின், கிறிஸ்தவர்கள் உரோமையைவிட்டு ஓடிப்போக வேண்டுமா? அன்று. இங்கே 'அவளைவிட்டுப் போய்விடுவது' என்பதற்கு 'உரோமையின் பாவங்களில் பங்கு பெருதே' என்பது பொருள். அதே பாவச் செயல்களைக் கிறிஸ்தவர்களும் செய் தால், அதே அழிவுக்கு இவர்களும் ஆளாவார்கள்.

5: உரோமையில் பாவங்களோ நிறைந்து மலிந்திருந் தன. இறைவன்முன் யாதும் மறைந்திருக்க முடியாது. அவர் பாவிகளை உடனுக்குடன் தண்டிப்பதில்லையெனினும், அவர்களின் பாவச் செயல்கள் எல்லாம் அவருக்குத் தெரிந் திருக்கின்றன.

6: தீர்ப்பு நாளில் கடவுளின் நீதி நிலைநாட்டப்பெறும். அவரவர்களின் செயல்களுக்கேற்றபடி தீர்ப்பு நடைபெறும். "எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்" – (மத். 7:2) என்னும் இயேசு வின் திருமொழி நிறைவேறும். இறுதி நாளில் இறைவனின்

கட்டளைகளை நிறைவேற்றுபவர்கள் இவ்வொழுங்கின் அடிப்படையில் செயல்படுவர். இதுதான் கடவுள் 'பழிவாங்கும்' முறையாம் (காண். எரே. 50:15; சங். 136:8). இரட்டிப்பான தண்டனைபற்றி இசை 40:2; எரே. 16:18; 17:18 ஆகிய பகுதிகளில் இறைவாக்கினர் கூறுவதைக் காண்க.

7 : இசை. 47 : 8–9இல் வரும் அதே தற்பெருமைச் சொற்கள் இவ்வாக்கியத்திலும் வருகின்றன. இசையாஸ் பாபிலோனைப்பற்றிப் புலம்பியது இங்கு உரோமைக்கும் பொருந்தும். தற்பெருமை கொண்ட சீயோன் மகளிரைக் கடவுள் தலைகுனிய வைத்ததை இசை. 3:16–17இல் வாசிக்கிறோம். 'நான் பேரழகி' என்று தற்பெருமை கொண்டதினால் தீர்நகர் தண்டனை பெற்றது (காண். எசேக். 27:3).

2. பாபிலோன்மீது புலம்பல் *(18:9–24)*

9–10 : முதலில் மண்ணக அரசர்கள் உரோமையின் அழிவைக் குறித்துப் புலம்புகின்றனர். இவர்கள், யாவரும் உரோமைப் பேரரசரோடு ஏதாவது ஒருவகையில் தொடர்பு கொண்டவர்கள். அவர்கள் அடிமை நாட்டவர்களாகவும் இருக்கலாம். புலம்பல் மொழிகள் எல்லாம் எசேக். 26:16–18—னின்று எழுந்தவை. இந்தப் புலம்பல் கற்பனையாகும். ஆனால் ஓரிரு உண்மை நிகழ்ச்சிகள் பின்னணியாக அமைந்திருக்கலாம்.

11–17 அ : அடுத்து வணிகர்கள் புலம்புகின்றனர். இப்பேரரசு பரந்து விரிந்து வணிகத் தொடர்பு கொண்டிருந்ததை உரோமையரின் வரலாற்றைப் படித்த எவரும் நன்கு அறிவர். இவ்வாக்கியங்களில் வரும் அத்தனைப் பொருட்களும் உண்மையாகவே உரோமையின் வணிகச் சந்தையில் அன்று கிடைத்தன. பல ஆயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் பிற நாடுகளிலிருந்து வந்தன. சுவெதோனியுஸ் (Suetonius), பெத்ரோனியுஸ் (Petronius), பிளினி (Pliny), தாசிதுஸ் (Tacitus), போன்ற அக்கால உரோமை நாட்டு எழுத்தாளர்கள் இதற்குச் சான்று

பகர்வர். 13—ஆம் வாக்கியம் அடிமைகளைப் பற்றிக் கூறுகிறது. 'அடிமைகள், மனித உயிர்கள்' என்று குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. கிரேக்க மொழியில் 'அடிமை'யைச் "சோமா" (Soma) என்னும் சொல்லால் கூறுவர். "சோமா" என்ருல் முதற் பொருளில் 'உடல்' என்ருகும். ஆனல் அடிமையும் ஒரு மனிதன் ஆயிற்றே. எனவே அவனது உயிரையும் குறிக்க வேண்டுமே. ஆதலின் இங்கே "அடிமைகள், மனித உயிர்கள்" என்று வருகின்றது. அடிமைகள் உயிருடலோடு ஒருவருக்குச் சொந்தமாவதை இது குறிக்கும். 10 அக்காலத்தில் உரோமை உலக வணிகத்திற்கே மையமாக இருந்தமையால், அங்கே வாணிபம் செய்து பொருள் திரட்டியவர் வருந்துவதில் வியப்பில்லை. இக்கற்பனைப் புலம்பலில் உரோமையின் வணிகச் சிறப்பை நாம் அறிகின்ருேம். அத்தகைய உரோமை அழிகின்றது. இதுவே ஆசிரியர் கூறவிரும்பும் கருத்து.

17 ஆ 19: மூன்ருவதாக, கப்பல் தலைவர்கள், கடல் வணிகர் ஆகியோரது புலம்பல். இப்பகுதிக்குப் பின்னணியாக எசேக். 27:28–36 அமைந்துளது. உரோமை நகர் ஒரு கடற்துறைமுகமன்று. எனினும், இந்தியாவிலிருந்து நறுமணப் பொருட்களும் அணிகலன்களும், சீனவிலிருந்து பட்டுத்துணிகளும், ஆங்கில நாட்டிலிருந்து முத்துக்களும் ஆப்பிரிக்காவிலிருந்து இலவங்கப்பட்டைகளும், ஸ்பெயினிலிருந்து வெள்ளியும் இரும்பும் உரோமைக்குக் கடல்வழியே வந்து ஒஸ்தியா (Ostia) என்னும் துறைமுகத்தில் வந்து இறங்கின. இத்துறைமுகம் உரோமைக்குத் தென்மேற்கில் ஏறக்குறைய 15 மைல் தொலைவில் இருந்தது. இவ்வாறு வாணிபம் செய்தவர்கள் உரோமையின் அழிவைப் பார்த்துத் தலையில் புழுதியை வாரிப்போட்டுக் கொண்டனராம். இது பேரிழப்பைக் குறிக்கும் செயல். இவர்களும் சுயநலங் கருதியே அழுகின்றனர். இக்கற்பனைப் புலம்பலிலும் ஆசிரியர் உரோமையின் கடல் வாணிகச் சிறப்பை மறைவாய் உணர்த்திடினும் அதெல்லாம் இனி இராது என்று அழுத்திக் கூறுகின்ருர்.

20—24 : வானகத்தில் உள்ளோர் யாவரும் இந்த அழிவைக் குறித்து மகிழ்கின்றனர். இவர்கள் ஒருவேளை உரோமைப் பேரரசில் மறைத்தியாகிகளாய் உயிர்துறந்தவராக இருக்கலாம். இந்த மகிழ்ச்சி தங்களுக்குத் தீங்கிழைத்த நகர் அழிந்துவிட்டது என்பதற்காகவன்று; உண்மைக் கடவுளுக்கும், 'செம்மறிக்கும்' எதிராகச் செய்த பாவச்செயல்களுக்காக நீதிப்படி தண்டனைப் பெறுகின்றது என்பதற்காகவே. வானதூதர் ஒருவர் அடையாளச் செயல் ஒன்றைச் செய்கின்றார். இஃது உரோமையின் முழு அழிவைக் குறிப்பது. இதுவும் எரேமியாஸ் ஆகமத்தில் உள்ள ஒரு உருவகம் (எரே. *51:63, 64*). இருந்த இடம் தெரியாமல் அது மறைந்து விடும். இனி வாழ்வின் அடையாளமே நகரில் இருக்காது. இப்பேரழிவுக்குக் காரணம் உரோமையின் பொய்க் கடவுளர் வழிபாடு. அதனால்தான் கிறிஸ்தவ மக்கள் இரத்தம் சிந்தினர். பலவகைத் துன்பங்கள் அனுபவித்து உயிர் துறந்தனர் (காண். *16:6; 17:6; 18:20*). இவர்களது இரத்தத்தால் உரோமையும் கறைபட்டிருந்தது. *18:1—3*-இல் முன்னறிவித்த அழிவு முற்றிலும் நிறைவேறியது; மறைத்தியாகிகளின் நீதிக் கோரிக்கையும் கேட்கப் பட்டது. தெய்வம் நின்று கொன்றது.

(4) விண்ணகத்தில் வெற்றி முழக்கம் (19:1-10)

சோகக்காட்சி முடிந்ததும் மகிழ்ச்சி முழக்கம் கேட்கின்றது. *18:20*-இல் எழும்பிய மகிழ்ச்சிக் குரல் இப்பகுதி முழுவதிலும் கேட்கிறது. அதுவும் விண்ணகத்தில் கேட்கும் வெற்றி முழக்கம்.

இதற்குப்பின் விண்ணில் பெரியதொரு கூட்டத்தின் **19**
முழக்கம்போன்ற பேரொலியைக் கேட்டேன். அக்கூட்டம்,
"அல்லேலூயா, மீட்பும் மகிமையும் வல்லமையும் நம் கட
வுளுக்கே உரியன. ஏனெனில், அவரிடும் தீர்ப்புகள் உண்மை 2
யானவை, நீதியானவை. தன் விபசாரத்தால் மண்ணகத்தைச்
சீரழித்த, பேர்போன வேசிக்கு அவர் தீர்ப்பிட்டார்; தம் ஊழி
யர்களின் இரத்தத்திற்காக அவளைப் பழி வாங்கினார்" என்று
ஆர்ப்பரித்தது. மேலும் அக்கூட்டம், "அல்லேலூயா, அவளை 3
எரிக்கும் புகை என்றென்றும் மேலே எழுகிறது" என்றது.

இருபத்து நான்கு மூப்பர்களும் நான்கு உயிர்களும் அரியணை 4
யில் வீற்றிருக்கும் கடவுள்முன் அடிபணிந்து, ''ஆமென்,
அல்லேலூயா'' என்று தொழுதனர். அரியணையிலிருந்து 5
வெளிவந்த குரல்: ''கடவுளுடைய ஊழியர்களே, அவருக்கு
அஞ்சுபவர்களே, சிறியோர்களே, பெரியோர்களே, நம் கட
வுளைப் புகழுங்கள்'' என்றது. மேலும் பெரியதொரு கூட் 6
டத்தின் ஆர்ப்பரிப்புப்போலும், பெரும் வெள்ளத்தின் இரைச்
சல்போலும், இடி முழக்கம் போலும் தொனித்த பேரொலி
ஒன்று கேட்டேன். அது சொன்னதாவது: ''அல்லேலூயா,
எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவர் ஆட்சி செலுத்த
லானார். நாம் அகமகிழ்ந்து களிகூர்ந்து அவருக்கு மகிமை 7
அளிப்போமாக. ஏனெனில், செம்மறியின் மணவிழா வந்து
விட்டது. அவருக்குரிய மணமகள் தன்னை அலங்கரித்துக்
கொண்டாள். அணிவதற்குப் பகட்டானதும் தூயதுமான 8
விலைமிக்க ஆடை அவளுக்கு அளிக்கப்பட்டது. அவ்விலைமிக்க
ஆடையோ இறைமக்களின் நீதிச் செயல்களே.'' பின்பு வான 9
தூதர் என்னிடம் சொன்னதாவது: செம்மறியின் மணவிருந்
துக்கு அழைக்கப்பட்டோர் பேறுபெற்றோர் என்று எழுது.''
மேலும், ''இவை கடவுளின் உண்மை வார்த்தைகள்'' என்று
சொன்னார்: பின்னர் நான் அவரைத் தொழுவதற்கு அவர்முன் 10
அடிபணிந்தேன். அவரோ, ''வேண்டாம், வேண்டாம்,
இயேசு சொன்ன சாட்சியத்தை ஏற்றுக்கொண்ட உன் சகோ
தரர்களுக்கும் உனக்கும் நான் உடன் ஊழியனே, கடவுளையே
தொழுதல்வேண்டும்'' என்றார். இயேசு தந்த அந்தச் சாட்
சியமே இறைவாக்குகளுக்கு உயிர்.

1: மகிழ்ச்சிக் குரல் எழுப்பியவர்கள் யார்? வான தூதர்களாகத்தான் இருக்க வேண்டும். தூதர்கள் கடவுளின் வல்லமையைக் குறித்து மகிழ்ச்சிக்குரல் எழுப்புகின்றனர். தீய சக்தியாகிய உரோமைப் பேரரசை அழிக்கக் கடவுள் காட்டிய வல்லமை பெரிது. **'அல்லேலூயா'** என்று பாடுகின்றனர். இச்சொல் புதிய ஏற்பாட்டில் வேறு எந்த நூல்களிலும் வரவில்லை. திருவெளிப்பாட்டில் மட்டும் கையாளப்பட்டுள்ளது. இந்நூலில் நான்கு முறை இச்சொல் வருகிறது. இஃது ஓர் ஏபிரேயச் சொல். 'யாவே'யை வாழ்த்தும் சொல். இதன் பொருள் 'யாவே வாழ்க!' (ஆண்டவா போற்றி!) என்பதாகும். பழைய ஏற்பாட்டு வழிபாட்டில் இஸ்ராயேல் மக்கள் அடிக்கடி கையாண்ட சொற்களில்

இதுவும் ஒன்று. கடவுளை வாழ்த்திப்பாடும் சங்கீதங்களி லெல்லாம் இது முதற் சொல்லாக அமைந்துள்ளது (சங். 105, 110, 111, 112, 116, 134, 145, 146, 148, 149, 150). கடவுள் போற்றப்படுதலுக்குக் காரணம் அவர் தரும் மீட்பு, அவருடைய மாட்சி வல்லமை.

2 : இங்கே அந்தப் 'பேர்போன வேசி'யாகிய உரோமைக்கு நீதி வழங்கியதால், இறைவன் போற்றப்படுகிறார். கடவுள் அளித்த தண்டனை நீதியானது. ஏனெனில் தான் கெட்டுப்போனதுமின்றி பிற மக்களையும் உரோமை நகர் கெடுத்தது (காண். 17:1–5). கிறிஸ்தவமக்களையும் கொன்று குவித்தது.

3 : உரோமையை எரிக்கும் புகை ஓர் உருவக மொழி என்று சொல்லத் தேவையில்லை. இவ்வுருவகம் இசை. 34:9–10-இல் இருந்து எழுந்தது. 'என்றென்றும் எழும் புகை' உரோமையின் நீடிக்கும் அழிவைக் குறிக்கும்.

4 : அடுத்து இருபத்துநான்கு மூப்பர்களும் நான்கு உயிர்களும் கடவுளை வாழ்த்துகின்றனர். இவர்கள் முன்னரே காட்சிகளில் தோன்றியுள்ளனர் (மூப்பர்கள்: காண். 4:4,10; 5:6, 11, 14; 7:11; 11:16; 14:3–நான்கு உயிர்கள்: காண். 4:6–9; 5:6–14; 6:1–7; 7:11; 14:3; 15:7). 24 மூப்பர்களும் நிறைவு பெற்ற திருச்சபையின் அடையாளம்; நான்கு உயிர்களும் இயற்கை உலகின் சிறப்புக்கு அடையாளம். எனின், திருச்சபையின் எல்லா மக்களுக்கும், எல்லா உலகுக்கும் இம் மகிழ்ச்சியில் பங்குண்டு என்பது நன்கு விளங்கும். தீமையின் வீழ்ச்சியில் இவர்கள் மகிழ்ச்சி கொண்டு ஆர்ப்பரித்தல் இயல்பு.

5 : கடவுளின் ஊழியர்களும் இவ் வாழ்த்துதலில் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று வானதூதர் ஒருவர் கேட்கிறார். இவ்வூழியர்கள் யாவர்? திருவெளிப்பாடு இறைவாக்கினர்களையும் (காண். 10:7; 11:8; 12:6) மறைதியாகிகளையும் (வேத சாட்சிகளையும்) (காண். 7:3; 19:2) 'கடவுளின் ஊழியர்கள்' எனக் கூறுகிறது. இவர்கள் இம்

மண்ணுலகில் கடவுளின் விருப்பத்தை அறிவித்தவர்கள்; அவருக்குச் சான்ருக நின்றவர்கள். அவரது விருப்பத்திற்கு ஏற்ப வாழ்ந்து விண்ணகம் சென்றவர்கள். இவர்களிலே சிறியோர், பெரியோர் என்னும் பாகுபாடு இருக்கலாம். ஆனல் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு இருக்க முடியாது.

6: அடுத்து வருவது பெரியதொரு கூட்டத்தின் ஆர்ப்பரிப்பு. வெள்ளத்தின் இரைச்சல் (காண். 1:15; 14:2), இடிமுழக்கம் (காண். 14:2). இவை இரண்டும் ஏற்கனவே வந்த அடையாளங்கள். வெள்ளத்தின் இரைச்சல், யாரும் அடக்கி நிறுத்த முடியாத குரலின் வலுவைக் குறிக்கும். இடிமுழக்கம், எல்லாரும் அறியக் கூடிய தன்மையை உணர்த்தும். உரோமையின் அழிவில் கடவுளின் ஆட்சி தோன்றிவிட்டது. ஆதலின் மீட்கப்பட்டோர் அனைவரும் ஆர்ப்பரிக்கின்றனர்.

7: இவர்கள் அகமகிழ்ந்து களிகூர்கின்றனர். இவ்விரு சொற்களும் மத். 5:12-இல்தான் வருகின்றன—"அக மகிழ்ந்து களி கூருங்கள். ஏனெனில், வானகத்தில் உங்கள் கைம்மாறு மிகுதியாகும்". இங்கேயும் அதேபோன்று துன்புற்ற கிறிஸ்தவர்களுக்குக் கிறிஸ்து வாக்களித்த கடவுளாட்சி வந்துவிட்டது; அதுவும் செம்மறியின் மணவிழாவாக அமைந்துவிட்டது; எனவே மகிழ்கின்றனர். வானுலக திருச்சபையே மணமகள். கிறிஸ்துவே மணமகன். 'மணமகன்—மணமகள்' உருவகம் பழைய ஏற்பாட்டிலேயே காணக்கிடக்கும் ஒன்று. இறைவாக்கினர் நூல்களில் இஸ்ராயேலை 'யாவே'யின் மணமகளாகவைத்துப் பேசுதலைக் காண்க (ஒசே. 2:16; இசை. 54:6; எரெ. 3:14; எசேக். 16:7—14). இவ்வுருவகம் நற்செய்தி நூல்களிலும் கையாளப்படுகின்றது. (காண். மத். 22:2; 22:10, 11; 25:1; அரு. 3:29; மாற்கு 2:29). புனித சின்னப்பர் இதே கருத்தோட்டத்தில்நின்று 'கிறிஸ்து—திருச்சபை' உறவை, 'மணமகன்—மணமகள்' உறவுக்கு ஒப்பிட்டுப் பேசுதலை அவருடைய திருமுகங்களில் படிக்கிறோம் (காண். கொரி. 11:2; எபே. 5:21—33). இங்கே

நூலாசிரியர் இவ்வுருவகத்தைத் திடீரென்று புகுத்தவில்லை. ஆதிகாலக் கிறிஸ்தவர்களுக்கு இது தெரிந்திருந்தது. இவ்வுருவகத்தின் வழியே கடவுளுக்கும் மீட்கப்பட்ட விண்ணகத் திருச்சபைக்கும் உள்ள உறவு வலியுறுத்தப்படுகிறது.

9 : மணவிருந்து ஒன்று நடைபெறுகிறது. இது வானக இன்பத்தைக் குறிக்கும். அக்கால யூத மக்கள் மெசியாவின் ஆட்சியில் உண்மையான விருந்து ஒன்று நடைபெறும் என்று நம்பினர். கிறிஸ்துவும் விண்ணரசைத் திருமண விருந்துக்கு ஒப்பிட்டிருக்கிறார் (காண் : மத் 7:11 ; 22:1–14 ; 25:1–3; 26:29 ; லூக். 14). அதே உருவகத்தைத் திருவெளிப்பாடு இங்கே கையாண்டுள்ளது. இவ்விருந்து குறிக்கும் வானக இன்பத்தில் பங்கு பெற பேறுபெற்றவர்கள்; செம்மறியைப் பின்பற்றி வாழ்ந்தவர்களாவர் (காண். 14 : 4 ; 17 : 14). இவையெல்லாம் கடவுளின் உண்மை வார்த்தைகள். அக்காலத்தில் துன்பத்தில் உழன்ற கிறிஸ்தவ மக்களுக்குத் தீய சக்தி எதுவும் அழிக்கப்படும் ; கடவுளின் அரசு வரும் ; வானக இன்பத்தில் என்றும் நிலைத்திருக்கலாம் என்ற உண்மைகளெல்லாம் மிகுந்த ஆறுதல் அளித்து அவர்களைத் தேற்றின. கிறிஸ்துவில் விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் நிலைத்து நின்று போராட அவை உறுதியும் தந்தன.

10 : இவ்வாக்கியம் ஒரு முக்கியமான தவற்றை நீக்குகிறது. சின்ன ஆசியாவில் வானதூதரை வணங்கி வழிபடும் வழக்கம் கிறிஸ்தவ மக்களிடையே நிலவியிருந்தது. ஞானவுணர்வுக் கொள்கையினர் (Gnostics) இதனைப் பரப்பினர் (காண். முன்னுரை—பக். 8). புனித சின்னப்பர். "...வானதூதர்களை வணங்குவதையும் விரும்புகின்ற எவரும் உங்களைக் கண்டனம் செய்ய விடாதீர்கள்" (கொலோ. 2:18) என்று எச்சரிக்கிறார். வானதூதர் தன்னை உடன் ஊழியன் என்று கூறிக்கொள்கிறார். ஏனெனில் இறைவாக்கினரைப் போன்று கடவுளின் திட்டத்தையும் விருப்பத்தையும் மக்களுக்கு வெளிப்படுத்தும் பணியே வானதூதரின் பணியாகும். ஆதலின் வழிபாடு கடவுளுக்கு மட்டும் உரியது.

(iii) கடவுளின் பகைவர்மேல் வெற்றி (19:11-21).

(அ) இறுதி நாளுக்குமுன் நிகழும் முதற்போர்

பின் நான் விண்ணகம் திறந்திருக்கக் கண்டேன். 11
இதோ, ஒரு வெண்குதிரை! அதன்மேல் ஒருவர் ஏறியிருந்
தார். அவர் பெயர், 'நம்பிக்கைக்குரியவர்; உண்மையுள்ள
வர்.' அவர் நீதியோடு தீர்ப்பிட்டுப் போர் தொடுக்கிருர்.
அவருடைய கண்கள் எரிதழல்போல் இருந்தன; தலையில் 12
மகுடங்கள் பல சூடியிருந்தார். அவரைத் தவிர மற்றெவர்க்
கும் தெரியாததொரு பெயர் அவர்மேல் பொறிக்கப்பட்டிருந்
தது. இரத்தத்தில் தோய்ந்த ஆடை ஒன்றை அவர் அணிந் 13
திருந்தார். ''கடவுளுடைய வார்த்தை'' என்பது அவருடைய
பெயர். விலைமிக்க, தூய வெண்ணுடை அணிந்த விண்ணகப் 14
படைகள் வெண்குதிரைகள் மேலேறி அவரைப் பின்தொடர்ந்
தன. நாடுகளைத் தாக்குவதற்கு அவருடைய வாயினின்று 15
கூரிய வாளொன்று வெளிப்பட்டது. அவர் இருப்புக்கோல்
கொண்டு அவர்களை நடத்துவார். எல்லாம்வல்ல கடவுளின்
கடுஞ்சினம் என்னும் ஆலையை அவர் மிதிப்பார். ''அரசர்க் 16
கெல்லாம் அரசர், ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவர்'' என்ற
பெயர் அவரது ஆடையிலும் தொடையிலும் எழுதியிருந்தது.
பின்பு வானதூதர் ஒருவர் கதிரவனில் நிற்கக் கண்டேன். 17
வானத்தில் உயரப் பறக்கும் பறவைகள் அனைத்தையும்
நோக்கி, அவர் உரத்த குரலில், ''வாருங்கள். அரசர், 18
படைத்தலைவர், வலியோர் இவர்களின் தசையும், குதிரைகள்
அவற்றின்மீது ஏறியிருப்போரின் தசையும், குடிமக்கள்.
அடிமைகள், சிறியோர், பெரியோர் ஆகிய அனைவரின் தசை
யும் தின்னும்படி, கடவுள் செய்யும் பெருவிருந்துக்கு வந்து
கூடுங்கள்'' என்றார். குதிரைமீது ஏறியிருந்தவருக்கும் அவரது 19
படைக்கும் எதிராகப் போர் தொடுக்க அக்கொடிய விலங்கும்
மண்ணகத்து அரசர்களும், அவர்களுடைய படைகளும் கூடி
யிருப்பதைக் கண்டேன். அவ்விலங்கு பிடிபட்டது. அதனோடு 20
அவ்விலங்கின் முன்னிலையில் அருங்குறிகள் செய்த போலித்
தீர்க்கதரிசியும் பிடிபட்டான். இந்த அருங்குறிகளால்தான்
அவன் விலங்கின் அடையாளத்தால் குறிக்கப்பட்டவர்களையும்,
அதனுடைய சிலையைத் தொழுதவர்களையும் ஏமாற்றியிருந்
தான். இவர்கள் இருவரும் கந்தகம் எரிகிற நெருப்புக் கடலில்
உயிரோடு எறியப்பட்டார்கள். குதிரைமீது ஏறியிருந்தவரின் 21
வாயினின்று வெளிப்பட்ட வாளால் எஞ்சியிருந்தோர் கொல்
லப்பட்டனர். அந்தப் பிணங்களைப் பறவைகள் எல்லாம்
வயிறாரத் தின்றன.

இப்பகுதியில் தோன்றும் விண்ணகக் காட்சியில் வெற்றி கொண்ட கிறிஸ்துவைக் காண்கிறோம். தீமைக்கே அடையாளமான விலங்கு அதனைச் சார்ந்த உலக மன்னர்கள், போலித் தீர்க்கதரிசிகள் இவர்களை வென்று வெற்றிக் கொடி நாட்டியவராகக் கிறிஸ்து தோன்றுகிறார் இவர்களின் தோல்வியும், அழிவும் *14:14–20 ; 16:12–16 ; 17:12–14* ஆகிய பகுதிகளில் முன்னறிவிக்கப்பட்டுள்ளது.

(11–21) 'வெண்குதிரை' வெற்றிக்கு அடையாளம். அக்காலத்தில் போரில் வெற்றி பெற்ற படைத்தலைவன் வெண்குதிரை மீது ஏறி வெற்றி ஊர்வலம் செல்வான். *6 : 2*–ஆம் வாக்கியத்திலும் வெண்குதிரை வெற்றியின் அடையாளமாய் இருத்தலைக் காண்க. கிறிஸ்துவின் பெயர் "நம்பிக்கைக்குரியவர், உண்மையுள்ளவர்" (காண். *3:14; 1:5; 3:7*). ஏனெனில் கடவுளின் எதிரிகளோடு போராடவும், தீய சக்திகளையெல்லாம் அழிப்பதாகவும் வாக்களித்தவர். இதைத்தான் திருவெளிப்பாடு தொடக்க முதல் பலவிதங்களில் காட்டுகிறது. தாம் தந்த வாக்குறுதியை உண்மையாகவே நிறை வேற்றினார். அவர் வெற்றி கொண்டவர் (காண். கொரி. *15:24–28*). அவரில் விசுவாசம் கொண்டால், எவ்வித துன்பத்திலும் வெற்றி பெறலாம். கிறிஸ்து தீய சக்திகளுக்குத் தீர்ப்பிடும்போது கடவுளின் நீதி வெளிப்படும். நீதியின்றித் தீர்ப்பில்லை. அவர் பெறும் வெற்றியும் நீதியுள்ள வெற்றியாகும் (காண். இசை. *11:3–4*; சங். *95:13*).

12 : அவருடைய 'எரிதழல் கண்கள்', எல்லாம் அறியும் இறையறிவின் அடையாளம் (காண். *1:14; 2:18*). இறுதி நாளில் அவரிடமிருந்து மறைந்திருப்பது ஒன்றுமில்லை. வெற்றி கொண்ட கிறிஸ்து மகுடம் சூட்டியிருத்தல் இயல்பு. நூலில்வரும் பறவை நாகம் ஏழு முடிகள் அணிந்துள்ளது. *(12:3)* விலங்கு பத்து முடிகள் அணிந்திருக்கிறது *(13:1)*. ஆனல் கிறிஸ்து ஏழல்ல, பத்தல்ல, பல மகுடங்களைச் சூட்டியுள்ளார். இவை கிறிஸ்துவின் நிறைவான அதிகாரத்தைக் குறிக்கின்றன. இவருடைய அதிகாரத்திற்கு விலகி இருப்

பவர் யாருமிலர். அவர்மேல் பொறிக்கப் பட்டிருக்கும் பெயர்தான் நூல் கூறுவது போன்று புரியாத ஒன்றுகவே இருக்கிறது. இஃது எப்பெயராக இருக்கலாம் என்று அறிஞர்கள் ஆராய்ந்திருக்கின்றனர். ‘ஆண்டவர்’ என்பார் சிலர் ‘யாவே’ என்பார் வேறுசிலர். இன்னும் சிலர் இப்பெயர் மண்ணுலகில் வாழும் நமக்குத் தெரியாது; விண்ணகம் சென்றபிறகே நமக்குத் தெரியு ு என்பர். இவ்வாறு இப்பெயர் மறைந்திருப்பது கிறிஸ்வைப்பற்றி முழுமையாக அறிய முடியாத நமது நிலையைக் காட்டுகிறது. கடவுளும் மனிதனுமான கிறிஸ்துவை அவர் இருப்பதுபோல் யார் அறிய முடியும்? அவரது அன்பைச் சுவைக்கலாம்; மீட்பைப் பெறலாம்; ஆனால் அவரது உள்ளியல்பை அவரன்றி வேறு எவரும் அறியார். இதனைத்தான் யாருக்கும் தெரியாத பெயர் என்று திருவெளிப்பாடு குறிப்பிடுகிறது.

13: அவர் அணிந்துள்ள ஆடை இரத்தத்தில் தோய்ந்துள்ளது. இது ‘செம்மறி’யின் இரத்தமன்று. கிறிஸ்து இங்குப் பலியாகும் செம்மறியின் அடையாளமாய்த் தோன்றவில்லை. வெற்றி கொண்ட தளபதியாகவே தோன்றுகிறார். ஆடையில் தோய்ந்த இரத்தமெல்லாம் பகைவரின் இரத்தம். இந்த உருவகம் இசை. 63:1–3 இல் இருந்து வருகிறது: ...... ‘‘நமது கோபத்தில் அவர்களைத் துவைத்தோம்; அவர்களின் செந்நீர் நம் ஆடைகளில் தெறித்தது. நம் மேலாடைகள் எல்லாம் கறைபட்டன.’’ இசையாஸ் இறைவாக்கினர் ஏதோம் நாட்டைப்பற்றி எழுதிய உருவக மொழிகளை, ஆசிரியர் கிறிஸ்துவின் இறுதி வெற்றிக்கும் பொருந்துவதாக எழுதியுள்ளார். அடிப்படையில் கடவுளுடைய பகைவரின் தோல்வியையும், கிறிஸ்துவின் வெற்றியையும் வருணிக்கும் சொற்கள் இவை. இந்த உடையில் தான் ‘கடவுளுடைய வார்த்தை’ என்று எழுதியிருந்தது. இது 12-ஆம் வாக்கியத்தில் கூறப்படும் யாருக்கும் தெரியாத பெயர் அன்று. கிறிஸ்துவைக் கடவுளுடைய வார்த்தையென நான்காம் நற்செய்தி தெளிவாகக் கூறுகிறது (காண். அரு. 1:1, 14). வார்த்தை கடவுளின் மறுஉரு, இரண்டாம் ஆளாகிய திருமகன்.

14 : அவரைப் பின் தொடரும் விண்ணகப் படைகள் யாவை ? மத். 26;53-இல் கிறிஸ்து அறிவித்த வானதூதர் படைகளோ ? இவர்களும் வெண்குதிரைகள் மேல் ஏறி வருகின்றனர். இது அவர்கள் வெற்றி கொண்டவர்கள் என் பதைக் காட்டுகின்றது. எனவே, அவர்கள் வானதூதர்கள் அல்லர். மறைத்தியாகிகளாய்த்தான் இருக்க முடியும். ‘அழைக்கப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களாய் அவ ரோடு இருக்கும் உண்மை ஊழியர்களும் அவரோடு வெற்றி கொள்வர்’ என்று இதே நூல் கூறுவதைக் கவனிக்கவும் (17:14). மறைத்தியாகிகள் அணிவது வெண்ணுடை யாதலின் (காண். 3:5; 6:11; 19:8), இவர்களும் தூய வெண்ணுடை அணிந்துள்ளனர்.

15 : கிறிஸ்துவின் தீர்ப்புச் சொல்லை இந்நூல் கூரிய வாளுக்கு ஒப்பிடுகிறது (காண். 1:16). எதிரிகளின் மேல் விழும் தீர்ப்புச் சொல் முடிவானது. வாள் போன்று தண் டனை அளிப்பது (காண். இசை. 11:4; 2 தெச. 2:8). வெற்றி கொள்ளும் கிறிஸ்துவைப்பற்றி நூல் இது காறும் வருணித்ததைப் படிக்கும்போது, வருணிப்பெல்லாம் யூத மக்கள் மெசியா அரசரைப்பற்றிக் கற்பனை செய்திருந்த போக்கில் அமைந்துள்ளது என்பது தெளிவு. அவர் இரும்புக் கோல் கொண்டு நாடுகளை ஆளுதல் சங் 2:9-இல் மெசியா வைப்பற்றி கூறப்பட்டுள்ள சொற்கள் (காண். 2:27; 12:5). இறுதிக் காலத்தில் கிறிஸ்துவுக்கு எல்லா நாடுகளும் அடிபணியத்தான் வேண்டும். தீய சக்திகளை வெல்லும் செயல் திராட்சை ஆலை உருவகத்தில் காட்டப்பெறுகிறது (காண். 14:19—20). ஆலையில் பணியாட்கள் திராட்சைப் பழங்களை மிதிப்பதுபோல் கிறிஸ்துவும் இறுதி நாளில் பகைவரை மிதிப்பாராம்.

16 : இவ்வாக்கியம் உரோமைப் பேரரசின் அரசர் களுக்கும், அவர்களுடைய அடிமை அரசர்களுக்கும் கிறிஸ்து அரசராவார் என்னும் உண்மையைப் பறை சாற்றுகின்றது. குதிரைமேல் செல்லும் போர் வீரர்கள் தங்கள் மேலாடை யில் தொடைக்குச் சரியாய் உள்ள பகுதியில் தங்கள் பெயர்

களை எழுதியிருப்பர். அப்பொழுதுதான் அவர்கள் சவாரி செல்லும்போதும்கூட மக்கள் அவர்களுடைய பெயர்களை அறிந்துகொள்ள முடியும். இந்த மரபையொட்டி, கிறிஸ்துவை வீரராகக் காட்டும் திருவெளிப்பாடும் அவரது தொடையிலும் மேலாடையிலும் பெயர் எழுதியிருந்ததாகக் குறிப்பிடுகிறது. மன்னருக்கெல்லாம் மன்னர், இறைவருக்கெல்லாம் இறைவன் என்பது அப்பெயர் ஆகும்.

17 : இவ்வித வருணனைக்குப் பின் வானதூதர் ஒருவர் கதிரவனில் நின்றுகொண்டு பறவைகளை அழைக்கின்றார். இது இறுதிநாள் போர் இறுதிப் போர் என்றும், உலகுக்கெல்லாம் அறிவிக்கப்பட வேண்டியதென்றும் இது காட்டுகிறது.

18 : தோல்வியடையும் கடவுளின் எதிரிகள் வானத்துப் பறவைகளுக்கு நல்ல விருந்து. பழைய ஏற்பாட்டில் எசேக்கியேல் இறைவாக்கினர் மாகோகின் **(Magog)** அரசனை கோகுக்கு **(Gog)** (மாகோகு, கோகு ஆகிய இருசொற்களும் கடவுளுக்கு எதிராக உள்ள எதற்கும் அடையாளம்) எதிராக உரைத்தவற்றைச் சிறிது மாற்றித் தருகிறது திருவெளிப்பாடு (காண். எசேக். *39:17–20*). தீய சக்திகளின்மீது கிறிஸ்து கொள்ளும் வெற்றி ஏற்கனவே நிகழ்ந்துவிட்டதென நூல் சொல்லாமல் சொல்லுவதை ஈண்டு நாம் அறிகிறோம்.

19–20 : தளபதியாம் கிறிஸ்துவோடு போரிட்டுத் தோல்வியடைந்தவர் யார்? விலங்கும், மண்ணக அரசர்களும், போலி இறைவாக்கினரும் ஆவர். விலங்கு நீரோவைக் குறித்தாலும், அந்த நீரோ திருவெளிப்பாடு எழுந்த காலத்தில் சாத்தானின் அவதாரமாக, எதிர்க் கிறிஸ்துவாக உருவகம் செய்யப்பெற்றதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இந்த உருவகப் பொருளில்தான் *17:15–17*-இல் விலங்கு என்னும் சொல் கையாளப்படுகிறது. மண்ணக அரசர்கள் இந்த விலங்கைச் சார்ந்தவர்கள். செம்மறிக்கு எதிராகப் போரிடுபவர்கள் (காண். *17:12–17*). மன்னர் வழிபாட்

டைப் பரப்ப நியமிக்கப்பட்டிருந்த உரோமைப் பேரரசின் கையாட்களே போலி இறைவாக்கினர்கள் என்பது முன்பே கூறப்பட்டுளது (காண். 13:11–18). இந்த எதிர்க் கிறிஸ்துக் கூட்டம் கிறிஸ்துவோடு புரியும் போர் அர்மகெதோன் என்னும் இடத்தில் நடைபெறுவதாக நூல் முன்னறிவித்தது (காண். 16:16). இந்த எதிர்க் கிறிஸ்துக் கூட்டத்தின் விலங்கும், போலி இறைவாக்கினர்களும் கந்தகம் எரிகிற நெருப்புக் கடலில் எறியப்படுகின்றனர்.

இந்த நெருப்புக் கடல் முடிவில்லாத் தண்டனையின் இடம் என்று திருவெளிப்பாடு முன்னரே கூறியிருக்கிறது (காண். 14 : 10) ; இனியும் கூறும் (காண். 20 : 10, 14–15; 21 : 8). இக்கூட்டத்தைச் சேர்ந்த மண்ணக அரசர்களின் நிலை என்ன ?

21 : அவர்கள் கொல்லப்பட்டு அவர்களின் பிணங்களைப் பறவைகள் தின்றன. அதாவது அவர்களும் அழிந்தனர். அவர்களும் அதே நெருப்பில் தள்ளப்படுவர் என்று நூல் இவ்விடத்தில் கூறவில்லையெனினும், 20:15-இல் இதனைக் கூறும்: "வாழ்வு நூலில் பெயர் எழுதப்பட்டிராத எவனும் இந்நெருப்புக் கடலில் எறியப்பட்டான்".

(ஆ) ஆயிரம் ஆண்டுக்கால ஆட்சி (20 : 1-6)

உரோமைப் பேரரசு அழிந்தது ; அதன் போலி இறைவாக்கினரும் அழிந்தனர் ; அதன் துணைவர்களான மன்னர்களும் அழிந்தனர் ; ஆனால் இவர்களை இயக்கிய பேய் என்ன ஆயிற்று ? இப்பகுதியில் பேயின் கதியைப்பற்றிக் கூறுகிறார் ஆசிரியர்.

பின் வானதூதர் ஒருவர் விண்ணினின்றும் இறங்கி வரக் **20**
கண்டேன். பாதாளத்தின் திறவுகோலும் பெரியதொரு
சங்கிலியும் அவர் கையில் இருந்தன. ஆதியில் தோன்றிய 2
பாம்பாகிய பறவைநாகத்தை அவர் பிடித்தார். அலகை
என்றும் சாத்தான் என்றும் அழைக்கப்படும் அப்பாம்பைப்
பிடித்து, ஆயிரம் ஆண்டளவு கட்டிவைத்தார். பின் அதைப் 3
பாதாளத்தில் எறிந்து, குழியை அடைத்து, அதற்கு முத்திரை
யிட்டு, ஆயிரம் ஆண்டுகள் முடியும்வரை அது நாடுகளை வஞ்

சிக்காமல் தடுத்தார். அதன்பின் சற்று நேரம் அது அவிழ்த்து
விடப்படும். பின்பு, நான் அரியணைகளைக் கண்டேன். அவற் 4
றின்மீது சிலர் வீற்றிருந்தனர். தீர்ப்பிடும் அதிகாரம் அவர்
களுக்கு அளிக்கப்பட்டிருந்தது. இயேசுவுக்குச் சான்று
பகர்ந்து கடவுளது வார்த்தையை அறிவித்ததற்காகத் தலை
வெட்டுண்டவர்களின் ஆன்மாக்களையும் கண்டேன். அவர்கள்
அவ்விலங்கையோ அதன் சிலையையோ தொழவில்லை. அத
னுடைய அடையாளத்தை நெற்றியிலோ கையிலோ பெற்றுக்
கொள்ளவில்லை. அவர்கள் மீண்டும் உயிர்பெற்று, கிறிஸ்து
வோடு ஆயிரம் ஆண்டு ஆட்சி புரிந்தார்கள். இதுவே முதல் 5
உயிர்த்தெழுதல். அவ்வாயிரம் ஆண்டுகள் முடியும்வரை எஞ்சி
யோர் உயிர்பெற்று வரவில்லை. இந்த முதல் உயிர்த்தெழு 6
தலில் பங்குபெறுவோன் பேறுபெற்றவன், பரிசுத்தன்! இரண்
டாவது சாவு அவர்கள்மேல் அதிகாரம் செலுத்தாது. அவர்
கள் கடவுளுக்கும் கிறிஸ்துவுக்கும் பணிசெய்யும் குருக்களாக
இருப்பார்கள்; அவரோடு ஆயிரம் ஆண்டுகள் அரசுபுரி
வார்கள்.

(1–6.) 9-ஆம் அதிகாரத்தில் பாதாளக் குழி பேயின் தற்காலிக இருப்பிடமாய்க் காட்டப்பட்டது. விண்ணிலிருந்து கெட்டு வீழ்ந்த வானதூதர் ஒருவர் அதனைத் திறந்து விட்டார் என்று அங்கே கூறப்பட்டது (2–3). இங்கோ அதே பாதாளக் குழியை வானதூதர் பூட்டப் போகிறார். சாத்தானைப் (= ஆதியில் தோன்றிய பாம்பு = பறவை நாகம்) பிடித்துக் கட்டிப் பாதாளக் குழியில் போட்டு அடைத்து, பூட்டி, முத்திரையிடுகிறார். பேயின் செல்வாக்கு குறைக்கப்படுகிறது. முன்பு போன்று வஞ்சிக்கும் அதிகாரம் அதற்கு இப்பொழுது இல்லை (காண். 12 : 9). ஆயிரம் ஆண்டுக் காலம் இவ்வாறு சாத்தான் அடைப்பட்டிருக்கும். இந்த ‘ஆயிரம் ஆண்டுக் காலம்’ எதைக் குறிக்கும்? இச்சொற்றொடரை இயற்பொருளில் புரிந்து கொள்ளல் கூடாது. ஆயிரம் ஆண்டு ஒரு நீடிய காலத்தைக் குறிக்கும். இதைப் பற்றிய விளக்கத்தை அடுத்த பத்தியில் காண்க. அதே காட்சியில் இயேசுவின் அரியணைமட்டுமன்று, பல அரியணைகள் விண்ணகத்தில் தோன்றுகின்றன. அவற்றில் வீற்றிருந்தவர்கள் யாவரும் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்தவர்கள். அவர்கள் மறைத்தியாகிகள் (வேத சாட்சிகள்)

மட்டுமல்லர் ; மன்னர் வழிபாட்டில் ஈடுபடாது, வாழ்ந்து இறந்தவர்களும் ஆவர் (காண். 13 : 15 ; 14 : 9 ; 16 : 2 ; 19 : 20). இவர்கள் கிறிஸ்துவோடு அமர்ந்து அவரது அரச மகிமையிலும் அதிகாரத்திலும் பங்குபெறுதலைத் திருவெளிப்பாடு 2 : 26—27-இல் குறிப்பிடுகிறது. இறைமக்கள் இவ்வுலகுக்குத் தீர்ப்பிடுவார்கள் என்பது புனித சின்னப்பரின் கூற்று (காண். 1 கொரி. 2 : 6). நான்காம் வாக்கியத்தின் இரண்டாம் பகுதி புரியாத புதிராக உளது: "அவர்கள் மீண்டும் உயிர்பெற்றுக் கிறிஸ்துவோடு ஆயிரம் ஆண்டு ஆட்சிபுரிந்தார்கள்". சாத்தான் அடைபட்டிருக்கும் அதே ஆயிரம் ஆண்டு காலத்தில் இவர்கள் உயிர்பெற்று, கிறிஸ்துவோடு ஆட்சி செய்கின்றனர்.

இந்த ஆயிரம் ஆண்டு கால ஆட்சி எதனைக் குறிக்கும்? முதலில் இஃது அக்கால யூத மக்களிடையே நிலவிய ஒரு தவறான நம்பிக்கையைக் காட்டுகின்றது. மெசியாவின் வருகையைப் பற்றியும், அவருடைய செயல்களைப்பற்றியும் போதித்த யூதப் போதகர்கள், அவர் இவ்வுலகில் புறவினத்தாரை வென்று வீழ்த்தியபின், யூத மக்களோடு 1000 ஆண்டு காலம் ஆட்சி செலுத்துவார் என்றே போதித்தனர். பின்னர்தான் கடவுளின் முடிவில்லா ஆட்சிவரும். இவர்களின் ஆய்வு இவர்கள் கொண்டிருந்த படைப்பின் கால அளவின் அடிப்படையில் எழுந்ததாகும். ஆதி ஆகமத்தில் வரும் படைப்பின் காலமாகிய ஆறு நாட்களையும் ஆறு ஆயிரம் ஆண்டு காலமாகக் கணக்கிட்டனர். ஒரு நாள் = ஓர் ஆயிரம் ஆண்டு. சங்கீதமும் இதற்குச் சான்று பகர்வது போல் உள்ளது. "உமக்கு ஆயிரம் ஆண்டுகள் கடந்து போன நேற்றைய தினத்தைப்போல் உள்ளது" (சங். 89 : 4). இந்தப் படைப்புக் கால அளவே இவ்வுலகம் நீடிக்கும் என்பதும் இவர்களது கருத்தாகும். படைப்புக்குப் பின் கடவுள் ஓய்வுகொண்டார் அல்லவா? அந்த ஓய்வு நாள் ஓராயிரம் ஆண்டு காலம். இக்கால அளவே மெசியாவின் காலம். ஆறாயிரம் ஆண்டு உலக வாழ்வுக்குப்பின் மெசியா வருவார் ; அவர் ஆயிரம் ஆண்டு காலம் ஆட்சி

செய்வார். இப்படித்தான் யூதகுல அறிஞர்கள் ஆராய்ந்து மக்களுக்குப் போதித்திருந்தனர். இந்தப் போதனையின் பின்னணியில் திருவெளிப்பாட்டு நூலாசிரியர் தமது நூலை எழுதினார் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் உருவகத்திலும், அடையாளத்திலும் பேசும் இவர் இங்கே இந்த ஆயிரம் ஆண்டு கால ஆட்சியை ஓர் உருவகமாகத்தான் எடுத்துக்கொண்டார். யூதமறை அறிஞர்களின் கொள்கையினை இவர் ஏற்றவரன்று. ஏனெனில் இவ்விதக் கொள்கை புதிய ஏற்பாட்டு இறையியல் கொள்கைக்கு ஒவ்வாதது. இவ்வாறான போதனையை புதிய ஏற்பாட்டில் யாங்கெனும் காணமுடியாது. உலக முடிவுக்குப் பின் பொதுத் தீர்வை. அதன் பின்னர் முடிவற்ற வாழ்வு. பொதுத் தீர்வைக்கும் நித்திய வாழ்வுக்கும் இடையே எந்த வாழ்வோ, ஆட்சியோ கிடையாது.

எனவே, இதனை உருவகமாகவே கொள்ளல்வேண்டுமாயின் இதன் உட்பொருள் யாது? ஈண்டு இரண்டு வகை விளக்கங்கள் தரலாம் (காண். முன்னுரை: பக். 27–28). முதல் விளக்கத்தின்படி ஆயிரம் ஆண்டு காலம் கிறிஸ்துவின் உயிர்ப்பு முதல் (அல்லது பரிசுத்த ஆவியின் வருகை முதல்) அவரது இரண்டாம் வருகை வரையுள்ள திருச்சபையின் வாழ்வைக் குறிக்கும். கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்தவர்கள் முதன் முதலில் உயிர்த்தெழுந்தது திருநீராட்டில். இத் திருவருட் சாதனத்தில்தான் இவர்கள் சாவிலிருந்து வாழ்வுக்கு வருகின்றார்கள். கிறிஸ்துவில் விசுவசித்து அவரில் நித்திய வாழ்வு வாழ்கிறார்கள் (காண். உரோ. 6:5–11; அரு. 5:24–29). ஆதலின் திருநீராட்டிற்குப்பின் இவர்களின் வாழ்வு உயிர்த்த வாழ்வு. இவர்களுக்கு இரண்டாம் உயிர்ப்பு பொதுத்தீர்வை நாளில் வரும். திருநீராட்டுப் பெறாதவர்கள் கிறிஸ்துவின் உயிர்ப்பைப் பெறாதவர்கள். இவர்கள் திருநீராட்டுப் பெறாததின் காரணமாக 'எஞ்சியவர்களா'க இருப்பர்.

ஏனெனில் முதல் உயிர்ப்பாம் திருநீராட்டைப் பெற்றவர்கள் பேறுபெற்றவர் ஆவர். இவர்கள் முடிவில்லாத சாவு

எனும் இரண்டாவது சாவுக்கு உரியவரல்லர். ஏனெனில் தங்கள் வாழ்வால் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்து உண்மை வாழ்வில் நுழைந்துவிட்டனர். மேற்கூறியவற்ருல் திரு வெளிப்பாடு இங்கே கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்த அக்கால மறைத்தியாகிகளே மனக்கண்முன் வைத்துப் பேசினுலும், திருநீராட்டில் முதல் உயிர்ப்பைப் பெற்றவர்களும் 'பேறு பெற்றவர்கள்' என்பதை மறத்தலாகாது. மறைத்தியாகிகளும் கிறிஸ்துவுக்குப் பணி புரிந்து அவரது அரச குருத்துவத்தில் பங்கு பெற்றனர் (காண். 1 இரா 2:9). ஞானஸ்நானம் பெற்ற எல்லாருமே கிறிஸ்துவுக்கு ஊழியம்புரிய வேண்டியவர்கள். அவர்களது பணியும் குருத்துவப் பணியே (தி. வெ. கூறும் அப்போஸ்தலப் பணியைப்பற்றி 11:1-14-க்கான விளக்கத்தைக் காண்க).

இரண்டாவது விளக்கத்தின்படி, இந்த ஆயிரம் ஆண்டு கால ஆட்சி, உரோமைப் பேரரசின் கொடிய மறையெதிர்ப்புக்குப்பின் (கி.பி. 64—311) உலகம் முடிவுவரையுள்ள திருச்சபையின் அமைதியான வாழ்வைக் குறிக்கும். அப்படியாயின் கி.பி. 312-இல் கோன்ஸ்தாந்தீன் (Constantine) பேரரசன் கிறிஸ்தவர்களுக்கு அளித்த அதிகாரப்பூர்வமான மறைச் சுதந்திரத்திற்குப் பின் திருச்சபைக்கு எந்தவிதத் துன்ப துயரங்கள் வரவில்லே என்று பொருளாகுமோ? அப்படியன்று. ஆனுல் தொடக்கக் காலத்தில் உரோமைப் பேரரசு திருச்சபைக்கு எதிராக நடத்திய பத்து மறையெதிர்ப்புக்களுக்கு ஈடாகத் திருச்சபை வரலாற்றில் யாரும் அவ்வளவு கொடுமை செய்ததில்லே என்பது வரலாற்று உண்மையாகும். இந்த அமைதியான காலத்தின் தொடக்கமே திருச்சபையின் முதல் உயிர்ப்பாகும். மறையெதிர்ப்பு முடிந்து திருச்சபை புத்துயிர் பெற்றெழுந்தது. உரோமையரின் மன்னர் வழிபாட்டிலும், பொய்க் கடவுள் வழிபாட்டிலும் ஈடுபடாது, கிறிஸ்தவ நெறியில் நெறி பிறழாது நின்று இப்புதுவாழ்வில் நுழைந்தவர் 'பேறு பெற்றவர்களா'ம்.

இன்றும் கிறிஸ்தவ நன்னெறியில் ஊன்றி நிற்பவர்கள் பேறு பெற்றவர்களே. இவர்கள் எல்லாருமே கிறிஸ்துவின்

அரசர் குருத்துவத்தில் பங்கு பெற்று, அவருக்கு ஊழியம் புரிபவர்.

அறிஞர் சிலர் வேறு விளக்கங்களையும் தருகின்றனர். ஆனால் எல்லா விளக்கங்களிலும் குறைகள் சில உள்ளன. எந்த விளக்கமும் மெசியாவின் ஆயிரம் ஆண்டு கால ஆட்சியைப் பற்றிய யூதர்களின் கருத்தை ஏற்பதில்லை. இது புதிய ஏற்பாட்டுக் கொள்கைகளுக்கும் போதனைகளுக்கும் மாறுபட்டது.

(இ) இறுதி நாளில் நிகழும் இரண்டாம் போர் (20 : 7–10)

அவ்வாயிரம் ஆண்டுகள் முடிந்தபின், சாத்தான் சிறை 7
யிலிருந்து விடுவிக்கப்படுவான். அவன் மண்ணகத்தின் 8
நான்கு திசைகளிலும் உள்ள கோகு, மாகோகு என்னும் நாடு
களை வஞ்சித்து, போருக்கென அவர்களை ஒன்றுசேர்க்கச் செல்
வான். அவர்களது எண்ணிக்கை கடல் மணல்போல் இருக்
கும். மண்ணுலகெங்கும் அவர்கள் பரவிச்சென்றார்கள். இறை 9
மக்களின் பாசறையையும் இறைவனின் அன்புக்குகந்த நகரத்
தையும் வளைத்துக்கொண்டார்கள். ஆனால் வானத்திலிருந்து
நெருப்பு விழுந்து அவர்களை விழுங்கிவிட்டது. பின் அவர் 10
களை வஞ்சித்த அலகை கந்தக நெருப்புக் கடலில் எறியப்
பட்டது. அக்கடலில்தான் விலங்கும், போலித் தீர்க்கதரிசியும்
உள்ளனர். அவர்கள் இரவும் பகலும் என்றென்றும் வேதனைக்
குள்ளாவார்கள்.

ஆயிரம் ஆண்டு கால ஆட்சியின் உருவகப் பின்னணியில் இப்பகுதி எழுந்துள்ளது என்பது கண்கூடு. ஆயிரம் ஆண்டு காலம் திருச்சபையின் வாழ்வையோ, விண்ணக வாழ்வின் மண்ணகப் பிரதிபலிப்பையோ, கிறிஸ்துவோடு அவரது வெற்றியில் பங்கு கொள்வோரின் உயிர்நிலையையோ குறிப்பதாக எடுத்துக் கொண்டால், பாதாளக்குழியில் அடைப்பட்டுக் கிடக்கும் பேயின் நிலையையும் நாம் புரிந்துகொள்ள இயலும். 12-ஆம் அதிகாரத்திலேயே சாத்தானின் வீழ்ச்சி அறிவிக்கப்பட்டது (12 : 10–12). "நம் சகோதரர்களைக் குற்றம் சாட்டியவன் வீழ்த்தப்பட்டான்." நூலின் இலட்சிய அமைப்புக்காக, விலங்கும் அதன் போலி இறைவாக்கினரும்

அழிந்தபின் சாத்தானின் அழிவு காட்டப்படுகிறது. கிறிஸ்து இவர்களை வெல்லும் இரு போர்களும் இறுதி நாள் நிகழ்ச்சிகளைக் குறிக்கும் என்பதில் ஐயமில்லை. இப்பகுதியில் ஆசிரியர் இறுதி நாள் நிகழ்ச்சியைச் சாத்தானின் அழிவை மையமாகக்கொண்டு விளக்குகிறார்.

7 : இவ்வுலக முடிவில், சிறைப்பட்ட பேய் (காண். 20:2—3) விடுபட்டு வரும். அப்பொழுது உலகத்தில் சாத்தானின் செல்வாக்கு குறைக்கப்பட்டிருக்கும். எனினும் இறுதிக் காலத்தில், இதுவரை உலகத்தில் நிகழ்ந்திராத தீய சக்தியால் அது மாந்தரைக் கெடுக்க வரும்.

8 : நான்கு திசைகளும் உலக முழுமைக்கும் அடையாளம். கோகு என்பவன் மாகோகு என்ற நாட்டின் அரசன் என்று எசேக். 38, 39 அதிகாரங்கள் கூறுகின்றன. ஆனால் பிற்றைக் காலத் திருவெளிப்பாட்டு நூல்களில் இவ்விரு சொற்களும் இஸ்ராயேலின் எதிரிகளுக்கு அடையாளமாயின. திருவெளிப்பாடு இங்கே இவ்விரு சொற்களையும் இறுதிக் காலத்தில் திருச்சபைக்கு எதிராக எழும்பும் எவ்விதத் தீய சக்திகளையும் குறிக்கக் கையாளுகின்றது. இறுதிக் காலத்தில் பேய் தீய சக்திகளையெல்லாம் ஒன்று திரட்டும். இந்த ஒன்று திரட்டும் நிகழ்ச்சியை நூல் முன்னரே அறிவித்ததைக் காண்க (16:14). கடல் மணல்போல் இருத்தல் ஓர் எண்ணிறந்த தொகையைக் குறிக்கும் (காண். ஆதி. 22:17; யோசுவா. 11:4; நீதிபதிகள். 7:12; 1 சாமு. 13:5; 2 சாமு. 17:11; யூதித். 2:20; 1 மக். 11:1).

9 : பேய் தன்னுடைய துணைவர்களோடு சேர்ந்து புதிய இஸ்ராயேலாகிய திருச்சபையை அழிக்க முயலும். ஆசிரியர் இறைவனின் ‘அன்புக்குகந்த நகரம்’ என்று குறிப்பிடுவது புதிய எருசலேமை. புதிய இஸ்ராயேல் மக்களை மனக்கண்முன் வைத்துப் பேசுவதுபோல் புதிய எருசலேமையும் பார்க்கின்றார் போலும். உலகெங்கிலும் பரவியுள்ள கடவுளின் திருச்சபையை அழிக்கப் பேய் எவ்வளவு வன்மையோடு முயன்றாலும் பேயின் அழிவே உறுதியாகும். பேயின்

துணைவர்களை வானத்திலிருந்து விழும் நெருப்பு அழிக்கும். கடவுள் தம் பகைவர்களை நெருப்பினால் அழிப்பதைப் பழைய ஏற்பாட்டில் பரவலாகக் காணலாம் (காண். ஆதி. 19:24; எசேக். 38:22; 39:6; 1 அரசர். 1:10–12).

10 : இறுதியாக, பேய் தனக்குரிய தண்டனையைப் பெறுகிறது. முடிவில்லாத் தண்டனையின் இடமாகிய கந்தக நெருப்புக் கடலில் அது எறியப்படும். அதாவது கிறிஸ்து தீயசக்திகள் அனைத்தையும் வென்று வெற்றிவாகை சூடுகிறார். இஃது இறுதி நாளில் நடைபெறும்.

(ஈ) இறுதித் தீர்ப்பு (20:11—15)

பின் வெண்மையான பெரியதோர் அரியணையையும் 11
அதில் வீற்றிருப்பவரையும் கண்டேன். அவருடைய முன்னிலை
யில் மண்ணகமும் விண்ணகமும் இருந்த இடம் தெரியாமல்
மறைந்துபோயின. இறந்திருந்த சிறியோர், பெரியோர் 12
அனைவரும் அரியணைமுன் நிற்கக் கண்டேன். அப்போது
ஏட்டுச் சுருள்கள் பிரிக்கப்பட்டன. வேறொரு சுருளும் பிரிக்
கப்பட்டது. அது வாழ்வு நூல். இறந்தவர்களின் செயல்
கள் அச்சுருள்களில் குறித்திருந்தன. அச்செயல்களுக்கேற்ப
அவர்களுக்குத் தீர்ப்புக் கூறப்பட்டது. கடல் தன்னகத் 13
திருந்த இறந்தோரை வெளியேற்றியது. சாவும் பாதாளமும்
தம்முள் அடைத்திருந்த இறந்தோரை வெளியேற்றின. அவர்
கள் அனைவரும் தங்கள் செயல்களுக்கேற்ற தீர்ப்பைப் பெற்ற
னர். சாவும் பாதாளமும் நெருப்புக் கடலில் எறியப்பட்டன. 14
இந்நெருப்புக் கடலே இரண்டாவது சாவு. வாழ்வு நூலில் 15
பெயர் எழுதப்பட்டிராத எவனும் இந்நெருப்புக் கடலில் எறி
யப்பட்டான்.

இப்பகுதி இறந்தோர் உயிர்த்தலையும், இறுதித் தீர்ப்பையும் பற்றிக் கூறுகிறது.

11 : 'வெண்மையான அரியணையில் வீற்றிருப்பவர்' யார்? விண்ணகத் தந்தையா, கிறிஸ்துவா என்பதை நூல் சொல்லவில்லை. நூலின் பிற பகுதிகளில் தந்தையே அரியணையில் வீற்றிருப்பவர் (4:2–9; 5:1, 7, 13; 6:16; 7:10; 19:4; 21:5) என்று கூறப்பட்டிருக்கிறது. அவர்தான் இறுதி நாளில் உலகை நடுத்தீர்க்கும் நடுவர் என்று புதிய

ஏற்பாட்டின் வேறு சில பகுதிகளும் கூறுகின்றன. (காண். மத். 18:35; உரோ. 14:10). கிறிஸ்துவை இறுதித் தீர்ப்பின் நடுவராகக் காட்டும் பகுதிகளும் புதிய ஏற்பாட்டு நூல்களில் இல்லாமலில்லை (காண். மத். 16:27; 25:31–46; அரு. 5:24; அ. பணி. 17:31; 2 கொரி. 5:10; 2 திமோ. 4:1). ஆனல் கிறிஸ்து, தந்தையின் அதிகாரம் பெற்று, அவர் பெயரால் தீர்ப்பளிப்பார் என்பதும் மேற்கூறிய பகுதிகளில் காணக்கிடக்கும் உண்மையாகும். எனவே, இங்கே அரியணையில் வீற்றிருக்கும் நடுவரை விண்ணகத் தந்தையெனக் கொள்வோம். வெண்மை நிறம் அவரது களங்கமில்லாத் தூய்மைக்கு அடையாளம். தீர்ப்பு நாளில் படைப்பு உலகு மறைந்து விடுகிறது. புதிய வானமும் வையமும் வரவிருப்பதால், பழைய வானமும் வையமும் மறைந்து விடுகின்றன. பழைய உலகுக்கும் இறுதிக் காலத்தில் வரவிருக்கும் புதிய உலகுக்கும் உள்ள தொடர்பைக் காட்டாது, இரண்டையும் பிரித்துக்கூறுகின்ற ஒரு போதனையை மறைநூலில் காணலாம் (காண். சங். 101:26; இசை. 51:6; மாற். 13:31; அ. பணி 3:21; 2 இரா. 3:7, 10–12). திருவெளிப்பாடும் "பின்பு புதிய வானமும் புதிய வையகமும் கண்டேன். முதலிருந்த வானகமும் வையகமும் மறைந்து போயின" என்று கூறுகிறது. ஆனல் இக்கருத்துக்கு மாருன போதனையையும் புதிய ஏற்பாட்டில் காணலாம். புனித சின்னப்பர் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் பின்வருமாறு கூறுகிருர்: "படைப்பனைத்துமே அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுபட்டு, கடவுளின் பிள்ளைகளுக்குரிய மகிமையும் விடுதலையும் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கை கொண்டுள்ளது" (உரோ. 8:21). நம் ஆண்டவர் இயேசுவும் இவ்வுலகு இறுதிக்காலத்தில் புத்துயிர் பெறப்போவதாகக் கூறுவதை ஈண்டுக்கவனிக்காமல் இருக்கமுடியாது (காண். மத். 19:28). ஆதலின் வரவிருக்கும் புதிய உலகு இவ்வுலகோடு தொடர்பு கொண்டதாய் அதனின்று வேறுபட்டு, புதியதாய் உருவாகுவதா; அல்லது, இவ்வுலகோடு எவ்வித தொடர்புமின்றி, வேறு புது உலகாய்த் தோன்றுவதா என்பதை நாம் அறுதியிட்டுக் கூறவியலாது. திருவெளிப்பாடும்

எந்த ஒரு கருத்தையும் தனித்துத் போதிப்பதாகத் தெரிய வில்லை.

12–13 : இறுதிக்காலத் தீர்ப்பு எல்லாரும் பெற வேண்டியது. எவருக்கும் விதிவிலக்கில்லை. எந்தச் சமுதாயமும் எந்த நாட்டினரும் இத்தீர்ப்புக்கு உள்ளாவர். தீர்ப்பின் பொதுத் தன்மையை நூல் 'பெரியவரும் சிறியவரும்' என்னும் சொற்களில் கூறுகிறது (காண். மத். 25:32; அரு. 5:28; 2 திமோ. 4:1; 1 இரா. 4:5). உலகத் தொடக்க முதல் வாழ்ந்து இறந்தவர்களெல்லாரும் உயிர் பெற்றுத் தீர்ப்பைபெற வந்து நிற்பர். அவர்களின் செயல்கள் எல்லாம் (நல்லவையும் தீயவையும்) எழுதப்பட்டுள்ள நூல்களின் படி தீர்ப்பு நிகழும். 'வாழ்வின் நூல் என்று திருவெளிப்பாடு குறிப்பிடும் நூலினின்று இவை வேறுபட்டவை. யூத மரபுக்கும் பிற திருவெளிப்பாட்டு நூல்களின் மரபுக்கும் ஏற்ப இவ்வித உருவகம் ஈண்டு வருகின்றது (காண். தானி. 7:10; இசை. 65: 6–7; மலாக். 3:16). இதிலிருந்து நாம் அறிவது, இறுதித் தீர்ப்பில் கடவுள் நம்முடைய செயல்களுக்கேற்ப நீதி வழங்குவார் என்பதே. அடுத்துவரும் நூல்தான் 'வாழ்வின் நூல்'. இதைப்பற்றி 3:5-இல் கூறிய விளக்கத்தைக் காண்க. கடவுள் ஏற்கனவே சிலரின் பெயர்களை வாழ்வின் நூலில் எழுதி அவர்களுக்கு விண்ணக உரிமையை முன்னேற்பாடு செய்துள்ளார் எனில் நாம் செய்யும் நன்மை தீமையின் பயன் யாது? கடவுள் நமக்கு விண்ணகத்தை முன்னேற்பாடு செய்துள்ளார் என்பது ஒருபுறம்; அவர் நமக்கு நம் செயல்களுக்கு ஏற்பத் தீர்ப்பளிப்பார் என்பது மறுபுறம் இங்கு நமது மனித சுதந்திரத்திற்கு எவ்வித ஊறும் ஏற்படுவதாகத் தெரியவில்லை.

ஏனெனில் கடவுள் இவ்வாழ்வில் வெற்றி கொள்பவனின் பெயரை வாழ்வின் நூலிலிருந்து நீக்கமாட்டார் என்பது இந்நூலின் கூற்று (3:5). வாழ்வில் வெற்றி கொள்ளாதவன் பெயரை அவர் நீக்கிவிடலாம். ஆதலின், கடவுள் மனிதனுக்கு விண்ணகக் கொடையைத் தாமே மனமுவந்து அளித்திடினும், மனிதன் அதனை முழுச் சுதந்திரமாய்த் தன்

உரிமைப் பெருக்கிக் கொள்கிறான். கடவுள் அவனுடைய செயல்களுக்கு ஏற்ப நீதி வழங்குவது அவருடைய முன்னேற்பாட்டுக்கு முரணாவதில்லை.

இறுதி நாளில் மக்களின் உயிர்ப்பைப்பற்றிக் கூறும் அருளப்பர் கடலும் பாதாளமும் இறந்தோரை வெளியேற்றின என்கிறார். இதன் பொருள் என்ன? அக்கால யூத மக்களின் கருத்துப்படி இறந்தோர் 'பாதாளத்திலே' அடைபட்டுக் கிடந்தனர். இந்தப் பாதாளம் பூமிக்கு அடியிலே இருக்கும். ஆனால் கடலில் இறந்தோர் இவ்விடத்திற்குச் செல்வதில்லை. ஆசிரியர் இக்கருத்தைப் போதனையாக ஏற்கவில்லை. அக்கருத்தின் அடிப்படையில் இறந்தோர் யாவரும், அவர்கள் எப்படி இறந்திருந்தாலும், எங்கே இறந்திருந்தாலும், உயிர்த்து, தீர்ப்புக்காகக் கடவுள் அரியணைமுன் வருவர். இதுவே ஆசிரியரின் போதனை.

14 : உலக முடிவுக்குப்பின் இறந்தோரெல்லாரும் தீர்ப்புப்பெற்று, நித்திய வாழ்விலோ, நித்திய சாவிலோ நுழைந்தபின், இனிச் சாவு ஏது? அக்காலத்தவர் நம்பிவந்த 'பாதாளம்' ஏது? எல்லாம் அழியும். "சாவு வீழ்ந்தது, வெற்றி கிடைத்தது, சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?" (1 கொரி. 15:55) என்னும் புனித சின்னப்பரின் வீர முழக்கம் இங்கே தொனிக்கிறது. பொதுத் தீர்வைக்குப் பின் இரண்டாம் சாவு, அதாவது முடிவிலாத் தண்டனை வரும். இங்கே தான் இறுதிவரை மனந்திரும்பாத தீயோர் காலா காலமாய்த் துன்பம் அனுபவிப்பர்.

(iv) புதிய எருசலேம் (21 : 1—22 : 5)

21 பின்பு நான் புதிய வானகமும் புதிய வையகமும் கண்
டேன். முதலிலிருந்த வானகமும் வையகமும் மறைந்து
போயின. கடலும் இல்லாமல் போயிற்று. அப்போது புதிய 2
யெருசலேம் ஆகிய பரிசுத்த நகரம் கடவுளிடமிருந்து விண்ணி
னின்று இறங்கிவரக் கண்டேன். மணமகனுக்கென அலங்கரிக்
கப்பட்ட மணமகளைப்போல் அது மலர்ந்தது. பின் அரியணை 3
யிலிருந்து ஒரு பெருங் குரலைக் கேட்டேன். அக்குரல், "இதோ,

கடவுளின் இல்லம் மனிதரிடையே உள்ளது; அவர்களோடு
அவர் குடிகொள்வார். அவர்கள் அவருக்கு மக்களாயிருப்பர்;
கடவுள் தாமே அவர்களோடு இருப்பார். அவர்களுடைய 4
கண்ணீரனைத்தையும் துடைத்துவிடுவார்; இனிச் சாவில்லை,
புலம்பலில்லை, அழுகையில்லை, நோவில்லை. முன்னிருந்தவை
மறைந்துபோயின" என்றது. அரியணைமீது வீற்றிருந்தவர், 5
"இதோ நான் அனைத்தையும் புதியனவாக்குகிறேன்" என்
றார். மேலும், "இவ்வார்த்தைகள் நம்பத்தக்கவை, உண்மை
யானவை என்று எழுது" என்றார். பின், என்னைப் பார்த்துச் 6
சொன்னதாவது: "எல்லாம் முடிந்துவிட்டது. அகரமும்
னகரமும் நானே—தொடக்கமும் முடிவும் நானே. தாகமா
யிருக்கிறவனுக்கு வாழ்வின் ஊற்றிலிருந்து இலவசமாய் நீர்
கொடுப்பேன். வெற்றிகொள்பவன் இவற்றையெல்லாம் 7
உரிமையாக்கிக் கொள்வான். நான் அவனுக்குக் கடவுளாய்
இருப்பேன். அவன் எனக்கு மகனாய் இருப்பான். | கோழை 8
கள், விசுவாசமற்றவர்கள், அருவருப்புக்குரியவர்கள், கொலை
காரர்கள், காமுகர், சூனியம் வைப்பவர்கள், சிலை வழிபாட்டினர்
முதலிய பொய்யர்கள் அனைவருக்கும் கந்தக நெருப்பு எரியும்
கடலே உரிய பங்காகும். இதுவே இரண்டாவது சாவு. அதன் 9
பின் இறுதி ஏழு வாதைகளால் நிரம்பிய கலசங்களை ஏந்திய
ஏழு வானதூதர்களுள் ஒருவர் வந்தார். அவர் என்னைப்
பார்த்து: "வா, செம்மறியானவர் மணந்து கொண்ட மண
மகளை உனக்குக் காட்டப்போகிறேன்" என்றார். தேவ ஆவி
என்னை ஆட்கொள்ளவே, வானதூதர், உயர்ந்ததொரு பெரிய 10
மலைக்கு என்னைக்கொண்டு சென்றார். கடவுளிடமிருந்து விண்
ணின்று யெருசலேம் நகர் இறங்கிவருவதை எனக்குக் காட்டி
னார். கடவுளுடைய மாட்சிமை அதைச் சூழ்ந்திருந்தது. அது 11
விலைமிக்க இரத்தினக்கல்போலும், பளிங்கென ஒளிவீசும் மணிக்
கல்போலும் சுடர்விட்டது. உயர்ந்ததொரு பெரிய மதில் 12
அதைச் சூழ்ந்திருந்தது. அதற்குப் பன்னிரு வாயில்கள்
காணப்பட்டன. அவ்வாயில்களில் பன்னிரு தூதர்கள் நின்
றார்கள். இஸ்ராயேலின் பன்னிரு குலத்தாரின் பெயர்கள்
வாயில்களில் பொறிக்கப்பட்டிருந்தன. கிழக்கே மூன்று, 13
வடக்கே மூன்று, தெற்கே மூன்று, மேற்கே மூன்று வாயில்கள்
இருந்தன. நகரின் மதில் பன்னிரு அடிக்கற்கள்மேல் கட்டப் 14
பட்டிருந்தது. அவற்றின்மேல் செம்மறியின் பன்னிரு அப்
போஸ்தலர்களின் பன்னிரு பெயர்களும் இருந்தன. என்னோடு 15
பேசியவர் நகரையும் அதன் வாயில்களையும் மதிலையும் அளக்
கும்பொருட்டு ஒரு பொன் அளவுகோலைக் கையில் வைத்துக்
கொண்டிருந்தார். அந்நகரம் சதுரமாக இருந்தது; அதன் 16

நீளமும் அகலமும் ஒரே அளவு. அவர் கோலைக்கொண்டு
நகரத்தை அளந்தார். நூற்றைம்பது காதம் இருந்தது.
அதன் நீளமும் அகலமும் உயரமும் ஒரே அளவாக இருந்தன.
அவர் தன் மதிலையும் அளந்தார். அதன் உயரம் நூற்றுநாற் 17
பத்துநான்கு முழம். வானதூதர் பயன்படுத்திய அளவு
மனிதரிடையே வழங்கும் அளவுகளே. மதில் மணிக்கல்லால் 18
கட்டப்பட்டிருந்தது, அந்நகரமோ பழுதற்ற கண்ணாடி
போன்ற பசும் பொன்னாலானது. நகர மதில்களின் அடிக்கற் 19
கள் எல்லாவித இரத்தினங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்
தன. முதல் அடிக்கல் மணிக்கல், இரண்டாவது நீலக்கல்,
மூன்றாவது மாணிக்கம், நான்காவது மரகதம், | ஐந்தாவது 20
கோமேதகம், ஆறாவது பதுமராகம், ஏழாவது சுவர்ணரத்
தினம், எட்டாவது படிகப்பச்சை, ஒன்பதாவது புட்பராகம்,
பத்தாவது வைடூரியம், பதினொன்றாவது இந்திரநீலம், பன்னி
ரண்டாவது சுகந்தி, பன்னிரு வாயில்களும் பன்னிரு முத்து
களால் ஆனவை. ஒவ்வொரு வாயிலும் ஒரு முத்தாலானது. 21
நகரின் வீதி பழுதற்ற கண்ணாடிபோன்ற பசும் பொன்னா
லானது. அதனுள் நான் ஆலயத்தைக் காணவில்லை. கடவு 22
ளாகிய ஆண்டவரும் செம்மறியுமே அதன் ஆலயம். அந்நக 23
ருக்கு ஒளிகொடுக்க கதிரவனோ நிலவோ தேவையில்லை. கடவு
ளுடைய மாட்சிமை அதற்கு ஒளி வீசியது ; செம்மறியே அதன்
விளக்கு ; அதன் ஒளியில் எல்லா நாட்டு மக்களும் நடந்து 24
செல்வர் ; மண்ணக அரசர் தங்களிடம் மகிமையாய் உள்ள
தெல்லாம் அதனுள் கொண்டுவருவர். அதன் வாயில்கள் 25
நாளெல்லாம் திறந்திருக்கும். அங்கு இரவே இராது. நாடு 26
களில் உள்ள மகிமை பெருமையானதெல்லாம் அதனுள்
கொண்டுவரப்படும். ஆனால் மாசுபட்டது எதுவும் அதனுள் 27
நுழையாது. அருவருப்பானதும் பொய்யானதும் செய்பவர்
கள் அங்கு நுழைவதில்லை. செம்மறியானவர் வைத்திருக்கும்
வாழ்வு நூலில் எழுதப்பட்டிருப்பவர் மட்டுமே அங்குச் செல்வர்.

பின்னர் வாழ்வுநீர் ஓடும் ஆற்றை வானதூதர் காண் **22**
பித்தார். அது பளிங்குபோல் மின்னிற்று. அது கடவுளும்
செம்மறியானவரும் வீற்றிருக்கும் அரியணையினின்று நகர வீதி
யின் நடுவிலே பாய்ந்தோடியது. ஆற்றின் இரு பக்கங்களி
லும் வாழ்வின் மரமிருந்தது. மாதத்திற்கு ஒரு முறையாக 2
அது ஆண்டுதோறும் பன்னிரு முறை கனிகள் தரும். அதன்
இலைகள் மக்கள் இனங்களைக் குணப்படுத்தக் கூடியவை.
சாபத்துக்குள்ளானதெதுவும் அங்கு இல்லை. கடவுளும் செம் 3
மறியானவரும் வீற்றிருக்கும் அரியணை அங்கே இருக்கும்.
அவருடைய ஊழியர்கள் அவரைத் தொழுவார்கள். அவரது 4

முகத்தைக் காண்பார்கள். அவரது பெயர் அவர்கள் நெற்றி
யில் எழுதியிருக்கும். அங்கு இரவே இராது. விளக்கின் 5
ஒளியோ கதிரவனின் ஒளியோ அவர்களுக்குத்தேவைப்படாது.
ஆண்டவராகிய கடவுளே அவர்கள்மீது ஒளிவீசுவார். அவர்
களோ என்றென்றும் அரசாள்வார்கள்.

இப்பகுதி கடவுளுடைய மீட்பின் திட்டத்தின் இறுதிக் கட்டத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. தீயவன் ஒழிந்தான்; தீய உலகும் ஒழிந்தது. இனி வரவேண்டியது கடவுளாட்சிதானே. கடவுளாட்சியில் எல்லாம் புதியன. வழக்கம்போல் உருவகங்களின் மூலமாக பற்பல உண்மையினை உணர்த்த விரும்புகிறார் ஆசிரியர்.

1 : புதிய வானகமும் புதிய வையகமும் ஒரு புதிய நிலையை உணர்த்துகின்றன. அதில் அன்பு, அமைதி, நீதி, நேர்மை, இன்பம் எல்லாம் என்றென்றும் இருக்கும். இவ்வித புதிய நிலை இவ்வுலகினின்று உருவாகுவதா புதிதாகவே வருவதா என்பதுபற்றி முந்தின அதிகாரத்தில் கூறினோம். ஆசிரியர் திடீரென்று ஏன் கடலைப்பற்றிக் கூறவேண்டும்? கடலைக் கடவுளுக்கெதிரான தீய சக்திகளின் உறைவிடமாகக் கருதினர் அக்கால யூத மக்கள். கடல் அழிந்தால் கடவுளின் மாற்றார்களும் அழிவர். ஆகவே புதிய உலகில் தீமையும், தீமையின் சக்திகளும் இல்லை என்பதைக் குறிக்கக் கடல் இல்லை என்கிறார் ஆசிரியர்.

2 : புதிய உலகிலே புதிய எருசலேம் விண்ணின்று இறங்கி வருகிறது. இந்தப் புதிய எருசலேமைப் பழைய ஏற்பாட்டிலேயே யூதர்கள் பெரிதும் எதிர்பார்த்திருந்தனர். இசை. 54-ஆம் அதிகாரம் புதிய எருசலேமில் மக்கட்பேற்றின் வளத்தையும், அதன்மீது ஆண்டவர் கொண்ட அன்பையும் வருணிக்கிறது. 60-ஆம் அதிகாரம் அதன்மீது தோன்றும் மகிமையை எடுத்துரைக்கின்றது. பழைய ஏற்பாட்டில் எருசலேம் நகர் கடவுள் இஸ்ராயேல் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் கண்கூடான அடையாளமாயிருந்தது.

அதே உருவக மொழியில் இந்தப் புதிய எருசலேமும் புதிய இறை மக்களைத் தேர்ந்து கொள்வதற்கும், அவர்

களோடு இறைவன் புதிய உடன்படிக்கையைச் செய்து கொள்வதற்கும் அடையாளமாகும். அல்லது, பழைய உடன் படிக்கையின் நிறைவேற்றத்திற்கு இஃது அடையாளம் என்றும் சொல்லலாம். இந்நகர் கடவுளிடமிருந்து வருவதால் பரிசுத்தமானது. ஏனெனில் கடவுளே அதனை உருவாக்கியுள்ளார். ஆசிரியர் இதனை ஒரு மணமகளுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். இந்த உருவகம் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி காணப்படும் ஒன்று (காண். இசை. 49:18; 52 : 1; 61 : 10; ஒசே. 2:16; 16:19; எசேக். 16). புதிய ஏற்பாட்டில் புனித சின்னப்பர் இந்த உருவகத்தில் திருச்சபையை வருணிப்பதைக் காண்க (2 கொரி. 11;2; எபே. 5:25). நூலாசிரியர் வழக்கில் இருந்த உருவகத்தைப் பயன்படுத்தி, புதிய உலகின் நிறைவையும் தூய்மையையும் நமக்கு உணர்த்துகின்றார்.

3 : இவ்வாக்கியத்தில் ‘ கடவுளின் இல்லம் ’ என்னும் சொற்றொடர் ஒரு புதிய உண்மையைப் புகட்டும். இச்சொற்றொடருக்குப் பின்னணியாகப் பழைய ஏற்பாட்டு ‘ ஷெக்கிஞ ’ (Shekinah) அமைந்துள்ளதைக் காணத் தவறலாகாது. ‘ ஷெக்கிஞ ’ என்னும் சொல் யூதர்களுக்கு, கடவுள் அவர்களோடு தங்கியிருத்தலைக் குறித்தது. அவர்களது இந்த ஆவலை நிறைவேற்ற வந்தவர் நம் ஆண்டவர் இயேசு. “ வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடிகொண்டார் ” (அரு. 1:14). நம்மிடையே குடிகொள்ளப் பிறந்த இயேசுவின் திட்டம் இவ்வுலகில் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. இறுதிக் காலத்தில் அது முழுமைபெறும். கடவுள் நம்மில் இருப்பார்; நாம் அவரில் இருப்போம். இதில்தான் வானக இன்பம் அடங்கியுள்ளது. இக்கருத்தோட்டம் திருவெளிப்பாடு நூலில் நிறைவேறுவதை ஆசிரியர் மறைவாகச் சொல்கிறார். அடுத்து, புதிய உலகின் மக்களினத்தார் எல்லாரும் கடவுளின் மக்களாகின்றனர்.

4 : துன்பமும் சாவும் இவ்வுலகைச் சார்ந்தவை. இவ்வுலகே மாறிவிட்டது; துன்பமும் சாவும் ஒழிந்தன (20 : 14). அதாவது, மறுஉலகில் இவையெல்லாம் இரா.

கண்ணீரனைத்தும் துடைத்து விடுதல், இவ்வுலகத்தில் துன்ப துயரங்களை அனுபவித்தவர்களை நினைவுபடுத்துகின்றது. இவ்வுலகில் தன் சிலுவையைத் தூக்கிக் கொண்டு கிறிஸ்துவைப் பின் தொடர்ந்தவர்கள் தாம் மறுஉலகில் இன்பம் அனுபவிப்பர். இனி அவர்களுக்குத் துன்பமென்பதில்லை. என்றுமே இன்பம்தான்.

5: அவர்கள் பெறுவது புதிய படைப்பு. எல்லாம் புதியதாக மாறுகின்றது. பாவத்தையும் சாவையும் ஒழித்த இயேசு அவை இரண்டும் இல்லாத புதிய உலகைத் தருகிறார். கிறிஸ்துவோடு ஒன்றித்தவர்கள்தாம் இதில் பங்கு பெறுவர் (எபே. 2 : 15 ; 4 : 24 ; கொலோ. 3 : 10; உரோ. 6 4). மேற்கூறியவையெல்லாம் நம்பத்தக்கவை, உண்மையானவை என்று கடவுளே கூறுகின்றார். துன்பத்தில் உழன்று கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு இச்சொற்கள் மிக்க உறுதியையும் ஆறுதலையும் அளித்திருக்கும். ஏன் துன்பம்? துன்பத்திற்கு ஒரு முடிவு உண்டா? ஏன் இவ்வளவு காலத்துன்பம்? என்றெல்லாம் வினாக்கள் எழுப்பி எதிர்கால இன்பவாழ்வை நோக்கி ஏங்கித் தவித்த மக்களுக்குப் 'புதிய உலகு' வரும் என்னும் உண்மைக்குக் கடவுளே உறுதி கூறுகிறார் என்றால், கிறிஸ்துவுக்குச் சான்று பகரும் அவர்களுக்கு ஊக்கமளிக்க வேறென்ன வேண்டும்? இப்புதிய உலகுக்குக் காரணம் கடவுள்தன். அது அவருடைய அருங்கொடையே. தாமாகவரும் ஒன்றல்ல அது. எனவே தான்.

6: எல்லாம் முடிந்த பிறகு கடவுள் தம்மைப் பற்றிச் சொல்கிறார். '**அகரமும் னகரமும்**'—இச் சொற்கள் நூலின் தொடக்கத்தில் கடவுளின் பண்புகளைக் கூறின. நூலின் இறுதியிலும் அதையே கூறுகின்றன (1:8 விளக்கம் காண்க.). எல்லாம் கடவுளில் தொடங்குவது போல், இந்நூலின் திருவெளிப்பாடுகளும் அவரில் தொடங்கின. அவரில் எல்லாம் நிறைவெய்துவதுபோல இத்திருவெளிப்பாடுகளும் அவரில் நிறைவுபெறுகின்றன.

இந்த நிறைவேற்றத்தைக் குறிக்க 'எல்லாம் முடிந்து விட்டது' என்று இறைவன் கூறுகிறார். கிறிஸ்து தமது பணியை முடித்த காலையும் "எல்லாம் நிறைவேறிற்று" என்று கூறியதை ஈண்டு நினைவுபடுத்திக் கொள்ளுதல் நன்று (அரு. 19:30). இந்நிலையில் மனிதன் கடவுளிடமிருந்து 'வாழ்வின் நீரை'ப் பெறுகிறான். இவ்வடையாளச் சொல் பழைய ஏற்பாட்டில் வாழ்வுக்கு அறிகுறியாய் இருந்தது. மெசியாவின் காலத்தில் இது புது வாழ்வின் அடையாளமாயும் இருத்தலை இறைவாக்கினர் நூல்களில் காண்கிறோம் (காண். இசை. 12:3; 41:17–18; 55:1; எசேக். 47; சக். 13:1; 14:8). நம் ஆண்டவர் இயேசுவும் தண்ணீரை அடையாளமாக வைத்துதான் தெய்வீக வாழ்வைப்பற்றிக் கூறினார்: "நான் அவனுக்கு அளிக்கும் தண்ணீரோ, அவன் முடிவில்லா வாழ்வடைய அவனுக்குள் பொங்கியெழும் ஊற்றாகும்" (அரு. 4:14). இறுதிக் காலத்தில் நாம் தெய்வீகத்தில் நிலைத்திருத்தல் கடவுள் அளிக்கும் கொடை என்பதை திருவெளிப்பாடு வலிவுறுத்துகின்றது.

7: தெய்வீக வாழ்வை இலவசமாகப் பெறுவதால் மனிதனின் சுதந்திரம் பறிபோவதில்லை. அவனுடைய நற்செயல்களுக்கான பயன் வீணாவதில்லை. வெற்றிகொள்பவன், அதாவது, கிறிஸ்தவ ஒழுக்கத்தில் நிலைநின்று, கிறிஸ்துவுக்குச் சான்றாய்த் திகழ்பவன், இதனை உரிமையாக்கிக் கொள்வான். ஏழு சபைகளுக்கு விடுத்த அறிவுரைகளில் கொடுத்த வாக்குறுதியின் நிறைவேற்றம் இது (அதி. 2–3). விண்ணக வாழ்வு கிறிஸ்தவர்களின் உரிமைப் பேறாக வருமென இந்நூல் குறிப்பிடும்போது மத். 25:34-ஆம் வாக்கியம் தொனிக்கிறது: "வாருங்கள், என் தந்தையின் ஆசி பெற்றவர்களே, உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்துள்ள அரசு உங்களுக்கு உரிமையாகுக." இதே கருத்து உரோ. 8:17; கலா. 4:7 ஆகிய வாக்கியங்களிலும் வருதலைக் காண்க. புதிய ஏற்பாட்டுப் படிப்பினைக்கு ஏற்ப இப்போதனை அமைந்துள்ளது. இறுதிக் கால இன்ப வாழ்வில் நுழைந்தவர்கள் எல்லாரும் கடவுளின் சொந்தப்

பிள்ளைகளாக இருப்பர். கடவுளும் அவர்களின் தந்தை யாவார். இங்கேயும் பழைய ஏற்பாட்டில் தொடங்கிய ஒரு கருத்தோட்டம் நிறைவெய்துவதைக் காணலாம். பழைய உடன்படிக்கையின் விளைவாக, இஸ்ராயேல் மக்கள் கடவுளின் பிள்ளைகளானுர்கள். ஆனுல் தங்கள் நெறிதவறிய வாழ்க்கையால் இப்பேற்றை இழந்தனர். கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையால்தான் நாம் எல்லோரும் உண்மையாகவே கடவுளின் பிள்ளைகளானேம். " நீங்கள்......பிள்ளைகளாக்கும் தேவ ஆவியையே பெற்றுக் கொண்டீர்கள். அந்த ஆவியினுல் நாம் 'அப்பா தந்தாய்' எனக் கூப்பிடுகிறேம். நாம் இவ்வாறு கூப்பிடும்போது நம் உள்ளத்தோடு தேவ ஆவியானவரே நாம் கடவுளின் பிள்ளைகள் என்று சான்று பகர்கிறுர். நாம் பிள்ளைகளாகின், உரிமையாளருமாய் இருக்கிறேம்" (உரோ. 8:14–17). "கடவுள்–மக்கள்" எனும் கருத்தோட்டம் முதிர்ச்சி அடைந்து இங்கே நிறைவெய்துகிறது.

8 : இறுதிக்கால இன்ப வாழ்வில் நுழைந்தவர்களின் தனிப்பேற்றினைக் கூறியபின், நூலாசிரியர் முடிவில்லாத் தண்டனைக்கு உரியவர்களின் பட்டியல் ஒன்றைத் தருகின்ருர். கோழைகள், துன்பக் காலத்தில் உறுதியின்றி கிறிஸ்துவுக்குச் சான்று பகராதவர்கள். இவர்கள் வாழ்வில் வெற்றி பெற்றவர்களுக்கு மாருக உள்ளவர்கள். விசுவாசமற்றவர்கள். கிறிஸ்துவுக்குப் பிரமாணிக்கமாய் வாழாது தம் மறைநெறி தவறிய கிறிஸ்தவர்கள். இனி வருபவர் கிறிஸ்துவரல்லாதார், அருவருப்புக்குரியவர்கள், 'கொலைகாரர்கள்' என்னும்போது கிறிஸ்தவர்களைக் கொலை செய்தோரை நினைத்து ஆசிரியர் எழுதுகின்ருர்போலும். காமுகர்–தீய ஒழுக்கங்களில் உழல்பவர்கள். இவர்கள் பொய்க் கடவுளர் வழிபாட்டில் ஈடுபட்டவராயும் இருக்கலாம். ஆனுல் அக்காலத்தில் பொய்க் கடவுளர் வழிபாட்டோடு தீய ஒழுக்கமும் கலந்திருந்தது. சூனியம் வைப்பவர்கள்–மந்திர வித்தைகளால் அருங்குறிகள் செய்து பிறரை வஞ்சித்தவர்கள். சில வழிபாட்டினர்–பொய்க் கடவுளரை

யும் மன்னர் சிலைகளையும் வணங்குபவர். பொய்யர்கள்— கிறிஸ்துவின் உண்மைக்குப் புறம்பாகப் பிறரை ஏய்த்து வாழ்பவர்கள். இவர்கள் எல்லாருக்கும் கிடைப்பது ‘இரண்டாவது சாவு’; அதாவது முடிவில்லாத் தண்டனை.

9–11 : இறுதி ஏழு வாதைகள் நிரம்பிய கலசங்களை ஏந்திய ஏழு வானதூதர்களுள் ஒருவர் பேர்போன வேசியாகிய உரோமையைக் காட்டினார் (காண். 17:1). அதே ஏழு வானதூதரில் ஒருவர்தான் ஈண்டுச் செம்மறியின் மணமகளைக் காட்டுகிறார். பேர்போன வேசியைக் காணத் தேவ ஆவி நம் காட்சியாளரைப் பாலைவனத்துக்குக்கொண்டு சென்றார் (காண். 17:3). அதே தேவ ஆவி வானுலக எருசலேமைக் காணக் காட்சியாளரை ஓர் உயர்ந்த மலைக்குத் தூக்கிச் செல்கிறார். பாவத்தின் உருவான உரோமைக்கு எதிராகப் புனிதத்தின் உருவாக வானுலக எருசலேம். எந்த மலை அது? எதுவென்று சொல்வதற்கில்லை. எல்லாம் காட்சியாகவே இருப்பதால், விண்ணக எருசலேம் மண்ணக நிலையினின்று வேறுபட்டது என்று இம்மலைக்காட்சி மூலம் குறித்துக் காட்டலாம். அது கடவுளிடமிருந்து வருவதால், அவரது மாட்சிமையால் ஒளிர்கின்றது. இக்காட்சி, எசேக்கியேல் இறைவாக்கினர் மெசியாவின் காலத்துக் கடவுளாட்சியில் தோன்றும் எருசலேமைப்பற்றி எழுதிய வருணனையைப் பின்னணியாக வைத்து அமைந்துள்ளது (காண். எசேக். 40:1–3, 5 அதே நூலில் 40–48 அதிகாரங்கள் இறுதிக்கால எருசலேமைப் பற்றியவை). அதனை இரத்தினக் கல்லுக்கும் மணிக்கல்லுக்கும் ஒப்பிடுவதால் அதனுடைய தெய்வீகத் தன்மை விளங்குகிறது.

12–13 : புதிய எருசலேமைச் சுற்றியுள்ள மதில் சுவர் எசேக்கியேல் இறைவாக்கினர் முன்னறிவித்த எருசலேமின் மதில் சுவருக்கு ஒப்ப அமைந்திருக்கின்றது. உயர்ந்த சுவர் என்பது தீயோனிடமிருந்து பாதுகாப்பாக இருத்தலையே குறிக்கும். அதில் உள்ள பன்னிரு வாயில்களும், புதிய எருசலேமின் பொதுத் தன்மையை உணர்த்தும். இஃது ஒரு குறிப்பிட்ட நாட்டினருக்கோ, குலத்தினருக்கோ சொந்த

மன்று. அதனுற்றுன் வாயில்கள் ஒவ்வொரு திசைக்கும் மூன்று வீதம் நான்கு திசைகளிலும் உள்ளன. வாயில்களில் நிற்கும் வானதூதர்கள் நகரின் காவலர்கள் போன்று உள்ளனர். இவர்கள் புதிய எருசலேமின் தூய்மையைப் பாதுகாப்பவர்கள். தூய்மை குன்றுதிருக்கும் நிலை இங்கு உணர்த்தப்படுகிறது.

14 : வாயில்களில் பன்னிரு குலத்தவரின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருத்தல் புதிய எருசலேமைப் பழைய ஏற்பாட்டுடன் தொடர்புபடுத்துகின்றது. நகரின் மதில் பன்னிரு அடிக்கற்கள் மேல் கட்டப்பட்டிருத்தல், அப்போஸ்தலரின் அடிப்படையில் அமைந்துள்ளதைக் குறிக்கும். ஏனெனில் அவற்றின்மேல் அவர்களின் பெயர்கள் எழுதியிருந்ததாக நூல் கூறுகிறது. ஆனுல் புதிய எருசலேமின் அடையாளத்தில் அமைந்த விண்ணகம் எவ்வாறு அப்போஸ்தலர்களின் அடிப்படையில் கட்டப்பட்டதாகும்? ஒருக்கால் ஆசிரியர் இம்மண்ணகத் திருச்சபை, அப்போஸ்தலர்களின் அடிப்படையில் உருவானதென்பதை (காண். எபே. 2:20) அறிந்தவர். இதுவே இறுதிக் காலத்தில் நிறைவுபெற்று விண்ணக நிலையை அடையும். எனவே விண்ணகமும் அப்போஸ்தலரின் அடிப்படையில் எழுந்ததெனக் கூறுகின்றுர் போலும்! ஆனுல் ஒரு சிலரின் கருத்துப்படி இவ்வாக்கியத்தில் வரும் பன்னிரு அப்போஸ்தலர்களும் அவர்களது விசுவாசத்திற்கு அடையாளமாக நிற்கின்றனர். அப்போஸ்தலர் கிறிஸ்துவில் விசுவாசம்கொண்டு அவருடைய இறப்பு-உயிர்ப்புக்குச் சான்று பகர்ந்ததால் திருச்சபை உருவாகி வளர்ந்தது என்பதும் உண்மை. ஆதலின் ஈண்டு பன்னிருவரையன்று, அவர்களது விசுவாசத்தையே நூல் வலியுறுத்திக் கூறுகிறது எனலாம்.

15–21 : எசேக்கியேல் இறைவாக்கினர் தாம் கண்ட எதிர்கால எருசலேமின் அளவையெல்லாம் குறிப்பிடுகிறுர். அதுபோல் இங்கே அருளப்பரும் தாம் கண்ட புதிய எருசலேமின் அளவுகளைத் தருகின்றுர். வானக நகரத்தை வானதூதர் ஒருவர் அளக்கிறுர். நீளமும் அகலமும் ஒரே

அளவாக உள்ளது நகரின் அமைப்பு சதுரம். இது நிறைவின் அடையாளமாம். ஒரு பக்கத்தின் அளவு 150 காதம் (தமிழ் அளவை) என்றுளது; அதாவது, 1500 மைல்கள் ஆகும். கிரேக்க நூலில் அது 12,000 'ஸ்தாதியா'. கிரேக்க நூல்படி 12,000-இன் உருவகத்தை நாம் புரிந்துகொள்ள முடியும். 12,000 = 12 × 1000. 12 முழுமையையும், 1000 ஒரு பெருந்தொகையையும் குறிக்கும். ஆதலின், இவற்றின் பெருக்குத் தொகையான 12,000 இன்னும் பெருந்தொகை யான எண்ணிக்கையைக் குறிக்கும். நகரின் பரப்பளவைக் கணக்கிட்டாலோ, அது பரந்து விரிந்த மிகப் பெரியதொரு இடத்தைக் காட்டும். இதனுல் ஆசிரியர் இங்கே புதிய எருசலேமின் நிறைவையும் அதன் பொதுத்தன்மையையும் உணர்த்த விரும்புவது தெரிய வருகிறது. அல்லது '12' என்பது இஸ்ராயேலின் பன்னிரு கோத்திரங்களையும் பன்னிரு அப்போஸ்தலர்களையும் குறிப்பதாக எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு எடுத்துக் கொண்டால், இறுதிக் கால இறைமக்கள் கூட்டம் இஸ்ராயேலினின்று உருவாகி, திருச்சபையில் வளர்ந்து விண்ணகத்தில் நிறைவுபெறுவதை இவ்வுருவக எண் (12,000) காட்டும். அடுத்து, மதிற் சுவற்றின் உயரமும், 12-ஐக் காரண எண்ணுக வைத்து 144 முழம் என வருதலைக் காண்க. 12 × 12 = 144. மேலே கூறிய வாறு இவ்வெண்ணும் இறுதிக்கால இறைமக்களையேக் காட்டுகின்றது. இந்த நகரத்தின் நீளம் அகலம் உயரம் எல்லாம் ஒரே அளவில் அமைந்திருப்பது எருசலேம் ஆலயத் தின் தூயகத்தை நினைவுபடுத்துகின்றது. அத்தூயகத்தின் நீளம் அகலம் உயரம் மூன்றும் ஒரே அளவில் இருந்தது (1 அரசர். 6:20). இவ்வாக்கியங்களில் வரும் இரத்தினங் களின் வகையும் முத்துக்களும் நகரத்தின் இறைமாட்சியை வெளிப்படுத்துகின்றன.

22: இந்தப் புதிய எருசலேமில் ஆலயத்தைக் காணோம். அதற்கு மாருக, வானகத் தந்தையும் திருமகனுமே ஆலய மாக அமைகின்றனர். இந்நகரில் கடவுளின் மாட்சிமை நிறைந்துள்ளமையால் ஆலயம் தேவையில்லை. "நேரம்

வருகின்றது ; ஏன், வந்தேவிட்டது. அப்பொழுது மெய்யடியார்கள் ஆவியிலும் உண்மையிலும் பரம தந்தையைத் தொழுவார்கள் ” (அரு. 4 : 23) என்ற கிறிஸ்துவின் வாக்கியம் இப்படி நிறைவேறுகின்றது போலும்.

23 : அங்குக் கடவுளே நித்திய ஒளியாயிருப்பதால் படைக்கப்பட்ட ஒளிகள் தேவையில்லை. இசையாஸ் இறைவாக்கினர் இதனை முன்னரே அறிவித்துள்ளார் (காண். இசை. 60:1, 2, 19, 20).

24–26 : மெசியாவின் காலத்தைப்பற்றி இசையாஸ் இறைவாக்கினர் கூறியவற்றை ஆசிரியர் கையாளுவதை ஈண்டுக் காண முடிகிறது (காண். இசை. 60 : 3. 5, 11). எசேக்கியேல் இறைவாக்கினர் கண்ட எதிர்கால எருசலேமின் அடிப்படையில் ஆசிரியர் தாம் காணும் எருசலேமை வருணித்திடினும், அவர் எதிர்கால மெசியாவின் ஆட்சியைப் பற்றி இறைவாக்கினர் கொண்டிருந்த குறுகிய கண்ணோட்டத்தை ஏற்கவில்லை என்பது தெளிவு. அதாவது, இஸ்ராயேல் மக்கள்மட்டும் மீட்படைந்து மெசியாவின் ஆட்சியில் இருப்பர். புறவினத்தார் மீட்பின்றி அவ்வாட்சிக்குப் புறம்பே நிற்பர் என்னும் எசேக்கியேலின் கருத்தை ஏற்கவில்லை. ஏனெனில் இசையாஸ் இறைவாக்கினரின் முன்னறிவிப்புக்களைத் தழுவி ஆசிரியர் இவ்வாக்கியங்களை அமைத்து, மெசியாவின் ஆட்சியைப்பற்றிய அவரது பரந்த கண்ணோட்டத்தைக் காட்டுகிறார். ஆதலின் புதிய எருசலேமுக்கு மக்கள் உலகின் எல்லா நாடுகளிலிருந்தும் வருவர். புறவினத்தார் போலன்று, கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவர்களாய் வருவர். அவரது ஒளியைப்பெற்று வருவர். கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலுமிருந்து மக்கள் வந்து கடவுளின் அரசில் பந்தி அமர்வார்கள் ” (லூக். 13 : 29) என்ற கிறிஸ்துவின் சொற்கள் முற்றிலும் நிறைவேறுகின்றன. இவ்வாறு, இவர்கள் வாழ்வில் நுழையும் போது தங்கள் பண்பாடு தனிப்பண்பு இவற்றை ஒழித்தவராயல்ல; இவற்றின் ஊடே கிறிஸ்துவின் ஒளியைக்கண்டு செல்வர். நல்லவை எங்கிருப்பினும் அங்கே கிறிஸ்துவின்

ஒளி சிறிதளவிலேனும் இல்லாமல் போகாது. (27) வானக இன்பத்தில் நுழைய அருகதையற்றவர்களைப்பற்றிச் சுருக்க மாகச் சொல்லுகிறது இவ்வாக்கியம். நீண்டதொரு பட்டியலை 8-ஆம் வாக்கியத்தில் பார்த்தோம். அருவருப்பும் பொய்மையுமான பாவங்கள் பிற பாவங்களுக்கு ஊற்றாயி ருக்குமென ஆசிரியர் இங்குக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. பொதுவில் பார்க்குமிடத்து வாழ்வின் நூலில் பெயர் எழுதப் பட்டிருப்பவர்தாம் இவ்வானக இன்பத்தை அடைய முடியும் (காண். 13 : 8 ; 17 : 8 ; 20 : 12, 15).

22 : 1–5 : இறுதியாக, வானுலக எருசலேம் இறை வாழ்வின் ஊற்றாக அமைவதை நூல் வருணிக்கிறது. எசேக்கியேல் இறைவாக்கினர் கண்ட காட்சியில் வாழ்வு தரும் நீரோடை ஒன்று புதிய எருசலேமின் கிழக்கு வாயிற் படியின் கீழிருந்து ஊற்றெடுத்துக் கிழக்குப் புறமாக ஓடியது (எசேக். 47 : 1). அது கடலில் விழுமுன் பாலைவனத்தின் ஊடே பாய்ந்தோடியதால், இரு கரையோரங்களிலும் செழிப் பான மரங்களையும் விளைபயிர்களையும் தோற்றுவித்தது (எசேக். 47:2-12). இதே உருவகத்தைக்கொண்டு அருளப் பரும் தான் பார்த்த ஆற்றையும் வருணிக்கிறார். ஆற்றின் இருபக்கங்களிலும் வாழ்வின் மரம் இருப்பதாகக் குறிப் பிடும் போது, அவர் ஆதியாகமத்தின் வாழ்வளிக்கும் மரத்தை (ஆதி. 2 : 9) நினைவில் வைத்து எழுதினார் என் பதைச் சொல்லத் தேவையில்லை. இறைவாழ்வின் அடை யாளமாக இந்த ஆறு வருகின்றது. நூலின் வேறு பகுதி களிலும் ஆசிரியர் வாழ்வின் நீர் உருவகத்தைக் கையாளு வதைக் காண்க (7 : 17 ; 21 : 6 ; 22:17). ஈண்டு வாழ்வின் நீரைப்பற்றிக் கிறிஸ்துவே கூறிய மொழிகளை மறத்தலா காது. ''யாரேனும் தாகமாயிருந்தால் என்னிடம் வரட்டும் என்னில் விசுவாசம் கொள்பவன் குடிக்கட்டும்'' (அரு. 7 : 37). கிறிஸ்து பரிசுத்த ஆவியைக் குறித்தே இவ்வாறு பேசினார் (அரு. 7 : 39).

இந்த ஆவியைத்தான் சிலுவையில் நமக்குக் கொடுத் தார் ஆண்டவர் (அரு. 19 : 30). இக்காட்சியிலும் அரி

யணையினின்று வாழ்வின் ஆறு புறப்படுகிறது. அரியணை கடவுளின் இருக்கையாதலின் இறைவாழ்வு மக்களுக்கு அளிக்கப்படுதலை இக்காட்சி வருணிக்கிறது. விண்ணகம் சேர்ந்தமக்கள் வாழ்வது இறைவாழ்வு என்பதில் ஐயமில்லை.

இங்கே நூலாசிரியர் ஆதியாகமத்தில் வரும் 'வாழ்வு தரும் மரம்' என்னும் உருவகத்தையும் சேர்த்துக் கூறு கிறார் என்று மேலே சொன்னோம். இவ்வாக்கியத்தில் வாழ்வு நீர் ஆற்றைவிடுத்து இம் மரத்தையும் முன்வைத்துப் பேசுகிறார் ஆசிரியர். இம் மரம் ஆண்டு முழுமையும் கனி தரும். பிற மரங்களைப்போன்று பருவக் காலத்தில்மட்டும் பழுப்பதில்லை. ஆண்டு முழுமையும் பழுப்பதால் வானகம் சேர்பவர் இறைவாழ்வை இடைவிடாமல் பெற்றிருக்கும் நிலையைக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர். எசேக். 47 : 12-இல் இறைவாக்கினர் கண்ட ஆற்றின் இரு கரைகளிலும் இருந்த மரங்களின் இலைகள் மக்களைக் குணமாக்குபவையாய் இருந்தன. ஈண்டு இந்த உருவகம் புதிய உலகில் மக்கள் நோயின்றி, துன்பமின்றி, சாவின்றி இருத்தலைக் குறிக்கிறது.

இவ்விதப் புதிய எருசலேமில் மக்கள் சாபத்துக்கு ஆளாகமாட்டார்கள் என்றும், எருசலேமும் அச்சமின்றி இருக்குமெனவும் சக்கரியாஸ் இறைவாக்கினர் கூறியுள்ளார் (சக். 14 : 11). திருவெளிப்பாடும் இதே உண்மையை உணர்த்த விரும்புகிறது. பாவம் இல்லாத நிலையில் எவ் வாறு கடவுளின் சாபம்வரும்? ஆலயத்திற்குப் பதிலாகப் புதிய எருசலேமில் கடவுளின் அரியணைதான் அடிக்கடி காணப்படுகிறது. அரியணையில் இருக்கும் தந்தை, திருமகன் ஆகிய இருவரையும் ஊழியர்கள் வணங்கி வழிபடுகின்றனர். விண்ணக வழிபாடு ஒன்று நடைபெறுகிறது போலும். தந்தையையும் திருமகனையும் ஒரு சேரவைத்தே இந்நூல் காண்கிறது (21 : 22). இருவரின் சமத்துவத்தை இவ் விடத்தில் உணராமல் இருக்க முடியாது.

அங்கே கடவுளைக் கண்ணுக்குக் கண்ணாரக் காண முடிகிறது. பழைய ஏற்பாட்டில் யூதர்கள் ஆலயத்திற்குச்

சென்று கடவுளின் திருமுகத்தைக் காண விழைந்தனர் *(சங். 16:15; 41:2)*. அங்கு அவர்களது ஆவல் நிறைவேற வில்லை. இவ்வுலகில் கடவுளை நேரில் காணமுடியாது *(காண். யாத். 33:20, 23; அரு. 1:18)*. மனிதனின் இந்த ஆவல் விண்ணகத்தில் நிறைவேறும் புனித அருளப்பர் இதனைத் தமது முதல் திருமுகத்தில் மிகத் தெளிவாகக் கூறுகிறார். "இப்போது நாம் கடவுளின் மக்களாகவே இருக்கிறோம். இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அவர் வெளிப்படும்போது, அவரைப்போலவே நாமும் இருப்போம் என்று அறிந்திருக்கிறோம். ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம்" *(1 அரு. 3:2; காண். மத். 5:8; 1 கொரி. 13:12; எபிரே. 12:4)*. இறைவனைக் காண்பதிலே நமது நித்திய இன்பம் அடங்கியிருக்கும். வானகம் சேர்ந்தோரெல்லாம் கடவுளுக்குச் சொந்தமானவர்கள்.

அவர்கள் நெற்றியில் கடவுளின் பெயர் எழுதியிருத்தல் இதனைக் குறிக்கும் *(காண். 3:12; 7:3–8; 14:1)*. இறைவனே ஒளியாயிருப்பதால், அவ்வொளி முடிவிலாதது. வேறு எந்த ஒளியும் தேவையில்லை. இறுதியாக, விண்ணகத்தோர் கிறிஸ்துவின் அரச குருத்துவத்தில் பங்குபெற்றவராதலின், கடவுளோடு என்றென்றும் அரசாள்வர். நூலின் முதல் பகுதியில் காணப்படும் இவ்வாக்குறுதி ஈண்டு நிறைவெய்துகிறது *(காண். 1:6; 5:10)*.

III. முடிவுரை (22:6-21)

**அதன்பின் அவர் எனக்குச் சொன்னது: "இவ் 6
வார்த்தைகள் நம்பத்தக்கவை, உண்மையானவை. இறை
வாக்கினருக்கு ஆவியைத் தரும் கடவுளாகிய ஆண்டவர் விரை
வில் நிகழ வேண்டியவற்றைத் தம் ஊழியர்களுக்கு வெளிப்
படுத்தத் தம் தூதரை அனுப்பினார். இதோ, நான் விரை 7
வாகவே வருகிறேன்." இந்நூலிலுள்ள இறைவாக்குகளைக்
கடைப்பிடிப்பவர் பேறுபெற்றவர். அருளப்பனாகிய நானே 8
இவற்றைக் கண்டேன், இவற்றைக் கேட்டேன். இவற்றைக்
கண்டு கேட்டு முடித்தபின் எனக்கு இவற்றைக் காட்டிய
வானதூதரைத் தொழுவதற்கு அவர்முன் அடிபணிந்தேன்.**

அவரோ, ''வேண்டாம், வேண்டாம்; இறைவாக்கினரான 9
உன் சகோதரர்களுக்கும், இந்நூலிலுள்ள வார்த்தைகளைக்
கடைப்பிடிப்பவர்களுக்கும் உனக்கும் நான் உடன் ஊழியனே.
கடவுளையே தொழுதல் வேண்டும்'' என்ருர். பின்பு அவர் 10
என்னிடம் சொன்னதாவது: ''இந்நூலிலுள்ள இறைவாக்கு
களை மறைத்து வைக்காதே. இதோ, குறித்த காலம் அண்மை
யிலேயே உள்ளது. இதற்கிடையில், அநீதி செய்பவன் செய்து 11
கொண்டே போகட்டும்; சேற்றில் உழல்பவன் உழன்று
கொண்டே இருக்கட்டும்; நல்லவனே நன்மை செய்து
கொண்டே இருக்கட்டும். பரிசுத்தமுள்ளவனே பரிசுத்தத்
திலேயே நிலைத்திருக்கட்டும். இதோ, விரைவாகவே வரு 12
கிறேன். அவனவன் செயலுக்கேற்ப அவனவனுக்கு அளிக்கும்
கைம்மாறு என் கையிலிருக்கிறது. அகரமும் னகரமும்—முத 13
லும் இறுதியும், தொடக்கமும் முடிவும் நானே. தங்கள் ஆடை 14
களைத் துவைத்து வெண்மையாக்கிக் கொண்டவர்கள் பேறு
பெற்றவர்கள். வாழ்வின் மரத்தின்மீது அவர்களுக்கு உரிமை
யிருக்கும். வாயில்கள் வழியாக அந்நகரத்தில் நுழையவும்
முடியும். கேடுகெட்ட நாய்கள், சூனியம் வைப்பவர்கள் 15
காமுகர், கொலைகாரர், சிலை வழிபாட்டினர், பொய்யை விரும்பி
அதன்படி நடப்போர் அனைவரும் வெளியே நிற்பர்.'' இயேசு 16
வாகிய நான் சபைகளைப் பற்றிய இச்சாட்சியங்களை உங்களுக்கு
அறிவிக்க என் தூதரை அனுப்பினேன். தாவீதின் வேரும்
வழித்தோன்றலும் நானே. ஒளிமிகு விடிவெள்ளியும் நானே.
ஆவியானவரும் மணமகளும் ''வாரும்'' என்கின்றனர். 17
இதைக் கேட்பவனும் ''வாரும்'' என்று சொல்லட்டும். தாக
மாயிருப்பவன் வரட்டும். விருப்பமுள்ளவன் வாழ்வின் நீரை
இலவசமாக ஏற்றுக்கொள்ளட்டும். இந்நூலிலுள்ள இறை 18
வாக்குகளைக் கேட்கிற ஒவ்வொருவனையும் நான் எச்சரிக்கி
றேன்: இவ்வாக்குகளில் ஒருவன் எதையாவது சேர்த்தால்,
இந்நூலில் விளக்கியுள்ள வாதைகளை எல்லாம் கடவுள் அவ
னுக்கு அவன் தலையில் சேர்த்துவிடுவார். இந்நூலிலுள்ள 19
இறைவாக்குகளில் எதையாவது ஒருவன் எடுத்துவிட்டால்,
இந்நூலில் குறிப்பிட்டுள்ள வாழ்வின் மரத்திலும் பரிசுத்த
நகரிலும் அவனுக்குரிய பங்கைக் கடவுள் எடுத்து விடுவார்.
இவற்றிற்குச் சான்று பகர்கிறவர், ''ஆம், விரைவாகவே வரு 20
கிறேன்'' என்கிருர். ஆமென். ஆண்டவராகிய இயேசுவே
வாரும். ஆண்டவராகிய இயேசுவின் அருள் அனைவரோடும் 21
இருப்பதாக.

இப்பகுதி முடிவுரையாக அமைந்திருப்பினும் முடிவுரைக் கேற்ற இலக்கணம் ஈண்டுக் காணப்படவில்லை. முன்பு

சொன்ன சில செய்திகளேயே திரும்பச் சொல்வதால் இந்த நிலே ஏற்படுகின்றது. ஆதலின் நூலாசிரியர் இந்நூலுக்கு நல்லதொரு முடிவுரை எழுதிஞரா என்றுகூடக் கேட்கத் தோன்றுகிறது. ஒவ்வொரு கருத்துக்குமிடையே கோவை யும் தொடர்புமற்ற நிலேயிலே விட்டுவிட்டார் எனவும் எண்ண இடமுண்டு. இதில் மூவர் பேசுகின்றனர். முதலில் வானதூதர், பின்னர் அருளப்பர், அடுத்து ஆண்டவர் இயேசு.

6 : வானதூதர் இந்நூலின் செய்திகள் நம்பத்தக்கவை, உண்மையானவை என்று கூறுகின்ருர். இறைவாக்கினர் கடவுளின் ஆவியைப் பெற்றவராய், அவரது விருப்பத்தை மக்களுக்கு அறிவித்தனர். அதே ஆவியால்தான் இந்த நூலாசிரியரும் கடவுள் வெளிப்படுத்த விரும்பியவற்றை அக்காலக் கிறிஸ்தவ மக்களுக்கு அறிவித்தார். திருவெளிப் பாட்டு நூல்களில் தூதரை இடைநிலேயினராக வைத்துப் பேசுதல் மரபாகும் என்று முன்பே குறிப்பிட்டுள்ளோம் (*1:2* வி. காண்.).

7 : ‘இதோ, நான் விரைவாகவே வருகிறேன்’—இவை கிறிஸ்துவின் வார்த்தைகள். இங்கே வானதூதரே அவற் றைக் கூறுவதுபோல் தோன்றுகிறது. அடுத்து வருவதும் *1:3*-இன் சுருக்கம். இந்நூலின் செய்திகளே ஏற்று அவற்றின் படி நடப்பவர்கள் பேறு பெற்றவர்கள் என நூலின் இறுதி யிலும் சொல்வதால் இந்நூலே வாசிக்கக் கிறிஸ்தவர்களுக் குரிய கடமையை ஆசிரியர் வலியுறுத்துகின்ருர்.

8—9 : நூலின் தொடக்கத்தில் உள்ளதுபோல் (*1:1, 9*) இங்கும் நூலாசிரியர் பேசுவதுபோல் எழுதப்பட்டுள்ளது. கடவுள் அளித்த திருவெளிப்பாடுகளே அருளப்பர் கண்டும் கேட்டும் எழுதியுள்ளார். காட்சிகளில் தோன்றிய தூதரை வணங்கச் சென்றதை (*19:10*) மீண்டும் ஒரு முறை இங்கே குறிப்பிடுகிருர். இரண்டாம் முறையும் இவ்வாறு வணங்க விரும்பிஞர் என்று சொல்வதற்கில்லே. முன்பு கூறியதை இரண்டாம் முறையாகக் கூறுவது தேவையற்றதாய்த் தெரி கிறது.

10-15: அருளப்பர் தாம் கண்டவை கேட்டவை யெல்லாம் மறைத்து வைக்காமல், மக்களுக்கு அறிவிக்க வேண்டும் என்பது வானதூதரின் ஆணை. ஆனால் இறுதிக் காலத்தைப் பற்றிய இறைவாக்குகளைக் கடைசி நாள் வரை மறைத்து முத்திரையிட்டு வைக்க வேண்டுமென்று தானியேலுக்குக் காட்சியில் அறிவிக்கப்பட்டது (தானி. *8:26; 12:4*). பிற திருவெளிப்பாட்டு நூல்களிலும் இவ்வாறு செய்தி மறைத்து வைத்தலைக் காணலாம். இங்கே மட்டும் ஏன் அவற்றை மறைத்துவைக்காமல் அறிவிக்கவேண்டும்? அக்காலக் கிறிஸ்தவர்களைப்போல அருளப்பரும் முடிவு அண்மையில் உள்ளது என்று நம்பியிருந்தாரா? இல்லை. அதை ஆசிரியர் ஏற்கவில்லை. ஆனால் நிகழ்காலத்திற்கும் இறுதிக் காலத்திற்கும் உள்ள கால வேறுபாட்டை அவர் ஏற்றவரன்று. கிறிஸ்துவின் இறப்பு—உயிர்ப்பால் இறுதிக் காலக் கடவுளாட்சி ஏற்கனவே தொடங்கிவிட்டது. இனி வரப்போகும் நிகழ்ச்சியன்று. ஆனால் நம் ஊனக் கண்களுக்கு வெளிப்படும் காலம் இனிவரும். அஃது அண்மையிலா சேய்மையிலா என்பதுபற்றி ஆசிரியர் குறிப்பிட விரும்புகிறார். அஃது அண்மையில் உள்ளது. அதாவது, இறுதிக்காலக் கடவுளாட்சி இக்காலத்திலேயே தொடங்கிவிட்டதால் இவ் வுலகோடு வானுலகு நெருங்கிவிட்டது. இறுதிக் காலத் தோடு ஒப்பிடும்போது இவ்வுலகின் காலம் ஒரு பொருட் டாகத் தோன்றுவதில்லை. ஆதலின் கடவுளாட்சி வெளிப் படும் காலம் எப்போழுது என்பது தெரிய வில்லை. எனினும் அதோடு தொடர்பு கொண்டு கால அளவை இழந்து விட்ட உலகுக்கு அஃது அண்மையில் தான் உள்ளது. ஆதலின் இந்நூல் கூறும் செய்திகள் உடனுக்குடன் அறிவிக்கப்பட வேண்டியவை.

11: கடவுளின் திட்டம், இக்காலத்தின் துன்பத்தின் நிலையாமை, இறுதி நாள் தீர்ப்பு, கடவுளாட்சி ஆகிய இவற்றை அறிந்த பின்னும் சிலர் பாவத்தில் நிலைத்திருப்பர். கடவுள் அவர்களை வன்முறைப் படுத்தி அவர்களுக்கு வான கம் நல்க மாட்டார். சிலர் புனிதத்தில் நிலைத்திருப்பர்.

அவர்களும் சுதந்திரமாக வாழ்ந்து வானகம் சேர்பவர். கடவுள் அழைப்பு விடுத்தார்; வழியைக் காட்டினார். அதன் படி நடப்பதும் நடவாததும் மனிதனின் பொறுப்பு. இவ் வாக்கியம் இதனை உணர்த்தும். வேறொரு பொருளையும் இதில் காணலாம். தீமை இந்த உலகில் உடனுக்குடன் அழிக்கப்படுவதில்லை. அஃது இறுதிக் காலம் வரை இருந்து கொண்டுதான் இருக்கும். ஆண்டவர் கூறியதுபோல் பயிரும் களையும் அறுவடை நாள்வரை வளரும். அறுவடைக் காரர்கள் அறுவடை நாளில் முதலில் களைகளை ஒன்று சேர்த்து எரிப்பது போல் (காண். மத். 13:30), இறுதிநாளில் தீமை அழிக்கப்படும். அதுவரைக் கடவுள் தீமையை அனு மதிக்கிறார். இதற்கும் காரணம் உண்டு. தீமை அதன் முழு உருவை அல்லது நிலையை அடையும் வரை கடவுள் விட்டு வைக்கிறார் (1 தெச. 2:16). அது வளராமல் நின்று மாறி விடக்கூடுமல்லவா ? ஆதலின் இவ்வித அனுமதியில் கடவு ளின் இரக்கத்தைக் காண்கிறோம். ஆனால் இவ்வாக்கியத்தில் ஒரு எச்சரிக்கையும் தொனிக்கிறது. இறுதிக் காலம் வரை விட்டுவைக்கப்படும் தீயவருக்கு ஒரு எச்சரிக்கை. அதாவது குறித்த காலம் அண்மையிலேயே உள்ளது. ஆதலின் அவர் கள் மனந்திரும்ப வேண்டும்.

12 : ஆண்டவர் வரும் நாளில், அவனவனுடைய செயல்களுக்கேற்ப, அவர் கைம்மாறு அளிப்பார். இதே செய்தியைத் தியத்தைரா சபைக்குக் கூறியிருப்பதைக் காண்க. "உங்களுள் ஒவ்வொரு வருக்கும் செயல்களுக்குத் தக்கப்படி கூலி கொடுப்பேன" (2:23; 11:18; காண். மத். 16:27; உரோ 2:6).

13 : இவ்வாக்கியம் மூன்றும் முறையாக வருகிறது (விளக்கத்திற்கு 1:8; 21:6 காண்). மேலே கூறியதுபோல், கடவுளில் எல்லாம் தொடங்கி அவரிலே எல்லாம் முடி கின்றன.

14 : வெண்மையான ஆடை வானக வாழ்வுக்கு அடை யாளமாக இருப்பதால், அத்தகைய ஆடையைப் பெறச்

செம்மறியின் இரத்தத்தில் துவைத்தலே இவ்வாக்கியம் மறைவாகக் கூறுகிறது. கிறிஸ்துவின் இரத்தம்தான் நம்மைப் பாவங்களினின்று விடுவித்தது (1:5). ஆதலின் கிறிஸ்து வழியாகவே நாம் நம் மீட்பைப் பெற்று வானகம் சேர முடியும். இத்தகையோரைப் பேறு பெற்றவர்கள் என்று கூறுகிறார் ஆசிரியர். இது நூல் கூறும் ஏழாவது பேறு ஆகும். 'வாழ்வின் மரம்' என்னும் அடையாளமும் இதே உண்மையை உணர்த்தும். நகரம் (புதிய எருசலேம்) என்பது விண்ணகத்தைக் குறிக்கும். ஆசிரியர் தான் கையாளும் உருவங்களுக்கு ஏற்ப உண்மைகளைக் கூறுகிறார். வானகத்தில் நுழைபவர்கள் கிறிஸ்துவின் மீட்பைப் பெற்றவர்கள் என்பது ஆசிரியர் இங்கே உணர்த்த விரும்பும் உண்மையாகும்.

15 : இவ்வாழ்வுக்குச் சிலர் தகைமையற்றவர்கள். 21:8-இல் உள்ளது போல் இங்கு அத்தகையோரின் பட்டியல் ஒன்று வருகிறது. பொதுவில் பார்க்குமிடத்து இவர்கள் யாவரும் "விலங்கை" வணங்கி அதன் அடையாளத்தைக் கொண்டிருப்பவர்கள் (காண். 14:9–11). "கேடு கெட்ட நாய்கள்" என்பது இங்கு மட்டும் வரும் ஒரு சொற்றொடர். சாதாரணமாக மறைநூலில் 'நாய்' என்னும் சொல் உண்மைக் கடவுளை நம்பி அவரை வழிபடாத புறவினத்தாரைக் குறிக்கும் (காண். உபா. 23:18; மத். 7:6; 15:26; 2 இரா. 2:22). புனித சின்னப்பர் தங்கள் விருத்தசேதனத்தில் பெருமை கொண்டு கிறிஸ்தவர்களை இழிந்துரைத்த யூதர்களை நாய்கள் என்று கூறினார் (காண் பிலிப். 3:2). கால வழக்கில் இச்சொல் ஒழுக்கக் கேட்டைக் குறிக்கும் சொல்லாக இருந்தது. இங்கே நூலாசிரியர் மனதில் வைத்துப் பேசுவது புறவினத்தாரையா, யூதரையா என்பது தெளிவாய்த் தெரியவில்லை யெனினும், அவர்களது ஒழுக்கங் கெட்டத் தன்மையைக் குறிப்பிடுகின்றார் என்பது தெளிவு. ஒழுக்கங்கெட்டவர் யாவரும் விண்ணகத்துக்குப் புறம்பானவர்கள்.

16 : ஆண்டவர் இயேசுவே இந்நூலில் உள்ள எல்லாச் செய்திகளையும் தம் தூதர் வழியாக அருளப்பருக்கு வெளிப்

படுத்தினுர் என்று நூலின் தொடக்கத்திலேயே (1:1) படித்தோம். நூலின் இறுதியிலும் இது வலியுறுத்தப்படுகின்றது. மெசியாவைத் 'தாவீதின் வேரும் வழித் தோன்றலும்' என்று கூறியவர் இசையாஸ் இறைவாக்கினர் (காண். இசை. 11:1; 5:5). அவரை 'விண்மீன்' எனக் கூறியவர் பாலாம் இறைவாக்கினர் (காண் எண். 24:17). விண்மீன் மேலாண்மையின் அடையாளமாதலின், கிறிஸ்து, மன்னர்க்குரிய மகத்துவத்தோடு ஆட்சி செலுத்துவர் என்ருகிறது. இறைவாக்கினர் கூறிய இவையெல்லாம் கிறிஸ்துவில் நிறைவெய்துகின்றன.

17 : ஆண்டவரை ஆவியானவரும், மணமகளும் "வாரும்" என்று அழைக்கின்றனர். மணமகள் என்பது திருச்சபை. இத்திருச்சபையை இயக்குபவரே பரிசுத்த ஆவியாகும். கிறிஸ்து வந்து தம்மையும் விண்ணகம் கொண்டு செல்ல வேண்டுமென்று திருச்சபை வேண்டுகிறது. திருச்சபையின் இம்மன்ருட்டை இறைமக்கள் ஒவ்வொருவரும் சொல்ல வேண்டும். இச்செய்திகளைக் கேட்பவரெல்லாம் திருவழிபாட்டைக் கேட்கக் கூடியிருக்கின்றனர் போலும். ஆகவே திருச்சபையின் செபத்தைக் கூடியிருக்கும் ஒவ்வொருவரும் சொல்லக் கேட்கிறது நூல். கிறிஸ்தவ மக்கள் ஆண்டவரை அழைப்பதோடு நில்லாமல், அவருடைய வாழ்வில் பங்கு கொள்ளவும் விரைதல் வேண்டும். கிறிஸ்து தமது தெய்வீக வாழ்வை நல்கி, மக்கள் உள்ளத்தின் அணையா ஆவலைத் தணிக்கிருர் (காண். 21:6). ஆதலின் அவர் மக்களைத் தம் அண்டை அழைக்கிருர்.

18–19 : இவை அனைத்தும் கூறிய பிறகு ஓர் எச்சரிக்கையும் விடுக்கிருர் ஆசிரியர். நூலில் உள்ள இறைவாக்குகளோடு எவனும் தன் விருப்பம்போல் எதையும் சேர்த்தல் கூடாது. அங்கிருக்கும் எதையும் குறைக்கவும் கூடாது. இவ்வாறு எச்சரிக்கை விடுத்தல் திருவெளிப்பாட்டு நூல்களுக்கு உரிய பண்பாகும். இவ்வித எச்சரிக்கை உபாகமம் எழுதப்பெற்ற காலத்திலேயே விடுக்கப்பட்டுள்ளது (காண். உபா. 4:2). ஆசிரியர் இவற்றைக் கருத்தில்

கொண்டவராய் இந்த எச்சரிக்கையை இங்கு வரைகிறார். (20) கிறிஸ்து இந்நூலின் உள்ள திருவெளிப்பாடுகளுக்குச் சான்று பகர்பவரென மீண்டும் ஒருமுறை நூல் கூறுகிறது. கிறிஸ்தவ மக்கள் ஆண்டவரை நோக்கி எழுப்பும் "வாரும்" என்னும் குரலுக்கு, ஆண்டவர் "ஆம். விரைவாகவே வருகிறேன்" என்கிறார். அக்காலக் கிறிஸ்தவ மக்களுக்கு இவ்விரு சொற்களும் எத்துணை நம்பிக்கை தந்த சொற்கள்! ஆண்டவர் கூறுவது உண்மையே. அவருடைய வருகையை உணர்பவன் எவனும் " ஆண்டவராகிய இயேசுவே வாரும் " (Marana, tha-1 cor. 16.22) என்று சொல்லாதிருப்பானோ? இன்னும் ஆண்டவர் பல வழிகளில் இறைமக்களிடை வந்து கொண்டுதான் இருக்கிறார். அவரை நாம் வரவழைத்துக் கொண்டிருக்கிறோம்.

21 : திருவெளிப்பாட்டு நூல் இறை வாழ்த்தோடு தொடங்கியது (1:4). அஃது இறை வாழ்த்தோடு முடிகிறது. இது திருமுகங்களுக்குரிய பொதுப் பண்பு.

———

துணை நின்ற நூல்கள்

1. The relevance of Apocalypse—*H. H. Rowley.*
2. The International Critical Commentary
   —*Revelation* (*Vols. I & II*) *Charles.*
3. What the Spirit says to the Churches
   —*Hubert Richards.*
4. The Paschal Liturgy and the Apocalypse
   —*Massey H. Shepherd.*
5. The Apocalypse explained—*W. J. Ferrar, M.A.*
6. Introduction to the New Testament
   —*A. Robert & A. Feuillet.*
   The Apocalypse—*M—E. Boismard.*
7. Dictionary of the Bible—*Hastings.*
8. The Jerome Biblical Commentary
   The Apocalypse—*Jean-Louis D'Aragon, S.J.*
9. A New Catholic Commentary on Holy Scripture
   Revelation—*John J. Seullion, S J.*
10. Peake's Commentary on the Bible
    Revelation—*Turner.*
11. The Apocalypse—*A. Feuillet.*
12. Joannine Studies—*A. Feuillet.*
13. CBQ—XXVII-1, Jan. 1965—pp. 42—47
    The Historical perspective of Apoc. 1—11
    —*Martin Hopkins O.P.*
14. யோவானின் தரிசனம்—ஜே. பா. அலெக்சாந்தர்.
15. The Revelation of John–Vols. I & II
    —*William Barclay.*
16. The Apocalypse of St. John
    —*Wilfrid J. Harrington, O. P.*
17. The Moffatt New Testament Commentary
    The Revelation of St. John—*Martin Kiddle.*



பிலிப்பி
தெசலோனிக்கே
சின்ன ஆசியா
பெர்காமு
தியத்தைரா
சர்தை
சிமிர்னா
பிலதெல்பியா
கொரிந்து
அதேன்ஸ்
எபேசு
கொலோசே
லவோதிக்கேயா
பத்மு
அந்தியோகியா
மத்திய தரைக் கடல்
கிரேக்தா
சீப்புரு
மைல் விகிதம்
0 50 100 150 200 250 300